# தமிழ்க் கவிதைக் களஞ்சியம்

இரண்டாம் பதிப்பு

தொகுப்பாசிரியர்:

ரா. பி. சேதுப் பிள்ளை

சாகித்திய அக்காதெமி
புது டில்லி

**Tamil Kavithaik Kalanjiyam** (An Anthology of Tamil Poetry) Second edition. Compiled by R. P. Sethu Pillai. Published by Sahitya Akademi, New Delhi. First edition, 1960. Second edition, 1970. Price Rs. 9.

© சாகித்திய அக்காதெமி
முதல் பதிப்பு *1960*
இரண்டாம் பதிப்பு *1970*

*Available at*
SAHITYA AKADEMI
Rabindra Bhavan, New Delhi-1

*Regional Office:*
Calcutta - 29

*Regional Office:*
Madras - 6

அச்சிட்டோர்:
ஸ்ரீ பி.எல்.எஸ். பிரஸ்
'திருமலை'
சென்னை-24

விலை: ரூ. 9

## உள்ளுறை


| | |
|---|---|
| புறப் பாட்டு ... | 19 |
| அகப் பாட்டு ... | 20 |
| பத்துப் பாட்டு ... | 21 |
| திருக்குறள் ... | 23 |
| திருவள்ளுவமாலை ... | 32 |
| நாலடியார் ... | 32 |
| பழமொழி ... | 33 |
| காவியக் கவிதை ... | 36 |
| திருநெறித் தமிழ் மாலை ... | 41 |
| தூதுப் பாட்டு ... | 51 |
| பாவைப் பாட்டு ... | 54 |
| பரணிப் பாட்டு ... | 56 |
| திருத்தொண்டர் புராணம் ... | 57 |
| கம்ப ராமாயணம் ... | 60 |
| வில்லி பாரதம் - கண்ணன் தூது ... | 119 |
| நள வெண்பா ... | 127 |
| ஆன்றோர் கவிதை ... | 129 |
| சித்தர் பாட்டு ... | 133 |
| திருவருட்பா ... | 135 |
| பிள்ளைத் தமிழ் ... | 137 |
| குறத்திப் பாட்டு ... | 139 |
| பள்ளுப் பாட்டு ... | 143 |
| சீட்டுக் கவிதை ... | 150 |
| சிலேடைப் பாட்டு ... | 152 |
| சாசனக் கவிதை ... | 153 |
| சிந்து ... | 154 |
| கிறிஸ்தவ இலக்கியம் ... | 156 |
| கையறு நிலை ... | 159 |
| நாடோடிப் பாடல்கள் ... | 163 |

| | | |
|---|---|---|
| தெய்வம் மணக்கும் பாமாலை | ... | 165 |
| தனிப் பாடல் | ... | 177 |
| அம்மானை | ... | 194 |
| பழமொழி விளக்கம் | ... | 195 |
| சோமேசர் முதுமொழி வெண்பா | ... | 197 |
| குசேலோபாக்கியானம் | ... | 198 |
| பந்தாட்டப் பாட்டு | ... | 200 |
| செந்தமிழ் மாலை | ... | 202 |
| பாரதியார் பாடல் | ... | 218 |
| இசைத் தமிழ் மாலை | ... | 240 |
| நாடகத் தமிழ் மாலை | ... | 278 |
| குழந்தைக் கவிதை | ... | 293 |
| தற்காலக் கவிதை | ... | 298 |
| செய்யுள் முதற்குறிப்பு அகராதி | ... | 319 |
| ஆசிரியர் பெயர் அகராதி | ... | 331 |
| குறிப்புரை | ... | 333 |

# முகவுரை

முத்தமிழ் : பாரத நாட்டில் வழங்கும் பழமையான மொழிகளுள் ஒன்று தமிழ்மொழி. தொன்றுதொட்டுத் தமிழ் நாட்டை ஆண்டு வந்த சேர சோழ பாண்டியர் என்னும் முடி வேந்தர் மூவரும் தம் தாய்மொழியாகிய தமிழ்மொழியை நன்கு ஆதரித்தார்கள். எனினும், சிறப்பாக இயல் இசை நாடகம் என்னும் முத்துறைகளிலும் இம் முதுமொழியைப் பேணி வளர்த்த பெருமை பாண்டிய மன்னருக்கே உரிய தாகும்.[1] அன்னூர் தமிழ்ச் சங்கங்கள் நிறுவி, கலைஞரையும் கவிஞரையும் ஒருங்கு சேர்த்து, முத்தமிழையும் பண்ணுறத் தெரிந்து ஆய்ந்த பான்மையால் சிந்தைக்கினிய செவிக்கினிய பசுந்தமிழ் 'சங்கத் தமிழ்' என்று சிறப்பிக்கப்பட்டது.[2] பத்துப் பாட்டு, எட்டுத்தொகை[3] முதலிய பழந்தொகை நூல்களே யன்றிப் பின்னே எழுந்த திருப்பாவை போன்ற செந்தமிழ்ப் பாடல்களும் சங்ககால நடையில் அமைந்திருத்தலால் 'சங்கத் தமிழ்' என்று கருதப்படுகின்றன.[4]

---

[1]பாண்டி நாடு

அத்தி ருத்தகு நாட்டினை அண்டர் நாடு
ஒத்தி ருக்குமென் றூல்உரை ஒக்குமோ
எத்தி றத்தினும் ஏழுல கும்புகழ்
முத்தும் முத்தமி ழும்தந்து முற்றலால்

— கம்பராமாயணம்

[2]முழுதுணர்ந்தருள் மலயநன்முனி
மொழியு முத்தமிழும்
பழுதறும்படி புலவரேறிய
பலகை யொன்றுடையான்

— வில்லிபாரதம்

[3]பத்துப்பாட்டு : திருமுருகாற்றுப் படை, பொருநராற்றுப் படை, சிறுபாணாற்றுப் படை, பெரும்பாணாற்றுப் படை, முல்லைப் பாட்டு, மதுரைக் காஞ்சி, நெடுநல்வாடை, குறிஞ்சிப் பாட்டு, பட்டினப்பாலை, மலைபடுகடாம் என்னும் பத்துமாகும்.

எட்டுத்தொகை : நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, பதிற்றுப்பத்து, பரிபாடல், கலித்தொகை, அகநானூறு, புறநானூறு என்னும் எட்டுமாகும்.

[4]பைங்கமலத் தண்தெரியல் பட்டர்பிரான் கோதை சொன்ன சங்கத் தமிழ் மாலை

— திருப்பாவை

**நீதிக் கவிதை :** இயற்றமிழ் மொழியில் நீதி நூல்கள் பல உண்டு. அவற்றுள் தலைமை சான்றது திருவள்ளுவனார் இயற்றிய திருக்குறள். அறம் பொருள் இன்பம் என்னும் உறுதிப் பொருள்களின் தன்மையைத் தெள்ளத் தெளிய உணர்த்துவது திருவள்ளுவர் நூல். இப்பொழுது மேலை நாட்டு மொழிகளிலும் பாரதநாட்டு மொழிகளிலும் இந்நூல் மொழிபெயர்க்கப் பட்டு நல்லறிஞர்களால் பெரிதும் பாராட்டப்படுகிறது.[5] தமிழகத்தில் திருக்குறளோடு ஒத்த பெருமை உடையது நாலடியார் என்னும் நீதி நூல். இரண்டடிகளில் அமைந்த திருக்குறளையும் நான்கு அடிகளையுடைய நாலடியாரையும் தமிழ் மக்கள் அருமையாகப் போற்றினர் என்பது 'நாலும் இரண்டும் சொல்லுக் குறுதி' என்னும் பழமொழியால் அறியப்படும். 'பழமொழி நானூறு' என்னும் பெயருடைய பழைய நீதிநூல் தமிழ் நாட்டில் வழங்கிய பழமொழிகளை ஈற்றடிகளில் அமைத்து நீதிநெறியை விளக்குவதாகும்.[6]

**வள்ளுவர் புகழ்மாலை :** திருக்குறளின் அருமை பெருமைகளைப் பாராட்டிப் பாடிய தமிழ்ப் புலவர் பலர் ஆவர். நக்கீரர் முதலாய நற்றமிழ்ப் புலவர்கள் இயற்றிய சாத்துக் கவிகளிற் சிலவற்றைத் தொகுத்துத் 'திருவள்ளுவமாலை' என்று பெயரிட்டுத் தமிழகம் போற்றி வருகின்றது. இன்னும் திருக்குறளின் ஈரடிகளையும் ஈற்றடிகளாக அமைத்துத் திருவள்ளுவரது கருத்தைப் பழங்கதைகளின் வாயிலாக விளக்கும்

---

திருப்பாவை பாடிய ஆண்டாள் எட்டாம் நூற்றுண்டில் வாழ்ந்தவர் என்பர். —'ஆழ்வார்கள் கால நிலை' - மு. இராகவய்யங்கார்.

[5]There hardly exists in the literature of the world a collection of maxims in which we find so much lofty wisdom. — A. Schweitzer. **Indian Thought and its Development.**

[6]பதினெண்கீழ்க் கணக்கு என்ற பழந் தொகை நூலில் திருக்குறள், நாலடியார், பழமொழி ஆகிய மூன்றும் சேர்க்கப்பட்டுள்ளன.

நாலடியார், நான் மணிக்கடிகை, இன்ன நாற்பது, இனியவை நாற்பது, கார் நாற்பது, களவழி நாற்பது, ஐந்திணை ஐம்பது, ஐந்திணை எழுபது, திணைமொழி ஐம்பது, திணைமாலை நூற்றைம்பது, திருக்குறள், திரிகடுகம், ஆசாரக்கோவை, பழமொழி, சிறுபஞ்சமூலம், முதுமொழிக் காஞ்சி, ஏலாதி, கைந்நிலை என்னும் பதினெட்டு நூல்களும் பதினெண்கீழ்க் கணக்கில் உள்ளன.

வெண்பா நூல்கள் இயற்றினர் சில கவிஞர். அன்னவருள் ஒருவர் சிவஞான முனிவர். வடநூற் கடலையும் தமிழ்நூற் கடலையும் நிலைகண்டு உணர்ந்தவர் என்று பாராட்டப்படுகின்ற அம் முனிவர், 'சோமேசர் முதுமொழி வெண்பா' என்னும் பெயரால் இயற்றிய நூல் இதற்கு ஓர் எடுத்துக்காட்டாகும்.[7]

**காப்பியக் கவிதை :** செந்தமிழ் மொழியில் பெருங் காவியங்கள் பல இயற்றப்பட்டுள்ளன. அவற்றுள் சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவகசிந்தாமணி ஆகிய மூன்றும் மிகச் சிறந்தனவாகும். இறை முறை தவறிய பாண்டிய மன்னனைத் தன் கற்பின் திறத்தால் ஒறுத்த கண்ணகியின் கதையை ஒரு பெருங் காப்பியமாகச் செய்தார் இளங்கோவடிகள் என்னும் கவிஞர் கோமான். சிலப்பதிகாரம் என்று பெயர்பெற்ற அந் நூலில் முத்தமிழின் கூறுகளும் அமைந்திருத்தலால் அதனை முத்தமிழ்க் காப்பியம் என்று அறிஞர் போற்றுவர்.[8] அக் காப்பியத்தோடு கதைத் தொடர்புடையது மணிமேகலை. மாதவியின் மகளாகிய மணிமேகலை என்னும் மங்கை நல்லாள் இளமை துறந்து, நல்லறம் புரிந்த வரலாற்றை விரித்துரைப்பது இக் காவியம். சீவகன் கதையை இன்பச் சுவை ததும்பப் பாடியுள்ளார் திருத்தக்க தேவர் என்னும் சமண சமய அடிகள். மண நூல் என்ற பெயரும் அதற்குண்டு.[9]

---

[7] முதுமொழி என்பது திருக்குறளைக் குறிக்கும். கமலை வெள்ளியம்பலவாண முனிவர் 'முதுமொழி மேல் வைப்பு' என்ற நூலை இயற்றியுள்ளார். 186 வெண்பாக்களையுடைய அந் நூலிலும் முதுமொழியாகிய குறள் ஈற்றிரண்டிகளில் அமைந்துள்ளது. இந்த முறையில் இயற்றப்பட்ட நூல்கள்: தினகர வெண்பா, வடமலை வெண்பா, சிவசிவ வெண்பா, திருமலை வெண்பா, முருகேசர் முதுநெறி வெண்பா முதலியனவாகும்.

[8] பழுதற்ற முத்தமிழின் பாடற் குரையின் றெழுதத் துணிவதேயான் —சிலப்பதிகாரம். அடியார்க்கு நல்லார் உரைப்பாயிரம்.

ஒருந் தமிழொரு மூன்று முலகின் புறவகுத்துச் சேரன் றெரித்த சிலப்பதிகாரத்தில் — அடியார்க்கு நல்லார் உரைச் சிறப்புப் பாயிரம்.

[9] இம் மூன்று காவியங்களோடு வளையாபதி என்னும் சமண சமய நூலையும், குண்டலகேசி என்ற பௌத்த சமய நூலையும் சேர்த்து ஐம்பெருங் காப்பியங்கள் என்பர். பின்னவை இரண்டும் முழு வடிவத்தில் இப்பொழுது கிடைக்கவில்லை. புறத்திரட்டு என்ற தொகை நூலில் வளையாபதிச் செய்யுள்கள் அறுபத்தாறும்,

**திருநெறிக் கவிதை :** ஏறத்தாழ ஆயிரத்து இருநூறு ஆண்டுகளுக்கு முன்னே தமிழ் நாட்டில் பக்தி இயக்கம் தலை யெடுத்தது. சைவம் வைணவம் என்னும் இரு சமய நெறி களும் பொது மக்களின் உள்ளங் கவர்ந்து கிளர்ந்து எழுந் தன. திருஞான சம்பந்தர் முதலிய சைவ சமய முதல்வர் களும், நம்மாழ்வார் முதலிய வைணவ சமய ஆழ்வார்களும் பண்ணார்ந்த பாட்டிசைத்துப் பக்தி நெறியைத் தமிழகமெங் கும் பரப்புவராயினர். இவர்கள் பாடிய இனிய பாமாலை திருநெறித் தமிழ் என்று போற்றப்படுகின்றது.

**பாவைப் பாட்டு :** இன்னும் சைவ சமயச் சார்பாக மாணிக்கவாசகர் இயற்றிய திருவாசகம் உள்ளத்தை உருக் கும் ஓர் உயரிய நூல். 'திருவாசகத்துக்கு உருகாதார் ஒரு வாசகத்துக்கும் உருகார்' என்பது பழமொழி. ஈசனிடம் இன்ப அன்பு பூண்டு மாணிக்கவாசகர் பாடிய திருவெம் பாவைப் பாட்டும், திருமாலிடம் ஈடுபட்டு ஆண்டாள் பாடிய திருப்பாவைப் பாட்டும் தமிழ்நாட்டில் என்றும் போற்றப்படு வனவாகும்.

**சேக்கிழார் கவிதை :** இத்தகைய பக்தி இயக்கத்தின் பயனாகத் 'திருத்தொண்டர் புராணம்' என்னும் தெள்ளிய நூல் தமிழகத்தில் எழுந்தது.[10] அன்பு நெறியில் அயராது நின்று இறைவற்குத் தொண்டாற்றிப் பேரின்பப் பெருவாழ்வு பெற்ற சிவனடியார்களின் வாழ்க்கை வரலாறு இந் நூலில் செம்மையாக விளக்கப்படுகின்றது. சோழநாட்டு அரசாங் கத்தில் முதல் அமைச்சராக விளங்கிய சேக்கிழார் என்னும் கவிஞர் இயற்றிய இந் நூல் 'பெரிய புராணம்' என்று போற்றப் படுகின்றது. இப்புராணம் இயற்றிய புலவரைப் 'பக்திச் சுவை நனி சொட்டச் சொட்டப் பாடிய கவி வலவன்' என்று புகழ்ந்து போற்றினர் ஒரு கவிஞர்.[11]

---

குண்டலகேசிச் செய்யுள்கள் பத்தொன்பதும் தொகுக்கப்பட் டுள்ளன.

[10]தேவாரத்தில் சுந்தரமூர்த்தி நாயனார் பாடிய 'திருத் தொண்டத் தொகை' என்னும் பதிகத்தை அடிப்படையாகக் கொண்டு எழுந்தது திருத்தொண்டர் புராணம்.

[11]'சேக்கிழார் பிள்ளைத் தமிழ்'ழில் மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை பாடியது.

**பரணிப் பாட்டு :** பத்தாம் நூற்றுண்டு முதல் பதின் மூன்றும் நூற்றுண்டு வரை சோழ மன்னர் தமிழ் நாட்டில் பேரும் புகழும் பெற்று விளங்கினர். அம் மன்னர் நிறுவிய பேரரசு எத்திசையும் புகழ்மணக்க ஏற்றமுற்றுத் திகழ்ந்தது. அருட் செல்வமும் பொருட் செல்வமும் ஒருங்கே வாய்ந்த இத் தமிழ் மன்னர் கட்டிய திருக்கோயில்கள் இன்றும் தமிழ் நாட்டின் கலைக்கோயில்களாகத் திகழ்கின்றன. இங்ஙனம் சிறந்து விளங்கிய மன்னருள் ஒருவன் குலோத்துங்க சோழன். அவன் கலிங்கநாட்டின்மேற் படையெடுத்து வெற்றி பெற்ற சிறப்பு 'கலிங்கத்துப் பரணி' என்னும் நூலில் புனைந்துரைக்கப் படுகின்றது.[12] தமிழில் பரணிப்பாட்டு இசைத்த பாவலருள் பெருமை பெற்றவர் செயங்கொண்டார் என்னும் கவிஞர்.[13] இவர் இயற்றிய 'கலிங்கத்துப் பரணி' தமிழ் இலக்கியத்தில் சிறந்ததோர் இடம் பெற்று விளங்குகின்றது.[14]

**கம்பன் கவிதை :** இவ்வாறு தமிழகம் பல்லாற்றுனும் செழுமையுற்றுத் திகழ்ந்த காலத்தில் எழுந்தது கம்ப ராமா யணம். கம்பர் இயற்றிய இப் பெருங் காவியம் வடமொழியில் வான்மீக முனிவர் எழுதிய இராமாயணத்தைத் தழுவி எழுந்த தாயினும் தமிழ்மொழியின் செம்மைக்கும், தமிழகத்தின் பண் பாட்டிற்கும் அஃது ஒரு சிறந்த எடுத்துக்காட்டாகும். 'கல்வியிற் பெரியவன் கம்பன்' என்று புகழப்பெற்ற கவிஞன் பிறந்தமையால் தமிழ் நாடு பெருமையுற்றது என்று பாடி

---

[12] போர் முகத்தில் ஆயிரம் யானைகளை அழித்து, வெற்றி மாலை சூடிய வீரனைப் புகழ்ந்து பாடும் பாட்டு பரணி என்று பெயர் பெறும்.

[13] வெண்பாவிற் புகழேந்தி, பரணிக்கோர்
செயங்கொண்டான், விருத்த மென்னும்
ஒண்பாவிற்குயர் கம்பன், கோவையுலா
அந்தாதிக்கு ஒட்டக் கூத்தன்,
கண்பாய கலம்பகத்திற்கு இரட்டையர்கள்,
வசைபாடக் காள மேகம்,
பண்பாக உயர்சந்தம் படிக்காச
லாதொருவர் பகரொ ணுதே.

— பெருந்தொகை

[14] இப் பரணி பாடிய செயங்கொண்டார்க்குக் கவிச் சக்கரவர்த்திப் பட்டம் உண்டு. மற்றொரு கவிச் சக்கரவர்த்தியாகிய ஒட்டக்கூத்தர் தக்கயாகப் பரணி பாடினுர்.

மகிழ்ந்தார் பாரதியார்.[15] கம்பரைக் கவியரசர் என்று அன்று முதல் இன்றளவும் அறிவறிந்த தமிழகம் போற்றிப் புகழ் கின்றது.

**பாரதக் கவிதை :** வடமொழியில் உள்ள இதிகாசங் களுள் ஒன்றாகிய மகா பாரதத்தைத் தமிழில் உருவாக்கிய புலவர் பலர்.[16] அவர்களுள் வில்லிபுத்தூரார் இயற்றிய பாரதமே இப்பொழுது தமிழ் மக்களிடையே பரவியுள்ளது. இன்னும் பாரதத்தில் கிளைக்கதையாக வரும் நளன் கதையை நயமார்ந்த வெண்பாக்களால் பாடினார் புகழேந்திப் புலவர்; 'நளவெண்பா' என்னும் பெயர் பெற்ற அந் நூல் 'வெண்பாவிற் புகழேந்தி' என்ற அழியாப் பெருமையை அப் புலவர்க்கு அளித்தது.

**சித்தர் கவிதை :** தமிழகத்தில் வாழ்ந்த சித்தரும் சான்றோரும் மக்கள்பால் வைத்த கருணையால் அறநெறியை யும் அருள் நெறியையும் பல்லாற்றால் எடுத்துரைத்தார்கள். இறைவனைக் காண முயல்கின்றவர் பக்தர் என்றும், கண்டு தெளிந்தவர் சித்தர் என்றும் கருதப்படுவர்.[17] முன்னாளில் திருமூலர் முதலிய பதினெண் சித்தர்கள் தமிழ்நாட்டில் வாழ்ந்ததாகத் தெரிகின்றது. அன்னார் பாடியுள்ள பாடல்கள் பெரும்பாலும் ஓதற்கு எளியன; உணர்தற்கு அரியன.

**ஆன்றோர் கவிதை :** பட்டினத்தார் என்று தமிழ் நாட்டில் பாராட்டப்படும் பெரியார் காவிரிப்பூம்பட்டினத்தில் ஒரு செல் வச் செழுங் குடியிலே பிறந்தவர்.[18] வாணிகத்தால் பெருகி

---

[15]கல்வி சிறந்த தமிழ் நாடு—புகழ்க்
கம்பன் பிறந்த தமிழ் நாடு — பாரதியார்

[16]பாரதம் பாடிய பெருந்தேவனார் என்று சிறப்பிக்கப் படுகின்ற புலவர் இயற்றிய 'பாரத வெண்பா' என்னும் நூலில் ஒரு பகுதியே கிடைத்துள்ளது.

[17]கலைக் களஞ்சியம் - முதல் தொகுதி: Siddhar means one who has attained Siddhi (Special psychic and supernatural powers) which has been defined to be eightfold in the science of yoga. The term has been loosely used and understood to denote a certain category of mystic poets.
— **The Poetry and the Philosophy of the Tamil Siddhars** by A. V. Subramania Aiyar.

[18]பட்டினம் என்பது கடற்கரை நகரம். முன்னாளில் பட்டினம் என்ற பொதுப் பெயர் காவிரிப்பூம்பட்டினத்தைச் சிறப்பு வகையில் குறிப்பதாயிற்று. பத்துப் பாட்டில் ஒன்று பட்டினப் பாலை.

வளர்ந்த வளத்தையெல்லாம் துறந்து, தூய துறவற நெறியில் நின்று, உலகில் வாழும் மக்களுக்கு இன்றியமையாத ஒழுக்க நெறிகளை எளிய தமிழில் இனிமையாகப் பாடியவர். இவரைப் போலவே தாயுமானவர் என்னும் அருட்கவிஞரும் உயர்ந்த சமய உண்மைகளை இயற்றமிழாலும் இசைத்தமிழாலும் எடுத்துரைத்தார். அவர் இயற்றிய 'பராபரக் கண்ணி' முதலிய இசைத் தமிழ்ப் பாடல்கள் கற்றார்க்கும் கல்லார்க்கும் களிப்பருளும் களிப்பாகும். சென்ற நூற்றாண்டில் சிறந்து விளங்கிய இராமலிங்க அடிகள் இயற்றிய 'திருவருட்பா' என்னும் நூல் விழுமிய உண்மைகளைப் பழகு தமிழால் அழகுற உணர்த்துவதாகும்.

நினைப்பிற்கு எட்டாத நெடுங்காலமாகச் செவ்வேளாகிய முருகனைத் தமிழகம் வழிபட்டு வருகின்றது. பொதுவாக, குறிஞ்சி நிலத்திலுள்ள குன்றுகளையெல்லாம் முருகன் தனக்குரிய கோவிலாகக் கொண்டான்[19] எனினும் சிறப்பு வகையில் அப் பெருமானை ஆறுபடை வீடுகளில் அமைத்து வழிபட்டனர் பழந்தமிழ் மக்கள்.[20] பத்துப் பாட்டு என்னும் பண்டைத் தொகை நூலில் முதற்பாட்டாகத் திகழ்வது முருகாற்றுப் படையே. தமிழ் நாட்டிலுள்ள படைவீடுகளில் முருகப் பெருமான் அமர்ந்து அருள் புரியும் கோலத்தைப் புலவர் தலைவராகிய நக்கீரர் இவ் வாற்றுப்படையில் அழகுறப் பாடியருளினர். அவர் சங்கத் தமிழால் ஏத்திய முருகனை அருணகிரிநாதர் என்னும் அருட்கவிஞர் சந்தத் தமிழால் புகழ்ந்து போற்றினர். இவர் இயற்றிய 'திருப்புகழ்' என்னும் நூல் 'முத்தமிழால் வைதாரையும் வாழ்விக்கும்' முருகன் கருணையை இனிது விளக்குவதாகும்.[21]

குறத்திப் பாட்டு : குறிஞ்சி நிலத்திலுள்ள குறிச்சிகளில் வாழும் மக்கள் குறவர் எனப்படுவர். அக் குலத்தைச் சேர்ந்த குறத்தியர் குறிசொல்லும் பழக்கம் நெடுங்காலமாக

---

[19]சேயோன் மேய மைவரை யுலகம் — தொல்காப்பியம்.

[20]ஆறு படை வீடுகள்: திருப்பரங்குன்றம், திருச்சீரலைவாய் (திருச்செந்தூர்), திருவாவினன்குடி, (பழநி) திருவேரகம், குன்றுதோறாடல், பழமுதிர்சோலை.

[21]அருணகிரிநாதர் கந்தர் அலங்காரம், கந்தர் அநுபூதி என்னும் நூல்களையும் இயற்றியுள்ளார்.

இந் நாட்டில் உண்டு. இவ்வகுப்பாரது பழக்க வழக்கங்களை உணர்த்தும் பாட்டு 'குறத்திப் பாட்டு' என்று பெயர் பெறும். பொதியமலையில் வாழும் குறக்குல மக்கள் வாழ்க்கையைக் குமரகுருபர அடிகள் 'மீனாட்சியம்மை குறம்' என்ற பாட்டின் வாயிலாக விளக்கிக் காட்டினார். அதற்குப் பின்னே 'குற்றாலக் குறவஞ்சி' என்னும் நாடகம் எழுந்தது. தென்றல் வந்துலாவும் திருக்குற்றால மலைக் காட்சியும், அங்குவாழும் குறத்தியர் மாட்சியும் பிறவும் இக்குறவஞ்சியில் கூறப்படுகின்றன.[22] இதுவே தமிழிலுள்ள குறவஞ்சி நாடகங்களுள் தலைசிறந்ததெனக் கருதப்படுகின்றது.[23]

**பள்ளுப் பாட்டு:** மருத நிலத்தில் உழவுத் தொழில் செய்யும் மக்கள் மள்ளர் என்றும் பள்ளர் என்றும் அழைக்கப்படுவர். பள்ளர் வாழ்க்கையைக் காட்டும் முறையிலமைந்த நாடகம் 'பள்ளு நாடகம்' எனப்படும். பள்ளு நாடகங்களுள் தலை சிறந்தது 'முக்கூடற்பள்ளு' என்பர். இப்பொழுது நெல்லை நாட்டில் சீவலப்பேரி என்று வழங்கும் சிற்றூரே முன்னாளில் முக்கூடல் என்னும் பெயர் பெற்றிருந்தது. வடநாட்டில் கங்கையும் யமுனையும் கூடுமிடம் திரிவேணி சங்கமம் என்று பெயர் பெற்றாற் போன்று பொதிய மலையில் பிறக்கும் பொருனை என்னும் தாம்பிரபரணி ஆறும், குற்றால மலையில் பிறக்கும் சிற்றாறு என்னும் சித்ரா நதியும் ஒன்று சேர்கின்ற இடத்தில் அமைந்த ஊர் முக்கூடல் என்னும் பெயர் பெற்றது.[24] முக்கூடற் பள்ளைப் பின்பற்றிப் பல பள்ளு நாடகங்கள் தமிழ் மொழியில் இயற்றப்பட்டுள்ளன.[25]

**பிள்ளைத்தமிழ்ப் பாட்டு:** தமிழ்ப் பிரபந்த வகையில்

---

[22] அகவல், வெண்பா, விருத்தம் முதலிய பாக்களோடு கண்ணி, சிந்து முதலியனவும் விரவி நாடகத் தமிழாக அமைவது இந்நூல் — குற்றாலக் குறவஞ்சி, எஸ். ராஜம் வெளியீடு.

[23] தமிழிலுள்ள ஏனைய குறவஞ்சிகள்: ஸ்ரீசரபேந்திர பூபால குறவஞ்சி நாடகம், பிரகதீஸ்வரர் குறவஞ்சி நாடகம், கும்பேசர் குறவஞ்சி நாடகம் முதலியன.

[24] கோதண்டராம நதி என்று புராணக் கதையிலும் உப்போடை என்று பொதுமக்களாலும் பெயரிடப்பட்டுள்ள ஒரு சிற்றாறு முக்கூடலுக்கருகே சித்ரா நதியோடு சேர்கின்றது.

[25] குருகூர்ப் பள்ளு, கதிரைமலைப் பள்ளு, வடகரைப் பள்ளு, திருவாரூர்ப் பள்ளு, செண்பக ராமன் பள்ளு முதலியன.

பிள்ளைத் தமிழ் என்பது ஒன்று. அன்பின் முதிர்ச்சியால் பரம் பொருளைக் குழந்தையாகப் பாவித்து, அதற்குப் பல பருவங்கள் வகுத்து, ஒவ்வொரு பருவத்திற்கும் உரிய இறை நலங்களை இன்புற எழுதிக்காட்டுவதே பிள்ளைத் தமிழ்ப் பாட்டின் போக்காகும். ஆழ்வார்கள் இயற்றிய திருப்பாசுரங்களில் பிள்ளைத் தமிழின் கூறுகள் சிலவற்றைக் காணலாம்.[26] பிற்காலத்தில் எழுந்த பிள்ளைத் தமிழ்க் கவிகளுள் குமரகுருபர அடிகள் இயற்றிய 'மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழ்' சாலச் சிறந்ததாகக் கருதப்படுகின்றது.[27] நாளடைவில் மக்களிற் சிறந்தோரையும் பாட்டுடைத் தலைவராக அமைத்துப் பிள்ளைத் தமிழ் இலக்கியம் இயற்றப்பட்டுள்ளது. சேக்கிழார் பிள்ளைத்தமிழும் காந்தி பிள்ளைத் தமிழும் இதற்குச் சான்றாகும்.

**தூதுப் பாட்டு:** உயர்திணைப் பொருள்களையும் அஃறிணைப் பொருள்களையும் அன்பர்பால் தூது அனுப்பும் முறையில் அமைந்த பாட்டு 'தூதுப் பாட்டு' ஆகும். கோப்பெருஞ்சோழன் என்னும் மன்னனிடம் தலையாய அன்பு வாய்ந்த பிசிராந்தையார் என்ற புலவர் ஓர் அன்னத்தை அவனிடம் தூதனுப்பும் பான்மையில் இயற்றப்பட்ட பாட்டு புறநானூற்றிலே சேர்க்கப்பட்டுள்ளது. சத்திமுற்றப் புலவர் என்பவர் தம் மனைவியிடம் நாரையைத் தூதனுப்பும் முறையிற் பாடிய பாட்டு நாடறிந்த தொன்றாகும். பரம்பொருளாகிய இறைவனை நாயகனாகவும் அவனையே நினைந்துருகும் பக்தரை நாயகியாகவும் பாவித்து ஆன்றோர் பாடியுள்ள தூதுப் பாடல்களைத் தேவாரம், திருவாய்மொழி முதலிய தெய்வப் பனுவல்களிற் காணலாம். பிற்காலத்தில் தூது பிரபந்த வகைகளுள் ஒன்றாயிற்று.[28]

---

[26] பெரியாழ்வார் திருமொழியில் தாலப் பருவம், அம்புலிப் பருவம், செங்கீரைப் பருவம், சப்பாணிப் பருவம் ஆகிய பருவங்களில் ஒவ்வொன்றிலும் பத்துப் பாடல்களும், பெருமாள் திருமொழியில் தாலாட்டுப் பாசுரமும் உள்ளன.

[27] பிள்ளைத் தமிழ் நூல்கள்: முத்துக்குமாரசாமி பிள்ளைத் தமிழ், அமுதாம்பிகை பிள்ளைத் தமிழ் முதலியன.

[28] தூது: கிள்ளைவிடு தூது, பணவிடு தூது, மான்விடு தூது, தமிழ்விடு தூது முதலியன.

**புரவலர் புகழ்மாலை:** தமிழகத்தில் வாழ்ந்த பெருநில மன்னரும் குறுநில மன்னரும் தமிழ்ப் புலவர்களை ஆதரித்த பெருந்தகைமை இலக்கிய வரலாற்றிலே காணப்படும். இங்ஙனம் வரையாது பொருள் வழங்கிய நன்மக்களை வள்ளல் என்று தமிழகம் புகழ்வதாயிற்று.[29] இவர்கள் ஈத்துவக்கும் இன்பமே தம் வாழ்க்கையின் குறிக்கோளாகக்கொண்டு இரவலரின் புரவலராய் இந்நாட்டில் ஏற்றமுற்று வாழ்ந்தார்கள். பொய்யறியாப் புலவர்கள் இவ் வள்ளல்களைப் புகழ்ந்து பாடிய பாடல்கள் பல்லாயிரம் தமிழ் மொழியிலே உண்டு. பாரி வள்ளலைப் புகழ்ந்து பாடிய கபிலரது பாட்டும் அதிகமானை வாழ்த்திப் பாடிய ஔவையார் பாட்டும் இன்னோரன்ன பிற தமிழ்ப்பாடல்களும் தமிழ் நாட்டில் என்றும் பாராட்டப் படுவனவாகும்.

**சீட்டுக் கவிதை:** கொடை வள்ளல்களை நேரிற் காணும் வாய்ப்புப் பெறாத புலவர்கள் ஓர் ஓலைச் சீட்டிலே தம் தகுதியையும் தமக்கு வேண்டும் பொருளையும் பாட்டாக எழுதி அனுப்புவது உண்டு. இத்தகைய பாட்டு 'சீட்டுக் கவி' என்றும், 'தீட்டுக் கவி' என்றும் பெயர் பெறும். 'கற்றறிந்த புலவர்க்குத் தற்புகழ்ச்சி தகாது' என்னும் பொது விதிக்கு விலக்காகத் 'தம்மைப் புகழ்வதும் தகும் புலவோர்க்கே' என்ற முறைபற்றித் தீட்டப்பட்டுள்ள சீட்டுக் கவிதையில் அப் புலவர்கள் ஆக்கிய நூல்களும், பெற்ற சிறப்பும் பிற குறிப்புக்களும் விளங்குவனவாகும்.

**இரங்கற் கவிதை :** இந்திய நாட்டில் வேற்றரசு வீற்றிருந்தபோது தமிழ்மொழி தாயிழந்த சேய்போல் தயங்கித் தவித்தது. அந் நிலையில் அம் மொழியைப் பேணி வளர்க்கத் துணிந்த பெரு மக்களுள் ஒருவர் பாண்டித்துரைத் தேவர்.[30]

---

[29] **கடையெழு வள்ளல்கள் :** பாரி, ஓரி, மலையன், எழினி, பேகன், ஆய், நள்ளி என்னும் எழுவர். இவர் பெருமை புறநானூற்றுப் பாடல்களால் விளங்கும்.

[30] இவர் இராமநாதபுரத்தில், வழி வழியாகத் தமிழை ஆதரித்த சேதுபதிகளின் குடியிலே தோன்றியவர்; பாலவனத்தம் சமீன்தார். அருந் தமிழ் நூல்களை ஓதியுணர்ந்தும், சொற்பொழிவின் வாயிலாக எடுத்துரைத்தும் இடையறாத் தமிழ்த் தொண்டு செய்தவர். இவரைப்பற்றிய பிற செய்திகளை, மு. இராகவய்யங்கார் எழுதிய 'செந்தமிழ் வளர்த்த தேவர்கள்' என்ற நூலிற் காண்க.

மதுரையம்பதியின் பழம் பெருமையைப் புதுப்பிக்கக் கருதி அம் மாநகரில் அவர் ஒரு தமிழ்ச் சங்கம் நிறுவினர். தமிழ்ப் புலவர்க்கு வரிசை யறிந்து பரிசளித்து ஆதரித்தார். 'செந்தமிழ்' என்னும் திங்கள் வெளியீட்டின் வாயிலாகத் தமிழ் ஆராய்ச்சியைப் பேணி வளர்த்தார். இவ்வாறு பழங் காலத்துப் பாண்டியரைப் போல் பத்தொன்பதாம் நூற்றாண் டில் தாய்மொழிக்குத் தொண்டு செய்த தேவர் இறந்த பொழுது தமிழகம் வாடி வருந்தியது. அந் நிலையில் தமிழ்க் கவிஞர்கள் பாடிய கையறம் கற்போர் உள்ளத்தைக் கரைப்ப தாகும்.

முற்காலத்தில் தமிழ் நாட்டில் பரவியிருந்த சமணமும் சாக்கியமும் தமிழ் இலக்கியத்தின் வாயிலாக மக்களது உள்ளத்தைக் கவர்ந்தன. முப்பெருங் காப்பியங்களுள் ஒன்றாகிய சிந்தாமணி சமண சமயச் சார்பாக எழுந்தது: மணி மேகலை சாக்கிய மதச் சார்பாக இயற்றப்பட்டது. இக் காவி யங்களால் அருகதேவர் பெருமையும், புத்ததேவர் சீர்மை யும் இனிது விளங்குகின்றன. இக் காவியங்களேயன்றி அருகரையும் புத்தரையும் ஆன்றோர் பலர் புகழ்ந்து பாடிய தனிப்பாடல்கள் பழைய உரைகளிலும் தொகை நூல்களிலும் காணப்படும்.[31]

**இரு சமய காவியம்:** சமணமும் சாக்கியமும் வளர்ச்சி குன்றித் தளர்ச்சியுற்றபோது இஸ்லாமிய மதமும் கிறிஸ்தவ மதமும் தமிழ் நாட்டிற் பரவத் தலைப்பட்டன. இச் சமயங் களின் சார்பாகவும் சிறந்த இலக்கியங்கள் தோன்றின. தமிழ்க் காவிய மரபைத் தழுவிச் சீறாப் புராணம் என்னும் பெருங் காப்பியம் இயற்றி, நபி நாயகத்தின் பெருமையை விளக்கினர் உமறுப் புலவர். கிறிஸ்தவ சமயத்தைத் தமிழ் நாட்டிற் பரப்பப்போந்த மேலை நாட்டு நல்லறிஞர் பலர்,

---

[31] புத்த மித்திரனர் இயற்றிய வீரசோழியம் என்ற இலக் கண நூலின் உரையில் புத்த தேவருடைய சரித்திரக் குறிப்புக் களடங்கிய பல மேற்கோட் பாடல்கள் உள்ளன. யாப்பருங்கலம் என்னும் இலக்கண நூலின் விருத்தியுரையில் சமண சமயத்தைப் பற்றிய பாடல்கள் பலவுண்டு. பெருந்தொகையில், பக்கம் 32 முதல் 58 வரை அருகரையும் புத்தரையும்பற்றிய பாடல்கள் தொகுக்கப் பட்டுள்ளன.

தமிழ் இலக்கியத்திற்கு அரும்பணி புரிந்துள்ளனர். இத்தாலிய நாட்டிலே பிறந்து, சேசு சங்கத்திலே சேர்ந்து, தமிழ் நாட்டிற் போந்து பணியாற்றிய வீரமாமுனிவர் என்னும் வித்தகர்[32] செந்தமிழ் மொழியில் சிறந்ததொரு காவியம் செய்தார். சேசுநாதரைக் கைத்தாதையாக வளர்த்த சூசையப்பர் வரலாற்றை விரித்துரைக்கும் இக் காவியம் 'தேம்பாவணி' என்னும் பெயர் பெற்றது. இன்னும் ஆங்கில ஆசிரியர் ஒருவரால் எழுதப்பெற்ற கிறிஸ்தவ சமய நூலைத் தழுவி, 'இரக்ஷணிய யாத்திரிகம்'[33] என்னும் தமிழ்க் காவியம் எழுந்தது; இயற்றமிழிலும் இசைத்தமிழிலும் பல பாடல்கள் இயற்றி நீதிநெறியையும் சமரச நெறியையும் உணர்த்தினர் வேதநாயகம் என்னும் கிறிஸ்தவக் கவிஞர்.[34]

**சாசனக் கவிதை:** தமிழ்நாட்டுத் திருக்கோயில்களில் பலவகையான கல்வெட்டுக்கள் உள்ளன. அறம் செய விரும்பிய அரசரும் செல்வரும் தாம் நிறுவிய கட்டளைகள் என்றும் நடைபெறுமாறு நன்கொடை வழங்கிய செய்திகளைச் சொல்லும் கல்வெட்டுக்கள் பல்லாயிரம் உள்ளன. இத் தகைய சாசனங்களில் அழகிய தமிழ்க் கவிதையும் ஆங்காங் குக் காணப்படுகின்றன. சொல் நயமும் பொருள் நயமும் வாய்ந்த அப் பாடல்களைக் காணும்பொழுது தமிழகத்தில்

---

[32] பெஸ்கி (Constant Joseph Beschi) என்பது இவரது இயற்பெயர். கி.பி. 1710-ஆம் ஆண்டில் தமிழ் நாட்டில் சேசு சங்கப் பணியாற்றப் போந்தார். தமிழ் இலக்கிய இலக்கணங்களை நன்கு கற்றுணர்ந்து பல துறைகளிற் பணி செய்தார். 'சதுர் அகராதி' என்ற பெயரால் தமிழில் முதல் அகராதி இயற்றினர். தொன்னூல் விளக்கம், கொடுந்தமிழ் முதலிய இலக்கண நூல்களும், திருக்காவ லூர்க் கலம்பகம், கித்தேரி அம்மானை முதலிய சிற்றிலக்கியங்களும் செய்தார். இவர் வாழ்க்கை வரலாற்றை Father Beschi: His Times and His Writings என்ற நூல் உணர்த்துகின்றது.

[33] Bunyan's Pilgrim's Progress என்ற முதல் நூலைத் தழுவி எழுந்தது. இந் நூலாசிரியர் இயற்றிய 'இரக்ஷணிய மனோகரம்' என்னும் பாமாலை திருநெறித் தமிழின் தெள்ளிய நயம் வாய்ந்து விளங்குகின்றது.

[34] நீதி நூல், சருவ சமய சமரசக் கீர்த்தனைகள், சத்திய வேதக் கீர்த்தனைகள், தேவமாதா அந்தாதி முதலியன வேதநாயகம் பிள்ளை இயற்றிய நூல்கள்.

'கல்லும் கவி சொல்லும்' என்னும் உண்மையை உணர்ந்து இன்புறுகின்றோம்.[35]

**இசைக் கவிதை :** முத்தமிழில் ஒன்றாகிய இசைத் தமிழ் பழங்காலத்தில் சிறப்புற்று விளங்கிற்று. இசைத் தமிழால் இறைவனை வழிபடும் பெருமை இந் நாட்டிற்கு என்றும் உரிய தாகும். ஈசனே ஏழிசையாய் இசைப்பயனாய் இலங்குகின்றான் என்று தேவாரம் பாடிற்று.[36] பண்ணார்ந்த பாட்டிசைக்கும் பழந்தமிழ்க் குலத்தார் பாணர் என்று பெயர் பெற்றார். இசைக் கருவிகளில் குரல் முதலிய ஏழிசையையும் வழுவின்றி இசைத்து வழித் திறம் காட்டவல்ல பெரும் பாணர் காவிரிப் பூம்பட்டினத்தில் சிறந்து வாழ்ந்த செய்தியைச் சிலப்பதிகாரம் எடுத்துரைக்கின்றது. பண்களால் ஆகிய பாட்டுக்கள் வரிப் பாட்டு என்றும், உருக்கள் என்றும் பெயர் பெற்றன.[37] சிலப் பதிகாரத்தில் உள்ள கானல் வரி முதலிய பாட்டுக்கள் இசைத் தமிழின் இனிமைக்கு ஓர் எடுத்துக்காட்டாகும்.[38]

**கீர்த்தனம் :** தெய்வ மணக்கும் கவிதைகளாகிய தேவாரம், திருவாய்மொழி, திருப்புகழ் முதலிய நூல்கள் இசைப் பாட்டுக்களேயாகும். முற்காலத்தில் இயற்றப்பட்ட இசைத்தமிழ் நூல்கள் இப்பொழுது கிடைக்கவில்லை. அடியார்க்கு நல்லார் முதலிய பழைய உரையாசிரியர்கள் காலத்திலிருந்த தமிழ் இசை நூல்களும் நாளடைவில் மறைந்துவிட்டன. பிற்காலத்தில் இசையின் வாயிலாகப் பழைய காவியங்களையும், புராணங்களையும் பொதுமக்க ளிடையே பரப்பக் கருதிய இசைத்தமிழ்ப் புலவர்கள் பல கீர்த்தனங்கள் இயற்றியுள்ளார்கள். கம்பராமாயணம், பாரதம் முதலிய காவியங்களையும், கந்தபுராணம், பெரிய புராணம்

---

[35] சாசனப் பாடல்களிற் சிலவற்றைப் 'பெருந்தொகை' 168 முதல் 225 முடியவுள்ள பக்கங்களிற் காண்க.

[36] ஏழிசையாய், இசைப்பயனாய், இன்னமுதாய், என்னுடைய தோழனுமாய் — சுந்தரமூர்த்தி நாயனார் தேவாரம்.

[37] உருக்கள் இக் காலத்தில் உருப்படி என்று வழங்கப்பெறும்.

[38] ஆற்றுவரி, சார்த்துவரி, சாயல்வரி, நிலைவரி, முரிவரி, திணை நிலவரி, அம்மானைவரி, ஊசல்வரி, முகவரி, முகமில்வரி, வள்ளைப் பாட்டு முதலிய யாவும் இசைப்பாட்டே. வரிப்பாட்டின் இயல்பினைச் சிலப்பதிகாரக் கானல்வரி உரையிற் காண்க.

முதலிய புராணங்களையும் கீர்த்தனங்களாகப் பாடி இசைத் தமிழை வளர்த்த பெருமை இவ் இசையாளர்க்கு உரிய தாகும்.

**சிந்து :** சிந்து என்பது இசைப்பாட்டு வகையில் ஒன்று. முருகன் கோவிலில் காவடி எடுத்து ஆடும்பொழுது பாடும் இசைப்பாட்டு காவடிச்சிந்து என்று பெயர் பெற்றுள்ளது. ஓசை நயமும் பொருள் நயமும் அழகுற அமைத்து அண்ணாமலையார் பாடிய காவடிச்சிந்து இன்றும் முருகன் கோவில் களில் முழங்கக் காணலாம்.

**தெம்மாங்கு :** தெம்மாங்கு என்பது தென்னாட்டில் பொது மக்கள் பாடி இன்புறும் இசைப்பாட்டு. தென்பாங்கு என்னும் சொல்லே தெம்மாங்கு என மருவிற்று என்பர். மெய்வருந்த உழைக்கும் மாந்தர் பாடிக்கொண்டே பணி யாற்றுவர். ஏற்றப் பாட்டு என்பது அத்தகையது. கிணற்றி னின்றும் தண்ணீரை ஏற்றத்தால் இறைத்து நிலத்தில் பாய்ச்சும் பணியாளர் பாடும் பாட்டு ஏற்றப்பாட்டாகும். இத் தகைய பாட்டின் நயமறிந்தோர் 'ஏற்றப் பாட்டிற்கு எதிர்ப் பாட்டு இல்லை' என்பர்.

**பாவையர் பாட்டு :** பெண்கள் விளையாடும்பொழுது பாடும் பழக்கம் இந் நாட்டில் எந்நாளும் உண்டு. பூஞ்செடி களில் வண்ண மலர் கொய்யும்பொழுதும், வாசமலர்க் கொடியில் ஊசலாடும்பொழுதும், கும்மியடிக்கும்பொழுதும், அம்மானை யாடும்பொழுதும், பெண்கள் பாடும் பழக்கத்தை இன்றும் காணலாம். பந்து விளையாடும் பாவையர் பாடும் பாட்டைக் 'கந்துக வரி' என்று சிலப்பதிகாரம் குறிக்கின்றது. அவப்பொழுதையும் தவப் பொழுதாக்க விரும்பிய ஆன்றோர், பரம் பொருளின் திருவிளையாடல்களைப் பாடிக்கொண்டு பாவையர் விளையாடுதற்கேற்ற பாடல்களை இயற்றிப் பக்தி நெறியைப் பேணியுள்ளார்கள்.[39] மணிப்பூம் பொய்கையில் நீராடும் மங்கையர் 'சீதப்புனலாடிச் சிற்றம்பலம் பாடி,

---

[39] திரு அம்மானை, திருப்பொற் சுண்ணம், திருத்தெள்ளே ணம், திருப்பூவல்லி, திருத்தோள் நோக்கம், திருப்பொன்னூசல் முதலிய திருவாசகப் பாடல்கள் இந்த முறையில் அமைந்துள் ளன.

ஆதி திறம் பாடி' அகமகிழ்ந்தார்கள் என்று திருவாசகம் கூறுகின்றது.[40]

**ஒப்பாரிப் பாட்டு:** இன்பமும் துன்பமும் கலந்த இவ்வுலக வாழ்க்கையில் இன்பமுற்றோர் ஆனந்தக் களிப்பால் ஆடிப் பாடுவர்; துன்ப முற்றோர் அழுது கரைந்து அவலப் பாட்டிசைப்பர். இசைப் பாட்டுப் பாடினால் இன்பம் நிறையுமென்றும் துன்பம் குறையுமென்றும் அறிந்தோர் கூறுவர். தமிழ்நாட்டில் உற்றார் உறவினரை இழந்து துயருழந்த மாதர் இசைக்கும் 'ஒப்பாரிப் பாட்டு' கேட்போர் உள்ளத்தை உருக்குவதாகும்.

**கூத்து:** கூத்து என்பது முத்தமிழில் ஒன்று. நாடகம் என்ற பெயரும் அதற்கு உண்டு.[41] நாடக அரங்கத்தைக் கூத்தாட்டு அவை என்று குறித்துள்ளார் திருவள்ளுவர். ஆடல் புரியும் ஈசனைக் கூத்தன் என்று கூறுவதுண்டு.[42] கேள்வியால் இன்பம் தரும் இசையினும் காட்சியால் இன்பம் தரும் கூத்து சிறந்தது என்று கருதுவர் சிலர். பண்டைத் தமிழர் கண்டு மகிழ்ந்த கூத்துக்கள் பலவாகும். சேர மன்னனாகிய செங்குட்டுவன் வடநாட்டிற் போந்து கண்ணகியின் திருவுருவத்தை அமைப்பதற்கு இமயமலையிற் கல்லெடுத்து வஞ்சிமா நகர்க்குத் திரும்பியபொழுது கூத்தச் சாக்கையன் என்பவன் நடித்த கொடுகொட்டி ஆடலை நாடக அரங்கில்

---

[40] வாசப்பொடி (சுண்ணம்) இடிக்கும் இளம் பெண்கள் பாடும் பாட்டு:

ஞானக் கரும்பின் தெளியைப்பாகை
　　நாடற் கரிய நலத்தைநந்தாத்
தேனைப் பழச்சுவை யாயினானைச்
　　சித்தம் புகுந்து தித்திக்கவல்ல
கோனைப் பிறப்பறுத் தாண்டுகொண்ட
　　கூத்தனை நாத்தழும் பேறவாழ்த்திப்
பானற் றடங்கண் மடந்தைநல்லீர்
　　பாடிப்பொற் சுண்ணம் இடித்துநாமே.

— திருவாசகம்

[41] நாடகத்தால் உன் அடியார்போல் நடித்து

— திருவாசகம்

[42] கூத்தன் இவ்வானும் குவலயமும் எல்லோமும் காத்தும் படைத்தும் கரந்தும் விளையாடி — திருவாசகம்

கண்டு களிப்புற்றான் என்று சிலப்பதிகாரம் கூறுகின்றது. அக் காவியத்தின் பழைய உரைகளில் பலவகையான கூத்துக்கள் விளக்கிக் காட்டப்பட்டுள்ளன.[43]

பழங்காலத்தில் இயற்றப்பட்ட நாடகங்களில் ஒன்றும் இப்பொழுது கிடைக்கவில்லை.[44] தஞ்சைக் கல்வெட்டில் குறிக்கப்படுகின்ற இராசராச நாடகம் நெடுங்காலமாக அந் நகர்த் திருவிழாக்களில் நடிக்கப்பட்டதாகத் தெரிகின்றது. இப்பொழுது அந்த நாடகமும் மறைந்துவிட்டது. இந் நாளில் நாடகத் தமிழுக்கு ஓர் எடுத்துக்காட்டாக விளங்கும் 'மனோன்மணீயம்' படித்தற்கேற்றதேயன்றி நடித்தற்கேற்ற தன்று. பழைய இலக்கியங்களிற் கண்ட செய்திகளைத் தழுவி இக் காலத்தில் சில நாடகங்கள் இயற்றப்படுகின்றன.

பாரதியார் பாட்டு: இருபதாம் நூற்றாண்டில் தமிழ் மொழிக்கு ஏற்றமும் தோற்றமும் அளித்தார் கவிஞர் சுப்பிரமணிய பாரதியார். அவர் வாழ்ந்த காலத்தில் வேற்றரசாட்சி இந் நாட்டில் வேரூன்றி நின்றது. அந் நிலை கண்டு உள்ளம் கொதித்த இந்திய நன்மக்கள் சுதந்தர இயக்கத்தை உருவாக்கினர். 'வந்தே மாதரம்' என்ற சுதந்தர கீதம் வங்க நாட்டினின்றும் எழுந்து எங்கும் பரவலாயிற்று. பாரத மக்கள் தாரக மந்திரமாகக் கொண்ட அவ் வாசகத்தின் பொருளைத் தமிழ்ப் பாட்டால் விளக்கினர் பாரதியார். 'வந்தே மாதரம் என்போம், எங்கள் மாநிலத்தாயை வணங்குதும் என்போம்' என்று கவிஞர் கூறிய விளக்கத்தை வேற்றரசு ஏற்றுக்கொள்ளவில்லை. வந்தே மாதரம் என்று சொன்னால் வந்தது பெருந்தொல்லை. 'இம் மென்றால் சிறை வாசம்,

---

[43]அகக்கூத்து, புறக்கூத்து, வேத்தியல், பொதுவியல், வசைக் கூத்து, புகழ்க் கூத்து, வரிக்கூத்து, வரிச்சாந்திக் கூத்து, சாந்திக் கூத்து, விநோதக் கூத்து, ஆரியக் கூத்து, தமிழ்க் கூத்து, இயல்புக் கூத்து, தேசிக் கூத்து — இவை சிலப்பதிகார உரையிற் கண்ட கூத்து வகை.

[44]மறைந்துபோன நாடகத் தமிழ் நூல்கள்: அகத்தியம், பரதம், குணநூல், கூத்த நூல், சந்தம், சயந்தம், செயன்முறை, செயிற்றியம், மதிவாணர் நாடகத் தமிழ் நூல், முறுவல், பூம்புலியூர் நாடகம், விளக்கத்தார் கூத்து முதலியன. 'மறைந்துபோன தமிழ் நூல்கள்'—மயிலை சீனி. வேங்கடசாமி.

ஏனென்ருல் வன வாசம்' என்ற கொடுங்கோலாட்சியில் குடிகள் குமைந்து வருந்தினர்.

இந்த நிலையில் பொது மக்கள் மனத்தைப் பற்றி நின்ற அச்சத்தை அகற்றி, விடுதலை உணர்ச்சியை ஊட்டும் வண்ணம் வீரப் பாட்டிசைத்தார் பாரதியார். 'உச்சிமீது வான் இடிந்து வீழுகின்ற போதினும், அச்சமில்லை அச்சமில்லை அச்ச மென்பதில்லையே' என்று பாடினுர். பொது மக்கள் விரும்பிப் பாடும் பாப்பாப் பாட்டு, பள்ளுப் பாட்டு, கும்மிப் பாட்டு முதலிய இசைப் பாட்டுக்களின் வாயிலாகச் சுதந்தர ஆர்வத்தைப் பெருக்கினுர்.

பாரத சமுதாயம் 'ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு' என்பதை நன்குணர்ந்த கவிஞர் சாதி சமய வேற்றுமைகளால் விளையும் தீமைகளை விளக்கமாகப் பாடினுர்; 'நாமிருக்கும் நாடு நமது' என்றுணர்ந்து தாய்நாட்டையும் தாய்மொழியையும் போற்றுதல் வேண்டும் என்று ஆசைப்பட்டார்; 'செந்தமிழ் நாடெனும் போதினிலே இன்பத் தேன்வந்து பாயுது காதினிலே' என்று தம்மை ஈன்ற தமிழ் நாட்டைப் புகழ்ந்து பாடினுர்; தேமதுரத் தமிழோசை உலகமெல்லாம் பரவும் வகை செய்தல் வேண்டும் என்று ஆசைபற்றி அறையலுற்ருர். தமிழ்மொழிக்கு அழியாப் பெருவாழ்வளித்த கம்பர், திருவள்ளுவர், இளங்கோவடிகள் ஆகிய கவிஞர் மூவரையும் போற்ருத நாளெல்லாம் பிறவா நாளே என்பது அவர் கொள்கை. பழகு தமிழில் அவர் இசைத்த இனிய பாடல்கள் முத்தமிழுக்கும் புத்துயிர் அளித்தன. இப்பொழுது தமிழகத்தில் வாழும் கவிஞரெல்லாம் பாரதியார் காட்டிய நெறியையே கடைப்பிடித்துக் கவி பாடுகின்ருர்கள். இன்னும் நெடுங்காலம் பாரதியார் பாணியே தமிழ்க் கவிதை யுலகத்தை ஆளும் என்பதில் ஐயமில்லை.

ரா.பி. சேதுப்பிள்ளை

## பாரியும் மாரியும்

'பாரி பாரி' என்றுபல ஏத்தி
ஒருவற் புகழ்வர் செந்நாப் புலவர்;
பாரி ஒருவனும் அல்லன்:
மாரியும் உண்டு,ஈண்டு உலகுபுரப் பதுவே.

— கபிலர்

## மக்கட் பேறு

படைப்புப்பல படைத்துப் பலரோடு உண்ணும்
உடைப்பெருஞ் செல்வர் ஆயினும், இடைப்படக்
குறுகுறு நடந்து, சிறுகை நீட்டி
இட்டும், தொட்டும், கவ்வியும், துழந்தும்,
நெய்யுடை அடிசில் மெய்பட விதிர்த்தும்,
மயக்குறு மக்களை இல்லோர்க்குப்
பயக்குறை இல்லைத் தாம்வாழும் நாளே.

— பாண்டியன் அறிவுடை நம்பி

## பிறர்க்கென வாழும் பெரியார்

உண்டால் அம்ம!இவ் வுலகம், இந்திரர்
அமிழ்தம் இயைவது ஆயினும், இனிதெனத்
தமியர் உண்டலும் இலரே; முனிவிலர்;
துஞ்சலும் இலர்; பிறர்அஞ்சுவது அஞ்சிப்
புகழெனில் உயிரும் கொடுக்குவர்; பழிஎனில்
உலகுடன் பெறினும் கொள்ளலர்; அயர்விலர்;
அன்ன மாட்சி அனையர் ஆகி,
தமக்கென முயலா நோன்தாள்
பிறர்க்கென முயலுநர் உண்மை யானே.

— கடலுள் மாய்ந்த இளம்பெருவழுதி

## இனம் இனத்தோடே

பொன்னும், துகிரும், முத்தும், மன்னிய
மாமலை பயந்த காமரு மணியும்,
இடைபடச் சேய வாயினும், தொடைபுணர்ந்து
அருவிலை நன்கலம் அமைக்கும் காலை
ஒருவழித் தோன்றியாங்கு, என்றும் சான்றோர்
சான்றோர் பாலர் ஆப;
சாலார் சாலார் பாலர்ஆ குபவே.

— கண்ணகனார்

## மானவீரன் மாட்சி

நளிஇரு முந்நீர் நாவாய் ஓட்டி,
வளிதொழில் ஆண்ட உரவோன் மருக!
களிஇயல் யானைக் கரிகால் வளவ!
சென்றமர்க் கடந்தநின் ஆற்றல் தோன்ற
வென்றோய்! நின்னினும் நல்லன் அன்றே
கலிகொள் யாணர் வெண்ணிப் பறந்தலை
மிகப்புகழ் உலகம் எய்தி,
புறப்புண் நாணி வடக்கிருந் தோனே?

— வெண்ணிக் குயத்தியார்

## அகப் பாட்டு

பலவுறு நறுஞ்சாந்தம் படுப்பவர்க் கல்லதை
மலையுளே பிறப்பினும், மலைக்கவைதாம் என்செய்யும்?
நினையுங்கால் நும்மகள் நுமக்கும்ஆங்கு அனையளே!
சீர்கெழு வெண்முத்தம் அணிபவர்க் கல்லதை
நீருளே பிறப்பினும், நீர்க்கவைதாம் என்செய்யும்?
தேருங்கால் நும்மகள் நுமக்கும்ஆங்கு அனையளே!
ஏழ்புணர் இன்னிசை முரல்பவர்க் கல்லதை
யாழுளே பிறப்பினும், யாழ்க்கவைதாம் என்செய்யும்?
சூழுங்கால் நும்மகள் நுமக்கும்ஆங்கு அனையளே.

— கலித்தொகை

திரைவிரி தருதுறையே, திருமணல் விரியிடமே,
விரைவிரி நறுமலரே, மிடைதரு பொழிலிடமே,
மருவிரி புரிகுழலே, மதிபுரை திருமுகமே,
இருகயல் இணைவிழியே, எனை இடர் செய்தவையே.
புள்ளியல்மான் தேராழி போன வழியெல்லாம்
தெள்ளுநீர் ஓதம் சிதைத்தாய், மற் றென்செய்கோ!
தெள்ளுநீர் ஓதம் சிதைத்தாய், மற் றெம்மோடீங்கு
உள்ளாரோடு உள்ளாய்! உணராய், மற் றென்செய்கோ!

— இளங்கோவடிகள் (சிலப்பதிகாரம்)

ஏனல் காவல் இவளும் அல்லள்;
மான்வழி வருகுவன் இவனும் அல்லன்;
நரந்தம் கண்ணி இவனொடு இவளிடைக்
கரந்த உள்ளமொடு கருதியது பிறிதே;
நம்முன் நாணுநர் போல, தம்முள்
மதுமறைந்து உண்டோர் மகிழ்ச்சிபோல
உள்ளத் துள்ளே மகிழ்ப;
சொல்லும் ஆடுப கண்ணி னனே.

— நச். உரை மேற்கோள் (தொல்காப்பியம்)

செந்தழலின் சாற்றைப் பிழிந்து, செழுஞ்சீதச்
சந்தனம்என்று ஆரோ தடவினர்—பைந்தமிழை
ஆய்கின்ற கோன்நந்தி ஆகம் தழுவாமல்
வேகின்ற பாவியேன் மெய்!

— நந்திக் கலம்பகம்

## பத்துப் பாட்டு

### திருமுருகாற்றுப்படை

திருப்பரங்குன்றம்

கண்போல் மலர்ந்த காமரு சுனைமலர்
அஞ்சிறை வண்டின் அரிக்கணம் ஒலிக்கும்
குன்றமர்ந்து உறைதலும் உரியன்.

திருச்சீரலைவாய் (திருச்செந்தூர்)

உலகம் புகழ்ந்த ஓங்குயர் விழுச்சீர்
அலைவாய்ச் சேறலும் நிலைஇய பண்பே.

திரு ஆவி நன்குடி (பழநி)

தாவில் கொள்கை மடந்தையொடு சின்னாள்
ஆவி நன்குடி அசைதலும் உரியன்.

திரு ஏரகம் (சுவாமிமலை)

உச்சிக் கூப்பிய கையினர், தற்புகழ்ந்து
ஆறெழுத்து அடக்கிய அருமறைக் கேள்வி
நாவியல் மருங்கின் நவிலப் பாடி
விரையுறு நறுமலர் ஏந்திப் பெரிதுவந்து
ஏரகத்து உறைதலும் உரியன்.

குன்றுகள்

கச்சினன், கழலினன், செச்சைக் கண்ணியன்,
குழலன், கோட்டன், குறும்பல் லியத்தன்,
தகரன், மஞ்ஞையன், புகரில் சேவலம்
கொடியன், நெடியன், தொடியணி தோளன்
குன்றுதொ ருடலும் நின்றதன் பண்பே.

பழமுதிர் சோலை (அழகர் மலை)

இழும்என இழிதரும் அருவிப்
பழமுதிர் சோலை மலைகிழ வோனே.

— நக்கீரர்

## பொருநராற்றுப் படை

முச்சக் கரமும் அளப்பதற்கு நீட்டியகால்
இச்சக் கரமே அளந்ததால்—செய்ச்செய்
அரிகான்மேல் தேன்தொடுக்கும் ஆய்புனல்நீர் நாடன்
கரிகாலன் கால்நெருப் புற்று.

## மதுரைக் காஞ்சி

சொல்என்னும் பூம்போது
தோற்றி, பொருள்என்னும்
நல்லிருந் தீந்தாது
நாறுதலால்—மல்லிகையின்
வண்டார் கமழ்தாமம்
அன்றே மலையாத
தண்தாரான் கூடல்தமிழ்?

## திருக்குறள்

அகர முதல எழுத்தெல்லாம்; ஆதி
பகவன் முதற்றே உலகு.

விண்இன்று பொய்ப்பின், விரிநீர் வியனுலகத்து
உள்நின்று உடற்றும் பசி.

செயற்கரிய செய்வார் பெரியர்; சிறியர்
செயற்கரிய செய்கலா தார்.

'அன்றுஅறிவாம்' என்னது அறஞ்செய்க; மற்றது
பொன்றும்கால் பொன்றுத் துணை.

அன்பும் அறனும் உடைத்தாயின், இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது.

தெய்வம் தொழாஅள், கொழுநன் தொழுதெழுவாள்
'பெய்'எனப் பெய்யும் மழை.

'குழல்இனிது! யாழ்இனிது!' என்ப,தம் மக்கள்
மழலைச்சொல் கேளா தவர்.

என்பில் அதனை வெயில்போலக் காயுமே
அன்பில் அதனை அறம்.

மோப்பக் குழையும் அனிச்சம்; முகம்திரிந்து
நோக்கக் குழையும் விருந்து.

இனிய உளவாக, இன்னாத கூறல்
கனியிருப்பக் காய்கவர்ந் தற்று.

எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம்; உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு.

சமன்செய்து சீர்தூக்கும் கோல்போல் அமைந்து,ஒருபால்
கோடாமை சான்றோர்க்கு அணி.

யாகாவார் ஆயினும் நாகாக்க; காவாக்கால்
சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு.

நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கம்; தீயொழுக்கம்
என்றும் இடும்பை தரும்.

எளிதென இல்லிறப்பான் எய்தும்,எஞ் ஞான்றும்
விளியாது நிற்கும் பழி.

ஒறுத்தார்க்கு ஒருநாளை இன்பம்; பொறுத்தார்க்குப்
பொன்றும் துணையும் புகழ்.

அழுக்காறு எனஒரு பாவி, திருச்செற்றுத்
தீயுழி உய்த்து விடும்.

'அஃகாமை செல்வத்திற்கு யாது?'எனின், வெஃகாமை
வேண்டும் பிறன்கைப் பொருள்.

ஏதிலார் குற்றம்போல் தம்குற்றம் காண்கிற்பின்,
தீதுண்டோ மன்னும் உயிர்க்கு?

சொல்லுக சொல்லில் பயனுடைய; சொல்லற்க
சொல்லில் பயனிலாச் சொல்.

தீயவை தீய பயத்தலான், தீயவை
தீயினும் அஞ்சப் படும்.

ஊருணி நீர்நிறைந் தற்றே, உலகவாம்
பேரறி வாளன் திரு.

'நல்லாறு' எனினும் கொளல்தீது; 'மேலுலகம்
இல்'எனினும் ஈதலே நன்று.

ஒன்றா உலகத்து உயர்ந்த புகழல்லால்
பொன்றாது நிற்பதொன் றில்.

அருளில்லார்க்கு அவ்வுலகம் இல்லை; பொருளில்லார்க்கு
இவ்வுலகம் இல்லாகி யாங்கு.

கொல்லான், புலாலை மறுத்தானை, கைகூப்பி
எல்லா உயிரும் தொழும்.

வேண்டிய வேண்டியாங்கு எய்தலால், செய்தவம்
ஈண்டு முயலப் படும்.

மழித்தலும் நீட்டலும் வேண்டா, உலகம்
பழித்தது ஒழித்து விடின்.

களவினால் ஆகிய ஆக்கம், அளவிறந்து
ஆவது போலக் கெடும்.

எல்லா விளக்கும் விளக்கல்ல, சான்றோர்க்குப்
பொய்யா விளக்கே விளக்கு.

தன்னைத்தான் காக்கின் சினம்காக்க; காவாக்கால்
தன்னையே கொல்லும் சினம்.

இன்னாசெய் தாரை ஒறுத்தல், அவர் நாண
நன்னயம் செய்து விடல்.

ஒன்றாக நல்லது கொல்லாமை; மற்றதன்
பின்சாரப் பொய்யாமை நன்று.

'நெருநல் உளன் ஒருவன்; இன்றில்லை,' என்னும்
பெருமை உடைத்திவ் வுலகு.

'யான், எனது' என்னும் செருக்கறுப்பான், வானோர்க்கு
உயர்ந்த உலகம் புகும்.

பற்றுக பற்றற்றான் பற்றினை; அப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு.

எப்பொருள் எத்தன்மைத் தாயினும், அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு.

பிறப்பென்னும் பேதைமை நீங்க, சிறப்பென்னும்
செம்பொருள் காண்பது அறிவு.

வேண்டுங்கால் வேண்டும் பிறவாமை; மற்றது
வேண்டாமை வேண்ட வரும்.

இருவேறு உலகத் தியற்கை: திருவேறு;
தெள்ளியர் ஆதலும் வேறு.

இயற்றலும், ஈட்டலும், காத்தலும், காத்த
வகுத்தலும் வல்லது அரசு.

கற்க, கசடற, கற்பவை; கற்றபின்
நிற்க அதற்குத் தக.

விலங்கொடு மக்கள் அனையர், இலங்குநூல்
கற்றாரொடு ஏனை யவர்.

எனைத்தானும் நல்லவை கேட்க; அனைத்தானும்
ஆன்ற பெருமை தரும்.

அறிவுடையார் எல்லாம் உடையார்; அறிவிலார்
என்னுடைய ரேனும் இலர்.

வியவற்க எஞ்ஞான்றும் தன்னை; நயவற்க
நன்றி பயவா வினை.

இடிக்கும் துணையாரை ஆள்வாரை யாரே
கெடுக்கும் தகைமை யவர்?

நிலத்தியல்பான் நீர்திரிந்து அற்றாகும்; மாந்தர்க்கு
இனத்தியல்ப தாகும் அறிவு.

ஆக்கம் கருதி, முதல்இழக்கும் செய்வினை
ஊக்கார் அறிவுடை யார்.

வினைவலியும், தன்வலியும், மாற்றான் வலியும்,
துணைவலியும் தூக்கிச் செயல்.

கொக்கொக்க கூம்பும் பருவத்து; மற்றதன்
குத்தொக்க சீர்த்த இடத்து.

நெடும்புனலுள் வெல்லும் முதலை; அடும்புனலின்
நீங்கின் அதனைப் பிற.

குணம்நாடி, குற்றமும் நாடி, அவற்றுள்
மிகைநாடி, மிக்க கொளல்.

இதனை, இதனால், இவன்முடிக்கும் என்றாய்ந்து
அதனை அவன்கண் விடல்.

காக்கை கரவா கரைந்துண்ணும்; ஆக்கமும்
அன்ன நீ ரார்க்கே உள.

பொச்சாப்புக் கொல்லும் புகழை; அறிவினை
நிச்ச நிரப்புக்கொன் றாங்கு.

வான்நோக்கி வாழும் உலகெல்லாம்; மன்னவன்
கோல்நோக்கி வாழும் குடி.

அல்லற்பட்டு ஆற்றாது அழுதகண் ணீரன்றே
செல்வத்தைத் தேய்க்கும் படை?

கடிதோச்சி மெல்ல எறிக, நெடிதாக்கம்
நீங்காமை வேண்டு பவர்.

கண்ணிற்கு அணிகலம் கண்ணோட்டம்; அஃதின்றேல்
புண்ணென்று உணரப் படும்.

எல்லார்க்கும் எல்லாம் நிகழ்பவை எஞ்ஞான்றும்
வல்லறிதல் வேந்தன் தொழில்.

ஆக்கம் அதர்வினய்ச் செல்லும், அசைவிலா
ஊக்கம் உடையான் உழை.

குடியென்னும் குன்ரு விளக்கம், மடியென்னும்
மாசூர மாய்ந்து கெடும்.

முயற்சி திருவினை ஆக்கும்; முயற்றின்மை
இன்மை புகுத்தி விடும்.

இடுக்கண் வருங்கால் நகுக; அதனை
அடுத்தூர்வது அஃதொப்பது இல்.

அறிகொன்று அறியான் எனினும் உறுதி
உழையிருந்தான் கூறல் கடன்.

கேட்டார்ப் பிணிக்கும் தகையவாய், கேளாரும்
வேட்ப மொழிவதாம் சொல்.

ஈன்ருள் பசிகாண்பான் ஆயினும், செய்யற்க
சான்ருேர் பழிக்கும் வினை.

சொல்லுதல் யார்க்கும் எளிய; அரியவாம்
சொல்லிய வண்ணம் செயல்.

முடிவும், இடையூறும், முற்றியாங் கெய்தும்
படுபயனும் பார்த்துச் செயல்.

அன்பு, அறிவு, ஆராய்ந்த சொல்வன்மை தூதுரைப்பார்க்கு
இன்றி யமையாத மூன்று.

அகலாது, அணுகாது, தீக்காய்வார் போல்க
இகல்வேந்தர்ச் சேர்ந்தொழுகு வார்.

அடுத்தது காட்டும் பளிங்குபோல் நெஞ்சம்
கடுத்தது காட்டும் முகம்.

கற்றறிந்தார் கல்வி விளங்கும், கசடறச்
சொல்தெரிதல் வல்லார் அகத்து.

பகையகத்துப் பேடிகை ஒள்வாள், அவையகத்து
அஞ்சு மவன்கற்ற நூல்.

உறுபசியும், ஓவாப் பிணியும், செறுபகையும்
சேராது இயல்வது நாடு.

மணிநீரும், மண்ணும், மலையும், அணிநிழல்
காடும் உடையது அரண்.

இல்லாரை எல்லாரும் எள்ளுவர்; செல்வரை
எல்லாரும் செய்வர் சிறப்பு.

கூற்றுஉடன்று மேல்வரினும், கூடி எதிர்நிற்கும்
ஆற்ற லதுவே படை.

பேராண்மை என்ப தறுகண்;ஒன்று உற்றக்கால்
ஊராண்மை மற்றதன் எஃகு.

உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே
இடுக்கண் களைவதாம் நட்பு.

கெடுங்காலைக் கைவிடுவார் கேண்மை, அடுங்காலை
உள்ளினும் உள்ளம் சுடும்.

அழிவந்த செய்யினும் அன்பறார், அன்பின்
வழிவந்த கேண்மை யவர்.

கனவினும் இன்னாது மன்னோ வினைவேறு
சொல்வேறு பட்டார் தொடர்பு.

தொழுதகை யுள்ளும் படையொடுங்கும்; ஒன்னார்
அழுதகண் ணீரும் அனைத்து.

ஓதி உணர்ந்தும், பிறர்க்குரைத்தும் தானடங்காப்
பேதையிற் பேதையார் இல்.

'வெண்மை எனப்படுவது யாது?' எனின், 'ஒண்மை
உடையம்யாம் !' என்னும் செருக்கு.

இன்பத்துள் இன்பம் பயக்கும், இகலென்னும்
துன்பத்துள் துன்பம் கெடின்.

அஞ்சும் அறியான், அமைவிலன், ஈகலான்
தஞ்சம் எளியன் பகைக்கு.

வில்லேர் உழவர் பகைகொளினும், கொள்ளற்க
சொல்லேர் உழவர் பகை.

வாள்போல் பகைவரை அஞ்சற்க; அஞ்சுக
கேள்போல் பகைவர் தொடர்பு.

எரியால் சுடப்படினும் உய்வுண்டாம்; உய்யார்
பெரியார்ப் பிழைத்தொழுகு வார்.

இல்லாளை அஞ்சுவான் அஞ்சும்,மற் றெஞ்ஞான்றும்
நல்லார்க்கு நல்ல செயல்.

இருமனப் பெண்டிரும், கள்ளும், கவறும்
திருநீக்கப் பட்டார் தொடர்பு.

துஞ்சினர் செத்தாரின் வேறல்லர், எஞ்ஞான்றும்
நஞ்சுண்பார் கள்ளுண் பவர்.

சிறுமை பலசெய்து, சீரழிக்கும் சூதின்
வறுமை தருவதொன்று இல்.

நோய்நாடி, நோய்முதல் நாடி, அதுதணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் செயல்.

அடுக்கிய கோடி பெறினும், குடிப்பிறந்தார்
குன்றுவ செய்தல் இலர்.

தலையின் இழிந்த மயிரனையர், மாந்தர்
நிலையின் இழிந்தக் கடை.

பிறப்புஒக்கும் எல்லா உயிர்க்கும்; சிறப்புஒவ்வா
செய்தொழில் வேற்றுமை யான்.

இன்னாசெய் தார்க்கும் இனியவே செய்யாக்கால்,
என்ன பயத்ததோ சால்பு?

அரம்போலும் கூர்மைய ரேனும், மரம்போல்வர்
மக்கட்பண் பில்லா தவர்.

நச்சப் படாதவன் செல்வம், நடுவூருள்
நச்சு மரம்பழுத் தற்று.

பிறர்பழியும் தம்பழியும் நாணுவார், நாணுக்கு
உறைபதி என்னும் உலகு.

'குடிசெய்வல்' என்னும் ஒருவற்குத் தெய்வம்
மடிதற்றுத் தான்முந் துறும்.

உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்;மற் றெல்லாம்
தொழுதுண்டு பின்செல் பவர்.

நற்பொருள் நன்குணர்ந்து சொல்லினும், நல்கூர்ந்தார்
சொற்பொருள் சோர்வு படும்.

இரப்பாரை இல்லாயின், ஈர்ங்கண்மா ஞாலம்
மரப்பாவை சென்றுவந் தற்று.

இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டின், பரந்து
கெடுக உலகியற்றி யான்.

சொல்லப் பயன்படுவர் சான்றோர்; கரும்புபோல்
கொல்லப் பயன்படும் கீழ்.

அணங்குகொல்! ஆய்மயில் கொல்லோ! கனங்குழை
மாதர்கொல்! மாலும்என் னெஞ்சு!

கண்ணொடுகண்ணிணை நோக்கொக்கின், வாய்ச்சொற்கள்
என்ன பயனும் இல.

கண்டுகேட்டு, உண்டுஉயிர்த்து, உற்றறியும் ஐம்புலனும்
ஒண்தொடி கண்ணே உள.

காணிற் குவளை கவிழ்ந்து நிலனோக்கும்
'மாணிழை கண்ஒவ்வேம்!' என்று.

நெஞ்சத்தார் காத லவராக, வெய்துண்டல்
அஞ்சுதும் வேபாக் கறிந்து.

கடலன்ன காமம் உழந்தும், மடலேறுப்
பெண்ணிற் பெருந்தக்கது இல்.

ஊரவர் கௌவை எருவாக, அன்னைசொல்
நீராக, நீளுமிந் நோய்.

செல்லாமை உண்டேல் எனக்குரை; மற்றுநின்
வல்வரவு வாழ்வார்க் குரை.

கரத்தலும் ஆற்றேன்இந் நோயை; நோய் செய்தார்க்கு
உரைத்தலும் நாணுத் தரும்.

தெரிந்துணரா நோக்கிய உண்கண், பரிந்துணராப்
பைதல் உழப்பது எவன்?

சாயலும் நாணும் அவர்கொண்டார், கைம்மாரு
நோயும் பசலையும் தந்து.

நாங்காதல் கொண்டார் நமக்கெவன் செய்பவோ
தாங்காதல் கொள்ளாக் கடை?

நினைப்பவர் போன்று நினையார்கொல்? தும்மல்
சினைப்பது போன்று கெடும்.

நனவென ஒன்றில்லை யாயின், கனவினால்
காதலர் நீங்கலர் மன்.

காலை அரும்பி, பகலெல்லாம் போதாகி,
மாலை மலரும்இந் நோய்.

தணந்தமை சால அறிவிப்ப போலும்
மணந்தநாள் வீங்கிய தோள்!

உள்ளத்தார் காத லவராக, உள்ளிநீ
யாருழைச் சேறியென் நெஞ்சு?

பன்மாயக் கள்வன் பணிமொழி அன்றோநம்
பெண்மை உடைக்கும் படை?

புலப்பேன்கொல், புல்லுவேன் கொல்லோ, கலப்பேன்கொல்
கண்ணன்ன கேளிர் வரின்?

முகைமொக்குள் உள்ளது நாற்றம்போல், பேதை
நகைமொக்குள் உள்ளதொன் றுண்டு.

எழுதுங்கால் கோல்காணாக் கண்ணேபோல், கொண்கன்
பழிகாணேன் கண்ட விடத்து.

'கெட்டார்க்கு நட்டார்இல்,' என்பதோ நெஞ்சே! நீ
பெட்டாங்கு அவர்பின் செலல்?

துனியும் புலவியும் இல்லாயின், காமம்
கனியும் கருக்காயும் அற்று.

வழுத்தினாள் தும்மினே னாக; அழித்தழுதாள்
'யாருள்ளித் தும்மினீர்?' என்று.

ஊடலின் தோற்றவர் வென்றார்; அதுமன்னும்
கூடலிற் காணப் படும்.

— திருவள்ளுவர்

கடுகைத் துளைத்துஏழ் கடலைப் புகட்டிக்
குறுகத் தறித்த குறள். — இடைக்காடனார்

அறன்அறிந்தேம்; ஆன்றபொருள் அறிந்தேம்; இன்பின்
திறன்அறிந்தேம்; வீடு தெளிந்தேம்—மறன்எறிந்த
வாளார் நெடுமாற! வள்ளுவனார் தம்வாயால்
கேளா தனவெல்லாம் கேட்டு. — பூதனார்

ஒன்றே பொருளெனின், வேறென்ப; வேறெனின்,
அன்றென்ப ஆறு சமயத்தார்; —நன்றென
எப்பா லவரும் இயைபவே, வள்ளுவனார்
முப்பால் மொழிந்த மொழி. — கல்லாடர்]

## நாலடியார்

'மற்றறிவாம் நல்வினை; யாம்இளையம்,' என்னாது
கைத்துண்டாம் போழ்தே கரவாது அறஞ்செய்ம்மின்:
முற்றி யிருந்த கனியொழியத் தீவளியால்
நற்காய் உதிர் தலும் உண்டு.

உண்ணான், ஒளிநிறான், ஓங்கு புகழ்செய்யான்,
துன்னருங் கேளிர் துயர்களையான்,—கொன்னே
வழங்கான், பொருள்காத் திருப்பானேல், அஆ!
இழந்தான்என்று எண்ணப் படும்.

உறக்கும் துணையதோர் ஆலம்வித்து ஈண்டி
இறப்ப நிழற்பயந் தாஅங்கு—அறப்பயனும்
தான்சிறி தாயினும் தக்கார்கைப் பட்டக்கால்
வான்சிறிதாப் போர்த்து விடும்.

கடிப்பிடு கண்முரசம் காதத்தோர் கேட்பர்:
இடித்து முழங்கியதோர் யோசனையோர் கேட்பர்;
அடுக்கிய மூவுலகும் கேட்குமே, 'சான்றோர்
கொடுத்தார்,' எனப்படும் சொல்.

ஆவேறு உருவின ஆயினும், ஆபயந்த
பால்வேறு உருவின அல்லவாம் ;—பால்போல்
ஒருதன்மைத்து ஆகும் அறநெறி ; ஆபோல்
உருவு பலகொளல் ஈங்கு.

நல்லார் எனத்தாம் நனிவிரும்பிக் கொண்டாரை
அல்லார் எனினும் அடக்கிக் கொளல்வேண்டும் :
நெல்லுக்கு உமியுண்டு, நீர்க்கு நுரையுண்டு,
புல்லிதழ் பூவிற்கும் உண்டு.

கற்றறிந்த நாவினர் சொல்லார்தம் சோர்வஞ்சி ;
மற்றையர் ஆவார் பகர்வர்; பனையின்மேல்
வற்றிய ஓலை கலகலக்கும், எஞ்ஞான்றும்
பச்சோலைக்கு இல்லை ஒலி.

கற்றதூஉம் இன்றி, கணக்காயர் பாடத்தால்
பெற்றதாம் பேதைஓர் சூத்திரம்—மற்றதனை
நல்லார் இடைப்புக்கு, நாணாது சொல்லித்தன்
புல்லறிவு காட்டி விடும்.

பெருங்கடல் ஆடிய சென்றார், 'ஒருங்குடன்
ஓசை அவிந்தபின் ஆடுதும்', என்றற்றால்
'இற்செய் குறைவினை நீக்கி, அறவினை
மற்றறிவாம்' என்றிருப்பார் மாண்பு.

செந்நெல்லால் ஆய செழுமுளை, மற்றும்அச்
செந்நெல்லே ஆகி விளைதலால்,—அந்நெல்
வயல்நிறையக் காய்க்கும் வளவயல் ஊர !
மகனறிவு தந்தை யறிவு.

— சமணப் புலவர்கள்

## பழமொழி

'உரைமுடிவு காணான், இளமையோன்,' என்ற
நரைமுது மக்கள் உவப்ப—நரைமுடித்து,
சொல்லால் முறைசெய்தான் சோழன்; குலவிச்சை
கல்லாமல் பாகம் படும்.

கற்றறிந்தார் கண்ட அடக்கம் அறியாதார்
பொச்சாந்து தம்மைப் புகழ்ந்துரைப்பர் ;—தெற்ற
அறைகல் அருவி அணிமலை நாட!
நிறைகுடம் நீர்தளும்பல் இல்.

முல்லைக்குத் தேரும், மயிலுக்குப் போர்வையும்
தொல்லை அளித்தாரைக் கேட்டறிதும்;—சொல்லின்
நெறிமடற் பூந்தாழை நீடுநீர்ச் சேர்ப்ப!
அறிமடமும் சான்றோர்க் கணி.

பொல்லாத சொல்லி மறைந்தொழுகும் பேதை, தன்
சொல்லாலே தன்னைத் துயர்ப்படுக்கும்;—நல்லாய்!
மணலுள் முழுகி மறைந்து கிடக்கும்
நுணலும்தன் வாயால் கெடும்.

முட்டின் றொருவர் உடைய பொழுதின்கண்
அட்டிற்றுத் தின்பவர் ஆயிரவர் ஆபவே:
கட்டலர்தார் மார்ப! கலியூழிக் காலத்து,
கெட்டார்க்கு நட்டாரோ இல்.

நாடறியப் பட்ட பெருஞ்செல்வர் நல்கூர்ந்து
வாடிய காலத்தும் வட்குபவோ?—வாடி
வலித்துத் திரங்கிக் கிடந்தே விடினும்
புலித்தலையை நாய்மோத்தல் இல்.

வழங்கலும் துய்த்தலும் தேற்றாதான் பெற்ற
முழங்கு முரசுடைச் செல்வம்—தழங்கருவி
வேய்முற்றி முத்துதிரும் வெற்ப! அதுவன்றே
நாய்பெற்ற தெங்கம் பழம்?

மறுமனத்தன் அல்லாத மாநலத்த வேந்தன்
உறுமனத்த னாகிஒழுகின்—செறுமனத்தார்
பாயிரங் கூறிப் படைதொக்கால் என்செய்ப?
ஆயிரங் காக்கைக்கோர் கல்.

வைத்ததனை வைப்பென்று உணரற்க; தாமதனைத்
துய்த்து வழங்கி இருபாலும்—அத்தகத்
தக்குழி நோக்கி அறஞ்செய்யின், அஃதன்றே
எய்ப்பினில் வைப்பென் பது ?

•

மாய்வதன் முன்னே வகைப்பட்ட நல்வினையை
ஆய்வின்றிச் செய்யாதார், பின்னை வழிநினைந்து
நோய்காண் பொழுதின் அறஞ்செய்வார்க் காணுமை
நாய்காணின் கற்காணு வாறு.

இரப்பவர்க்கு ஈயக் குறைபடுமென் றெண்ணி,
கரப்பவர் கண்டறியார் கொல்லோ—பரப்பில்
துறைத்தோணி நின்றுலாம் தூங்குநீர்ச் சேர்ப்ப !
இறைத்தோறும் ஊறும் கிணறு ?

— முன்றுறையரையர்

## காவியக் கவிதை

### சிலப்பதிகாரம்

**கண்ணகி**

போதிலார் திருவினாள் புகழுடை வடிவென்றும்,
தீதிலா வடமீனின் திறம்இவள் திறம்என்றும்,
மாதரார் தொழுதேத்த, வயங்கிய பெருங்குணத்துக்
காதலாள், பெயர்மன்னும் கண்ணகிஎன் பாள்மன்னோ.

**கோவலன்**

மண்தேய்த்த புகழினான், மதிமுக மடவார்தம்
பண்தேய்த்த மொழியினார் ஆயத்துப் பாராட்டிக்
கண்டேத்தும் செவ்வேள்என்று இசைபோக்கிக் காதலால்
கொண்டேத்தும் கிழமையான், கோவலன்என் பான்மன்னோ.

**கோவலன் காதலுரை**

மாசறு பொன்னே ! வலம்புரி முத்தே !
காசறு விரையே ! கரும்பே ! தேனே !
அரும்பெறல் பாவாய் ! ஆருயிர் மருந்தே !
பெருங்குடி வாணிகன் பெருமட மகளே !
மலையிடைப் பிறவா மணியே என்கோ !
அலையிடைப் பிறவா அமிழ்தே என்கோ !
யாழிடைப் பிறவா இசையே என்கோ
தாழிருங் கூந்தல் தையால், நின்னை!

**கண்ணகியின் கையறு நெஞ்சம்**

அஞ்செஞ் சீறடி அணிசிலம்பு ஒழிய,
... ... ... ...
... ... ... ...
செங்கயல் நெடுங்கண் அஞ்சனம் மறப்ப,
பவள வாள்நுதல் திலகம் இழப்ப,
தவள வாள்நகை கோவலன் இழப்ப,
மையிருங் கூந்தல் நெய்யணி மறப்ப,
கையறு நெஞ்சத்துக் கண்ணகி

## கண்ணகி-கற்புத் தெய்வம்

என்னெடு போந்த இளங்கொடி நங்கைதன்
வண்ணச் சீறடி மண்மகள் அறிந்திலள் ;
கடுங்கதிர் வெம்மையில் காதலன் தனக்கு
நடுங்குதுயர் எய்தி, நாப்புலர வாடி,
தன்துயர் காணுத் தகைசால் பூங்கொடி ;
இன்துணை மகளிர்க்கு இன்றி யமையாக்
கற்புக்கடம் பூண்ட இத்தெய்வம் அல்லது
பொற்புடைத் தெய்வம் யாம்கண் டிலமால் !
'வானம் பொய்யாது வளம்பிழைப் பறியாது
நீள்நில வேந்தர் கொற்றம் சிதையாது
பத்தினிப் பெண்டிர் இருந்தநாடு,' என்னும்
அத்தகு நல்லுரை அறியா யோநீ ?

## கோவலன் புகழுரை

என்னெடு போந்து,ஈங்கு என்துயர் களைந்த
பொன்னே ! கொடியே ! புனைபூங் கோதாய் !
நாணின் பாவாய் ! நீணில விளக்கே !
கற்பின் கொழுந்தே ! பொற்பின் செல்வீ !

## கண்ணகியின் சீற்றம்

வாயி லோயே ! வாயி லோயே !
அறிவறை போகிய பொறியறு நெஞ்சத்து
இறைமுறை பிழைத்தோன் வாயி லோயே !
'இணையரிச் சிலம்பொன்று ஏந்திய கையள்,
கணவனை இழந்தாள், கடையகத் தாள்,' என்று
அறிவிப் பாயே ! அறிவிப் பாயே !

### வீரக்கற்பின் வெற்றி

தாழ்ந்த குடையன், தளர்ந்தசெங் கோலன்,
'பொன்செய் கொல்லன் தன்சொல் கேட்ட
யானே அரசன்? யானே கள்வன்!
மன்பதை காக்கும் தென்புலம் காவல்
என்முதல் பிழைத்தது! கெடுகஎன் ஆயுள்!'என
மன்னவன் மயங்கிவீழ்ந் தனனே; தென்னவன்
கோப்பெருந் தேவி, குலைந்தனள் நடுங்கி,
'கணவனை இழந்தோர்க்குக் காட்டுவது இல்'என்று
இணையடி தொழுதுவீழ்ந் தனளே மடமொழி.

### அறக்கற்பின் திறம்

கலக்கம் கொள்ளாள், கடுந்துயர் பொறாஅள்,
'மன்னவன் செல்வுழிச் செல்க யான்!'என,
தன்னுயிர் கொண்டுஅவன் உயிர்தே டினள்போல்
பெருங்கோப் பெண்டும் ஒருங்குடன் மாய்ந்தனள்.

### வாழ்த்து

தொல்லை வினையால் துயர்உழந்தாள் கண்ணின்நீர்
கொல்ல உயிர்கொடுத்த கோவேந்தன் வாழியரோ!
வாழியரோ வாழி வருபுனல்நீர் வையை
சூழும் மதுரையார் கோமான்தன் தொல்குலமே!

— இளங்கோவடிகள்

## மணிமேகலை

### மாரியும் மன்னுயிரும்

கோன்நிலை திரிந்திடின் கோள்நிலை திரியும்;
கோள்நிலை திரிந்திடின் மாரிவறம் கூரும்;
மாரிவறம் கூரின் மன்னுயிர் இல்லை.

### உணவும் உயிரும்

மண்திணி ஞாலத்து வாழ்வோர்க் கெல்லாம்
உண்டி கொடுத்தோர் உயிர்கொடுத் தோரே,
'பாரகம் அடங்கலும் பசிப்பிணி அறுக'என
ஆதிரை இட்டனள் ஆருயிர் மருந்தென்.

'மக்கள் தேவர் எனஇரு சார்க்கும்
ஒத்த முடிவின் ஓரறம் உரைக்கேன் :
பசிப்பிணி தீர்த்தல்' என்றே அவரும்
தவப்பெரு நல்லறம் சாற்றினர்.

### கற்பின் பெருமை

'தெய்வம் தொழாஅள், கொழுநன் தொழுது எழுவாள்
பெய்யெனப் பெய்யும் பெருமழை,' என்றஅப்
பொய்யில் புலவன் பொருளுரை தேருய்!

### துன்பமும் இன்பமும்

பிறந்தோர் உறுவது பெருகிய துன்பம் ;
பிறவார் உறுவது பெரும்பே ரின்பம் ;
பற்றின் வருவது முன்னது ; பின்னது
அற்ருேர் உறுவது அறிக.

### பிறத்தலும் இறத்தலும்

மயக்கும் கள்ளும் மன்னுயிர் கோறலும்
கயக்கறு மாக்கள் கடிந்தனர்; கேளாய் :
பிறந்தவர் சாதலும், இறந்தவர் பிறத்தலும்
உறங்கலும் விழித்தலும் போன்றது உண்மையின்.

### வண்டும் மலரும்

நறுந்தாது உண்டு, நயனில் காலை
வறும்பூத் துறக்கும் வண்டு.

— *சீத்தலைச் சாத்தனுர்*

## சிந்தாமணி

### பொய்கையும் பொழிலும்

தாய்தன் கையின் மெல்லத் தண்ணென் குறங்கின் எறிய
வாய்பொன் அமளித் துஞ்சும் மணியார் குழவி போலத்
தோயும் திரைகள் அலைப்ப, தோடார் கமலப் பள்ளி
மேய வகையில் துஞ்சும் வெள்ளை அன்னம் காண்மின்!

நீலத் துகிலிற் கிடந்த நிழலார் தழ்லம் மணிகள்
கோலச் சுடர்விட்டு உமிழ, குமரி அன்னம் குறுகி,
சால நெருங்கிப் பூத்த தடந்தா மரைப்பூ என்ன
ஆலிச் சுடர்கள் கௌவி, அழுங்கும் வண்ணம் காண்மின்!

கோல நெடுங்கண் மகளிர் கூந்தல் பரப்பி இருப்ப,
பீலி மஞ்ஞை நோக்கி, பேடை மயில்என்று எண்ணி,
ஆலிச் சென்று புல்லி, அண்மை கண்டு நாணி,
சோலை நோக்கி நடக்கும் தோகை வண்ணம் காண்மின்!

மின்ஒப் புடைய பைம்பூண் நீருள் வீழக் காணுள்,
'அன்னப் பெடையே! தொழுதேன், அன்னை கொடியள் கண்டாய்!
என்னை அடிமை வேண்டின் நாடித் தா,' என்று இறைஞ்சி,
பொன்னம் கொம்பின் நின்ருள் பொலிவின் வண்ணம் காண்மின்!

தீம்பாற் பசியின் இருந்த செவ்வாய்ச் சிறுபைங் கிளி,தன்
ஓம்பு தாய்நீர் குடைய, ஒழிக்கும் வண்ணம் நாடி,
'பாம்பால்!' என்ன, வெருவிப் பைம்பொன் தோடு கழல,
காம்பேர் தோளி நடுங்கி, கரைசேர் பவளைக் காண்மின்!

— திருத்தக்க தேவர்

# திருநெறித் தமிழ் மாலை

## தேவாரம்

செல்வநெடு மாடம் சென்று,சே ணோங்கிச்
செல்வம்மதி தோயச் செல்வம்உயர் கின்ற
செல்வர்வாழ் தில்லைச் சிற்றம்பல மேய
செல்வன்கழ லேத்தும் செல்வஞ்செல் வம்மே.

சிறையாரு மடக்கிளியே !
இங்கேவா; தேனொடுபால்
முறையாலே உணத்தருவன் ;
மொய்பவளத் தொடுதரளம்
துறையாரும் கடல்தோணி
புரத்தீசன், துளங்கும்இளம்
பிறையாளன் திருநாமம்
எனக்கொருகால் பேசாயே!

புலனைந்தும் பொறிகலங்கி, நெறிமயங்கி,
அறிவழிந்திட்டு, ஐம்மே லுந்தி,
அலமந்த போதாக 'அஞ்சேல் !' என்று
அருள்செய்வான் அமரும் கோயில்,
வலம்வந்த மடவார்கள் நடமாட,
முழவதிர, மழையென் றஞ்சி,
சிலமந்தி அலமந்து, மரமேறி
முகில்பார்க்கும் திருவை யாறே.

மங்கையர்க் கரசி, வளவர்கோன் பாவை,
வரிவளைக் கைம்மட மானி,
பங்கயச் செல்வி, பாண்டிமா தேவி,
பணிசெய்து நாடொறும் பரவ,
பொங்குஅழ லுருவன்,பூதநா யகன்,நால்
வேதமும் பொருள்களும் அருளி,
அங்கயற் கண்ணி தன்னொடும் அமர்ந்த
ஆலவாய் ஆவதும் இதுவே.

நீலமா மணிநிறத் தரக்கனை இருபது கரத்தொடொல்க
வாலினுற் கட்டிய வாலியார் வழிபட மன்னுகோயில்,
ஏலமோ டிலையில வங்கமே இஞ்சியே மஞ்சளுந்தி
ஆலியா வருபுனல் வடகரை அடைகுரங் காடுதுறையே.

—திருஞானசம்பந்தர்

கண்காள் ! காண்மின்களோ—கடல்
நஞ்சுண்ட கண்டன் தன்னை
எண்டோள் வீசிநின் றுடும்பி ரான் தன்னைக்
கண்காள் ! காண்மின்களோ.

நெஞ்சே! நீநினையாய்—நிமிர்
புன்சடை நின்மலனை
மஞ்சா டும்மலை மங்கைம ணாளனை
நெஞ்சே! நீநினையாய்.

புழுவாய்ப் பிறக்கினும் புண்ணியா!
உன்னடி, என்மனத்தே
வழுவா திருக்க வரந்தர
வேண்டும்;இவ் வையகத்தே
தொழுவார்க் கிரங்கி இருந்தருள்
செய்பா திரிப்புலியூர்ச்
செழுநீர்ப் புனற்கங்கை செஞ்சடை
மேல்வைத்த தீவண்ணனே!

வானம் துளங்கிலென், மண்கம்பம்
ஆகிலென், மால்வரையும்
தானந் துளங்கித் தலைதடு
மாறிலென், தண்கடலும்
மீனம் படிலென், விரிசுடர்
வீழிலென், வேலை நஞ்சுண்டு
ஊனம்ஒன் றில்லா ஒருவனுக்கு
ஆட்பட்ட உத்தமர்க்கே?

முன்னம் அவனுடைய நாமம் கேட்டாள்;
　　மூர்த்தி அவனிருக்கும் வண்ணம் கேட்டாள்;
பின்னை அவனுடைய ஆரூர் கேட்டாள்;
　　பெயர்த்தும் அவனுக்கே பிச்சி யானாள்;
அன்னையையும் அத்தனையும் அன்றே நீத்தாள்;
　　அகன்றாள் அகலிடத்தார் ஆசா ரத்தை;
தன்னை மறந்தாள் தன் நாமம் கெட்டாள்;
　　தலைப்பட்டாள் நங்கை தலைவன் தாளே.

— திருநாவுக்கரசர்

திங்கள் தங்கு சடையின்மேலோர்
　　திரைகள்வந்து புரளவீசும்
கங்கையாளேல் வாய்திறவாள் ;
　　கணபதியேல் வயிறுதாரி ;
அங்கைவேலோன் குமரன்பிள்ளை ;
　　தேவியார்கோல் தட்டியாளார்;
உங்களுக்குஆட் செய்யமாட்டோம்
　　ஓணகாந்தன் தளியுளீரே !

மிடுக்கி லாதானை 'வீம னேவிறல்
　　விசய னேவில்லுக் கிவன்,' என்று
கொடுக்கி லாதானைப் 'பாரி யே'என்று
　　கூறி னும்கொடுப் பாரிலை ;
பொடிக்கொள் மேனியெம் புண்ணி யன்புக
　　லூரைப் பாடுமின் புலவீர்காள் !
அடுக்கு மேல்அம ருலக மாள்வதற்கு
　　யாதும் ஐயுற வில்லையே.

அறிவி னால்மிக்க அறுவகைச் சமயம்
　　அவ்வவர்க் கங்கே யாரருள் புரிந்து,
எறியும் மாகடல் இலங்கையர் கோனைத்
　　துலங்க மால்வரைக் கீழடர்த் திட்டு,
குறிகொள் பாடலின் இன்னிசை கேட்டு,
　　கோல வாளொடு நாளது கொடுத்த
செறிவு கண்டுநின் திருவடி அடைந்தேன்,
　　செழும்பொ ழில்திருப் புன்கூர் உளானே !

பண்ணிடைத் தமிழ்ஒப்பாய்!
    பழத்தினில் சுவைஒப்பாய்!
கண்ணிடை மணிஒப்பாய்!
    கடுவிருட் சுடர்ஒப்பாய்!
மண்ணிடை யடியார்கள்
    மனத்திடர் வாராமே
விண்ணிடைக் குருகாவூர்
    வெள்ளடை நீயன்றே!

பத்தராய்ப் பணிவார்கள் எல்லார்க்கும் அடியேன்;
    பரமனையே பாடுவார் அடியார்க்கும் அடியேன்;
சித்தத்தைச் சிவன்பாலே வைத்தார்க்கும் அடியேன்;
    திருவாரூர்ப் பிறந்தார்கள் எல்லார்க்கும் அடியேன்;
முப்போதும் திருமேனி தீண்டுவார்க்கு அடியேன்;
    முழுநீறு பூசிய முனிவர்க்கும் அடியேன்;
அப்பாலும் அடிச்சார்ந்த அடியார்க்கும் அடியேன்;
    ஆரூரன் ஆரூரில் அம்மானுக் காளே.

— சுந்தரர்

## திருவாசகம்

சிரிப்பார்; களிப்பார்; தேனிப்பார்;
    திரண்டு திரண்டுஉன் திருவார்த்தை
விரிப்பார்; கேட்பார்; மெச்சுவார்;
    வெவ்வேறு இருந்துன் திருநாமம்
தரிப்பார்; 'பொன்னம் பலத்தாடும்
    தலைவா!' என்பார்; அவர்முன்னே
நரிப்பாய் நாயேன் இருப்பேனோ?
    நம்பி! இனித்தான் நல்காயே!

தந்ததுஉன் தன்னை ; கொண்டதுஎன் தன்னை ;
சங்கரா ! ஆர்கொலோ சதுரர் ?
அந்தமொன் றில்லா ஆனந்தம் பெற்றேன் !
யாதுநீ பெற்றதொன் றுஎன்பால் ?
சிந்தையே கோயில் கொண்டஎம் பெருமான் !
திருப்பெருந் துறையுறை சிவனே !
எந்தையே ! ஈசா ! உடலிடம் கொண்டாய் !
யானிதற்கு இலனோர்கைம் மாறே.

புற்று மாய்,மர மாய்,புனல் காலே
உண்டி யாய், அண்ட வாணரும்பிறரும்
வற்றி யாரும்நின் மலரடி காணா
மன்ன! என்னையோர் வார்த்தையுட் படுத்துப்
பற்றி னாய்;பதை யேன்;மன முருகேன் ;
பரிகி லேன் ;பரி யாவுடல் தன்னைச்
செற்றி லேன்இன்னும் திரிதரு கின்றேன்
திருப்பெ ருந்துறை மேவிய சிவனே !

அம்மையே ! அப்பா ! ஒப்பிலா மணியே !
அன்பினில் விளைந்தஆ ரமுதே!
பொய்ம்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும்
புழுத்தலைப் புலையனேன் தனக்குச்
செம்மையே யாய சிவபதம் அளித்த
செல்வமே ! சிவபெரு மானே !
இம்மையே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன் !
எங்கெழுந் தருளுவ தினியே ?

விண்ணாளும் தேவர்க்கும் மேலாய வேதியனை,
மண்ணாளும் மன்னவர்க்கும் மாண்பாகி நின்றானை,
தண்ணார் தமிழளிக்கும் தண்பாண்டி நாட்டானை,
பெண்ணாளும் பாகனை, பேணு பெருந்துறையில்
கண்ணார் கழல்காட்டி நாயேனை யாட்கொண்ட
அண்ணா மலையானைப் பாடுதுங்காண் அம்மானாய் !

— மாணிக்க வாசகர்

நால்வர் புகழ்

சொற்கோவும், தோணிபுரத்
 தோன்றலும்,எம் சுந்தரரும்,
சிற்கோல வாதவூர்த்
 தேசிகனும்—முற்கோலி
வந்திலரேல், நீறெங்கே?
 மாமறைநூல் தானெங்கே?
எந்தைபிரான் ஐந்தெழுத்தெங் கே?

— [தனிப்பாடல்]

## நாலாயிரம்

திருக்கண்டேன்! பொன்மேனி கண்டேன்! திகழும்
அருக்கன் அணிநிறமும் கண்டேன்!—செருக்கிளரும்
பொன்னாழி கண்டேன்! புரிசங்கம் கைக்கண்டேன்!
என்னாழி வண்ணன்பால் இன்று.

— பேயாழ்வார்

அன்பே தகளியா, ஆர்வமே நெய்யாக,
இன்புருகு சிந்தை இடுதிரியா—நன்புருகி
ஞானச் சுடர்விளக் கேற்றினேன் நாரணற்கு
ஞானத் தமிழ்புரிந்த நான்!

—பூதத்தாழ்வார்

அடியோ மோடும்நின் னோடும் பிரிவின்றி
 ஆயிரம் பல்லாண்டு!
வடிவாய் நின்வல மார்பினில் வாழ்கின்ற
 மங்கையும் பல்லாண்டு!
வடிவார் சோதிவ லத்துறை யும்சுடர்
 ஆழியும் பல்லாண்டு!
படைபோர் புக்குமு ழங்கும்அப் பாஞ்ச
 சன்னியமும் பல்லாண்டே!

— பெரியாழ்வார்

வாரணம் ஆயிரம் சூழவ லஞ்செய்து
நாரண நம்பிந டக்கின்ரு னென்றுஎதிர்
பூரண பொற்குடம் வைத்துப்பு ரமெங்கும்
தோரணம் நாட்டக்க னுக்கண்டேன் தோழீ!நான்.

நாளைவ துவைவம ணமென்று நாளிட்டு,
பாளைக்க முகுப ரிசுடைப் பந்தற்கீழ்
கோளரி மாதவன் கோவிந்தன் என்பானோர்
காளைபு குதக்க ணக்கண்டேன் தோழீ! நான்.

•

மத்தளம் கொட்ட, வரிசங்கம் நின்றூத,
முத்துடைத் தாமம்நி ரைதாழ்ந்த பந்தற்கீழ்,
மைத்துனன் நம்பிமது சூதன் வந்துஎன்னைக்
கைத்தலம் பற்றக்க ணக்கண்டேன் தோழீ! நான்.

— ஆண்டாள்

மன்னுபுகழ்க் கௌசலைதன்
மணிவயிறு வாய்த்தவனே!
தென்னிலங்கைக் கோன்முடிகள்
சிந்துவித்தாய்! செம்பொன்சேர்
கன்னிநன்மா மதிள்புடைசூழ்
கணபுரத்துஎன் கருமணியே!
என்னுடைய இன்னமுதே!
இராகவனே! தாலேலோ!

ஆனாத செல்வத்து அரம்பையர்கள் தற்சூழ
வானாளும் செல்வமும், மண்ணரசும், யான்வேண்டேன்;
தேனார்பூஞ் சோலைத் திருவேங் கடச்சுனையில்
மீனாய்ப் பிறக்கும் விதியுடையேன் ஆவேனே.

வாளால்அ றுத்துச்சு டினும்,ம ருத்துவன்பால்
மாளாத காதல்நோ யாளன்போல், மாயத்தால்
மீளாத்து யர்தரினும், வித்துவக்கோட் டம்மா! நீ
ஆளாஉ னதருளே பார்ப்பன்அ டியேனே.

— குலசேகராழ்வார்

'பச்சைமா மலைபோல் மேனி,
பவளவாய், கமலச் செங்கண்
அச்சுதா ! அமரர் ஏறே !
ஆயர் தம் கொழுந்தே !' என்னும்
இச்சுவை தவிர யான்போய்
இந்திர லோகம் ஆளும்
அச்சுவை பெறினும், வேண்டேன்
அரங்கமா நகரு ளானே !

குடதிசை முடியை வைத்து,
குணதிசை பாதம் நீட்டி,
வடதிசை பின்பு காட்டி,
தென்திசை இலங்கை நோக்கி
கடல்நிறக் கடவுள் எந்தை
அரவணைத் துயிலு மாகண்டு
உடல்எனக்கு உருகு மாலோ!
என்செய்கேன் ? உலகத்தீரே!

— தொண்டரடிப்பொடியாழ்வார்

அமலன் ஆதிபி ரான்,அடி
யார்க்குளென்னை ஆட்படுத்த
விமலன், விண்ணவர் கோன்,விரை
யார்பொழில் வேங்கடவன்,
நிமலன், நின்மலன், நீதிவானவன்,
நீள்மதிள் அரங்கத்தம் மான்,திருக்
கமல பாதம்வந்து என்கண்ணி
னுள்ளன ஒக்கின்றதே.

— திருப்பாணாழ்வார்

சொல்லாய் பைங்கிளியே !—சுடர்
ஆழி வலன்உயர்த்த
மல்லார் தோள்வட வேங்கட வன்வரச்
சொல்லாய் பைங்கிளியே !

கரையாய் காக்கைப்பிள்ளாய்! — கரு
மாமுகில் போல்நிறத்தன்,
உரையார் தொல்புகழ் உத்தம னவரக்
கரையாய் காக்கைப்பிள்ளாய்!

கொட்டாய் பல்லிக்குட்டி! — குட
மாடிஉ லகளந்த
மட்டார் பூங்குழல் மாதவ னவரக்
கொட்டாய் பல்லிக்குட்டி!

— திருமங்கையாழ்வார்

உயர்வற உயர்நலம் உடையவன் எவன்அவன்,
மயர்வற மதிநலம் அருளினன் எவனவன்,
அயர்வறும் அமரர்கள் அதிபதி எவனவன்
துயரறு சுடரடி தொழுதெழுஎன் மனனே!

முடிச்சோதி யாய்உனது முகச்சோதி மலர்ந்ததுவோ?
அடிச்சோதி நீநின்ற தாமரையாய் அலர்ந்ததுவோ?
படிச்சோதி யாடையொடும் பல்கலனாய் நின்பைம்பொன்
கடிச்சோதி கலந்ததுவோ? திருமாலே! கட்டுரையே.

வம்மின் புலவீர்! நும்மெய்
வருத்திக் கைசெய்து உய்ம்மினோ!
இம்மன் னுலகில் செல்வர்
இப்போ தில்லை, நோக்கினோம்;
நும்இன் கவிகொண்டு நும்நும்
இட்ட தெய்வம் ஏத்தினால்
செம்மின் சுடர்முடி
என்திரு மாலுக்குச் சேருமே.

— நம்மாழ்வார்

## திருமந்திரம்

அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்;
அன்பே சிவமாவ தாரும் அறிகிலார்;
அன்பே சிவமாவ தாரும் அறிந்தபின்
அன்பே சிவமாய் அமர்ந்திருந் தாரே.

படமாடக் கோயில் பகவற்கொன்று ஈயின்,
நடமாடக் கோயில் நம்பர்க்கங் காகா;
நடமாடக் கோயில் நம்பர்க்கொன்று ஈயின்,
படமாடக் கோயில் பகவற்க தாமே.

மரத்தை மறைத்தது மாமத யானை;
மரத்தின் மறைந்தது மாமத யானை;
பரத்தை மறைத்தது பார்முதற் பூதம்;
பரத்தின் மறைந்தது பார்முதற் பூதமே.

ஆசை யறுமின்கள்; ஆசை யறுமின்கள்;
ஈசனோ டாயினும் ஆசை யறுமின்கள்;
ஆசை படப்பட, ஆய்வருந் துன்பங்கள்;
ஆசை விடவிட, ஆனந்த மாமே.

பார்ப்பான் அகத்திலே பாற்பசு ஐந்துண்டு;
மேய்ப்பாரும் இன்றி வெறித்துத் திரிவன;
மேய்ப்பாரும் உண்டாய், வெறியும் அடங்கினல்,
பார்ப்பான் பசுஐந்தும் பாலாச் சொரியுமே!

— திருமூலர்

# தூதுப் பாட்டு

அன்னச் சேவல்! அன்னச் சேவல்!

.... .... ... ....

.... ... .... ....

குமரியம் பெருந்துறை அயிரை மாந்தி,
வடமலைப் பெயர்குவை யாயின், இடையது
சோழநன் ஞட்டுப் படினே, கோழி
உயர்நிலை மாடத்துக் குறும்பறை அசைஇ,
வாயில் விடாது, கோயில் புக்கு,எம்
பெருங்கோக் கிள்ளி கேட்க, 'இரும்பிசிர்
ஆந்தை அடியுறை' எனினே, மாண்டநின்
இன்புறு பேடை அணியத்தன்
நன்புறு நன்கலம் நல்குவன் நினக்கே.

— புறநானூறு

வண்டரங்கப் புனற்கமல மதுமாந்தி, பெடையினெடும்
ஒண்டரங்க இசைபாடும் அளியரசே! ஒளிமதியத்
துண்டரங்கப் பூண்மார்பர், திருத்தோணி புரத்துறையும்
பண்டரங்கர்க்கு என்னிலைமை பரிந்தொருகால் பகராயே.

பால்நாறு மலர்ச்சூதப் பல்லவங்கள் அவைகோதி,
ஏனோர்க்கும் இனிதாக மொழியும்எழில் இளங்குயிலே!
தேனரும் பொழில்புடைசூழ் திருத்தோணி புரத்தமரர்
கோனரை என்னிடத்தே வரஒருகால் கூவாயே!

கானருகும், வயலருகும்,
கழியருகும், கடலருகும்,
மீனிரிய வருபுனலில்
இரைதேர்வெண் மடநாராய்!
தேனமர் தார்ச் சிறுத்தொண்டன்
செங்காட்டங் குடிமேய
வானமரும் சடையார்க்குஎன்
வருத்தம்சென்று உரையாயே.

கண்டகங்காள்! முண்டகங்காள்!
கைதைகாள்! நெய்தல்காள்!
பண்டரங்க வேடத்தான்,
பாட்டோவாப் பழனத்தான்,
வண்டுலாம் தடமூழ்கி,
மற்றவனென் தளிர்வண்ணம்
கொண்டநாள் தானறிவான்
குறிக்கொள்ளா தொழிவானோ?

பறக்கும்எம் கிள்ளைகாள்!
பாடும்எம் பூவைகாள்!
அறக்கண்என் னத்தகும்
அடிகள்ஆ ரூரரை
மறக்ககில் லாமையும்
வளைகள்நில் லாமையும்,
உறக்கமில் லாமையும்
உணர்த்தவல் லீர்களே!

— தேவாரம்

மதயானை போல்எழுந்த மாமுகில்காள்!
வேங்கடத்தைப்
பதியாக வாழ்வீர்காள்! பாம்பணையான்
வார்த்தைஎன்னே!
கதியென்றும் தானாவான் கருதாதுஓர்
பெண்கொடியை
வதைசெய்தான் என்னும்சொல் வையகத்தார்
மதியாரே.

— நாச்சியார் திருமொழி

ஓடிவந்து என்குழல்மேல் ஒளி மாமலர் ஊதீரோ,
கூடிய வண்டினங்காள்! குரு நாடுடை ஐவர்கட்காய்
ஆடிய மாநெடுந்தேர்ப் படை நீறெழச் செற்றபிரான்
சூடிய தண்துளவ முண்ட தூமது வாய்கள்கொண்டே?

வீதியினுல் பெடைமணக்கும்
மென்னடைய அன்னங்காள் !
மதியினுல், குறள்மாணுய்
உலகிரந்த கள்வற்கு
" 'மதியிலேன் வல்வினையே
மாளாதோ?' என்றுஒருத்தி
மதியெல்லாம் உள்கலங்கி
மயங்குமால்," என்னீரே.

— திருவாய்மொழி

நாராய் ! நாராய் ! செங்கால் நாராய் !
பனம்படு பனையின் கிழங்குபிளந் தன்ன
பவளக் கூர்வாய்ச் செங்கால் நாராய் !
நீயும், நின் பெடையும்,
தென் திசைக் குமரி யாடி வடதிசைக்
காவிரி யாட ஏகுவி ராயின்,
சத்திமுற் றத்து வாவியிற் சென்று,
நனைசுவர்க் கூரைக் கனைகுரற் பல்லி,
வரவுபார்த் திருக்கும் மனைவியைக் கண்டு,'எம்
கோமான் வழுதி கூடல் மன்றத்து
ஆடை யின்றி, வாடையின் மெலிந்து,
கையது கொண்டு மெய்யது பொத்திக்
காலது கொண்டு மேலுறத் தழீஇ,
அலகுதிறந் தன்ன பல்லின ணுகிப்
பேழைசெய் பாம்பென உயிர்க்கும்
ஏழை யாளனைக் கண்டனம்,' எனுமே.

— தனிப்பாடல்

## திருவெம்பாவை

முன்னைப் பழம்பொருட்கும் முன்னைப் பழம்பொருளே !
பின்னைப் புதுமைக்கும் பேர்த்தும்அப் பெற்றியனே !
உன்னைப் பிரானாகப் பெற்றஉன் சீரடியோம்,
உன்னடியார் தாள்பணிவோம்; ஆங்கவர்க்கே பாங்காவோம்;
அன்னவரே எம்கணவர் ஆவார்; அவருகந்து
சொன்ன பரிசே தொழும்பாய்ப் பணிசெய்வோம் ;
இன்ன வகையே எமக்கெங்கோன் நல்குதியேல்
என்ன குறையும் இலோம்,ஏலோர் எம்பாவாய் !

காதார் குழையாட, பைம்பூண் கலனாட,
கோதை குழலாட, வண்டின் குழாமாட,
சீதப் புனலாடி, சிற்றம் பலம்பாடி,
வேதப் பொருள்பாடி, அப்பொருளா மாபாடி,
சோதி திறம்பாடி, சூழ்கொன்றைத் தார்பாடி,
ஆதி திறம்பாடி, அந்தமா மாபாடி,
பேதித்து நம்மை வளர்த்தெடுத்த பெய்வளைதன்
பாதத் திறம்பாடி ஆடேலோர் எம்பாவாய் !

— மாணிக்கவாசகர்

## திருப்பாவை

மாயனை, மன்னு வடமதுரை மைந்தனை,
தூய பெருநீர் யமுனைத் துறைவனை,
ஆயர் குலத்தினில் தோன்றும் அணிவிளக்கை,
தாயைக் குடல்விளக்கம் செய்ததா மோதரனை,
தூயோமாய் வந்துநாம் தூமலர்தூ வித்தொழுது,
வாயினால் பாடி, மனத்தினால் சிந்திக்க,
போய பிழையும், புகுதருவான் நின்றனவும்,
தீயினில் தூசாகும் ; செப்பேலோர் எம்பாவாய் !

'அன்றுஇவ் வுலகம் அளந்தாய்! அடிபோற்றி!
சென்றங்குத் தென்னிலங்கை செற்ருய்! திறல்போற்றி!
பொன்றச் சகடம் உதைத்தாய்! புகழ்போற்றி!
கன்று குணிலா எறிந்தாய்! கழல்போற்றி!
குன்று குடையா எடுத்தாய்! குணம்போற்றி!
வென்று பகைகெடுக்கும் நின்கையில் வேல்போற்றி!'
என்றென்றுஉன் சேவகமே ஏத்திப் பறைகொள்வான்
இன்றுயாம் வந்தோம்; இரங்கேலோர் எம்பாவாய்!

சிற்றஞ் சிறுகாலே வந்து,உன்னைச் சேவித்து,உன்
பொற்ருமரைஅடியே போற்றும் பொருள்கேளாய்:
பெற்றம்மேய்த் துண்ணும் குலத்தில் பிறந்து,நீ
குற்றேவல் எங்களைக் கொள்ளாமல் போகாது,
இற்றைப் பறைகொள்வான் அன்றுகாண் கோவிந்தா!
எற்றைக்கும், ஏழேழ் பிறவிக்கும், உன்தன்னேடு
உற்ருேமே யாவோம்; உனக்கேநாம் ஆட்செய்வோம்;
மற்றைநம் காமங்கள் மாற்றேலோர் எம்பாவாய்!

— ஆண்டாள்

பூவிரி மதுகரம் நுகரவும்,
        பொருகயல் இருகரை புரளவும்,
காவிரி எனவரு மடநலீர் !
        கனகநெ டுங்கடை திறமினோ!

இலங்கை எறிந்த கருணா கரன்தன்
        இகல்வெஞ் சிலையின் வலிகேட்பீர் !
கலிங்கம் எறிந்த கருணா கரன்தன்
        களப்போர் பாடத் திறமினோ !

பேணும் கொழுநர் பிழைகளெலாம்
        பிரிந்த பொழுது நினைந்து,அவரைக்
காணும் பொழுது மறந்திருப்பீர் !
        கனப்பொன் கபாடம் திறமினோ!

'வருவார் கொழுநர்' எனத்திறந்தும்,
        'வாரார் கொழுநர்' எனஅடைத்தும்,
திருகும் குடுமி விடியளவும்
        தேயும் கபாடம் திறமினோ !

செக்கச் சிவந்த கழுநீரும்,
        செகத்தில் இளைஞர் ஆருயிரும்,
ஒக்கச் செருகும் குழல்மடவீர் !
        உம்பொன் கபாடம் திறமினோ!

கடற்கலிங்கம் எறிந்து, சயத் தம்பம் நாட்டி,
        கடகரியும் குவிதனமும் கவர்ந்து, தெய்வச்
சுடர்ப்படைவாள் அபயனடி அருளினாடும்
        சூடினான் வண்டையர்கோன் தொண்டை மானே.

— செயங்கொண்டார் (கலிங்கத்துப் பரணி)

## அடியார் பெருமை

மாசி லாத மணிதிகழ் மேனிமேல்
பூசும் நீறுபோல் உள்ளும் புனிதர்கள்,
தேசி ஞல்எத் திசையும் விளக்கினர்;
பேச ஒண்ணுப் பெருமை பிறங்கினர்.

கேடும் ஆக்கமும் கெட்ட திருவினர்;
ஓடும் செம்பொனும் ஒக்கவே நோக்குவார்;
கூடும் அன்பினில் கும்பிட லேஅன்றி
வீடும் வேண்டா விறலின் விளங்கினர்.

## காவலன் கடமை

மாநிலம்கா வலனுவான்,
மன்னுயிர்காக் குங்காலை
தான்அதனுக் கிடையூறு
தன்னுல், தன் பரிசனத்தால்,
ஊனமிகு பகைத்திறத்தால்,
கள்வரால், உயிர் தம்மால்
ஆனபயம் ஐந்தும்தீர்த்து
அறங்காப்பான் அல்லனே?

## திருநாவுக்கரசர்

தூயவெண் ணீறு துதைந்தபொன்
மேனியும், தாழ்வடமும்,
நாயகன் சேவடி தைவரு
சிந்தையும், நைந்துருகிப்
பாய்வது போல்அன்பு நீர்பொழி
கண்ணும், பதிகச்செஞ்சொல்
மேயசெவ் வாயும் உடையார்
புகுந்தனர் வீதியுள்ளே.

## திருஞானசம்பந்தர்

ஞானத்தின் திருவுருவை,
நான்மறையின் தனித்துணையை,
வானத்தின் மிசையன்றி
மண்ணில்வளர் மதிக்கொழுந்தை,
தேனக்க மலர்க்கொன்றைச்
செஞ்சடையார் சீர்தொடுக்கும்
கானத்தின் எழுபிறப்பை,
கண்களிப்பக் கண்டார்கள்.

## திருஞானசம்பந்தரும் திருநாவுக்கரசரும்

அருட்பெருகு தனிக்கடலும் உலகுக் கெல்லாம்
அன்புசெறி கடலுமாம் எனவும், ஓங்கும்
பொருட்சமய முதற்சைவ நெறிதான் பெற்ற
புண்ணியக்கண் இரண்டெனவும், புவனம் உய்ய
இருட்கடுஉண் டவர்அருளும் அகிலம் எல்லாம்
ஈன்றாள்தன் திருவருளும் எனவும் கூடி,
தெருட்கலைஞா னக்கன்றும் அரசும் சென்று
செஞ்சடைவா னவர்கோயில் சேர்ந்தார் அன்றே.

## சுந்தரர்

'மற்றுநீ வன்மை பேசி
வன்தொண்டன் என்னும் நாமம்
பெற்றனை, நமக்கும் அன்பில்
பெருகிய சிறப்பின் மிக்க
அர்ச்சனை பாட்டே யாகும்,
ஆதலான் மண்மேல் நம்மைச்
சொற்றமிழ் பாடு 'கென்றார்
தூமறை பாடும் வாயார்.

ஐந்துபே ரறிவும் கண்களே கொள்ள,
அளப்பருங் கரணங்கள் நான்கும்
சிந்தையே ஆக, குணமொரு மூன்றும்
திருந்துசாத் துவிகமே யாக,
இந்துவாழ் சடையான் ஆடும்ஆ னந்த
எல்லையில் தனிப்பெருங் கூத்தின்
வந்தபே ரின்ப வெள்ளத்துள் திளைத்து,
மாறிலா மகிழ்ச்சியின் மலர்ந்தார்.

## காரைக்காலம்மையார்

இறவாத இன்ப அன்பு
வேண்டி,பின் வேண்டு கின்றார் :
'பிறவாமை வேண்டும்; மீண்டும்
பிறப்புண்டேல், உன்னை என்றும்
மறவாமை வேண்டும்; இன்னும்
வேண்டும்நான் மகிழ்ந்து பாடி
அறவா! நீ ஆடும் போதுஉன்
அடியின்கீழ் இருக்க,' என்றார்.

## மங்கையர்க்கரசியார்

மங்கையர்க்குத் தனியரசி, எங்கள் தெய்வம்,
வளவர் திருக் குலக்கொழுந்து, வளைக்கை மானி,
செங்கமலத் திருமடந்தை, கன்னி நாடாள்
தென்னர்குலப் பழிதீர்த்த தெய்வப் பாவை,
எங்கள்பிரான் சண்பையர்கோன் அருளி னாலே,
இருந்தமிழ்நாடு உற்றஇடர் நீக்கி, தங்கள்
பொங்கொளிவெண் திருநீறு பரப்பி னாரைப்
போற்றுவார் கழல்எம்மால் போற்ற லாமே!

— சேக்கிழார்

## இயற்கை இன்பம்

தாதுகு சோலை தோறும்,
சண்பகக் காடு தோறும்,
போதவிழ் பொய்கை தோறும்,
புதுமணல் தடங்கள் தோறும்,
மாதவி வேலிப் பூக
வனந்தொறும், வயல்கள் தோறும்,
ஓதிய உடம்பு தோறும்
உயிரென உலாய தன்றே.

தண்டலை மயில்கள் ஆட,
தாமரை விளக்கம் தாங்க,
கொண்டல்கள் முழவின் ஏங்க,
குவளைகண் விழித்து நோக்க,
தெண்திரை எழினி காட்ட,
தேம்பிழி மகர யாழின்
வண்டுகள் இனிது பாட,
மருதம்வீற் றிருக்கும் மாதோ.

குயிலினம் வதுவை செய்ய,
கொம்பிடைக் குனிக்கும் மஞ்ஞை
அயில்விழி மகளிர் ஆடும்
அரங்கினுக்கு அழகு செய்ய,
பயில்சிறை அரச அன்னம்
பன்மலர் பள்ளி நின்றும்
துயிலெழ, தும்பி காலைச்
செவ்வழி முரல்வ சோலை.

## மனையற மாண்பு

பெருந்த டங்கண் பிறைநுத லார்க்கெலாம்
பொருந்து செல்வமும் கல்வியும் பூத்தலால்

வருந்தி வந்தவர்க்கு ஈதலும் வைகலும்
விருந்தும் அன்றி விளைவன யாவையே!

## 'இல்லை' என்பது இல்லை

வண்மை இல்லை,ஓர்
வறுமை இன்மையால்;
திண்மை இல்லை,நேர்
செறுநர் இன்மையால்;
உண்மை இல்லை,பொய்
உரையி லாமையால்;
வெண்மை இல்லை,பல்
கேள்வி மேவலால்.

## காவலன் காவல்

எய்யென எழுபகை
எங்கும் இன்மையால்,
மொய்பெருத் தினவுறு
முழவுத் தோளினன்,
வையகம் முழுவதும்
வறிஞன் ஓம்பும்ஓர்
செய்யெனக் காத்து,இனிது
அரசு செய்கின்றான்.

## கோமுனிவர் முறையீடு

மடங்கல்போல் மொய்ம்பினன்
முன்னர், 'மன்னுயிர்
அடங்கலும் உலகும்வேறு
அமைத்து, தேவரோடு
இடங்கொள்நான் முகனையும்
படைப்பன் ஈண்டு' எனத்
தொடங்கிய துனியுறு
முனிவன் தோன்றினான்.

'என்னனைய முனிவரரும் இமையவரும்
இடையூறென்று உடைய ராஞல்,
பன்னகமும் நகுவெள்ளிப் பனிவரையும்,
பாற்கடலும், பதும பீடத்
தன்னகரும், கற்பகநாட்டு அணிநகரும்,
அணிமாட அயோத்தி என்னும்
பொன்னகரும் அல்லாது புகலுண்டோ ?
இகல்கடந்த புலவு வேலோய் !

'தருவனத்துள் யான்இயற்றும் தகைவேள்விக்கு
இடையூருத் தவஞ்செய் வோர்கள்
வெருவரச்சென்று அடைகாம வெகுளியென
நிருதர்இடை விலக்கா வண்ணம்
'செருமுகத்துக் காத்தி'என நின்சிறுவர்
நால்வருளும் கரிய செம்மல்
ஒருவனைத்தந் திடுதி,' என உயிரிரக்கும்
கொடுங்கூற்றின் உளையச் சொன்ஞன்.

## காகுத்தன் கன்னிப்போர்

வென்றி வாள்புடை விசித்து, மெய்ம்மைபோல்
என்றும் தேய்வுருத் தூணி யாத்து,இரு
குன்றம் போன்றுயர் தோளிற் கொற்றவில்
ஒன்று தாங்கினன் உலகம் தாங்கினன்.

சொல்ஒக்கும் கடிய வேகச்
சுடுசரம், கரிய செம்மல்
அல்ஒக்கும் நிறத்தி னுள்மேல்
விடுதலும், வயிரக் குன்றக்
கல்ஒக்கும் நெஞ்சில் தங்காது,
அப்புறம் கழன்று, கல்லாப்
புல்லர்க்கு நல்லோர் சொன்ன
பொருள்எனப் போயிற் றன்றே.

## மிதிலை மாநகரம்

'மையறு மலரின் நீங்கி
யான்செய்மா தவத்தின் வந்து
செய்யவள் இருந்தாள்!' என்று
செழுமணிக் கொடிகள் என்னும்
கைகளை நீட்டி, அந்தக்
கடிநகர், கமலச் செங்கண்
ஐயனை, 'ஒல்லை வா!'என்று
அழைப்பது போன்ற தம்மா.

ஆதரித்து, அமுதில் கோல்தோய்த்து,
அவயவம் அமைக்கும் தன்மை
யாதெனத் திகைக்கும் அல்லால்,
மதனற்கும் எழுத ஒண்ணுச்
சீதையைத் தருத லாலே,
திருமகள் இருந்த செய்ய
போதெனப் பொலிந்து தோன்றும்
பொன்மதில் மிதிலை புக்கார்.

## மிதிலைப் பொன்

பொன்னின் சோதி, போதினில்
நாற்றம் பொலிவேபோல்
தென்உண் தேனின் தீஞ்சுவை,
செஞ்சொற் கவியின்பம்,
கன்னிம் மாடத்து உம்பரின்
மாடே கழிபேடோடு
அன்னம் ஆடும் முன்துறை
கண்டு,அங் கயல்நின்ருர்.

இழைகளும் குழைகளும் இன்ன முன்னமே
மழைபொரு கண்ணிணை மடந்தை மாரொடும்
பழகிய எனினும்,இப் பாவை தோன்றலால்
அழகெனும் அழகும்ஓர் அழகு பெற்றதே.

## காதலர் கண்கள்

எண்ணரு நலத்தினள் இனையள் நின்றுழிக்
கண்ணொடு கண்ணிணை கவ்வி, ஒன்றையொன்று
உண்ணவும், நிலைபெறாது உணர்வும் ஒன்றிட,
அண்ணலும் நோக்கினான்; அவளும் நோக்கினாள்.

பருகிய நோக்கெனும் பாசத் தால்பிணித்து
ஒருவரை ஒருவர் தம் உள்ளம் ஈர்த்தலால்,
வரிசிலை அண்ணலும் வாட்கண் நங்கையும்
இருவரும் மாறிப்புக்கு இதயம் எய்தினர்.

## பொதுமக்கள் குரல்

'வள்ளல் மணத்தை மகிழ்ந்தனன் என்றால்,
'கொள்'என முன்பு கொடுப்பதை அல்லால்,
வெள்ளம் அணைத்தவன் வில்லை எடுத்து,இப்
பிள்ளைமுன் இட்டது பேதைமை!' என்பார்.

## வில் இறுத்த வீரன்

ஆடக மால்வரை அன்னது தன்னைத்
தேடரு மாமணி சீதைஎ னும்பொன்
சூடக வால்வளை சூட்டிட நீட்டும்
ஏடவிழ் மாலைஇ தென்னஎ டுத்தான்.

தடுத்திமை யாமல் இருந்தவர், தாளின்
மடுத்ததும், நாண்நுதி வைத்ததும் நோக்கார்
கடுப்பினில் யாரும் அறிந்திலர், கையால்
எடுத்தது கண்டனர், இற்றது கேட்டார்.

## நம்பியும் நங்கையும்

'நம்பியைக் காண நங்கைக்கு
ஆயிரம் நயனம் வேண்டும்;
கொம்பினைக் காணுந் தோறும்
குரிசிற்கும் அன்ன தேயால்;
தம்பியைக் காண்மின்!' என்பார்;
'தவமுடைத்து உலகம்!' என்பார்;
'இம்பர்இந் நகரில் தந்த
முனிவனை இறைஞ்சும்!' என்பார்.

தோள் கண்டார் தோளே கண்டார் ;
தொடுகழற் கமல மன்ன
தாள்கண்டார் தாளே கண்டார் ;
தடக்கைகண் டாரும் அஃதே ;
வாள்கொண்ட கண்ணார் யாரே
வடிவினை முடியக் கண்டார் ?
ஊழ்கொண்ட சமயத்து அன்னான்
உருவுகண் டாரை ஒத்தார்.

## திருமணம்

மன்றலின் வந்து, மணத்தவிசு ஏறி,
வென்றி நெடுந்தகை வீரனும் ஆர்வத்து
இன்துணை அன்னமும் எய்தி இருந்தார்,
ஒன்றிய போகமும் யோகமும் ஒத்தார்.

## தசரதன் ஆசை

'பெருமகன் என்வயின் பிறக்க, சீதையாம்
திருமகள் மணவினை தெரியக் கண்டயான்,
அருமகள் நிறைகுணத்து அவனி மாதெனும்
ஒருமகள் மணமும்கண்டு உவப்ப தாயினேன் !

'ஆதலால் இராமனுக்கு அரசை நல்கிஇப்
பேதைமைத் தாய்வரும் பிறப்பை நீக்குவான்
மாதவம் தொடங்கிய வனத்தை நண்ணுவேன் ;
யாதுநும் கருத்து?' என இனிது கூறினான்.

## முனிவர் புகழுரை

மண்ணினும் நல்லள்; மலர்மகள்,
கலைமகள், கலையூர்
பெண்ணினும் நல்லள்: பெரும்புகழ்ச்
சனகியோ நல்லள் ;
கண்ணினும் நல்லன்; கற்றவர்
கற்றிலா தவரும்
உண்ணும் நீரினும் உயிரினும்
அவனையே உவப்பார்.

## மன்னன் மகிழ்ச்சி

மற்ற வன்சொன்ன வாசகம் கேட்டலும், மகனைப்
பெற்ற அன்றினும், பிஞ்ஞகன் பிடித்தஅப் பெருவில்
இற்ற அன்றினும், எறிமழு வாளவன் இழுக்கம்
உற்ற அன்றினும் பெரியதோர் உவகையன் ஆனான்.

## மண்ணிழந்த மணிவண்ணன்

'ஆழிசூழ் உலகம் எல்லாம்
பரதனே ஆள, நீ போய்,
தாழிருஞ் சடைகள் தாங்கி,
தாங்கருந் தவமேற் கொண்டு
பூழிவெங் கானம் நண்ணி,
புண்ணியத் துறைகள் ஆடி
ஏழ்இரண்டு ஆண்டின் வாஎன்று
இயம்பினன் அரசன்.' என்றாள்.

'மன்னவன் பணியன் றாகில்
நும்பணி மறுப்ப னோ?என்
பின்னவன் பெற்ற செல்வம்
அடியனேன் பெற்ற தன்றோ?
என்இதின் உறுதி அப்பால்?
இப்பணி தலைமேற் கொண்டேன் ;
மின்ஒளிர் கானம் இன்றே
போகின்றேன், விடையும் கொண்டேன்.'

குழைக்கின்ற கவரியின்றி,
கொற்றவெண் குடையும் இன்றி,
இழைக்கின்ற விதிமுன் செல்ல,
தருமம்பின் இரங்கி ஏக,
'மழைக்குன்றம் அனையான் மௌலி
கவித்தனன் வரும்!'என் றென்று
தழைக்கின்ற உள்ளத் தன்னாள்
முன்ஒரு தமியன் சென்றான்.

சீரை சுற்றித் திருமகள் முன்செல,
மூரி விற்கை இளையவன் பின்செல,
காரை ஒத்தவன் போம்படி கண்டஅவ்
வூரை உற்றது உணர்த்தவும் ஒண்ணுமோ ?

வெய்யோன்ஒளி தன்மேனியின்
விரிசோதியின் மறைய,
'பொய்யோ!' எனும் இடையாளொடும்
இளையானொடும் போனான்,
'மையோ, மரகதமோ, மறி
கடலோ, மழை முகிலோ,
ஐயோ! இவன் வடிவு!' என்பதோர்
அழியா அழகு உடையான்.

## கங்கை வேடன்

ஆய காலையின் ஆயிரம் அம்பிக்கு
நாயகன், போர்க் குகன்எனும் நாமத்தான்,
தூய கங்கைத் துறைவிடும் தொன்மையான்,
காயும் வில்லினன், கல்திரள் தோளினான்

சிருங்கி பேரம் எனத்திரைக் கங்கையின்
மருங்கு தோன்றும் நகருடை வாழ்க்கையான்,
ஒருங்கு தேனொடு மீன்உப காரத்தான்
இருந்த வள்ளலைக் காணவந்து எய்தினான்.

அன்னவன் உரைகேளா,
அமலனும் உரைநேர்வான் :
'என்னுயிர் அனையாய்நீ ;
இளவல்உன் இளையான்;இந்
நன்னுதலவள் நின்கேள் ;
நளிர்கடல் நிலமெல்லாம்
உன்னுடையது;நான்உன்
தொழிலுரிமையின்உள்ளேன்.'

## பரதனும் குகனும்

'கங்கைஇரு கரையுடையான்,
  கணக்கிறந்த நாவாயான்,
உங்கள்குலத் தனிநாதற்கு
  உயிர்த்துணைவன், உயர்தோளான்,
வெங்கரியின் ஏறுஅனையான்,
  வில்பிடித்த வேலையினன்,
கொங்குஅலரும் நறுந்தண் தார்க்
  குகன் என்னும் குறியுடையான்.'

வற்கலையின் உடையானை,
  மாசுஅடைந்த மெய்யானை,
நற்கலையின் மதியென்ன
  நகைஇழந்த முகத்தானை
கல்கனியக் கனிகின்ற
  துயரானைக் கண்ணுற்றான்:
வில்கையினின்று இடைவீழ
  விம்முற்று நின்றொழிந்தான்.

'நம்பியும்என் நாயகனை
  ஒக்கின்றான்; அயல்நின்றான்
தம்பியையும் ஒக்கின்றான்;
  தவவேடம் தலைநின்றான்;
துன்பம்ஒரு முடிவில்லை;
  திசைநோக்கித் தொழுகின்றான்;
எம்பெருமான் பின்பிறந்தார்
  இழைப்பரோ பிழைப்பு?' என்றான்.

'அலையாண்டு அமைந்த மேனி
  அழகனும் அவளும் துஞ்ச,
வில்லைஊன் றியகை யோடும்,
  வெய்துஉயிர்ப் போடும் வீரன்
கல்லைஆண்டு உயர்ந்த தோளாய்!
  கண்கள்நீர் சொரியக் கங்குல்
எல்லைகாண் பளவும் நின்றான்,
  இமைப்பிலன் நயனம்,' என்றான்.

## படகில் நிகழ்ந்த அறிமுகம்

சுற்றத்தார் தேவரொடும் தொழநின்ற
கோசலையைத் தொழுது நோக்கி,
'கொற்றத்தார்க் குரிசில்! இவர் ஆர்?' என்று
குகன்வினவ, 'கோக்கள் வைகும்
முற்றத்தான் முதல்தேவி; மூன்றுலகும்
ஈன்றானை முன்ஈன் றானைப்
பெற்றத்தால் பெறும்செல்வம் யான்பிறத்த
லால்துறந்த பெரியாள்,' என்றான்.

என்றலுமே, அடியின்மிசை நெடிதுவீழ்ந்து
அழுவானை, 'இவன்யார்?' என்று
கன்றுபிரி காராவின் துயருடைய
கொடிவினவ, கழற்கால் மைந்தன்,
'இன்துணைவன் இராகவனுக்கு; இலக்குவற்கும்
இளையவற்கும் எனக்கும் மூத்தான்;
குன்றனைய திருநெடுந்தோள் குகன்என்பான்
இந்நின்ற குரிசில்,' என்றான்.

'நைவீர்அ லீர்மைந்தீர்! இனித்துயரால்;
நாடிறந்து காடு நோக்கி
மெய்வீரர் பெயர்ந்ததுவும் நலமாயிற்
றாம்அன்றே? விலங்கல் திண்தோள்
கைவீரக் களிறனைய காளைஇவன்
தன்னோடும் கலந்து நீவிர்
ஐவீரும் ஒருவீராய் அகலிடத்தை
நெடுங்காலம் அளித்திர்,' என்றாள்.

அறம்தானே என்கின்ற அயல்நின்றாள்
தனைநோக்கி, 'ஐய! அன்பின்
நிறைந்தாளை உரை,' என்ன, 'நெறிதிறம்பாத்
தன்மெய்யை நிற்ப தாக்கி
இறந்தான்தன் இளந்தேவி; யாவர்க்கும்
தொழுகுலமாம் இராமன் பின்பு
பிறந்தானும் உளன்என்னப் பிரியாதான்
தனைப்பயந்த பெரியாள்,' என்றான்.

சுடுமயா னத்திடைதன் துணையேக,
தோன்றல்துயர்க் கடலின் ஏக,
கடுமையார் கானகத்துக் கருணையார்
கலியேக, கழற்கால் மாயன்
நெடுமையால் அன்றுஅளந்த உலகெல்லாம்
தன்மனத்தே நினைந்து செய்யும்
கொடுமையால் அளந்தாளை, 'யார் இவர்என்று
உரை,' என்னக் குரிசில் கூறும்.

'படர்எலாம் படைத்தாளை, பழிவளர்க்கும்
செவிலியை, தன் பாழ்த்த பாவிக்
குடரிலே நெடுங்காலம் கிடந்தேற்கும்
உயிர்ப்பாரம் குறைந்து தேய,
உடரெலாம் உயிரிலா எனத்தோன்றும்
உலகத்தே ஒருத்தி யன்றே?
இடரிலா முகத்தாளை அறிந்திலையேல்,
இந்நின்றாள் என்னை ஈன்றாள்.'

## பரதன் கோலம்

தொழுதுஉயர் கையினன், துவண்ட மேனியன்,
அழுதுஅழி கண்ணினன், அவலம் ஈதென
எழுதிய படிவம்ஒத்து எய்து வான்தனை
முழுதுணர் சிந்தையான் முடிய நோக்கினன்.

## இராமன் துயரம்

'நந்தா விளக்கனைய நாயகனே! நானிலத்தோர்
தந்தாய்! தனிஅறத்தின் தாயே! தயாநிலையே!
எந்தாய்! இகல்வேந்தர் ஏறே! இறந்தனையே!
அந்தோ! இனிவாய்மைக்கு ஆருளரோ மெய்யுற்றார்!

'தேன் அடைந்த சோலைத்
திருநாடு கைவிட்டு,
கான்அடைந்தேன் என்னத்
தரியாது காவல்! நீ
வான்அடைந்தாய்! இன்னம்
இருந்தேன்நான் வாழ்வுகந்தே!
ஊன்அடைந்த தெவ்வர்
உயிரடைந்த ஒள்வேலாய்!'

## பாதுகை சூடிய பரதன்

அடித்தலம் இரண்டையும் அழுத கண்ணினன்,
'முடித்தலம் இவை'என முறையில் சூடினன்,
படித்தலத்து இறைஞ்சினன், பரதன் போயினன்,
பொடித்தலம் இலங்குறு பொலங்கொள் மேனியான்.

நந்தியம் பதியிடை நாதன் பாதுகம்
செந்தனிக் கோல்முறை செலுத்து சிந்தையான்
இந்தியங் களைஅவித்து இருத்தல் மேயினன்,
அந்தியும் பகலும்நீர் அருத கண்ணினன்.

## கோதாவிரிக் கரை

புவியினுக் கணியாய், ஆன்ற
பொருள்தந்து, புலத்திற் ருகி,
அவியகத் துறைகள் தாங்கி,
ஐந்திணை நெறிஅ ளாவி,
சவியுறத் தெளிந்து, தண்ணென்று
ஒழுக்கமும் தழுவி, சான்ருேர்
கவியெனக் கிடந்த கோதா
விரியினை வீரர் கண்டார்.

ஓதிமம் ஒதுங்கக் கண்ட
உத்தமன், உழைய ளாகும்
சீதைதன் நடையை நோக்கிச்
சிறியதோர் முறுவல் செய்தான்;
மாதவள் தானும் ஆண்டு
வந்துநீர் உண்டு செல்லும்
போதகம் நடப்ப நோக்கிப்
புதியதோர் முறுவல் பூத்தாள்.

## சூர்ப்பணகையின் கோலமும் ஓலமும்

நீலமா மணிநிற நிருதர் வேந்தனை
மூலநா சம்பெற முடிக்கும் மொய்ம்பினள்,
மேலைநாள் உயிரொடும் பிறந்து தான்விளை
காலம்ஓர்ந்து உடனுறை கடிய நோய்அனள்.

பஞ்சிஒளிர் விஞ்சுகுளிர்ப் பல்லவம்அ னுங்க,
செஞ்செவிய கஞ்சநிமிர் சீறடியள் ஆகி,
அஞ்சொல்இள மஞ்ஞையென அன்னமென மின்னும்
வஞ்சியென நஞ்சமென வஞ்சமகள் வந்தாள்.

'பூவிலோன் புதல்வன் மைந்தன்
புதல்வி;முப் புரங்கள் செற்ற
சேவலோன் துணைவன் ஆன
செங்கையோன் தங்கை; திக்கின்
மாவெலாம் தொலைத்து, வெள்ளி
மலையெடுத்து, உலகம் மூன்றும்
காவலான் பின்னை; காம
வல்லியாம் கன்னி,' என்றாள்.

### மூக்கிழந்தாள் முறையீடு

'நகையாலே மூக்கிழந்து,
நாணமிலா நான்பட்ட
வசையாலே, நினதுபுகழ்
மாசுண்டது ஆகாதோ?
திசையானை விசைகலங்கச்
செருச்செய்து, மருப்புஒசித்த
இசையாலே நிறைந்தபுயத்து
இராவணவோ! இராவணவோ!

### தங்கை சொல்லிய மங்கை

'தோளையே சொல்லு கேனோ!
சுடர்முகத்து உலவு கின்ற
வாளையே சொல்லு கேனோ!
வல்லவை வழுத்து கேனோ!
மீளவும் திகைப்ப தல்லால்
தனித்தனி விளம்பல் ஆற்றேன்!
நாளையே காண்டி அன்றே?
நான்உனக்கு உரைப்ப தென்னோ!

'வில்ஒக்கும் நுதல்என் றாலும்,
வேல்ஒக்கும் விழிஎன் றாலும்,
பல்ஒக்கும் முத்துஎன் றாலும்,
பவளத்தை இதழ்என் றாலும்,
சொல்ஒக்கும்; பொருள்ஒவ் வாவால்,
சொல்லலாம் உவமை உண்டோ?
நெல்ஒக்கும் புல்என் றாலும்
நேர்உரைத் தாக வற்றே?

'பிள்ளைபோல் பேச்சி னாளைப்
பெற்றபின் பிழைக்கல் ஆற்றாய்:
கொள்ளைபோ கின்ற செல்வம்
அவளுக்கே கொடுத்தி ஐய!
வள்ளலே! உனக்கு நல்லேன்;
மற்றுநின் மனையில் வாழும்
கிள்ளைபோல் மொழியார்க்கு எல்லாம்
கேடுசூழ் கின்றேன் அன்றே?'

## அரக்கர் கோன் உள்ளம்

கரனையும் மறந்தான்; தங்கை
மூக்கினைக் கடிந்து நின்றான்
உரனையும் மறந்தான்; உற்ற
பழியையும் மறந்தான்; வெற்றி
அரனையும் கொண்ட காமன்
அம்பினால் முன்னைப் பெற்ற
வரனையும் மறந்தான்; கேட்ட
மங்கையை மறந்திலா தான்.

மயிலுடைச் சாய லாளை
வஞ்சியா முன்னம், நீண்ட
எயிலுடை இலங்கை நாதன்
இதயமாம் சிறையில் வைத்தான்:
அயிலுடை அரக்கன் உள்ளம்
அவ்வழி மெல்ல மெல்ல
வெயிலுடை நாளில் உற்ற
வெண்ணெய்போல் வெதும்பிற் றன்றே.

## சீதையின் துயரம்

'மலையே! மரனே! மயிலே! குயிலே!
கலையே! பிணையே! களிறே! பிடியே!
நிலையா உயிரேன் நிலைதே றினிர்போய்
உலையா வலியார் உழைநீர் உரையீர்!

'கோதா விரியே! குளிர்வாய் குழைவாய்!
மாதா அனையாய்! மனனே தெளிவாய்!
ஓதா துணர்வார் உழைஓ டினைபோய்
நீதான் வினையேன் நிலைசொல் லலையோ?'

## சடாயுவின் தியாகம்

'கெட்டாய் கிளையோ டு,நின்வாழ் வையெலாம்
சுட்டாய்! இதுஎன் னதொடங் கினை? நீ
பட்டாய்; எனவே கொடுபத் தினியை
விட்டே குதியால் விளிகின் றிலையால்.

'பேதாய்! பிழைசெய் தனை,பே ருலகின்
மாதா அனையா ளைமனக் கொடுநீ
யாதா கநினைத் தனை?எண் ணமிலாய்!
ஆதா ரம்நினக் கினிஆ ருளரோ?'

## சீதையின் சோர்வும் சிறையும்

'அல்லல்உற் றேனை,வந்து அஞ்சல் என்றஇந்
நல்லவன் தோற்பதே! நரகன் வெல்வதே!
வெல்வதும் பாவமோ! வேதம் பொய்க்குமோ!
இல்லையோ அறம்!'என இரங்கி ஏங்கினள்.

விண்ணிடை வெய்யவன் ஏகும் வேகத்தால்
கண்ணொடு மனமவை சுழன்ற கற்பினள்
உள்நிறை உணர்வுஅழிந்து ஒன்றும் ஓர்ந்திலாள்
மண்ணிடைத் தன்னையும் மறந்து சாம்பினள்.

வஞ்சியை அரக்கனும் வலிலே கொண்டுபோய்,
செஞ்செவே திருவுருத் தீண்ட அஞ்சுவான்,
நஞ்சியல் அரக்கியர் நடுவண் ஆயிடைச்
சிஞ்சுப வனத்திடைச் சிறைவைத் தானரோ.

## இராமன் துயரம்

மண்சு ழன்றது; மால்வரை
சுழன்றது; மதியோர்
எண்சு ழன்றது; சுழன்றஅவ்
வெறிகடல் ஏழும்;
விண்சு ழன்றது; வேதமும்
சுழன்றது; விரிஞ்சன்
கண்சு ழன்றது; சுழன்றது
கதிரொடு மதியும்.

'என் தாரம் பற்றுண்ண
ஏன்றுயைச் சான்றுேயைக்
கொன்றுனும் நின்றுன்;
கொலையுண்டு நீகிடந்தாய்;
வன்தாள் சிலைஏந்தி
வாளிக் கடல்சுமந்து
நின்றேனும் நின்றேன்,
நெடுமரம்போல் நின்றே!'

## சடாயுவும் இராமனும்

'பாக்கியத்தால் இன்றுஎன்
பயனில் பழியாக்கை
போக்குகின்றேன், கண் உற்றேன்;
புண்ணியரே! வம்மின்!' என்று
தாக்கி அரக்கன்
மகுடத் தலைதுமித்த
மூக்கினுல் உச்சி
முறைமுறையே மோக்கின்றுன்.

'வஞ்சனையால் வந்த
வரவுஎன்பது, என்னுடைய
நெஞ்சகமே முன்னே
நினைவித்தது; ஆனாலும்,
அஞ்சொல் மயிலை,
அருந்ததியை நீங்கினிரோ
எஞ்சலிலா ஆற்றல்
இருவீரும்?' என்றுரைத்தான்.

'வடுக்கண்வார் கூந்த லாளை
இராவணன் மண்ணி னேடும்
எடுத்தனன் ஏகு வானை
எதிர்ந்துஎனது ஆற்றல் கொண்டு
தடுத்தனென் ஆவ தெல்லாம்;
தவத்தரன் தந்த வாளால்
படுத்தனன்; இங்கு வீழ்ந்தேன்;
இதுஇன்று பட்ட வெ'தன்றான்.

ஆயபின் அமலன் தானும்,
'ஐய! நீ அமைதி!' என்ன
வாயிடை மொழிந்தது அன்றி
மற்றொரு செயலும் உண்டோ?
'போயதவ் வரக்கன் எங்கே?
புகல்,' எனப் புள்ளின் வேந்தன்
ஓய்வினன், உணர்வும் தேய
உரைத்திலன், உயிரும் தீர்ந்தான்.

ஏந்தினன் இருகை தம்மால்;
ஏற்றினன் ஈமந் தன்மேல்;
சாந்தொடு மலரும் நீரும்
சொரிந்தனன்; தலையின் சாரல்
காந்தெரி கனல மூட்டி,
கடன்முறை கடவா வண்ணம்
நேர்ந்தனன், நிரம்பு நன்னூல்
மந்திர நெறியின் வல்லான்.

## அனுமன் காட்சியும் மாட்சியும்

'காய்எரி கனலும் கற்கள்
கள்ளுடை மலர்க ளேபோல்
தூயசெங் கமல பாதம்
தோய்தொறும் குழைந்து தோன்றும்;
மேயின திசைகள் தோறும்
மரநெடு புல்லும் எல்லாம்
சாய்வுறும் தொழுவ போல்;இங்கு
இவர்களோ தருமம் ஆவார்?

'மஞ்செனத் திரண்ட கோல
மேனிய! மகளிர்க் கெல்லாம்
நஞ்செனத் தகைய வாகி
நளிர்இரும் பனிக்குத் தேம்பாக்
கஞ்சம்ஒத்து அலர்ந்த செய்ய
கண்ண!யான் காற்றின் வேந்தற்கு
அஞ்சனை வயிற்றில் வந்தேன்;
நாமமும் அனுமன் என்பேன்.

'இம்மலை இருந்து வாழும்
எரிகதிர்ப் பரிதிச் செல்வன்
செம்மலுக்கு ஏவல் செய்வேன்;
தேவ!நும் வரவு நோக்கி
விம்மலுற்று அனையன் ஏவ,
வினவிய வந்தேன்,' என்றான்,
எம்மலைக் குலமும் தாழ
இசைசுமந்து எழுந்த தோளான்.

" 'இல்லாத உலகத்து எங்கும்
ஈங்குஇவன் இசைகள் கூறக்
கல்லாத கலையும் வேதக்
கடலுமே,' என்னும் காட்சி
சொல்லாலே தோன்றிற் றன்றே?
யார்கொல்இச் சொல்லின் செல்வன்?
வில்லார்தோள் இளைய வீர!
விரிஞ்சனோ? விடைவல் லானோ?"

## அனுமன் மாற்றமும் ஐயன் சீற்றமும்

'அடல்க டந்ததோள் அவனை அஞ்சி,வெங்
குடல்க லங்கிஎம் குலம்ஒ டுங்க,முன்
கடல்க டைந்தவெங் கரத லங்களால்
உடல்க டைந்தனன்; இவன்உ லைந்தனன்.

'உருமை என்றிவற்கு உரிய தாரமாம்
அரும ருந்தையும் அவன்வி ரும்பினன்;
இருமை யும்துறந்து இவன்இ ருந்தனன்;
கருமம் இங்கிதே கடவுள்!' என்றனன்.

பொய்இ லாதவன் வரன்முறை இம்மொழி புகல,
ஐயன், ஆயிரம் பெயருடை அமலர்க்கும் அமலன்,
வையம் நுங்கிய வாயிதழ் துடித்தது; மலர்க்கண்
செய்ய தாமரை ஆம்பலம் போதெனச் சிவந்த.

'உலகம் ஏழினொ டேழும்வந்து அவன்உயிர்க்கு உதவி
விலகும் என்னினும், வில்லுடை வாளியின் வீட்டி,
தலைமை யோடுநின் தாரமும் உனக்கின்று தருவேன்
புலமை யோய்! அவன் உறைவிடம் காட்டு'என்று புகன்றான்.

## வாலியின் தாக்குரை

மும்மைசால் உலகுக்கு எல்லாம்
மூலமந் திரத்தை, முற்றும்
தம்மையே தமர்க்கு நல்கும்
தனிப்பெரும் பதத்தை, தானே
இம்மையே எழுமை நோய்க்கும்
மருந்தினை, இராமன் என்னும்
செம்மைசேர் நாமந் தன்னைக்
கண்களில் தெரியக் கண்டான்.

'வாய்மையும் மரபும் காத்து
மன்உயிர் துறந்த வள்ளல்
தூயவன் மைந்த னே! நீ
பரதன்முன் தோன்றி னயே!
தீமைதான் பிறரைக் காத்துத்
தான்செய்தால் தீங்குஅன் ருமோ?
தாய்மையும் அன்றி நட்பும்
தருமமும் தழுவி நின்ருய்!

'கோவியல் தருமம் உங்கள்
குலத்துஉதித் தோர்கட்கு எல்லாம்
ஓவியத்து எழுத ஒண்ணு
உருவத்தாய்! உடைமை அன்ருே?
ஆவியை, சனகன் பெற்ற
அன்னத்தை, அமிழ்தின் வந்த
தேவியைப் பிரிந்த பின்னைத்
திகைத்தனை போலும் செய்கை!

'அரக்கர்ஓர் அழிவு செய்து
கழிவரேல், அதற்கு வேறுஓர்
குரக்கினத்து அரசைக் கொல்ல
மனுநெறி கூறிற் றுண்டோ?
இரக்கம்எங்கு உகுத்தாய்? என்பால்
எப்பிழை கண்டாய் அப்பா!
பரக்கழி இதுநீ பூண்டால்,
புகழையார் பரிக்கற் பாலார்?

'தாரம் மற்ருெரு வன்கொளத் தன்கையில்
பார வெஞ்சிலை வீரம் பழிப்பதே?
நேரும் அன்று; மறைந்துநி ராயுதன்
மார்பின் எய்யவோ வில்இகல் வல்லதே!

## அங்கதன் அடைக்கலம்

‘பஞ்சின்மெல் லடியாள் பாகன்
பாதுகம் அல்ல யாவும்
அஞ்சலித்து அறியாச் செங்கை
ஆணையாய்! அமரர் யாரும்
எஞ்சலர் இருந்தார் உன்னால்;
இன்னமுது ஈந்த நீயோ
துஞ்சினை; வள்ளியோர்கள்
நின்னின்யார் சொல்லற் பாலார்?’

‘தோன்றலும் இறத்தல் தானும்
துகள்அறத் துணிந்து நோக்கின்
மூன்றுஉல கத்தி னோர்க்கும்
மூலத்தே முடிந்த அன்றே?
யான்தவம் உடைமை யால்இவ்
விறுதிவந்து இசைந்தது! யார்க்கும்
சான்றென நின்ற வீரன்
தான்வந்து வீடு தந்தான்!

‘பாலமை தவிர்;நீ என்சொல்
பற்றுதி; என்னின் ஐய!
மேலொரு பொருளும் இல்லா
மெய்ப்பொருள் வில்லும் தாங்கிக்
கால்தரை தோய நின்று
கண்புலக்கு உற்ற தம்மா!
மால்தரும் பிறவி நோய்க்கு
மருந்தென வணங்கு மைந்த!

‘என்உயிர்க்கு இறுதி செய்தான்
என்பதை இறையும் எண்ணாது
உன்உயிர்க்கு உறுதி செய்தி;
இவற்குஅமர் உற்ற துண்டேல்,
பொன்உயிர்த்து ஒளிரும் பூணாய்!
போதுதி; நிலைமை நோக்கி
மன்உயிர்க்கு உறுதி செய்வான்
மலரடி சுமந்து வாழ்தி.’

தன்னடி தாழ்த லோடும்
தாமரைத் தடங்க ணும்
பொன்னுடை வாளை நீட்டி,
'நீஇது பொறுத்தி,' என்றான்;
என்னலும் உலகம் ஏழும்
ஏத்தின; இறந்து வாலி
அந்நிலை துறந்து வானுக்
கப்புறத் துலகன் ஆனான்.

**கார் காலம்**

வண்ணவில் கரதலத்து அரக்கன் வாளினன்
விண்ணிடைக் கடிதுகொண்டு ஏகும் வேலையில்
பெண்ணினிற்கு அருங்கலம் அனைய பெய்வளை
கண்ணெனப் பொழிந்தது கால மாரியே.

களிக்கும் மஞ்ஞையைக் கண்ணுளர்
இனமெனக் கண்ணுற்று
அளிக்கும் மன்னரிற் பொன்மழை
வழங்கின அருவி;
வெளிக்கண் வந்தகார் விருந்தென
விருந்துகண்டு உள்ளம்
களிக்கும் மங்கையர் முகமெனப்
பொலிந்தன கமலம்.

**தாரையின் கோலம்**

தாமரை வதனம் சாய்த்துத்
தனுநெடுந் தரையின் ஊன்றி
மாமியர் குழுவின் வந்தா
னமென மைந்தன் நிற்ப,
பூமியில் அணங்க னார்தம்
பொதுவிடைப் புகுந்து, பொற்றோள்
தூமன நெடுங்கண் தாரை
நடுங்குவாள் இனைய சொன்னாள்:

'அந்தமில் காலம் நோற்ற
ஆற்றலுண் டாயின் அன்றி
இந்திரன் முதலி னோரால்
எய்தலாம் இயல்பிற் றன்றே?
மைந்த! நின் பாதம் கொண்டுஎம்
மனைவரப் பெற்று வாழ்ந்தேம்!
உய்ந்தனம்! வினையும் தீர்ந்தேம்!
உறுதிவே றிதனின் உண்டோ?
'ஆர்கொலோ உரைசெய் தார்?' என்று
அருள்வரச் சீற்றம் அஃகாப்
பார்குலாம் முழுவெண் திங்கள்
பகல்வந்த படிவம் போலும்
ஏர்குலாம் முகத்தி னானை
இறைமுகம் எடுத்து நோக்கித்
தார்குலாம் அலங்கல் மார்பன்
தாயரை நினைந்து நைந்தான்.
'சீறுவாய் அல்லை, ஐய!
சிறியவர் தீமை செய்தால்
ஆறுவாய் நீய லால்மற்று
ஆருளர்? அயர்ந்தா னல்லன்
வேறு வேறு உலக மெங்கும்
தூதரை விடுத்த எல்லை
ஊறுமா நோக்கித் தாழ்த்தான்
உதவிமா றுதவி உண்டோ?'

## அனுமன் கண்ட இலங்கை

பொன்கொண்டி ழைத்த, மணி
யைக்கொடுபொ திந்த,
மின்கொண் டமைத்த வெயி
லைக்கொடு சமைத்த,
என்கொண்டு இயற்றிய
எனத்தெரிகி லாத
வன்கொண்டல் விட்டுமதி
முட்டுவன மாடம்.

'மரம்அ டங்கலும் கற்பகம்;
மனையெலாம் கனகம்;
அரம டந்தையர் சிலதியர்
அரக்கியர்க்கு; அமரர்
உரம்அ டங்கிவந்து உழையராய்
உழல்குவர்; ஒருவர்
தரம்அ டங்குவ தன்றுஇது
தவம்செய்த தவமால்.

'கறங்கு கால்புகா; கதிரவன்
ஒளிபுகா; மறலி
மறம்பு காது;இனி வானவர்
புகாரென்கை வம்பே;
திறம்பு காலத்துள், யாவையும்,
சிதையினும் சிதையா;
அறம் புகாது,இந்த அணிமதில்
கிடக்கைநின் றகத்தின்.

'பளிக்கு மாளிகைத் தலந்தொறும்,
இடந்தொறும், பசுந்தேன்
துளிக்கும் கற்பகத் தண்ணறுஞ்
சோலைகள் தோறும்,
அளிக்கும் தேறல்உண்டு, ஆடுநர்
பாடுநர் ஆகிக்
களிக்கின் றார்அலால், கவல்கின்றார்
ஒருவரைக் காணேன்!'

## சிறையிருந்த சீதை

வல்ம ருங்குல்வாள் அரக்கியர்
நெருக்கஅங் கிருந்தாள்;
கல்ம ருங்குஎழுந்து, என்றும்ஓர்
துளிவரக் காணா
நல்ம ருந்துபோல் நலன்அற
உணங்கிய நங்கை
மெல்ம ருங்குல்போல் வேறுள
அங்கமும் மெலிந்தாள்.

விழுதல், விம்முதல், மெய்யுற
வெதும்புதல், வெருவல்,
எழுதல், ஏங்குதல், இரங்குதல்,
இராமனை எண்ணித்
தொழுதல், சோருதல், துளங்குதல்,
துயருழந்து உயிர்த்தல்
அழுதல் அன்றிமற்று அயலொன்றும்
செய்குவது அறியாள்.

ஆவி யம்துகில் புனைவதுஒன்று
அன்றிவேறு அறியாள்,
தூவி அன்னம்மென் புனலிடைத்
தோய்கிலா மெய்யாள்,
தேவு தெண்கடல் அமிழ்துகொண்டு
அனங்கவேள் செய்த
ஓவி யம்புகை உண்டதே
ஒக்கின்ற உருவாள்.

'அருந்தும் மெல்அடகு ஆர்இட
அருந்தும்!' என் றழுங்கும்;
'விருந்து கண்டபோது என்னுறு
மோ!'என்று விம்மும்;
'மருந்தும் உண்டுகொல் யான்கொண்ட
நோய்க்கு!'என்று மயங்கும்
இருந்த மாநிலம் செல்லரித்
திடவும்ஆண்டு எழாதாள்.

'மெய்த்தி ருப்பதம் மேவு'என்ற போதினும்,
'இத்தி ருத்துறந்து ஏகு' என்ற போதினும்,
சித்தி ரத்தின்அ லர்ந்தசெந் தாமரை
ஒத்தி ருந்தமு கத்தினை உன்னுவாள்.

ஆழ நீர்க்கங்கை அம்பிக டாவிய
ஏழை வேடனுக்கு, 'எம்பிநின் தம்பி;நீ
தோழன்; மங்கைகொ ழுந்தி;எ னச்சொன்ன
வாழி நண்பினை உன்னிம யங்குவாள்.

## கற்பரசியின் காட்சி

விரிமழைக் குலம்கிழித்து
ஒளிரும் மின்னெனக்
கருநிறத்து அரக்கியர்
குழுவில் கண்டனன்,
குருநிறத்து ஒருதனிக்
கொண்டல், ஊழியான்
இருநிறத்து உற்றளற்கு
இயைந்த காந்தத்தை.

'பேணநோற் றதுமனைப் பிறவி ! பெண்மைபோல்
நாணம்நோற்று உயர்ந்தது நங்கை தோன்றலால் !
மாணநோற்று ஈண்டுஇவள் இருந்த வாறெலாம்
காணநோற் றிலன்அவன், கமலக் கண்களால்!'

## சீதையின் துயரம்

'பொறையிருந்து ஆற்றிஎன் உயிரும் போற்றினேன்
அறையிருங் கழலவன் காணும் ஆசையால் ;
நிறையிரும் பல்பகல் நிருதர் நீள்நகர்ச்
சிறையிருந் தேனைஅப் புனிதன் தீண்டுமோ !

'வஞ்சனை மானின்பின் மன்னைப் போக்கி,என்
மஞ்சனை வைதுபின் 'வழிக்கொள் வாய்'என
நஞ்சனை யான்அகம் புகுந்த நங்கையான்,
உய்ஞ்சனன் இருத்தலும் உலகம் கொள்ளுமோ ?

'ஆதலான் இறத்தலே அறத்தின் ஆறு;எனைச்
சாதல்காப் பவரும்என் தவத்தின் சாம்பினர்;
ஈதலாது இடமும்வே றில்லை,' என்றொரு
போதுலாம் மாதவிப் பொதும்பர் எய்தினள்.

## ஆருயிர் காத்த அனுமன்

கண்டனன் அனுமனும்; கருத்தும் எண்ணினன்;
கொண்டனன் துணுக்கம்;மெய் தீண்டக் கூசுவான்;
'அண்டர்நா யகன்அருள் தூதன் யான்,'எனத்
தொண்டைவாய் மயிலினைத் தொழுது தோன்றினன்.

'அரக்கனே யாக; வேறுஓர்
அமரனே யாக; அன்றிக்
குரக்கினத்து ஒருவ னேதான்
· ஆகுக; கொடுமை யாக;
இரக்கமே யாக; வந்துஇங்கு
எம்பிரான் நாமம் சொல்லி
உருக்கினன் உணர்வை; தந்தான்
உயிர்;இதின் உதவி உண்டோ?'

எனநினைத்து எய்த நோக்கி,
'இரங்கும்என் உள்ளம்: கள்ளம்
மனன்அகத் துடைய ராய
வஞ்சகர் மாற்ற மல்ல
நினைவுடைச் சொற்கள்; கண்ணீர்
நிலம்புகப் புலம்பா நின்றான்
வினவுதற்கு உரியன்,' என்று,
'வீர ! நீ யாவன் ?' என்றாள்.

ஆயசொல் தலைமேல் கொண்ட
அங்கையன், 'அன்னை ! நின்னைத்
தூயவன் பிரிந்த பின்பு
தேடிய துணைவன், தொல்லைக்
காய்கதிர்ச் செல்வன் மைந்தன்,
கவிக்குலம் அவற்றுக்கு எல்லாம்
நாயகன், சுக்கி ரீவன்
என்றுளன், நவையில் தீர்ந்தான்.

'மற்றவன் முன்னோன் வாலி,
இராவணன் வலிதன் வாலில்
இற்றுகக் கட்டி எட்டுத்
திசையினும் எழுந்து பாய்ந்த
வெற்றியன், தேவர் வேண்ட,
வேலையை விலங்கல் மத்தின்
சுற்றிய நாகம் தேய
அமுதெழக் கடைந்த தோளான்.

‘அன்னவன் தன்னை, உம்கோன்
அம்புஒன்றால் ஆவி வாங்கிப்
பின்னவற்கு அரசு நல்கித்
துணையெனப் பிடித்தான்; எங்கள்
மன்னவன் தனக்கு நாயேன்
மந்திரத் துள்ளேன்; வானின்
நன்னெடுங் காலின் மைந்தன்;
நாமமும் அனுமன் என்பேன்.’

எய்தின உரைத்த லோடும்
எழுந்துபே ருவகை ஏற
வெய்துற ஒடுங்கும் மேனி,
வானுற விம்மி ஓங்கி,
‘உய்தல்வந்து உற்ற தோ!’என்று
அருவிநீர் ஒழுகு கண்ணாள்,
‘அய்ய! சொல்: அனையன் மேனி
எப்படித்து? அறிவி,’ என்றாள்.

‘நீண்டு, குழன்று, நெய்த்து,இருண்டு,
நெறிந்து, செறிந்து, நெடுநீலம்
பூண்டு, புரிந்து, சரிந்து, கடை
சுருண்டு, புகையும் நறும்பூவும்
வேண்டு மல்ல எனத்தெய்வ
வெறியே கமழும் நறுங்குஞ்சி
ஈண்டு சடையா யினதென்றால்,
மழைஎன் றுரைத்தல் இழிவன்றோ !

‘மீட்டும்உரை வேண்டுவன இல்லை,’என மெய்ப்பேர்
தீட்டியது, தீட்டரிய செய்கையது, ‘செவ்வே
நீட்டிதென நேர்ந்தனன்’ எனநெடிய கையால்
காட்டினன்ஓர் ஆழி;அது வாள்நுதலி கண்டாள்.

இழந்தமணி புற்றரவு எதிர்ந்ததெனல் ஆனாள்;
பழந்தனம் இழந்தன படைத்தவரை ஒத்தாள்;
குழந்தையை உயிர்த்தமல டிக்குஉவமை கொண்டாள்;
உழந்துவிழி பெற்றதோர் உயிர்ப்பொறையும் ஒத்தாள்.

## சீதையின் வாழ்த்து

'மும்மையாம் உலகம் தந்த
முதல்வற்கு முதல்வன் தூதாய்ச்
செம்மையால் உயிர்தந் தாய்க்குச்
செயல்என்னால் எளிய துண்டே?
அம்மையாய் அத்த னாய
அப்பனே ! அருளின் வாழ்வே !
இம்மையே மறுமை தானும்
நல்கினை இசையோ' டென்றாள்.

'பாழிய பணைத்தோள் வீர !
துணையிலேன் பரிவு தீர்த்த
வாழிய வள்ள லே!யான்
மறுவிலா மனத்தேன் என்னில்
ஊழிஓர் பகலா ஓதும்
ஆண்டெலாம் உலகம் ஏழும்
ஏழும்வீ வுற்ற ஞான்றும்
இன்றென இருத்தி!' என்றாள்.

'மாண்டேன் எனினும் பழுதன்றே !
இன்றே மாயச் சிறைநின்று
மீண்டேன்! என்னை ஒறுத்தாரைக்
குலங்க ளோடும் வேரறுத்தேன் !
பூண்டேன் எங்கோன் பொலங்கழலும் !
புகழே யன்றிப் புன்பழியும்
தீண்டேன்!' என்று மனமகிழ்ந்தாள்
திருவில் முகத்துத் திருவன்னாள்.

'இன்னம் ஈண்டொரு திங்கள் இருப்பல்யான்:
நின்னை நோக்கிப் பகர்ந்தது நீதியோய்!
பின்னை ஆவி பிடிக்கின்றிலேன்;அந்த
மன்னன் ஆணை! இதனை மனக்கொள் நீ.

'ஆரம் தாழ்திரு மார்பற்கு அமைந்ததோர்
தாரம் தான்அல ளேனும், தயாவெனும்
ஈரந் தான்அகத்து இல்லஎன் றாலும்;தன்
வீரம் காத்தலை வேண்டென்று வேண்டுவாய்.

'வந்துஎனைக்கரம் பற்றிய வைகல்வாய்,
'இந்த இப்பிற விக்குஇரு மாதரைச்
சிந்தை யாலும்தொ டேன்!'என்ற செவ்வரம்
தந்த வார்த்தை திருச்செவி சாற்றுவாய்.

'சூடை யின்மணி கண்மணி ஒப்பது; தொன்னாள்
ஆடை யின்கண் இருந்தது; பேரடை யாளம்;
நாடி வந்துஎனது இன்னுயிர் நல்கிய நம்பா!
கோடி', என்றுகொ டுத்தனள் மெய்ப்புகழ் கொண்டாள்.

தொழுது வாங்கினன் சுற்றிய தூசினன் முற்றப்
பழுது றுவகை பந்தனை செய்தனன்; வந்தித்து,
அழுது மும்மை வலம்கொண் டிறைஞ்சினன்; அன்போடு
எழுது பாவையும் ஏத்தினள்; ஏகினன் இப்பால்.

### அனுமன் — சொல்லின் செல்வன்

'கண்டனன் கற்பினுக்கு அணியைக் கண்களால்
தெண்திரை அலைகடல் இலங்கைத் தென்னகர்;
அண்டர்நா யக!இனித் துறத்தி ஐயமும்
பண்டுள துயரும்,'என்று அனுமன் பன்னுவான்:

‘உன்பெருந் தேவி என்னும்
உரிமைக்கும், உன்னைப் பெற்ற
மன்பெரு மருகி என்னும்
.வாய்மைக்கும், மிதிலை வேந்தன்
தன்பெருந் தனையை என்னும்
தகைமைக்கும் தலைமை சான்றாள்,
என்பெருந் தெய்வம் ஐயா!
இன்னமும் கேட்டி,’ என்பான்:

‘விற்பெருந் தடந்தோள் வீர!
வீங்குநீர் இலங்கை வெற்பில்
நற்பெருந் தவத்த ளாய
நங்கையைக் கண்டேன் அல்லேன்;
இற்பிறப்பு என்ப தொன்றும்,
இரும்பொறை என்ப தொன்றும்,
கற்பெனும் பெயர தொன்றும்
களிநடம் புரியக் கண்டேன்!

‘வேலையுள் இலங்கை என்னும்
விரிநகர் ஒருசார், விண்தோய்
காலையும் மாலை தானும்
இல்லதோர் கனகக் கற்பச்
சோலை;அங் கதனில் உம்பி
புல்லினால் தொடுத்த தூய
சாலையின் இருந்தாள் ஐய!
தவம்செய்த தவமாம் தையல்.

‘சோகத்தா ளாய நங்கை
கற்பினால், தொழுதற்கு ஒத்த
மாகத்தார் தேவி மாரும்
வான்சிறப் புற்றார்; மற்றைப்
பாகத்தாள் இப்போ தீசன்
மகுடத்தாள்; பதுமத் தாளும்
ஆகத்தாள் அல்லள்; மாயன்
ஆயிரம் மௌலி மேலாள்.’

## இலங்கையரசன் எரிவு

'சுட்டது குரங்கு!எரி சூறை ஆடிடக்
கெட்டது கொடிநகர்! கிளேயும் நண்பரும்
பட்டனர்! பரிபவம் பரந்தது எங்கணும்!
இட்டதிவ் வரியணை இருந்தது என்னுடல்!'

## கும்பகருணன் வீரவுரை

'ஆசில்பர தாரமவை அஞ்சிறைஅ டைப்பேம்!
மாசில்புகழ் காதலுறு வேம்!வளமை கூரப்
பேசுவது மானம்!இடை பேணுவது காமம்;
கூசுவது மானிடரை; நன்றுநம கொற்றம்!

'ஊறுபடை ஊருவத ன்முன்னம்ஒரு நாளே
ஏறுகடல் ஏறிநரர் வானரரை எல்லாம்
வேறுபெய ராதவகை வேரொடும்அ டங்க
நூறுவது வேகருமம்!' என்பதுநு வன்ருன்.

## வீடணன் மெய்யுரை

'கோனகர் முழுவதும் நினது கொற்றமும்
சானகி எனும்உல கீன்ற அம்மனை
ஆனவள் கற்பினுல் வெந்தது அல்லது,ஓர்
வானரம் சுட்டதுஎன்று உணர்தல் மாட்சியோ?

'இசையும் செய்கையும் உயர்குலத்து
இயற்கையும் எஞ்ச
வசையும் கீழ்மையும் மீக்கொளக்
கிளேயொடும் மடியாது
அசைவில் கற்பின்அவ் வணங்கைவிட்டு
அருளிதி; இதன்மேல்
விசயம் இல்,'எனச் சொல்லினன்
அறிஞரின் மிக்கான்.

## இராவணன் இகழ்வுரை

'ஊன வில்இறுத்து, ஓட்டைமா மரத்துள்அம்பு ஓட்டி,
கூனி சூழ்ச்சியால் அரசுஅழிந்து, உயர்வனம் குறுகி,
யான்இ ழைத்திட இல்இழந்து இன்னுயிர் சுமக்கும்
மானு டன்வலி நீயலாது யாருளர் மதிப்பார்?

'நண்ணின மனிசரை நண்பு பூண்டனை;
எண்ணினை செய்வினை; என்னை வெல்லுமாறு
உன்னினை; அரசின்மேல் ஊன்றினை;
திண்ணிதுஉன் செயல்!பிறர் செறுநர் வேண்டுமோ?'

## வீடணன் கண்ட காட்சி

தருமமும் ஞானமும் தவமும் வேலியாய்
மருவரும் பெருமையும் பொறையும் வாயிலாய்க்
கருணையங் கோயிலுள் இருந்த கண்ணனை
அருள்நெறி எய்திச்சென்று அடிவ ணங்கினான்.

'பஞ்செனச் சிவக்கும் மென்கால்
தேவியைப் பிரித்த பாவி
வஞ்சனுக்கு இளைய என்னை
வருகஎன்று அருள்செய் தானே!
தஞ்செனக் கருதி னானே!
தாழ்சடைக் கடவுள் உண்ட
நஞ்செனச் சிறந்தேன் அன்றோ,
நாயகன் அருளின் நாயேன்?'

வீரனை நோக்கி அங்கம்
மென்மயிர் சிலிர்ப்பக் கண்ணீர்
வார,நெஞ் சுருகிச் 'செங்கண்
அஞ்சன மலையன் றாகில்
கார்முகில் கமலம் பூத்தது
அன்று;இவன் கண்ணன் கொல்லாம்;
ஆர்அருள் சுரக்கும் நீதி
அறம்நிறம் கரிதோ!' என்றான்.

'மின்மினி ஒளியின் மாயும் பிறவியை வேரின் வாங்கச்
செம்மணி மகுடம் நீக்கித் திருவடி புனைந்த செல்வன்
தன்முனார் கமலத்து அண்ணல் தாதையார் சரணம் தாழ
என்முனார் எனக்குச் செய்த உதவி!'என்று ஏம்பலுற்றான்.

## இராமன் இனிய சொல்

'குகனொடும் ஐவ ரானேம் முன்பு;பின் குன்று சூழ்வான்
மகனொடும் அறுவ ரானேம்; எம்உழை அன்பின் வந்த
அகன்அமர் காதல் ஐய! நின்னொடும் எழுவ ரானேம்;
புகலருங்கானம்தந்து புதல்வரால் பொலிந்தான் உந்தை!

## அன்பர் கட்டிய அணை

கருவரை காதங்கள் கணக்கி லாதன
இருகையில் தோள்களில் சென்னி ஏந்தின
ஒருகடல் அடைக்கமற்று ஒழிந்த வேலைகள்
வருவன வாமென வந்த வானரம்.

மஞ்சினில் திகழ்தரு மலையை மாக்குரங்கு
எஞ்சுறக் கடிதுஎடுத்து எறிய வேநளன்
விஞ்சையில் தாங்கினன் சடையன் வெண்ணெயில்
தஞ்சம்என் றோர்களைத் தாங்கும் தன்மைபோல்.

குமுதன் இட்ட குலவரை கூத்தரின்
திமிதம் இட்டுத் திரையும்தி ரைக்கடல்
துமிதம் ஊர்புக வானவர் துள்ளினர்
அமுதம் இன்னும் எழும்எனும் ஆசையால்.

## அங்கதன் தூது

'தூதுவன் ஒருவன் தன்னை
இவ்வழி விரைவில் தூண்டி,
'மாதினை விடுதி யோ?'என்
றுணர்த்துவேம்; மறுக்கு மாகின்
காதுதல் கடன்என்று உள்ளம்
கருதியது; அறனும் அஃதே,
நீதியும் அஃதே,' என்றான்
கருணையின் நிலயம் அன்னான்.

'மாருதி பின்னும் செல்லின் 'மற்றிவன் அன்றி வந்து
சாருதல் வலியார் இல்லை,' என்பது சாலும் அன்றே?
யாரினி ஏகத் தக்கார்? அங்கதன் அமையும்; ஒன்னார்
வீரமே விளைப்ப ரேனும் தீதின்றி மீடல் வல்லான்.'

பார்மிசை வணங்கிச் சீயம்
விண்மிசைப் படர்வ தேபோல்
வீரன்வெஞ் சிலையில் கோத்த
அம்பென விரைவில் போனான்,
'மாருதி அல்ல னாகில்
நீ'எனும் மாற்றம் பெற்றேன்!
யார்இனி என்னோடு ஒப்பார்!'
என்பதோர் இன்ப முற்றான்.

'பூதநா யகன்,நீர் சூழ்ந்த
புவிக்குநா யகன்,அப் பூமேல்
சீதைநா யகன்,வே றுள்ள
தெய்வநா யகன்,நீ செப்பும்
வேதநா யகன்,மேல் நின்ற
விதிக்கும்நா யகன்தான் விட்ட
தூதன்யான்; பணித்த மாற்றம்
சொல்லிய வந்தேன்,' என்றான்.

'இந்திரன் செம்மல், பண்டுஓர்
இராவணன் என்பான் தன்னைச்
சுந்தரத் தோள்க ளோடும்
வாலிடைத் தூங்கச் சுற்றிச்
சிந்துரக் கிரிகள் தாவித்
திரிந்தனன்; தேவர் வேண்ட
மந்தரப் பொருப்பால் வேலை
கலக்கினான் மைந்தன்,' என்றான்.

'உந்தைஎன் துணைவன் அன்றே?
ஓங்குஅறம் சான்றும் உண்டால்;
நிந்தனை இதன்மேல் உண்டோ
நீ அவன் தூதன் ஆதல்?
தந்தனன் நினக்கு யானே
வானரத் தலைமை; தாழா
வந்தனை நன்று செய்தாய்,
என்னுடை மைந்த!' என்றான்.

'தாதையைக் கொன்றான் பின்னே
 தலைசுமந்து இருகை நாற்றிப்
பேதையன் என்ன வாழ்ந்தாய்
 என்பதோர் பிழையும் தீர்ந்தாய்;
சீதையைப் பெற்றேன் ! உன்னைச்
 சிறுவனு மாகப் பெற்றேன்!
ஏதுஎனக்கு அரியது!' என்றான்
 இறுதிநூற்கு எல்லை கண்டான்.

'அந்நரர் இன்று நாளை
 அழிவதற்கு ஐய மில்லை!
உன்அரசு உனக்கே தந்தேன் !
 ஆளுதி ஊழிக் காலம் !
பொன் அரி சுமந்த பீடத்து
 இமையவர் போற்றி செய்ய
மன்னவ னாகி யானே
 சூட்டுவன் மகுடம்!' என்றான்.

'வாய்வரத் தக்க சொல்லி
 என்னைஉன் வசம்செய் வாயேல்
ஆய்தரத் தக்க தன்றோ
 தூதுவந்து அரச தாள்கை?
நீதரக் கொள்வேன் யானே !
 இதற்கினி நிகர்வேறு உண்டோ ?
நாய்தரக் கொள்ளும் சீயம்
 நல்லரசு !' என்று நக்கான்.

'கூவிஇன்று என்னை, 'நீபோய்த்
 தன்குலம் முழுதும் கொல்லும்
பாவியை எய்தி, அஞ்சி
 அரண்புக்குப் பதுங்கி னானென்
தேவியை விடுக ! அன்றேல்
 செருக்களத்து எதிர்ந்து தன்கண்
ஆவியை விடுக !' என்றான்
 அருளினம் விடுகி லாதான்.

'ஏமஞ் சார எளியவர் யாவிரும்;
தூமம் கால்வன வீரன் சுடுசரம்;
வேமின் போல்வன வீழ்வதன் முன்னமே
போமின் போமின் புறத்'தென்று போயினன்.

## தலைப்போர்

'ஆள்ஐ யாஉனக்கு அமைந்தன,
மாருதம் அறைந்த
பூளை யாயின கண்டனை;
இன்றுபோய்ப் போர்க்கு
நாளை வா', என நல்கினன்
நாகுஇளங் கமுகின்
வாளை தாவுறு கோசலை
நாடுடை வள்ளல்.

வாரணம் பொருத மார்பும்,
வரையினை எடுத்த தோளும்
நாரத முனிவற்கு ஏற்ப
நயம்பட உரைத்த நாவும்,
தாரணி மவுலி பத்தும்,
சங்கரன் கொடுத்த வாளும்,
வீரமும் களத்தே போட்டு
வெறுங்கையோடு இலங்கை புக்கான்.

மாதிரம் எவையும் நோக்கான்;
வளநகர் நோக்கான்; வந்த
காதலர் தம்மை நோக்கான்;
கடல்பெருஞ் சேனை நோக்கான்;
தாதுஅவிழ் கூந்தல் மாதர்
தனித்தனி நோக்கத் தான்அப்
பூதலம் என்னும் நங்கை
தன்னையே நோக்கிப் புக்கான்.

வானகும் மண்ணும் எல்லாம்
நகும்நெடு வயிரத் தோளான்
நானகு பகைஞர் எல்லாம்
நகுவர்என்று அதற்கும் நாணன்;
வேனகு நெடுங்கண் செவ்வாய்
மெல்லியல் மிதிலை வந்த
சானகி நகுவள் என்றே
நாணத்தால் சாம்பு கின்றான்.

## இலங்கையர் கோன் வியப்புரை

'எறித்தபோர் அரக்கர் ஆவி
    எண்ணிலா வெள்ளம் எஞ்சப்
பறித்தபோது என்னை அந்தப்
    பரிபவம் முதுகில் பற்றப்
பொறித்தபோது அன்னான் அந்தக்
    கூனிகூன் போக, உண்டை
செறித்தபோது ஒத்த தன்றிச்
    சினம்உண்மை தெரிந்த தில்லை.

'நல்இயல் கவிஞர் நாவில்
    பொருள்குறித்து அமர்ந்த நாமச்
சொல்லெனச் செய்யுள் கொண்ட
    தொடையெனத் தொடையை நீக்கி
எல்லையில் செல்வம் தீரா
    இசையெனப் பழுதி லாத
பல்அலங் காரப் பண்பே
    காகுத்தன் பகழி மாதோ.

'ஏற்றம்ஒன்று இல்லை என்பது
    ஏழைமைப் பால தன்றே?
ஆற்றல்சால் கலுழ னேதான்
    ஆற்றுமே அமரின் ஆற்றல்?
காற்றையே மேற்கொண் டானோ,
    கனலையே கடாவி னானோ,
கூற்றையே ஊற்கின் றானோ
    குரங்கின்மேல் கொண்டு நின்றான்!'

## கும்பகருணன் கூற்று

'ஆனதோ வெஞ்சமம்! அலகில் கற்புடைச்
சானகி துயர்இனம் தவிர்ந்தது இல்லையோ!
வானமும் வையமும் வளர்ந்த வான்புகழ்
போனதோ! புகுந்ததோ பொன்றும் காலமே!

'வென்றுஇவண வருவன்என்று உரைக்கி லேன்;விதி
நின்றது பிடர்பிடித்து உந்த நின்றது;
பொன்றுவன்; பொன்றிஞல் பொலன்கொள் தோளியை
நன்றெென நாயக விடுதி நன்றரோ.

'இற்றைநாள் வரைமுதல் யான்முன் செய்தன
குற்றமும் உளஎனில், பொறுத்தி கொற்றவ !
அற்றதால் முகத்தினில் விழித்தல்ஆரிய !
பெற்றனென் விடை!'எனப் பெயர்ந்து போயினன்.

### வீரத் தமயனும் வினயத் தம்பியும்

'இருளுறு சிந்தையேற்கும்
இன்னருள் சுரந்த வீரன்
அருளும்நீ சேரின் ஒன்ருே,
அபயமும் அளிக்கும்; அன்றி
மருளுறு பிறவி நோய்க்கு
மருந்துமாம் ; மாறிச் செல்லும்
உருளுறு சகட வாழ்க்கை
ஒழித்துவீடு அளிக்கும் அன்றே ?

'தீயவை செய்வ ராகில்,
சிறந்தவர், பிறந்த உற்ருர்,
தாய், அவை, தந்தை மார்என்று
உணர்வரோ தருமம் பார்ப்பார் ?
தீயவை அறிதி யன்றே ?
நினக்குயான் உரைப்பது என்னே !
தூயவை துணிந்த போது
பழிவந்து தொடர்வ துண்டோ ?

'நீர்க்கோல வாழ்வை நச்சி
நெடிதுநாள் வளர்த்துப் பின்னைப்
போர்க்கோலம் செய்து விட்டாற்கு
உயிர்கொடாது அங்குப் போகேன்;
தார்க்கோல மேனி மைந்த !
என்துயர் தவிர்த்தி யாயின்
கார்க்கோல மேனி யானைக்
கூடுதி கடிதின்,' என்ருன்.

'மலரின்மேல் இருந்த வள்ளல்
வழுவிலா வரத்தி னால்நீ
உலைவிலாத் தருமம் பூண்டாய்
உலகுள தனையும் உள்ளாய் ;
தலைவன் நீ உலகுக்கு எல்லாம் ;
உனக்குஅது தக்க தேயால் ;
புலையுறு மரணம் எய்தல்
எனக்கது புகழ தேயால்.

'கருத்திலா இறைவன் தீமை
கருதினால், அதனைக் காத்துத்
திருத்தலா மாகின் நன்றே ;
திருத்துதல் தீரா தாயின்
பொருத்துறு பொருளுண் டாமோ ?
பொருதொழிற்கு உரிய ராகி
ஒருத்தரின் முன்னம் சாதல்
உண்டவர்க்கு உரிய தம்மா !

'செம்பிட்டுச் செய்த இஞ்சித்
திருநகர்ச் செல்வம் தேறி
வம்பிட்ட தெரியல் எம்முன்
உயிர்கொண்ட பகையை வாழ்த்தி
அம்பிட்டுத் துன்னம் கொண்ட
புண்ணுடை நெஞ்சோடு ஐய !
கும்பிட்டு வாழ கில்லேன்
கூற்றையும் ஆடல் கொண்டேன்.'

என்றவன் தன்னை மீட்டும்
எடுத்துமார்பு இறுகப் புல்லி
நின்றுநின்று இரங்கி ஏங்கி
நிறைகணால் நெடிது நோக்கி,
'இன்றொடும் தவிர்ந்த தன்றே
உடன்பிறப்பு என்பது?' என்றான் ;
வென்றிவெந் திறலி னானும்
அவனடித் தலத்து வீழ்ந்தான்.

### கும்பகருணன் வேண்டுகோள்

'நீதியால் வந்ததொரு
நெடுந்தரும நெறியல்லால்
சாதியால் வந்தசிறு
நெறியறியான் என்தம்பி ;
ஆதியாய்! உனை அடைந்தான் ;
அரசர்உருக் கொண்டமைந்த
வேதியா! இன்னம்உனக்கு
அடைக்கலம்யான் வேண்டினேன்.
'தம்பியென நினைந்துஇரங்கித்
தவிரான்அத் தகவில்லான்
நம்பிஇவன் தனைக்காணில்
கொல்லும்;இறை நல்கானல்;
உம்பியைத்தான், உன்னைத்தான்,
அனுமனைத்தான் ஒருபொழுதும்
எம்பிபிரி யானுக
அருளுதியான் வேண்டினேன்.
'மூக்கிலா முகமென்று
முனிவர்களும் அமரர்களும்
நோக்குவார் ; நோக்காமை
நுன்கணையால் என்கழுத்தை
நீக்குவாய் ; நீக்கியபின்
நெடுந்தலையைக் கருங்கடலுள்
போக்குவாய் ; இதுநின்னை
வேண்டுகின்ற பொருள்,' என்றான்.

### மையலுற்ற மன்னவன்

மின்ஒளிர் மகுட கோடி
வெயிலொளி விரித்து வீசத்
துன்இருள் இரிந்து தோற்பச்
சுடர்மணித் தோளில் தோன்றும்
பொன்அரி மாலை நீல
மலையின்வீழ் அருவி போர்ப்ப
நன்னெடுங் களிமால் யானை
நாணுற நடந்து வந்தான்.

'தோற்பித்தீர் ; மதிக்கு மேனி
சுடுவித்தீர்; தென்றல் தூற்ற
வேர்ப்பித்தீர் ; வயிரத் தோளை
மெலிவித்தீர் ; வேனில் வேளை
ஆர்ப்பித்தீர் ; என்னை இன்னல்
அறிவித்தீர் ; அமரர் அச்சம்
தீர்ப்பித்தீர் ; இன்னம் என்னென்
செய்வித்துத் தீர்தீ ரம்மா !

'பெண்ணெலாம் நீரே யாக்கிப்
பேரெலாம் உமதே யாக்கிக்
கண்ணெலாம் நும்கண் ஆக்கிக்
காமவேள் என்னும் நாமத்து
அண்ணல்எய் வானு மாக்கி
ஐங்கணைக் கரியத் தக்க
புண்எலாம் எனக்கே யாக்கி
விபரீதம் புணர்த்தி விட்டீர்!'

## சீற்றமுற்ற சீதை

வல்லியம் மருங்கு கண்ட
மானென மறுக்க முற்று
மெல்லியல் ஆக்கை முற்றும்
நடுங்கினள் விம்மு கின்றாள்,
'கொல்லிய வரினும் உள்ளம்
கூறுவென் தெரிய,' என்னாப்
புல்லிய கிடந்த தொன்றை
நோக்கினள் புகல்வ தானாள்:

'பழிஇது பாவம் என்று
பார்க்கிலை ; பகரத் தக்க
மொழிஇவை யல்ல என்ப
துணர்கிலை ; முறைமை நோக்காய்;
கிழிகிலை நெஞ்சம் ; வஞ்சக்
கிளையொடும் இன்று காறும்
அழகிலை என்ற போதுஎன்
கற்புஎன்னும் ! அறந்தான் என்னும் !

'ஊணிலா யாக்கை பேணி
உயர்புகழ் சூடாது உன்முன்
நாணிலாது இருந்தேன் அல்லேன் ;
நவையறு குணங்கள் என்னும்
பூண்எலாம் பொறுத்த மேனிப்
புண்ணிய மூர்த்தி தன்னைக்
காணலாம் இன்னும் என்னும்
காதலால் இருந்தேன் கண்டாய்.'

### போலிச் சனகன் பேச்சு

ஆயது காலத்து ஆங்கோர்
அரக்கனைச் சனகன் ஆக்கி,
வாய்திறந்து அரற்றப் பற்றி
மகோதரன் கடிதின் வந்தான் ;
காய்எரி அனையான் முன்னர்க்
காட்டினன் ; அணங்கு கண்டாள் ;
தாய்எரி வீழக் கண்ட
பார்ப்பெனத் தரிக்கி லாதாள்.

கைகளை நெரித்தாள் ; கண்ணை
மோதினாள் ; கமலக் கால்கள்
நெய்எரி மிதித்தால் என்ன,
நிலத்திடைப் பதைத்தாள்; நெஞ்சம்
மெய்யென எரிந்தாள் ; ஏங்கி
விம்மினாள் ; நடுங்கி வீழ்ந்தாள் ;
பொய்யென உணராள் ; அப்பாற்
புரண்டுஅரும் பூச லிட்டாள்.

'எந்தையே ! எந்தை யே! இன்று
என்பொருட்டு உனக்கும் இக்கோள்
வந்ததே ! என்னைப் பெற்று
வாழ்ந்தவாறு இதுவோ ! மண்ணோர்
தந்தையே ! தாயே ! செய்த
தருமமே ! தவமே !' என்னும் ;
வெந்துயர் என்னும் தீவீழ்
விறகென வெந்து வீழ்ந்தாள்.

'பண்பெற்ரு ரோடு கூடாப்
பகைபெற்ருய்; பகழி பாய
விண்பெற்ருய் எனினும் நன்ருல்;
வேந்தராய் உயர்ந்த மேலோர்
எண்பெற்ருய்; பழியும் பெற்ருய்;
இதுநின்னுல் பெற்ற தன்ருல்;
பெண்பெற்ருய், அதனுல் பெற்ருய்;
யாரின்ன பேறு பெற்ருர்?

'கொல்லெனக் கணவற்கு ஆங்கோர்
கொடும்பகை கொடுத்தேன்; எந்தை
கல்லெனத் திரண்ட தோளைப்
பாசத்தால் கட்டக் கண்டேன்;
இல்லெனச் சிறந்து நின்ற
இரண்டுக்கும் இன்னல் சூழ்ந்தேன்
அல்லெனே? எளிய னேயான்?
அளியற்றேன், இறக்க லாதேன்!

'பூவின்மேல் இருந்த தெய்வத்
தையலும் பொதுமை யுற்ருள்
பாவியான் பயந்த நங்கை
நின்பொருட் டாகப் பட்டேன்
ஆவிபோய் அழியல் நன்றே;
அமரர்க்கும் அரசன் ஆவான்
தேவியாய் இருத்தல் தீதே;
சிறையிடைத் தேம்பு கின்ருய்.

'நீயும்நின் கிளையும் மற்றுஇந்
நெடுநில வரைப்பும் நேரே
மாயினும் முறைமை குன்ற
வாழ்வெனே? வயிரத் திண்தோள்
ஆயிரம் நாமத்து ஆழி
அரியினுக்கு அடிமை செய்வேன்
நாயினை நோக்கு வேனே
நாண்துறந்து ஆவி நச்சி!

'வரிசிலை ஒருவன் அல்லால்
மைந்தர்என் மருங்கு வந்தார்
எரியிடை வீழ்ந்த விட்டில்
அல்லரோ? அரசுக்கு ஏற்ற
அரியொடும் வாழ்ந்த பேடை
அங்கணத்து அழுக்குத் தின்னும்
நரியொடும் வாழ்வ துண்டோ?
நாயினும் கடைப்பட் டோனே!'

**மேகநாதன் விடுத்த நாகபாசம்**

சொல்லாத முன்னம் சுடரைச்
சுடர்தூண்டு கண்ணன்
பல்லால் அதரத்தை அதுக்கி
விண்மீது பார்த்தான்
எல்லாரும் இறந்தன ரோஎன
ஏங்கி நைந்தான்
வில்லாளரை எண்ணில் விரற்குமுன்
நிற்கும் வீரன்.

'மருந்தே நிகர்எம் பிதன்ஆருயிர் வௌவி னானை
விருந்தே எனஅந் தகற்கீகிலன் வில்லும் ஏந்திப்
பொரும்தே வர்குழாம் நகைசெய்திடப் போந்து பாரின்
இருந்தேன் எனின்நான் அவ்விராவணி யல்லன்!' என்றான்.

விட்டனன் அரக்கன் வெய்ய
படையினை; விடுத்த லோடும்
எட்டினோடு இரண்டு திக்கும்
இருள்திரிந்து இரிய ஓடிக்
கட்டினது என்ப மன்னோ
காகுத்தற்கு இளைய காளை
வட்டவான் வயிரத் திண்தோள்
மலைகளை உளைய வாங்கி.

மற்றையோர் தமையும் எல்லாம்
வாளெயிற் றரவம் வந்து
சுற்றின; வயிரத் தூணின்
மலையினிற் பெரிய தோள்கள்
இற்றன; இற்ற வென்ன
இறுக்கின; இளகா உள்ளம்
தெற்றென உடைய வீரர்
இருந்தனர் செய்வது ஓரார்.

'சொற்றது முடித்தேன்! நாளை
என்உடல் சோர்வு நீக்கி
மற்றதும் முடிப்பென்!' என்று
எண்ணினன்; 'மனிசன் வாழ்க்கை
இற்றது; குரங்கின் தானை
இறந்தது'என் றிரண்டு பாலும்
கொற்றமங் கலங்கள் ஆர்ப்ப
இராவணன் கோயில் புக்கான்.

## ராமன் துயரம்

உழைக்கும், வெய்து உயிர்க்கும், ஆவி
உருகும்,போய் உணர்வு சோரும்,
இழைக்குவது அறிதல் தேற்றான்,
'இலக்குவா! இலக்கு வா!'என்று
அழைக்கும்; தன்கையை வாயில்
மூக்கின் வைத்து அயர்க்கும்; 'ஐயா!
பிழைத்தியோ!' என்னும் மெய்யே
பிறந்தேயும் பிறந்தி லாதான்.

வில்லினை நோக்கும்; பாச
விசிப்பினை நோக்கும்; வீயா
அல்லினை நோக்கும்; வானத்
தமரரை நோக்கும்; 'பாரைக்
கல்லுவென் வேரோடு;' என்னும்;
பவளவாய் கறிக்கும்; கற்றோர்
சொல்லினை நோக்கும் தன்பொற்
புகழினை நோக்கும் தோளான்.

## நச்சுப் படையின் நாசம்

இத்தன்மை எய்தும் அளவின்கண் வந்த
இமையோர்கள் அஞ்சி, 'இதுபோய்
எத்தன்மை எய்தி முடியும்கொல்!' என்று
குலைகின்ற எல்லை யிதன்வாய்
அத்தன்மை கண்டு புடைநின்ற அண்ணல்,
கலுழன் தன் அன்பின் மிசையால்
சித்தம் நடுங்கி இதுதீர மெள்ள
இருளோடு வந்து தெரிவான்.

வாசம் கலந்த மரைநாள நூலின்
வகைஎன்ப தென்னை மழைஎன்று
ஆசங்கை கொண்ட கொடைமீள அண்ணல்
சரராமன் வெண்ணெய் அணுகும்
தேசம் கலந்த மறைவாணர் செஞ்சொல்
அறிவாளர் என்றிம் முதலோர்
பாசம் கலந்த பசிபோ லகன்ற
பதகன் துரந்த உரகம்.

'வெங்கண் வானரக் குழுவொடும்
இளையவன் விளிந்தான்!
இங்கு வந்திலன் அகன்றனன்
இராமன்!' என் றிகழ்ந்தான்;
சங்கம் ஊதினன்; தாதையை
வல்லையில் சார்ந்தான்;
பொங்கு போரிடைப் புகுந்துள
பொருளெலாம் புகன்றான்.

## படுகளக் காட்சி

'தெய்வ மானத் திடைஏற்றி
மனிசர்க்கு உற்ற செயல்எல்லாம்
தையல் காணக் காட்டுமின்கள்;
கண்டா லன்றித் தனதுள்ளத்து
ஐயம் நீங்காள்,' என்றுரைப்ப,
அரக்கர் மகளிர் இரைத்துஆர்ப்ப,
உய்யும் உணர்வு நீத்தாளை
நெடும்போர்க் களத்தி னிடைஉய்த்தார்.

கண்டாள் கண்ணுல் கணவன்உரு
அன்றி ஒன்றும் காணுதாள் ;
உண்டாள் விடத்தை யெனஉடலும்,
உணர்வும், உயிர்ப்பும் உடன்ஓய்ந்தாள்;
தண்டா மரைப்பூ நெருப்புற்ற
தன்மை யுற்ருள் தரியாதாள் ;
பெண்தா னுற்ற பெரும்பீழை
உலகுக் கெல்லாம் பெரிதன்ரு ?

மங்கை அழலும் வானுட்டு
மயில்கள் அழுதார் ; மழலிடையோன்
பங்கின் உறையும் குயில்அழுதாள் ;
பதும மலர்மேல் மாதுஅழுதாள் ;
கங்கை அழுதாள் ; நாமடந்தை
அழுதாள் ; கமலத் தடங்கண்ணன்
தங்கை அழுதாள் ; இரங்காத
அரக்கி மாரும் தளர்ந்துஅழுதார்.

'எண்ணு மயலோ டும்இருந் ததுநின்
புண்ணு கியமே னிபொருந் திடவோ ?
மண்ணேர் உயிரே! இமையோர் வலியே !
கண்ணே! அமிழ்தே! கருணு கரனே!

'மேவிக் கனல்முன் மிதிலைத் தலைஎன்
பாவிக் கைபிடித் ததுபண் ணவ !நின்
ஆவிக் கொருகோள் வரவோ ? அலர்வாழ்
தேவிக் கமிழ்தே ! மறையின் தெளிவே !

'மேதாய் இளையோய் ! விதியார் விளைவால்
போதா நெறிஎம் மொடுபோ துறும்நாள்
'மூதா னவன்முன் னர்முடிந் திடெ'னும்
மாதா உரையின் வழிநின் றனையோ ?

## திரிசடையும் ஒரு சடையும்

'மாயமான் விடுத்த வாறும்
சனகனை வகுத்த வாறும்
போயமா நாக பாசம்
பிணித்தது போன வாறும்
நீயமா நினையாய் மாள
நினைதியோ ? நெறியி லாரால்
ஆயமா மாய மொன்றும்
அறிந்திலை அன்னம் அன்னாய் !

'ஆழியான் ஆக்கை தன்னின்
அம்பொன்றும் அறுக்கி லாமை
ஏழைநீ காண்டி யன்றே ?
இளையவன் வதனம் இன்னம்
ஊழிநாள் இரவி யென்ன
ஒளிர்கின்றது ; உயிருக்கு இன்னல்
வாழியார்க்கு இல்லை; வாளா
மயங்கலை, வேள்வி வந்தாய்!'

'அன்னை நீ உரைத்த தொன்றும்
அழிந்திலது ; ஆத லானே
உன்னையே தெய்வ மாக்கொண்டு
இத்தனை காலம் உய்ந்தேன் ;
இன்னம்இவ் விரவு முற்றும்
இருக்கின்றேன் ; இறத்தல் என்பால்
முன்னமே முடிந்த தன்றே?'
என்றனள் முளரி நீத்தாள்.

'நாணெலாம் துறந்தேன் ; இல்லின்
நன்மையின் நல்லார்க்கு ஏய்ந்த
பூணெலாம் துறந்தேன் ; என்றன்
பொருசிலை மேகந் தன்னைக்
காணலாம் என்னும் ஆசை
கடுக்களன் ஆவி காத்தேன் ;
ஏணிலா உடலின் நீங்கல்
எளிதெனக்கு,' எனவும் சொன்னாள்.

ஆயிர யோசனை அகலம் மீதுயர்ந்து
ஆயிர யோசனை ஆழ்ந்தது அம்மலை;
ஏயெனும் மாத்திரத்து ஒருகை ஏந்தினன்
தாயினன் உலகெலாம் தவழ்ந்த சீர்த்தியான்.

### மான வீரனும் மெய்யறிஞனும்

'முந்தைநாள் உலகம் தந்த
மூத்தவா னோர்கட்கு எல்லாம்
தந்தையார் தந்தை யாரைச்
செருவிடைச் சாயத் தள்ளிக்
கந்தனுர் தந்தை யாரைக்
கயிலையொடு ஒருகைக் கொண்ட
எந்தையார் அரசு செய்வது
இப்பெரும் பலங்கொண் டேயோ!

'பனிமலர்த் தவிசின் மேலோன்
பார்ப்பன குலத்துக் கெல்லாம்
தனிமுதல் தலைவ னை
உன்னைவந்து அமரர் தாழ்வார்;
மனிசருக்கு அடிமை யாய்நீ
இராவணன் செல்வம் ஆள்வாய்;
இனிஉனக்கு என்னோ மானம்?
எங்களோடு அடங்கிற் றன்றே?

'எழுதிஏ ரணிந்த திண்டோள்
இராவணன் இராமன் அம்பால்
புழுதியே பாய லாகப்
புரண்டநாள் புரண்டு மேல்வீழ்ந்து
அழுதியோ? நீயும் கூட
ஆர்த்தியோ? இவனை வாழ்த்தித்
தொழுதியோ? யாதோ செய்யத்
துணிந்தனை விசயத் தோளாய்!'

'அறம்துணை ஆவ தல்லால்
அருநர கமைய நல்க
மறம்துணை யாக மாயாப்
பழியொடும் வாழ மாட்டேன்;
துறந்திலேன் மெய்ம்மை எய்தும்
பொய்ம்மையே துறப்ப தல்லால்;
பிறந்திலேன் இலங்கை வேந்தன்
பின்னவன் பிழைத்த போதே.

'அறத்தினைப் பாவம் வெல்லாது
என்னும்அது அறிந்து ஞானத்
திறத்தினது உறும்என் றெண்ணித்
தேவர்க்கும் தேவைச் சேர்ந்தேன் ;
புறத்தினில் புகழே யாக,
பழியொடும் புணர்க; போதச்
சிறப்பினிப் பெறுக, தீர்க,'
என்றனன் சீற்றம் தீர்ந்தான்.

**வீரப் புகழோ? ஈன வாழ்வோ?**

'நிலம்செய்து விசும்பும் செய்து
நெடியவன் படைநின் றுனை
வலம்செய்து போவ தானல்
மற்றினிவலிய துண்டோ?
குலம்செய்த பாவத் தாலே
கொடும்பழி தேடிக் கொண்டோம்;
சலம்செயின் உலகம் மூன்றும்
இலக்குவன் முடிப்பன் தானே.

'ஆதலால் அஞ்சி னேன்என்று
அருளலை; ஆசை தான்அச்
சீதைபால் விடுதி யாயின்
அனையவர் சீற்றம் தீர்வர்;
போதலும் புரிவர்; செய்த
தீமையும் பொறுப்பர்; உன்மேல்
காதலால் உரைத்தேன்,' என்றான்
உலகெலாம் கலக்கி வென்றான்.

முன்னையோர் இறந்தா ரெல்லாம்
இப்பகை முடிப்பர் என்றும்
பின்னையோர் நின்ரு ரெல்லாம்
வென்றனர் பெயர்வர் என்றும்
உன்னை நீ அவரை வென்று
தருதிஎன்று உணர்ந்தும் அன்ருல்,
என்னையே நோக்கி யான்இந்
நெடும்பகை தேடிக் கொண்டேன்.

'பேதைமை உரைத்தாய் மைந்த!
உலகெலாம் பெயரப் பேராக்
காதைஎன் புகழி ஞேடும்
நிலைபெற அமரர் காண
மீதெழும் மொக்குள் அன்ன
யாக்கையை விடுவ தல்லால்
சீதையை விடுவ துண்டோ
இருபது திண்தோள் உண்டாய்?

'வென்றிலன் என்ற போதும்
வேதம்உள் ளளவும் யானும்
நின்றுளெ னன்ரே மற்றவ்
விராமன்பேர் நிற்கு மாயின்?
பொன்றுதல் ஒருகா லத்தும்
தவிருமோ? பொதுமைத் தன்ரே?
இன்றுளார் நாளை மாள்வர்;
புகழுக்கும் இறுதி உண்டோ?

'மறைகளே தேறத் தக்க
வேதியர் வணங்கற் பால
இறையவன் இராமன் என்னும்
நல்லற மூர்த்தி என்னின்
பிறைஎயிற்று இவனைக் கோறி,'
என்ருெரு பிறைவாய் வாளி
நிறையுற வாங்கி விட்டான்
உலகெலாம் நிறுத்தி நின்ருன்.

நேமியும் குலிச வேலும்,
நெற்றியின் நெருப்புக் கண்ணன்
நாமவேல் தானும் மற்றை
நான்முகன் படையும் நாணத்
தீமுகம் கதுவ ஓடிச்
சென்றுஅவன் சிரத்தைத் தள்ளிப்
பூமழை மாரி சிந்தப்
பொலிந்ததுஅப் பகழிப் புத்தேள்.

வில்லாளர் ஆனார்க் கெல்லாம்
மேலவன் விளித லோடும்
'செல்லாதவ் விலங்கை வேந்தற்கு
அரசெ'னக் களித்த தேவர்
எல்லாரும் தூசு நீக்கி
ஏறிட ஆர்த்த போது
கொல்லாத விரதத் தார்தம்
கடவுளர் கூட்டம் ஒத்தார்.

'வான்தலை எடுக்க, வேலை
மண்தலை எடுக்க, வானோர்
கோன்தலை எடுக்க, வேதக்
குலம்தலை எடுக்க, குன்றாத்
தேன்தலை எடுக்கும் தாராய்!
தேவரை வென்றான் தீய
ஊன்தலை எடுத்தாய் நீ'என்று
உரைத்தனர் உவகை மிக்கார்.

'கம்ப மதத்துக் களியானைக்
காவல் சனகன் பெற்றெடுத்த
கொம்பும் என்பால் இனிவந்து
குறுகி னாள்நன் றெனக்குளிர்ந்தேன்;
வம்பு செறிந்த மலர்க்கோயில்
மறையோன் படைத்த மாநிலத்தில்
தம்பி யுடையான் பகைஅஞ்சான்
என்னும் மாற்றம் தந்தனையால்.'

## மண்டோதரி புலம்பல்

தலையின்மேல் சுமந்த கையள்
　　தழலின்மேல் மிதிக்கின் ருள்போல்
நிலையின்மேல் மிதிக்கும் தாளள்
　　நேசத்தால் நிறைந்த நெஞ்சள்
கொலையின்மேல் குறித்த வேடன்
　　கூர்ங்கணை உயிரைக் கொள்ள
மலையின்மேல் மயில்வீழ்ந் தென்ன
　　மைந்தன்மேல் மறுகி வீழ்ந்தாள்.

'கலையினால் திங்க ளென்ன
　　வளர்கின்ற காலத் தேஉன்
சிலையினால் அரியை வெல்லக்
　　காண்பதோர் தவமும் செய்தேன் !
தலையிலா ஆக்கை காண
　　எத்தவம் செய்தேன் அந்தோ !
நிலையிலா வாழ்வை இன்னம்
　　நினைவேனோ நினைவி லாதேன் !

'ஐயனே ! அழக னே!என்
　　அரும்பெறல் அமிழ்தே ! ஆழிக்
கையனே, மழுவ னேஎன்
　　றவர்வலி கடந்த கால
மொய்யனே ! முளரி யன்ன
　　நின்முகம் கண்டி லாதேன்
உய்வனே உலகம் மூன்றுக்கு
　　ஒருவனே ! செருவ லோனே !

'தாளரிச் சதங்கை ஆர்ப்பத்
　　தவழ்கின்ற பருவந் தன்னில்
கோளரி இரண்டு பற்றிக்
　　கொணர்ந்தனை ! கொணர்ந்து கோபம்
மூளுறப் பொருத்தி மாட
　　முன்றிலின் முறையின் ஓடி
மீளுரு விளையாட் டின்னம்
　　காண்பெனோ விதியி லாதேன் !

'பஞ்சுஎரி யுற்ற தென்ன
அரக்கர்தம் பரவை எல்லாம்
வெஞ்சின மனிசர் கொல்ல
விளிந்ததே மீண்ட தில்லை !
அஞ்சினேன் அஞ்சி னேன்!இச்
சீதைஎன்று அமிழ்தால் செய்த
நஞ்சினால் இலங்கை வேந்தன்
நாளைஇத் தகையன் அன்றோ !'

### இலங்கை வேந்தன் முடிவு

ஈசனை, இமையா முக்கண்
இறைவனை, இருமைக் கேற்ற
பூசனை முறையில் செய்து
திருமறை புகன்ற தானம்
வீசினன் இயற்றி, மற்றும்
வேட்டன வேட்டோர்க்கு எல்லாம்
ஆசற நல்கி, ஒல்காப்
போர்த்தொழிற்கு அமைவ தானான்.

'சிவனோ அல்லன் ; நான்முகன்
அல்லன் ; திருமாலாம்
அவனோ அல்லன் ; மெய்வர
மெல்லாம் அடுகின்றான் ;
தவனோ என்னில் செய்து
முடிக்கும் தரனல்லன் ;
இவனோ தானவ் வேத
முதற்கா ரணன்!'என்றான்.

முக்கோடி வாழ்நாளும், முயன்றுடைய
பெருந்தவமும், முதல்வன் முன்னாள்
'எக்கோடி யாராலும் வெலப்படாய்!'
எனக்கொடுத்த வரமும், ஏனைத்
திக்கோடும் உலகனைத்தும் செருக்கடந்த
புயவலியும் தின்று, மார்பில்
புக்கோடி உயிர்பருகிப் புறம்போயிற்று
இராகவன்தன் புனித வாளி.

## விபீடணன் புலம்பல்

'உண்ணாதே உயிர் உண்ணாது ஒருநஞ்சு;
சனகியெனும் பெருநஞ்சு உன்னைக்
கண்ணாலே நோக்கவே போக்கியதே
உயிர்! நீயும் களப்பட் டாயே!
எண்ணாதேன் எண்ணியசொல் இன்றுஇனித்தான்
எண்ணுதியோ? எண்ணில் ஆற்றல்
அண்ணாவோ! அண்ணாவோ! அசுரர்கள்தம்
பிரளயமே! அமரர் கூற்றே!

'அன்றுஎரியில் விழுவேத வதி இவள்காண்
உலகுக்குஓ ரன்னை என்று
குன்றனைய நெடுந்தோளாய்! கூறினேன்;
அதுமனத்துட் கொள்ளா தேயே
உன்றனது குலமடங்க உருத்துஅமரிற்
படக்கண்டும் உறவா காதே
பொன்றினையே! இராகவன்தன் புயவலியின்று
அறிந்துதான் போகின் றாயே!

'போர்மகளைக் கலைமகளைப் புகழ்மகளைத்
தழுவியகை பொருமை கூரச்
சீர்மகளைத் திருமகளைத் தேவர்க்கும்
தெரிவரிய தெய்வக் கற்பின்
பேர்மகளைத் தழுவுவான் உயிர்கொடுத்துப்
பழிகொண்ட பித்தா! பின்னைப்
பார்மகளைத் தழுவினையோ திசையானைப்
பணையிறுத்த பணைத்த மார்பால்!

## மண்டோதரி புலம்பல்

'வெள்எருக்கஞ் சடைமுடியான் வெற்பெடுத்த
திருமேனி மேலும் கீழும்
எள்இருக்கும் இடமின்றி உயிரிருக்கும்
இடம்நாடி இழைத்த வாறோ?
கள்இருக்கும் மலர்க்கூந்தல் சானகியை
மனச்சிறையில் கரந்த காதல்
உள்இருக்கும் எனக்கருதி உடல்புகுந்து
தடவியதோ ஒருவன் வாளி!

'காந்தையருக்கு அணியனைய சானகியார்
பேரழகும், அவர்தம் கற்பும்,
ஏந்துபுயத்து இராவணனார் காதலும்,அச்
சூர்ப்பணகை இழந்த மூக்கும்,
வேந்தர்பிரான் தயரதனார் பணிதன்னால்
வெங்கானில் விரதம் பூண்டு
போந்ததுவும் கடைமுறையே புரந்தரனார்
பெருந்தவமாய்ப் போயிற் றம்மா!

'ஆரா அமுதாய் அலைகடலிற் கண்வளரும்
நாரா யணனென் றிருப்பேன் இராமனை நான்;
ஓராதே கொண்டகன்றாய் உத்தமனார் தேவிதனை;
பாராயோ நின்னுடைய மார்பகலம் பட்டவெலாம்?'

### மண்டோதரியின் மாட்சி

என்றுஅ ழைத்தனள் ஏங்கி எழுந்தவன்
பொன்த ழைத்த பொருவரு மார்பினைத்
தன்த ழைக்கைக ளால்தழு வித்தனி
நின்றுஅ ழைத்துஉ யிர்த் தாள்;உ யிர் நீங்கினாள்.

### அனுமன் மகிழ்ச்சி

ஏழை சோபனம்! ஏந்திழை சோபனம்!
வாழி சோபனம்! மங்கல சோபனம்!
ஆழி யான அரக்கனை ஆரியச்
சூழி யானை துகைத்தது சோபனம்!

### பரத்துவாசன் கூற்று

'வெயர்த்த மேனியன் விழிபொழி
மழையன்மூ வினையைச்
செயிர்த்த சிந்தையன் தெருமரல்
உழந்துழந்து அழிவான்
அயர்த்து நோக்கினும் தென்திசை
அன்றிவேறு அறியான்
பயத்த துன்பமே உருவுகொண்
டென்னலாம் படியான்.

### பரதன் நிலைமை

'நோக்கின் தென்திசை அல்லது நோக்குறான்
ஏக்குற்று ஏக்குற்று, "இரவிகு லத்துளான்
வாக்கில் பொய்யான் வரும்வரும்!" என்றுயிர்
போக்கிப் போக்கி உழக்கும் பொருமலான்.'

### பரதன் வேண்டுகோள்

' "என்ன தாகும்கொல் அவ்வரம்?" என்றியேல்,
சொன்ன நாளில்இ ராகவன் தோன்றிலன்;
மின்னு தீயிடை யான்இனி வீடுவென்;
மன்னன் ஆதிஎன் சொல்லை மறுது'என்றான்.

### சத்துருக்கன் கூற்று

'கானாள நிலமகளைக் கைவிட்டுப்
போவானைக் காத்துப் பின்பு
போனானும் ஒருதம்பி; "போனவர்கள்
வரும்அவதி போயிற்"றென்று
ஆனாத உயிர்விடஇன் றமைவானும்
ஒருதம்பி; அயலே நானாது
யானும்இவ் வரசாள்வென்! என்னேஇவ்
வரசாட்சி! இனிதே அம்மா!'

### கோசலையும் பரதனும்

எரிஅமைக்கும் மயானத்தை எய்துகின்ற
காதலனை இடையே வந்து
விரிஅமைத்த நெடுவேணி புறத்தசைந்து
வீழ்ந்தொசிய மேனி தள்ளச்
சொரிஅமைப்பது அரிதாய மழைக்கண்ணாள்
தொடருதலும் துணுக்கம் எய்தாப்
பரிவமைத்த திருமனத்தான் அடிதொழுதான்;
அவள்புகுந்து பற்றிக் கொண்டாள்.

'எண்ணில் கோடி இராமர்கள் என்னினும்
அண்ணல்! நின்அரு ளுக்கருகு ஆவரோ?
புண்ணி யம்மெனும் நின்னுயிர் போயினால்
மண்ணும் வானும் உயிர்களும் வாழுமோ?'

## பரதன் கட்டுரை

'தாய்சொல் கேட்டலும், தந்தைசொல் கேட்டலும்,
பாசத் தன்பினைப் பற்றற நீக்கலும்
ஈசற் கேகடன்; யான்அஃது இழைக்கிலென்;
மாசற் றேன்;இது காட்டுவென் மாண்'டென்றான்.

## அனுமன் கூற்று

'ஐயன் வந்தனன்! ஆரியன் வந்தனன்!
மெய்யின் மெய்யனே! நின்னுயிர் வீடினால்
உய்யு மேஅவன்?' என்றுஉரைத்து உட்புகாக்
கையி னால்எரி யைக்கரி யாக்கினான்.

## பரதன் களிப்பு

வேதியர் தமைத்தொழும்; வேந்த ரைத்தொழும்;
தாதியர் தமைத்தொழும்; தன்னைத் தான்தொழும்;
ஏதும்ஒன்று உணர்குறுது இருக்கும் நிற்குமால்;
காதல்என் றதுவும்ஓர் கள்ளில் தோற்றிற்றே!

## அயோத்தியின் ஆனந்தம்

தாயருக்கு அன்று சார்ந்த
கன்றெனும் தகையன் ஆனான்;
மாயையில் பிரிந்தோர்க்கு எல்லாம்
மனோலயம் வந்த தொத்தான்;
ஆயிழை யர்க்குக் கண்ணுள்
ஆடுஇரும் பாவை யானான்;
நோயுறுத் துலர்ந்த யாக்கைக்கு
உயிர்புகுந் தாலும் ஒத்தான்.

## திருமுடி சூட்டுவிழா

அரியணை அனுமன் தாங்க,
அங்கதன் உடைவாள் ஏந்தப்
பரதன்வெண் குடைக விக்க
இருவரும் கவரி வீச
விரைசெறி குழலி ஓங்க
வெண்ணெயூர்ச் சடையன் தங்கள்
மரபுளோர் கொடுக்க வாங்கி
வசிட்டனே புனைந்தான் மௌலி.

— கம்பர்

## கண்ணன் வாழ்த்து

மாதுலன் ஆகியும் ஏதிலன் ஆகிய
வஞ்சக கஞ்சன் வரவிட்ட
பூதனை தன்னுயிர் முலைபொழி பாலொடு
போதர உண்ட புயல்வண்ணா!
மாதவ! யாதவ! வாசவ! கேசவ!
மாயா! ஆயா! மதுசூதா!
ஆதியும் அந்தமும் ஆகிய நின்புகழ்
அல்லாது உரையேன் அடியேனே.

பேர்படைத்த விசயனுடன் மும்மைநெடும்
பிறவியினும் பிரியான் ஆகிச்
சீர்படைத்த கேண்மையினால் தேர்ஊர்தற்கு
இசைந்தருளும் செங்கண் மாலைப்
பார்படைத்த சுயோதனற்குப் 'படைஎடேன்
அமரில்'எனப் பணித்த கோவைக்
கார்படைத்த நிறத்தோனைக் கைதொழுவார்
பிறவாழிக் கரைகண் டாரே.

## கண்ணனும் தருமனும்

'செய்வரால் இனம்உகளும் திருநாடு
பெறநினைவோ? சென்று மீளப்
பைவர்ஆய் அருங்கானில் பயின்றுதிரி
தரநினைவோ? பகைத்த போரில்
உய்வர்ஆர் எனவிரைவின் உருத்தெழுந்து
பொரநினைவோ? உண்மை யாக
ஐவர்ஆம் அவனிபர்க்கு நினைவேது?' என்று
அருள்புரிந்தான் அமரர் கோமான்.

'வயிரம்எனும் கடுநெருப்பை மிகமூட்டி
வளர்க்கின்உயர் வரைக்காடு என்னச்
செயிர்அமரில் வெகுளிபொரச் சேரஇரு
திறத்தேமும் சென்று மாள்வேம்;
கயிரவமும் தாமரையும் கமழ்பழனக்
குருநாட்டில் கலந்து வாழ
உயிர்அனையாய்! சந்துபட உரைத்தருள்'என்
ருன்அறத்தின் உருவம் போல்வான்.

'அரவுயர்த்தோ னுடன்மறுசூது ஆடிநீர்
வென்றஅந்நாள் அவன் தான் சொன்ன
விரதமொழி தவிராமல் வெங்கானம்
போய்மீண்டீர்; வெய்யோன் உங்கள்
குருநிலத்தில் பாதிஇனிக் கொடாதிருந்தால்
ஆங்குஅவனைக் கொன்று போரில்
இருநிலத்தை ஆளஇனித் துணிவதே
கடன்'என்ருன் எம்பி ரானே.

'குரவரையும் கிளைஞரையும் குலத்துரிய
துணைவரையும் கொன்று போர்வென்று
அரவநெடுங் கடலாடை அவனிஎலாம்
தனிஆளும் அரசு தன்னில்
கரவுறையும் மனத்தாதை முனிக்குரைத்த
மொழிப்படியே கானந் தோறும்
இரவுபகல் பலமூல சாகம்நுகர்ந்து
உயிர்வாழ்தல் இனிது நன்றே.'

கோதிலான் இந்தமொழி கூறுதலும்,
மாமாயன் கூற லுற்ருன்:
'மோதமருக்கு இளைத்துநீர் மொய்த்தபெருங்
கானகத்தே முடுகிச் சென்ருல்
பூதலத்தோர் ஏசாரோ? புகன்றபெரு
வஞ்சினமும் பொய்த்தி டாதோ?
நீதியோ?' எனஉரைத்தான்; ஆங்கதற்கு
நிகழ்தருமன் நிகழ்த்த லுற்ருன்:

'நீதூது நடந்தருளி எமதுநினைவு
அவர்க்குரைத்தால் நினைவின் வண்ணம்
தாதுஊதி அளிமுரலும் தண்பதியும்
தாயமும்தான் தாரான் ஆகில்
மீதுஊது வளைக்குலமும் வலம்புரியும்
மிகமுழங்க வெய்ய காலன்
மாதூதர் மனம்களிக்கப் பொருதெனினும்
பெறுவன்;இது வசையும் அன்றே.

'முந்துஊர்வெம் பணிக்கொடியோன் மூதூரில்
நடந்துஉழவர் முன்றில் தோறும்
நந்துஊரும் புனல்நாட்டின் திறம்வேண்டு;
நாடொன்றும் நல்கான் ஆகில்
ஐந்துஊர்வேண்டு; அவைஇல்எனில் ஐந்துஇலம்வேண்டு;
அவைமறுத்தால் அடுபோர் வேண்டு
சிந்தூரத் திலகநுதல் சிந்துரத்தின்
மருப்பொசித்த செங்கண் மாலே!'

## வீமன் வெறுப்புரை

மூத்தோன்மற்று இவைஉரைப்ப இளையோன்வெஞ்
சினம்மனத்தில் மூள மூள
நாத்தோம்இல் உரைபதறக் கதும்எனஉற்று
எழுந்திறைஞ்சி, 'ஞாலம் எல்லாம்
பூத்தோனே! பூந்தவிசில் பூவைபுணர்
மணிமார்பா! புன்மை யாவும்
தீர்த்தோனே! ஊனம்இலான் மானம்இலாது
உரைப்பதற்குஎன் செய்வது!' என்றான்.

'விரிகுழல்பைந் தொடிநாணி வேத்தவையில்
முறையிடுநாள் "வெகுளேல்!" என்று
மரபினுக்கும் நமக்கும்உலகு உள்ளளவும்
தீராத வசையே கண்டாய்;
எரிதழல்கா னகம்அகன்றும் இன்னமும்வெம்
பகைமுடிக்க இளையா நின்றாய்;
அரவுயர்த்தோன் கொடுமையினும் முரசுயர்த்தோய்!
உனதருளுக்கு அஞ்சி னேனே!

'கான்ஆள உனைவிடுத்த கண்ணிலா
அருளிலிதன் காதல் மைந்தன்
தான்ஆளும் தரணிஎல்லாம் ஒருகுடைக்கீழ்
நீஆளத் தருவன் இன்றே!
மேல்நாள்நம் உரிமைஅறக் கவர்ந்தபெருந்
துணைவன்உனை வெறாத வண்ணம்
வான்ஆள வானவர்கோன் தன்பதம்மற்று
அவன்தனக்கே வழங்கு வேனே.

'போர்முடித்தான் அமர்பொருது! புலம்புறுசொல்
பாஞ்சாலி பூந்தண் கூந்தல்
கார்முடித்தான்! இளையோர்முன் கழறியவஞ்
சினமுடித்தான்! கடவுட் கங்கை
நீர்முடித்தான் இரவொழித்த நீஅறிய
வசைஇன்றி நிலைநின்று ஓங்கும்
பேர்முடித்தான்! இப்படியே யார்முடித்தார்!
இவனுடனே பிறப்ப தேநான்!

'மலைகண்டது எனஎன்கைம் மறத்தண்டின்
வலிகண்டும், மகவான் மைந்தன்
சிலைகண்டும், இருவர்பொரும் திறல்கண்டும்,
எமக்காகத் திருமால் நின்ற
நிலைகண்டும், இவள்விரித்த குழல்கண்டும்,
இமைப்பொழுதில் நேரார் தம்மைக்
கொலைகண்டு மகிழாமல் அவன்குடைக்கீழ்
உயிர்வாழக் குறிக்கின் றீரே!'

## அருச்சுனன் சீற்றம்

மைக்கால முகில்ஊர்தி வானவர்கோன்
திருமதலை வணங்கி நின்று
முக்காலங் களுமுணரும் முகுந்தனுக்கும்
முதல்வனுக்கும் மொழிவான் மன்னே:
'அக்காலம் பொறுத்தஎலாம் அமையாமல்
இன்னம்இருந்து அறமே சொன்னால்
எக்காலம் பகைமுடித்துத் திரௌபதியும்
குழல்முடிக்க இருக்கின் றீரே!
'தீண்டாத கற்புடைய செழுந்திருவைத்
துகில்உரியச் செயல்ஒன்று இன்றி,
"நீண்டானே! கரியானே! நிமலா!" என்று
அரற்றினளாய் நின்று சோர,
மாண்டார்போல் அதுகண்டு மன்னவையில்
யாம்இருந்த மாசு தீர
வேண்டாவோ? வேண்டுவதும் மேம்படுநல்
அறமேயோ? வேந்தர் வேந்தே!
'பொன்ஆரும் திகிரியினன் போனாலும்
பொறைவேந்தன் புகன்ற எல்லாம்
சொன்னாலும் அவன்கேளான்; விதிவலியால்
கெடுமதிகண் தோன்றாது அன்றே?
எந்நாளும் உவர்நிலத்தின் என்முளைவித்
திடினும்விளைவு எய்தி டாது.
பன்னகம் தனக்குஅமிர்தம் கொடுத்தாலும்
விடம்ஒழியப் பயன்கொ டாதே.'

## நகுலன் கருத்து

'கானகம்போய்க் கரந்துஉறைந்து கடவநாள்
கழித்ததற்பின் கானம் நீங்கி
ஈனம்இலா வகைவந்தார் நம்துணேவர்
எனச்சிறிதும் இரங்கான் ஆகில்,
மாநகரும் வளநாடும் உரிமையும்தன்
மொழிப்படியே வழங்கான் ஆகில்,
தான்அறியா தவன்பிறர்போய்க் கற்பித்தால்
அறிவனே தரணி வேந்தே!'

## கண்ணனும் சகாதேவனும்

நகுலனிவை உரைத்ததற்பின் நன்றெனக்கை
அமைத்தருளி, 'நகுலன் சொல்லும்
இகல்விசயன் தன்மொழியும் திறல்வீமன்
இயம்பியதும் யாவும் கேட்டோம்:
புகலரிய வுணர்வுடையோய்! புகழுடையோய்!
திறலுடையோய்! புகல்நீ,' என்ன,
முகில்அனைய திருமேனி முகுந்தனுக்கு
மனம்உருக மொழிகின் றனே.

'சிந்தித்த படிநீயும் சென்றல்என்,
ஒழிந்தால்என் ? செறிந்த நூறு
மைந்தர்க்குள் முதல்வன்நிலம் வழங்காமல்
இருந்தால்என், வழங்கி னல்என் ?
கொந்துற்ற குழல்இவளும் முடித்தால்என்,
விரித்தால்என் ? குறித்த செய்கை
அந்தத்தின் முடியும்வகை அடியேற்குத்
தெரியுமோ ? ஆதி மூர்த்தி !

'முருகுஅவிழ்க்கும் பசுந்துளப முடியோனே !
அன்றுஅலகை முலைப்பால் உண்டு
மருதுஇடைச்சென்று உயர்சகடம் விழஉதைத்துப்
பொதுவர்மனை வளர்ந்த மாலே !
ஒருவருக்கும் தெரியாதுஇங்கு உன்மாயை
யான்அறிவேன்; உண்மை ஆகத்
திருவுளத்துக் கருத்துஎதுவோ? அதுஎனக்கும்
கருத்து'என்றான் தெய்வம் அன்னான்.

'நீபா ரதஅமரில் யாவரையும் நீறுஆக்கிப்
பூபாரம் தீர்க்கப் புரிந்தாய் புயல்வண்ணா !
கோபாலா ! போர்ஏறே ! கோவிந்தா ! நீஅன்றி
மாபா ரதம்அகற்ற மற்றுஆர்கொல் வல்லாரே ?'

ஆண்டுஇருந்த அவைநீங்கி அறிவுடையோர் இருவோரும்
பாண்டவர்கள் முன்எய்திப் பழுதுஇல்புகழ்ப் பாஞ்சாலி
நீண்டகருங் குழல்சோர நின்றாளை முகம்நோக்கி
ஈண்டுஅவரில் இளையோனும் 'சந்துமிகஇனி'துஎன்றான்.

### கண்ணன் கூற்றும் பாஞ்சாலி வருத்தமும்

'தருமனுக்கும் கருத்துஇதுவே;
தமருடன்போர் புரியாமல்
இருநிலத்தில் உடன்வாழ்தல்
எனக்கும்நினைவு' என்றுஉரைத்தான்;
வரிமலர்க்கண் புனல்சோர,
மலர்மறந்த குழல்சோர
விரைமலர்ச்செஞ் சேவடிக்கீழ்
வீழ்ந்துஅழுதாள் பொன்அனையாள்.

'சாலக் கனகன் தனிமைந் தனைமுனிந்த
காலத்து அவன்அறைந்த கல்தூண் இடைவந்தாய்;
மூலப்பேர் இட்டுஅழைத்த மும்மதமால் யானைக்கு
நீலக் கிரிபோல் முன்நின்ற நெடுமாலே !

'கற்றைக் குழல்பிடித்துக் கண்இலான் பெற்றெடுத்தோன்
பற்றித் துகில்உரியப் பாண்டவரும் பார்த்திருந்தார்;
கொற்றத் தனித்திகிரிக் கோவிந்தா ! நீஅன்றி
அற்றைக்கும் என்மானம் ஆர்வேறு காத்தாரே ?

'மன்றில் அழைத்தெனக்கு மாசளித்த மன்னவன்பால்
சென்று தமக்குஐந்துஊர் திறல்வீரர் பெற்றிருந்தால்,
அன்று விரித்த அருங்கூந்தல் வல்வினையேன்
என்று முடிப்பதுஇனி எம்பெருமான்!' என்றுஅழுதாள்.

### சாத்தகி கூற்று

'தண்டுஇருந்தது இவன்கரத்தில்!
தனுஇருந்தது அவன்கரத்தில்!
வண்டுஇருந்த பூங்குழல்மேல்
மாசுஇருந்தது என இருந்தாள்!
கண்டுஇருந்தீர் எல்லீரும்;
கருதலர்பால் ஊர்வேண்டி
உண்டுஇருந்து வாழ்வதற்கே
உரைக்கின்றீர்! உரையீரே!'

### கண்ணன் தேற்றுரை

'தொல்ஆண்மைப் பாண்டவர்க்குத் தூதுபோய் மீண்டதன்பின்
நல்லாய்!உன் பைங்கூந்தல் நானே முடிக்கின்றேன்!
எல்லாரும் காண இனிவிரிப்பது எண்ணரிய
புல்லார்தம் அந்தப் புரமாதர் பூங்குழலே!'

பெண்நீர்மை குன்றுப் பெருந்திருவின் செங்கமலக்
கண்நீர் துடைத்துஇருதன் கண்ணிற் கருணைஎனும்
தெண்ணீரி னுல்பொருந்தத் தேற்றினன் சாற்றுகின்ற
மண்நீர் அனல்அனிலம் வான்வடிவுஆம் மாமாயன்.

— வில்லிப்புத்தூரார்

## நிடத நாடு

காமர் கயல்புரளக் காவி முகைநெகிழத்
தாமரையின் செந்தேன் தளையவிழ,—பூமடந்தை
தன்னாட்டம் போலும் தகைமைத்தே சாகரஞ்சூழ்
நன்னாட்டின் முன்னாட்டும் நாடு.

## நளனது நல்லாட்சி

சீத மதிக்குடைக்கீழ்ச் செம்மை அறம் கிடப்பத்
தாதவிழ்பூந் தாரான் தனிக்காத்தான்—மாதர்
அருகூட்டும் பைங்கிளியும் ஆடற் பருந்தும்
ஒருகூட்டில் வாழ உலகு.

## தமயந்தியின் தகவு

நாற்குணமும் நாற்படையா, ஐம்புலனும் நல்லமைச்சா,
ஆர்க்கும் சிலம்பே அணிமுரசா,—வேற்படையும்
வாளுமே கண்ணா, வதன மதிக்குடைக்கீழ்
ஆளுமே பெண்மை அரசு.

## சுயம்வர அறிக்கை

'மங்கை சுயம்வர நாள் ஏழென்று, வார்முரசம்
எங்கும் அறைவி'கன்று இயம்பினான்;—பைங்கமுகின்
கூந்தல்மேற் கங்கைக் கொழுந்தோடும் நன்னாடன்,
வேந்தர்மேல் தூதோட விட்டு.

## மணநகர்ப் பொலிவு

இசைமுகந்த வாயும், இயல்தெரிந்த நாவும்,
திசைமுகந்தால் அன்ன தெருவும்,—வசையிறந்த
பொன்னாடு போந்திருந்தாற் போன்றதே போர்விதர்ப்ப
நன்னாடர் கோமான் நகர்.

## தமயந்தி வருகை

மன்னர் விழித்தா மரைபூத்த மண்டபத்தே
பொன்னின் மடப்பாவை போய்ப்புக்காள்-மின்னிறத்துச்
செய்யதாள் வெள்ளைச் சிறையன்னம், செங்கமலப்
பொய்கைவாய்ப் போவதே போன்று.

## அரசர் அறிமுகம்

மன்னர் குலமும், பெயரும், வளநாடும்
இன்ன பரிசென்று இயலணங்கு—முன்னின்று
தார்வேந்தன் பெற்ற தனிக்கொடிக்குக் காட்டினாள்
தேர்வேந்தர் தம்மைத் தெரிந்து.

## தமயந்தி மாலை சூட்டல்

விண்ணரசர் எல்லாரும் வெள்கி மனஞ்சுளிக்கக்
கண்ணகல் ஞாலம் களிகூர,—மண்ணரசர்
வன்மாலை தம்மனத்தே சூட, வயவேந்தைப்
பொன்மாலை சூட்டினாள் பொன்.

— புகழேந்தியார்

## ஆன்ருேர் கவிதை

### பட்டினத்தார் பாடல்

கையொன்று செய்ய விழியொன்று நாடக் கருத்தொன்றெண்ணப்
பொய்யொன்று வஞ்சக நாவொன்று பேசப் புலால்கமழும்
மெய்யொன்று சாரச் செவியொன்று கேட்க விரும்புமியான்
செய்கின்ற பூசையெவ் வாறுகொள் வாய்வினை தீர்த்தவனே!

மாதா உடல்சலித்தாள்; வல்வினையேன் கால்சலித்தேன்;
வேதாவுங் கைசலித்து விட்டானே!—நாதா!
இருப்பையூர் வாழ்சிவனே! இன்னமோர் அன்னை
கருப்பையூர் வாராமற் கா.

முப்பாழும் பாழாய், முதற்பாழ் வெறும்பாழாய்,
அப்பாழுக் கப்பானின் ருடுமதைப் போற்ருமல்,
இப்பாழாம் வாழ்வைநம்பி யேற்றவர்க்கொன் றீயாமல்
துப்பாழாய் வந்தவினை சூழ்ந்தனையே நெஞ்சமே!

பிரமன் படைத்தலுத்தான்; பிறந்திறந்து நானலுத்தேன்;
உரமுடைய அக்கினிதா னுண்டலுத்தான் பூரணமே!

என்னையறி யாம லெனக்குள்ளே நீயிருக்க,
உன்னையறி யாமல் உடலிழந்தேன் பூரணமே!

கருவாய் உருவாய்க் கலந்துலகெ லாம்நீயாய்
அருவாகி நின்ற தறிகிலேன் பூரணமே!

### தாயுமானவர் பாடல்

ஆசைக்கோ ரளவில்லை; அகிலமெல் லாம்கட்டி
ஆளினும் கடல்மீதிலே
ஆணைசெல வேநினைவர்; அளகேசன் நிகராக
அம்பொன்மிக வைத்தபேரும்
நேசித்து ரசவாத வித்தைக்கு அலைந்திடுவர்;
நெடுநாள் இருந்தபேரும்,
நிலையாக வேயினும் காயகற் பம்தேடி
நெஞ்சுபுண் ணுவர்;எல்லாம்

யோசிக்கும் வேளையில் பசிதீர உண்பதும்
உறங்குவது மாகமுடியும்;
உள்ளதே போதும்;நான் நான்எனக் குளறியே
ஒன்றைவிட்டு ஒன்றுபற்றிப்
பாசக் கடற்குளே வீழாமல் மனதற்ற
பரிசுத்த நிலையைஅருள்வாய்,
பார்க்கும்இடம் எங்கும்ஒரு நீக்கமற நிறைகின்ற
பரிபூர ணனந்தமே!

இனியேது? எமக்குன்அருள் வருமோ? எனக்கருதி
ஏங்குதே நெஞ்சம்ஐயோ!
இன்றைக்கு இருந்தாரை நாளைக்கு இருப்பர்என்று
எண்ணவோ திடமில்லையே!
அனியாய மாய்இந்த உடலைநான் என்றுவரும்
அந்தகற்கு ஆளாக்கவோ?
ஆடித் திரிந்துநான் கற்றதும் கேட்டதும்
அவலமாய்ப் போதல்நன்றோ!
கனியேனும், வறியசெங் காயேனும், உதிர்சருகு
கந்தமூ லங்களேனும்
கனல்வாதை வந்தெய்தின் அள்ளிப் புசித்துநான்
கண்மூடி மௌனியாகித்
தனியே இருப்பதற்கு எண்ணினேன்; எண்ணமிது
சாமி! நீ அறியாததோ?
சர்வபரி பூரண அகண்டதத் துவமான
சச்சிதா னந்தசிவமே!

அன்பைப் பெருக்கி,எனது ஆருயிரைக் காக்கவந்த
இன்பப் பெருக்கே இறையே! பராபரமே!

பாராயோ என்னைமுகம்? பார்த்துஒருகால் என்கவலை
தீராயோ? வாய்திறந்து செப்பாய் பராபரமே!

எண்ணாத எண்ணமெலாம் எண்ணிஎண்ணி ஏழைநெஞ்சம்
புண்ணாகச் செய்ததினிப் போதும் பராபரமே!

சொல்லும் பொருளும்அற்றுச் சும்மா இருப்பதற்கே
அல்லும் பகலும்எனக்கு ஆசை பராபரமே!

கொல்லா விரதம், குவலயம்எல் லாம்ஓங்க,
எல்லார்க்கும் சொல்லுவதுஎன் இச்சை பராபரமே!

ஊனுந் தசையுடல் தானென் பதுவழி
ஊருங் கருவழி ஒருகோடி
ஓதும் பலகலை கீதஞ் சகலமும்
ஓரும் படியுன தருள்பாடி
நானுன் திருவடி பேணும் படியிரு
போதும் கருணையில் மறவாதுன்
நாமம் புகழ்பவர் பாதந் தொழஇனி
நாடும் படியருள் புரிவாயே;
கானுந் திகழ்கதி ரோனுஞ் சசியொடு
காலங் களும்நடை உடையோனுங்
காருங் கடல்வரை நீருந் தருகயி
லாயன் கழல்தொழும் இமையோரும்
வானிந் திரனெடு மாலும் பிரமனும்
வாழும் படிவிடும் வடிவேலா!
மாயம் பலபுரி சூரன்பொடிபட
வாள்கொண் டமர்செய்த பெருமாளே!

மைந்த ரினிய தந்தை மனைவி
மண்டி யலறி மதிமாய
வஞ்ச விழிகள் விஞ்சு மறலி
வன்கை யதனில் உறுபாசந்
தந்து வளைய புந்தி யறிவு
தங்கை குலைய உயிர்போமுன்
தம்ப முனது செம்பொ னடிகள்
தந்து கருணை புரிவாயே;
மந்தி குதிகொள் அந்தண் வரையில்
மங்கை மருவும் மணவாளா!
மண்டும் அசுரர் தண்ட முடைய
அண்டர் பரவ மலைவோனே!
இந்து நுதலு மந்த முகமும்
என்று மினிய மடவார்தம்
இன்பம் விளைய அன்பி னணையும்
என்று மிளைய பெருமாளே!

சீத மதிய மெறிக்குங் கனலாலே
சீறி மதனன் வளைக்குஞ் சிலையாலே
ஓத மருவி யலைக்குங் கடலாலே
ஊழி யிரவு தொலைக்கும் படியாமோ?
மாது புகழை வளர்க்குந் திருவாமூர்
வாழு மயிலி லிருக்குங் குமரேசா!
காத லடியர் கருத்தின் பெருவாழ்வே!
காலன் முதுகை விரிக்கும் பெருமாளே!

அகரமு மாகி யதிபனு மாகி
யதிகமு மாகி அகமாகி
அயனென வாகி அரியென வாகி
அரனென வாகி அவர்மேலாய்;
இகரமு மாகி யெவைகளு மாகி
யினிமையு மாகி வருவோனே!
இருநில மீதி லெளியனும் வாழ
எனதுமு னோடி வரவேணும்;
மகபதி யாகி மருவும்வ லாரி
மகிழ்களி கூறும் வடிவோனே!
வனமுறை வேட னருளிய பூஜை
மகிழ்கதிர் காமம் உடையோனே!
செககண சேகு தகுதிமி தோதி
திமியென ஆடு மயிலோனே!
திருமலி வான பழமுதிர் சோலை
மலைமிசை மேவு பெருமாளே!

— அருணகிரிநாதர்

## சித்தர் பாட்டு

அஞ்சு மஞ்சு மஞ்சுமே அனாதி யான தஞ்சமே;
பிஞ்சு பிஞ்ச தல்லவோ பித்தர் காள்பி தற்றுவீர்!
நெஞ்சி லஞ்சு கொண்டுநீர் நின்று தெக்க வல்லிரேல்
அஞ்சு மில்லை ஆறுமில் அனாதி யாகித் தோன்றுமே.

— சிவ வாக்கியர்

நாதர்முடி மேலிருக்கும் நாகப்பாம்பே!
நச்சுப்பையை வைத்திருக்கும் நல்லபாம்பே!
பாதலத்திற் குடிபுகும் பைகொள்பாம்பே!
பாடிப்பாடி நின்றுவிளை யாடுபாம்பே!

கண்டவர்கள் ஒருக்காலும் விண்டிடார்களே;
விண்டவர்கள் ஒருக்காலும் கண்டிடார்களே;
கொண்டகோல முள்ளவர்கள் கோனிலைகாணார்;
கூத்தாடிக்கூத் தாடியேநீ யாடுபாம்பே!

— பாம்பாட்டிச் சித்தர்

ஆடுமயி லேநட மாடுமயிலே!—எங்கள்
ஆதியணி சேடனைக்கண் டாடுமயிலே!
கூடுபோகு முன்னங்கதி கொள்ளுமயிலே!—என்றுங்
குறையாமல் மோனநெறி கொள்ளுமயிலே!

இல்லறமே அல்லலாமென் றாடுமயிலே!—பத்தி
இல்லவர்க்கு முத்திசித்தி இல்லைமயிலே!
நல்லறமே துறவறங் காணுமயிலே!—சுத்த
நாதாந்த வெட்டவெளி நாடுமயிலே!

கைவிளக்குக் கொண்டு கடலில்வீழ் வார்போல
மெய்விளக்குன் உள்இருக்க வீழ்குவதேன் புல்லறிவே!

வாசிக்கு மேலான வான்கதிஉன் உள்ளிருக்க
யோசிக்கு மேற்கதிதான் உனக்கரிதோ புல்லறிவே!

— இடைக்காட்டுச் சித்தர்

மாங்காய்ப்பா லுண்டு மலேமே லிருப்போர்க்குத்
    தேங்காய்ப்பா லேதுக்கடி? — குதம்பாய்!
    தேங்காய்ப்பா லேதுக்கடி?

தாவாரம் இல்லை தனக்கொரு வீடில்லை
    தேவாரம் ஏதுக்கடி?—குதம்பாய்!
    தேவாரம் ஏதுக்கடி?

— குதம்பைச் சித்தர்

நீர்மேற் குமிழியிக் காயம்;—இது
    நில்லாது போய்விடும் நீயறி மாயம்;
பார்மீதில் மெத்தவும் நேயம்— சற்றும்
    பற்ருதி ருந்திடப் பண்ணு முபாயம்.

— கடுவெளிச் சித்தர்

பூட்டைத் திறப்பதுங் கையா லே;மனப்
    பூட்டைத் திறப்பது மெய்யாலே;
வீட்டைத் திறக்க முடியா மல்விட்ட
    விதியி தென்கிருர் ஞானப்பெண்ணே!

— மதுரை வாலேசாமி

ஒருமையுடன் நினதுதிரு மலரடி நினைக்கின்ற
உத்தமர் தம் உறவுவேண்டும்;
உள்ளொன்று வைத்துப் புறம்பொன்று பேசுவார்
உறவுகல வாமைவேண்டும்;
பெருமைபெறும் நினதுபுகழ் பேசவேண் டும்;பொய்மை
பேசா திருக்கவேண்டும்;
பெருநெறி பிடித்தொழுக வேண்டும்;மத மானபேய்
பிடியா திருக்கவேண்டும்;
மருவுபெண் ணாசையை மறக்கவே வேண்டும்;உனை
மறவா திருக்கவேண்டும்;
மதிவேண்டும்; நின்கருணை நிதிவேண்டும்; நோயற்ற
வாழ்வில்நான் வாழவேண்டும்;
தருமமிகு சென்னையில் கந்தகோட் டத்துள்வளர்
தலமோங்கு கந்தவேளே!
தண்முகத் துய்யமணி! உண்முகச் சைவமணி!
சண்முகத் தெய்வமணியே!

தடித்தவோர் மகனைத் தந்தையீண் டடித்தால்
தாயுடன் அணைப்பள்;தா யடித்தால்
பிடித்தொரு தந்தை அணைப்பன்:இங் கெனக்குப்
பேசிய தந்தையும் தாயும்
பொடித்திரு மேனி அம்பலத் தாடும்
புனித!நீ ஆதலால், என்னை
அடித்தது போதும்; அணைத்திடல் வேண்டும்;
அம்மையப் பா!இனி ஆற்றேன்!

அப்பா! நான் வேண்டுதல் கேட் டருள்புரிதல் வேண்டும்;
ஆருயிர்கட் கெல்லாம் நான் அன்புசெயல் வேண்டும்;
எப்பாரும், எப்பதமும், எங்கணும் நான் சென்றே
எந்தைநின தருட்புகழை இயம்பியிடல் வேண்டும்;
செப்பாத மேனிலைமேல் சுத்தசிவ மார்க்கம்
திகழ்ந்தோங்க அருட்சோதி செலுத்தியிடல்வேண்டும்;
தப்பேது நான்செயினும் நீபொறுத்தல் வேண்டும்;
தலைவ! நினைப் பிரியாத நிலைமையும்வேண் டுவனே.

தனித்தனிமுக் கனிபிழிந்து, வடித்தொன்றாய்க் கூட்டி,
சர்க்கரையும் கற்கண்டின் பொடியுமிகக் கலந்தே,
தனித்தநறுந் தேன்பெய்து, பசுப்பாலும் தெங்கின்
தனிப்பாலும் சேர்த்துஒருதீம் பருப்பிடியும் விரவி,
இனித்தநறு நெய்யளைந்தே, இளஞ்சூட்டின் இறக்கி
எடுத்தசுவைக் கட்டியினும் இனித்திடும்தெள் ளமுதே!
அனித்தமறத் திருப்பொதுவில் விளங்கு நடத்தரசே!
அடிமலர்க்கென் சொல்லணியாம் அலங்கல் அணிந்
[தருளே!

கல்லார்க்கும் கற்றவர்க்கும் களிப்பருளும் களிப்பே!
காணார்க்கும் கண்டவர்க்கும் கண்ணளிக்கும் கண்ணே!
வல்லார்க்கும் மாட்டார்க்கும் வரமளிக்கும் வரமே!
மதியார்க்கும் மதிப்பவர்க்கும் மதிகொடுக்கும் மதியே!
நல்லார்க்கும், பொல்லார்க்கும் நடுநின்ற நடுவே!
நரர்களுக்கும், சுரர்களுக்கும் நலங்கொடுக்கும் நலமே!
எல்லார்க்கும் பொதுவில்நடம் இடுகின்ற சிவமே!
என்னரசே! யான்புகலும் இசையும்அணிந் தருளே!

— இராமலிங்கர்

உண்ணெகிழ் தொண்ட ருளத்திருள் சிந்திட்
ஒளிவிடு முழுமணியே!
உயர்மறை நூற்கலை முடிவின் முடிந்திடும்
ஒழுகொளி மரகதமே!
விண்ணொடு மண்ணை விழுங்கி அருட்கதிர்
விரியும் இளஞ்சுடரே!
மெய்ப்புலன் மேய்ந்து சமைந்ததோர் வீட்டை
விளக்கும் விளக்கொளியே!
புண்ணிய நாறுமோர் பெண்கனி கனியும்
புனித நறுங்கனியே!
புள்ளூ ரெனவெம துள்ளத் தடநிறை
புத்தமு தக்கடலே!
தண்ணொளி பொங்கிய கருணை நிதியே!
தாலோ தாலேலோ;
சங்கத் தமிழின் தலைமைப் புலவா!
தாலோ தாலேலோ.

— குமரகுருபரர்

கத்துந் தரங்கம் எடுத்தெறியக்
கடுஞ்சூல் உளைந்து வலம்புரிகள்
கரையில் தவழ்ந்து வாலுகத்திற்
கான்ற மணிக்கு விலையுண்டு;
தத்துங் கரட விகடதட
தந்திப் பிறைக்கூன் மருப்பில்விளை
தரளந் தனக்கு விலையுண்டு;
தழைத்துக் கழுத்து வளைந்தமணிக்
கொத்துஞ் சுமந்த பசுஞ்சாலிக்
குளிர்முத் தினுக்கு விலையுண்டு;
கொண்டல் தருநித் திலந்தனக்குக்
கூறுந் தரமுண் டுன்கனிவாய்
முத்தந் தனக்கு விலைஇல்லை;
முருகா! முத்தந் தருகவே!
முத்தஞ் சொரியும் கடல்அலைவாய்
முதல்வா! முத்தந் தருகவே!

— பகழிக்கூத்தர்

அல்லைப் பழித்த நிறத்தரக்கர்
அடங்க மடியக் கணையேவி
அமரர் துயரந் தனைத்துடைத்த
அடங்காக் களிப்போ மழூராமன்
வில்லை வளைத்த பெருந்திறலோ ;
விரும்பு மறையோ னுளமுவப்ப
வேண்டும் பசுவி னிரையளித்த
மேன்மைப் புகழோ; பழவடியார்
தொல்லை வினைக்கட் டறுக்குமனத்
துணிவோ; திரையார் பொருநைநதித்
துறையின் மடவார் விளையாட்டைத்
துகைப்பே னெனுஞ்சொற் குறிப்பறியேன்
கல்லை யுருவாக் குங்கமலக்
காலாற் சிற்றில் சிதையேலே
கந்தங் கமழும் வைகுந்தக்
கள்வா! சிற்றில் சிதையேலே!

— திருவைகுந்தநாதன் பிள்ளைத் தமிழ்

கண்ணூர் மணியே வருக!எங்கள்
கருத்தின் குருத்தே வருக!வளர்
கல்விக் கடலே வருக!புவி
காக்கும் பொருளே வருக!உயர்
விண்ணூர் தவமே வருக!மனு
வேந்தர்க் கரசே வருக!மறை
வேதக் குருவே வருக!உரை
மேலோர் முதலே வருக!என்றும்
பண்ணு ரமுதே வருக!நன்மை
பயிர்க்கும் பயிரே வருக!நல்லோர்
பாடும் பயனே வருக!எங்கள்
பழமைக் கிழவ வருக!வியல்
நண்ணூர் பரவும் ஜெயிலானி
நாத வருக, வருகவே!
நயினூர் முகிய்யித் தீனுன
நம்பி வருக வருகவே!

— சையிது முகிய்யித்தீன்

### குறக்குடியின் இயல்பு

கொழுங்கொடியின் விழுந்தவள்ளிக்
கிழங்குகல்லி எடுப்போம்;
குறிஞ்சிமலர் தெரிந்துமுல்லைக்
கொடியில்வைத்துத் தொடுப்போம்
பழம்பிழிந்த கொழுஞ்சாறும்
தேறலும்வாய் மடுப்போம்;
பசுந்தழையும் மரவுரியும்
இசைந்திடவே உடுப்போம்;
செழுந்தினையும் நறுந்தேனும்
விருந்தருந்தக் கொடுப்போம்;
சினவேங்கைப் புலித்தோலின்
பாயலின்கண் படுப்போம்;
எழுந்துகயற் கணிகாலில்
விழுந்துவினை கெடுப்போம்;
எங்கள்குறக் குடிக்குஅடுத்த
இயல்பிதுகாண் அம்மே!

### பொய்யாக் குறி

பொற்றொடிவள் ளிக்கு,இளைய
பூங்கொடிஎன் பாட்டி;
பூமகள்மா யவன்மார்பில்
பொலிவளென்று சொன்னாள்;
மற்றவள்பெண் களில்எங்கள்
பெரியதாய் கலைமான்
மலர்அயனார் திருநாவில்
வாழ்வளென்று சொன்னாள்;
பெற்றஎங்கள் நற்றாயும்,
சுந்தரிஇந் திரன்தோள்
பெறுமென்றாள்; பின்னெங்கள்
சிறியதாய் அம்மே!
சொற்றகுறிக்கு அளவிலை;எம்
கன்னிமார் அறியச்
சொன்னேன்;பொய் யலநாங்கள்
சொன்னதுசொன் னதுவே.

## ஆரமுதைப் பாடுவனே

வானவர்கோன் முடிசிதறி, வடவரையில் கயல்எழுதும்
மீனவர்கோன் தனைப்பயந்த மெல்லியலைப் பாடுவனே.

எவ்விடத்தும் தாமாகி இருந்தவருக்கு அருந்தவரும்
வெவ்விடத்தை அமுதாக்கும் விரைக்கொடியைப் பாடுவனே.

ஒன்றாகி, அனைத்துயிர்க்கும் உயிராகி, எப்பொருளும்
அன்றாகி, அவையனைத்தும் ஆனாளைப் பாடுவனே.

பரசிருக்கும் தமிழ்க்கூடல் பழியஞ்சிச் சொக்கருடன்
அரசிருக்கும் அங்கயற்கண் ஆரமுதைப் பாடுவனே.

— மீனாட்சியம்மை குறம்

## குற்றால மலையின் மாட்சி

வானரங்கள் கனிகொடுத்து, மந்தியொடு கொஞ்சும்;
மந்திசிந்து கனிகளுக்கு வான்கவிகள் கெஞ்சும்;
கானவர்கள் விழியெறிந்து, வானவரை அழைப்பார்;
கமனசித்தர் வந்துவந்து, காயசித்தி விளைப்பார்;
தேனருவித் திரையெழும்பி, வானின்வழி ஒழுகும்;
செங்கதிரோன் பரிக்காலும், தேர்க்காலும் வழுகும்;
கூனலிளம் பிறைமுடித்த வேணியலங் காரர்
குற்றாலத் திரிகூட மலைஎங்கள் மலையே.

## அறம் வளர்க்கும் கை

மாறாமல் இருநிலத்தில் அறம்வளர்க்கும் கையே;
மனையறத்தால் அறம்பெருக்கித் திறம்வளர்க்கும் கையே;
வீறாக நவநிதியும் விளையும்இந்தக் கையே;
மேன்மேலும் பாலமுதம் அளையும்இந்தக் கையே;
ஆறாத சனங்கள்பசி ஆற்றும்இந்தக் கையே;
அணங்கனையார் வணங்கிநித்தம் போற்றுமிந்தக் கையே;
பேறாக நன்னகரம் காக்கும்இந்தக் கையே;
பிறவாத நெறியார்க்கே ஏற்கும்இந்தக் கையே.

## குறவன் வேட்டையாடுதல்

*பல்லவி*

கண்ணி கொண்டுவாடா-குளுவா- கண்ணி கொண்டுவாடா

*அநுபல்லவி*

கண்ணி கொண்டுவாடா, பண்ணவர் குற்ருலர்,
காரார் திரிகூடச் சாரலி லேவந்து,
பண்ணிய புண்ணியம் எய்திஞல் போலப்
பறவைக ளெல்லாம் பரந்தேறி மேயுது. (கண்ணி)

*சரணம்*

மீறும் இலஞ்சிக் குறத்தியைக் கொண்டசெவ்
வேள்குற வன்,முதல் வேட்டைக்குப் போனநாள்,
ஆறுநாள் கூடி, ஒருகொக்குப் பட்டது;
அகப்பட்ட கொக்கை அவித்தொரு சட்டியில்
சாருக வைத்தபின் வேதப் பிராமணர்
தாமும்கொண் டார்;சைவர் தாமும்கொண் டார்;தவப்
பேரு முனிவரும் ஏற்றுக்கொண் டார்;இதைப்
பிக்குச்சொல் லாமலே கொக்குப் படுக்கவே
(கண்ணி)

## குறவஞ்சியைக் காஞமல் குறவன் வருந்துதல்

பேடைக் குயிலுக்குக் கண்ணியை வைத்து,நான்
மாடப் புருவுக்குப் போனேன்;
மாடப் புருவும் குயிலும் படுத்தேன்;
வேடிக்கைச் சிங்கியைக் காணேன்!

கோல மயிலுக்குக் கண்ணியை வைத்துநான்
ஆலாப் படுக்கவே போனேன்;
ஆலாவும் கோல மயிலும் படுத்தேன்;
மாலான சிங்கியைக் காணேன்!

## குறவனும் குறவஞ்சியும் உரையாடல்

"இத்தனை நாளாக, என்னுடன் சொல்லாமல்
எங்கே நடந்தாய்நீ சிங்கி?"
(எங்கே நடந்தாய் நீ)

"கொத்தார் குழலார்க்கு வித்தார மாகக்
குறிசொல்லப் போனேனடா சிங்கா!"
(குறிசொல்லப் போனேனடா)

"வள்ளைக் கொடியிலே
துத்திப்பூப் பூப்பானேன் சிங்கி?" — "காதில்
வங்காளத் தாரிட்ட
சிங்காரக் கொப்படா சிங்கா!"

"வன்னக் குமிழிலே
புன்னை யரும்பேது சிங்கி?"—"மண்ணில்
முந்நீர்ச் சலாபத்து
முத்துமூக் குத்திகாண் சிங்கா!"

"பொன்னிட்ட மேலெல்லாம்
மின்வெட்டிப் பார்ப்பானேன் சிங்கி?"—"இந்த
வன்னப் பணிகளின்
மாணிக்கக் கல்லடா சிங்கா!"

"இந்தப் பணியைநீ
பூணப் பொறுக்குமோ சிங்கி?" —"பூவில்
ஈசர்க்கும் நல்லார்க்கும்
எல்லாம் பொறுக்குங்காண் சிங்கா!"

"இல்லாத சுற்றெல்லாம்
எங்கே படித்தாய்நீ சிங்கி?"—"நாட்டில்
நல்லாரைக் காண்பவர்க்
கெல்லாம் வருமடா சிங்கா!"

— திரிகூடராசப்ப கவிராயர் - (குற்றாலக் குறவஞ்சி)

## மூத்த பள்ளி

உத்தர பாகமான,
சித்திர நதிக்குத்தென்பால்,
ஓடும் பொருநையுடன்
கூடும்போதே,
அத்தனைகா லமுந்தொட்டு,
இத்தனைகா லமுங்கண்டு,
அடியடி வாழையாய்நான்
குடியில்வந்தேன்.
பத்திலேப திஞென்றுக
வைத்தானில் லேக்குடும்பன்;
பண்டே சரடுகட்டிக்
கொண்டான்என்னை;
முத்தமிழ் நாட்டழகர்,
கொத்தடி யானுக்கான
முக்கூடல் மூத்தபள்ளி
நானேயாண்டே!

## இளைய பள்ளி

செஞ்சிக்கும், கூடலுக்கும்,
தஞ்சைக்கும் ஆணைசெல்லும்
செங்கோல் வடமலேந்த்ரன்
எங்கள்ஊரே;
நெஞ்சிற்கு நித்தகுளம்
அஞ்சுக்கும் சக்கரக்கால்
நிலையிட்ட நாளில்பண்ணைத்
தலையிட்டேன்நான்.
கஞ்சிக்குந் தன்னிலேதான்
கெஞ்சிப்பு குந்தவள்ளல்,
கண்டாசைப் பட்டேகொள்ளும்
பெண்டானவள்,
மஞ்சிற் கறுப்பழகர்,
தஞ்சைப்பள் ளனுக்கேற்ற,
மருதூர் இளையபள்ளி
நானேயாண்டே!

## மழைக் குறி

ஆற்றுவெள்ளம் நாளைவரத்
தோற்று தேகுறி;—மலை

யாளமின்னல், ஈழமின்னல்,
சூழமின்னுதே;

நேற்றும்இன்றும் கொம்புசுற்றிக்
காற்ற டிக்குதே;—கேணி

நீர்ப்படுசொ றித்தவளை
கூப்பிடுகுதே;

சேற்றுநண்டு, சேற்றில்வளை
ஏற்ற டைக்குதே;—மழை

தேடியொரு கோடிவானம்
பாடியாடுதே;

போற்றுதிரு மாலழகர்க்கு
ஏற்ற மாம்பண்ணைச்—சேரிப்

புள்ளிப்பள்ளர் ஆடிப்பாடித்
துள்ளிக்கொள்வோமே.

## பள்ளன் பணி

வீருன முக்கூடல் விளங்குபண்ணை உரமேற்ற
மாருமல், ஆடுகொண்டு வருவேன்கா ணுண்டே!

தொழுதுவிடை கொண்டுநீர் சொன்னபடி ஆடுகொண்டு
பொழுதுபுகு முந்திவந்து புறப்படுவே ஞண்டே!

குட்டிகளும் கொண்டுசிறு குடில்களையும் கொண்டாட்டுப்
பட்டிகளும் கொண்டுஇன்று பகல்வருவே ஞண்டே!

அழகர் திருவுளம்போல், ஆண்டவர்க்கு மனதுவர,
உழவுவயல் உள்ளதெல்லாம் உரம்வைப்பே ஞண்டே.

## மூத்த பள்ளியின் முறையீடு

ஏச்சுக்குப் பிறந்தான்—வரவரக்
கூச்சத்தை மறந்தான்—இளையவள்
இளமையைக் குறித்தான்—முதிரும்என்
வளமையைப் பறித்தான்;
நீச்சுக்கு மேலே—நிலைப்பென்ன?
பேச்சுக் கையாலே—உழச்சற்றே
நினைப்பது மில்லை—எனைத்தேடிக்
கனைப்பது மில்லை;
தீச்சுட்ட தாறும்,—பழித்திடும்
நாச்சுட்ட தேறும்,—அவனைமுன்
சீயென்று போட்டேன்;—நான் இனி
வாயொன்றும் காட்டேன்;
பேச்சிட்டுப் பாரும்;—மரக்கணு
வாச்சிக்குத் தீரும்;—பயப்படப்
பிடித்தது பிடியாய்க்—குட்டையில்
அடித்திடு மாண்டே!

## உழவும் நடவும்

பள்ளன் எழுந்துநிலை தரித்தான்;—நின்ற
பள்ளியர் முகம்பார்த்துச் சிரித்தான்;
மெள்ளப் புருவங்கோட்டி நெரித்தான்;—மாட்டை
மீளவும் பூட்டியுழத் தரித்தான்.

உழுத உழவைக்கண்டு களித்தான்;—பள்ளர்
உள்ள பேரைஎல்லாம் விளித்தான்;
தொழுது தெய்வக்கடன் கழித்தான்;—அந்தத்
தொளியில் விதைகள்எல்லாந் தெளித்தான்.

முளைக்குத் தண்ணீரைஅடைத் திட்டான்;—கொல்லை
முழுதும் மறுநாள்வெட்டி விட்டான்;
வளைத்து வேலிசூழ நட்டான்;—நாற்று
வளர்க்க நாளும்ஒருப் பட்டான்.

## நடுகைப் பாட்டு

கடிக்கும் அரவில் நடிக்கும் இறைவர்,
கஞ்ச னூர்க்கொரு நஞ்சனூர்,
கடையும் அமுதம் உடையுந் திரையிற்
காட்டி அண்டருக்கு ஊட்டினூர்.

அடிக்குள் அடங்கும் படிக்கு முதல்வர்
அழகர் முக்கூடல் வயலுள்ளே,
ஆடிப், பாடி, நாற்று முடியை
அலைத்துக் குலைத்து நடச்செய்தே,

வடிக்கும் மதுவைக் குடிக்கும் ஆசை
மயக்க மும்,பெருந் தியக்கமும்,
வரம்பில் பாய்ந்து, பரம்பில் சாய்ந்த
வாட்ட மும்,முகக் கோட்டமும்,

துடிக்கும் இதழைக் கடிக்கும் எயிறும்,
சோர்ந்து விரிந்த கூந்தலும்,
தொடையும், நெகிழ்ந்த உடையும் கிடந்த
கிடையும் பாரும் பள்ளீரே!

## ஏசல்

வழக்கிட்டுநான் வந்தேனே?
மருதூர்ப் பள்ளி!—பள்ளன்
மாமன்மக ளென்றென்னை
மறித்துக் கொண்டான்;
உழக்கிற்கி ழக்குமேற்கோ?
முக்கூ டற்பள்ளி!—மறித்து
உன்னைக்கொண்டான், என்னைக்கண்டென்
ஊரி லேவந்தான்.

மந்திரமும் தந்திரமும்
மருதூர்ப்பள்ளி!—உன்போல்
வகைவந்தால் பள்ளனுமென்
வசமாகானே?
சந்தியில்மாங் கொட்டைபோடி
முக்கூடற்பள்ளி!—நீயும்
சாரங்கெட்ட மருந்தென்றே
சாதிக்கவாராய்.

சாதிப்பது னக்குவரும்
மருதூர்ப்பள்ளி! — நரி
தான்பரியாய்ச் சாதித்தான்உங்கள்
சம்புவல்லோடி?
பேதிக்கச்சா திக்கவாராய்
முக்கூடற்பள்ளி! — கல்லைப்
பெண்ணாகச்சா தித்தான்உங்கள்
கண்ணனல்லோடி?

மாதொருத்திக்கு ஆசைப்பட்டுப்
பொன்னின்மயமாம்—பனி
மலையேறிப் போனானுங்கள்
மத்தனல்லோடி?
காதலித்துத் தம்பியுடன்
சீதைபொருட்டால்—அன்று
கடலேறிப் போனானுங்கள்
கண்ணனல்லோடி?

தான்பசுப்போல் நின்றுகன்றைத்
தேர்க்காலில்விட்டே—சோழன்
தன்மகனைக் கொன்றானுங்கள்
தாணுவல்லோடி?
வான்பழிக்கு ளாய்த்தவசி
போலமறைந்தே—நின்று
வாலியைக் கொன்றானுங்கள்
மாயனல்லோடி?

வலிய வழக்குப்பேசிச்
சுந்தரன்வாயால்—அன்று
வையக்கேட்டு நின்ருனுங்கள்
ஐயனல்லோடி?
புலிபோல் எழுந்துசிசு
பாலன்வையவே—ஏழை
போலநின்ருன் உங்கள்நெடு
நீலனல்லோடி?

சுற்றிக்கட்ட நாலுமுழத்
துண்டுமில்லாமல்—புலித்
தோலே யுடுத்தானுங்கள்
சோதியல்லோடி?
கற்றைச்சடை கட்டிமர
வுரியுஞ்சோலேதான்—பண்டு
கட்டிக்கொண்டா னுங்கள்சங்குக்
கையனல்லோடி?

நாட்டுக்குள் இரந்தும்பசிக்
காற்றமாட்டாமல்—வாரி
நஞ்சையெல்லாம் உண்டானுங்கள்
நாதனல்லோடி?
மாட்டுப்பிற கேதிரிந்துஞ்
சோற்றுக்கில்லாமல்—வெறும்
மண்ணேயுண்டா னுங்கள்முகில்
வண்ணனல்லோடி?

ஏறஒரு வாகனமும்
இல்லாமையினல்—மாட்டில்
ஏறியே திரிந்தானுங்கள்
ஈசனல்லோடி?
வீறுசொன்ன தென்னமாடு
தானுமில்லாமல்—பட்சி
மீதிலேறிக் கொண்டானுங்கள்
கீதனல்லோடி?

பெருமாள் அடியானுக்குப்
பெண்டிருந்துமே—எங்கள்
பெருமாளை நீபழித்துப்
பேசலாமோடி?
திருமால் அடிமை என்ருய்
சாலப்பசித்தால் – ஆருந்
தின்ருததுண் டோசினத்தால்
சொல்லா ததுண்டோ?

சொன்னுலென்ன நீயும்பொறு
நானும்பொறுத்தேன்;—கிளை
சூழ்ந்திருக்க நாமேகூடி
வாழ்ந்திருக்கலாம்;
பன்னகத்தி லாடியமுக்
கூடலழகர்—திருப்
பாதமலர் வாழ்த்தியாடிப்
பாடுவோமே.

— முக்கூடற்பள்ளு

## சீட்டுக் கவிதை

எத்திசையு மேபரவு தக்கணு சலமுனி
யெதிர்த்தபா வலர்குடாரி
இராமாயண ணக்கவியை நாடகஞ் செய்தவன்
இலக்கண முணர்ந்தபுலவன்
முத்தமிழ்க் காழியரு ணாசலக் கவிராய
முகில்வர விடுக்குமோலை
முந்துபுகழ் தென்குளத் தூரன்முது வீரப்பன்
முகமலர்ந் தினிதுகாண்க:
வித்துவ சனங்களுக் காதார மாகியவர்
வேண்டியவெ லாமக்கணம்
விரகுட னளித்தனை யெனக்கேட்டு நாமுமுனை
மேவினேங் கவியெழுதினேம்;
உத்தம சிகாமணி நீயாத லாலிவிட
மூன்றுபெரு மழைதொடருமுன்
ஓராயி ரங்கரும் பதுவேண்டு நீமன
முகந்துவர விடல்வேண்டுமே.

— அருணாசலக் கவிராயர்

மன்னவனே! தமிழ்நாட்டில் தமிழறிந்த
மன்னரிலை யென்று மாந்தர்
இன்னலுறப் புகன்றவசை நீமகுடம்
புனைந்தபொழு திருந்த தன்றே!
சொன்னலமும் பொருணலமும் சுவைகண்டு
சுவைகண்டு, துய்த்துத் துய்த்துக்
கன்னலிலே சுவையறியுங் குழந்தைகள்போல்
தமிழ்ச்சுவைநீ களித்தா யன்றே?

புவியனைத்தும் போற்றிடவான் புகழ்படைத்துத்
தமிழ்மொழியைப் புகழி லேற்றும்
கவியரசர் தமிழ்நாட்டுக் கில்லையெனும்
வசையென்னாற் கழிந்த தன்றே?
'சுவைபுதிது, பொருள்புதிது, வளம்புதிது,
சொற்புதிது, சோதி மிக்க
நவகவிதை, எந்நாளும் அழியாத
மாகவிதை' என்று நன்கு

பிரான்ஸென்னும் சிறந்தபுகழ் நாட்டிலுயர்
புலவோரும் பிறரு மாங்கே
விராவுபுக ழாங்கிலத்தீங் கவியரசர்
தாமுமிக வியந்து கூறிப்
பராவியென்றன் தமிழ்க்கவியை மொழிபெயர்த்துப்
போற்றுகின்றார்; பாரோ ரேத்துந்
தராதிபனே! இளசைவெங்க டேசுரெட்டா!
நின்பாலத் தமிழ்கொ ணர்ந்தேன்.

வியப்புமிகும் புத்திசையில் வியத்தகுமென்
கவிதையினை வேந்த னே! நின்
நயப்படுசந் நிதிதனிலே நான்பாட
நீகேட்டு நன்கு போற்றி,
ஜயப்பறைகள் சாற்றுவித்துச் சாலுவைகள்
பொற்பைகள் ஜதிபல் லக்கு
வயப்பரிவா ரங்கள்முதற் பரிசளித்துப்
பல்லூழி வாழ்க நீயே!

— பாரதியார்

## சிலேடைப் பாட்டு

சூரியனுக்கும் சோழனுக்கும்

செங்கரங்க ளாலிரவு நீக்குந் திறம்புரிந்து
பங்கய மாதர் நலம்பயிலப்—பொங்குதயத்
தோராழி வெய்யோ னுயர்ந்த நெறியொழுகும்
நீராழி நீணிலத்து மேல்.

— பெருந்தகை

திருடனுக்கும் செருப்புக்கும்

அங்கங் களவா லதுகண்டு தைப்புறலால்
எங்கு மிதியடியென் றேசொலலால்—வெங்கற்
கரடுமுட்கஞ் சாததனற் காமர்முத்துச் சாமீ!
திருடனையொப் பாகுஞ் செருப்பு.

மயிலுக்கும் கரும்புக்கும்

மேனியெல்லாங் கண்ணுறலால்
வேள்விரும்புந் தன்மையினல்
ஆனபசுந் தோகையின
லாடலினல்—மீனவனேர்
மானபரா! நெல்லைநகர்
வாழுமுத்துச் சாமிமன்ன!
கானமயி லொப்பாங் கரும்பு.

— அழகிய சொக்கநாத பிள்ளை

விநாயகனுக்கும், முருகனுக்கும், பரமசிவனுக்கும்

சென்னிமுக மாறுள தாற் சேர்கரமுன் னுலுகையால்
இந்நிலத்திற் கோடொன் றிருக்கையால்—மன்னுகுளக்
கண்ணுறுத லானுங் கணபதியுஞ் செவ்வேளும்
எண்ணரனு நேராவ ரே.

பாம்புக்கும் எலுமிச்சம்பழத்துக்கும்

பெரியவிட மேசேரும் பித்தர்முடி யேறும்
அரியுண்ணு முப்புமே லாடும்—எரிகுணமாம்
தேம்பொழியுஞ் சோலைத் திருமலைரா யன்வரையில்
பாம்புமெலு மிச்சம் பழம்.

— காளமேகப் புலவர்

எங்கள் நலக் குன்றரைப்பார்த்து
ஏழுலகும் ஈன்றஉமை
நங்கைபல காலும்
நகைசெயுமே—'கங்கையுறை
கொங்கே கமழ்சடிலம்
போய்க்குடுமி யாய்விட்ட
தெங்கே இனிமறைப்பார்?' என்று.

— குடுமியா மலைக் கல்வெட்டு

பற்றலர்மண் கொள்ளும் பணிந்தார்க் கரசளிக்கும்
கொற்ற முயர்க்குமறம் கூருமே—விற்றடந்தோள்
வில்லவனை வென்றுகொண்ட வீரமா றன்செழியன்
வல்லமெறிந் தானேந்து வாள்.

— காசிக் கலியன்

சேலே றியவயற் றென்காசி யாலயந் தெய்வச்செய
லாலே சமைந்ததிங் கென்செய லல்ல வதனையின்னம்
மேலே விரிவுசெய் தேபுரப் பாரடி வீழ்ந்தவர் தம்
பாலேவல் செய்து பணிவேன் பராக்ரம பாண்டியனே.

பூந்தண் பொழில்புடை சூழ்ந்ததென்
காசியைப் பூதலத்தில்
தாந்தம் கிளையுட னேபுரப்
பார்கள்செந் தாமரையாள்
காந்தன் பராக்ரமக் கைதவன்
மான கவசன்கொற்கை
வேந்தன் பணிபவ ராகியெந்
நாளும் விளங்குவரே.

ஆரா யினுமிந்தத் தென்காசி மேவும்பொன் னாலயத்து
வாராத தோர்குற்றம் வந்தாலப் போதங்கு வந்ததனை
நேராக வேயொழித் துப்புரப் பார்களை நீதியுடன்
பாரா ரறியப் பணிந்தேன் பராக்ரம பாண்டியனே.

— தென்காசிக் கல்வெட்டு

மஞ்சள் இஞ்சி வாழைசாலி
 மிஞ்சளங்கும் மலிந்திருக்கும்
வளமனைத்தும் வாய்த்தநல்ல தேசமாம்-அது
அளவிறந்த அன்பர்களின் வாசமாம்.

பஞ்சரத்துப் பைங்கிளிக்குச்
 செஞ்சொல்மொழிச் சீரிழையார்
பண்முறையைப் பயிற்றுவிக்கும் நாடுமாம்-அது
உண்மையுணர்ந் தோர்உறையும் வீடுமாம்.

துங்கர்வாழும் பெருமைசான்ற
 புங்கமார்ந்த நாட்டின்நாமம்
சோழநாடாய்ச் சொல்லுவார்கள் மேலோர்-அதை
வாழமேலாய் வாழ்த்துவார்கள் நூலோர்.

அந்தநல்ல நாடதனில்
 முந்தியதாய்ச் சண்பையாதி
ஆறிரண்டெ னப்பெயர்கள் பூண்டுமே-நிலைப்
பேறினிக்கும் நகரமுண்டு யாண்டுமே.

பைந்தொடியாள் பங்குடையார்
 சுந்தரப்பேர்த் தோணியப்பர்
பத்தர்களைப் பரிந்தவரும் காப்பரே-அவர்
சித்தமலம் நீக்கிஇடர் தீர்ப்பரே.

கண்ணுதலே கடவுளாமென்
 றுன்னிஅன்பி யைந்துவாழும்
கவுணியர்கள் கால்வழியே வந்தவர்—அவர்
அவனியுள்ள வேதியர்க்கு யர்ந்தவர்.

புண்ணியமோர் உருவெடுத்து
 மண்ணின்மிசை வந்ததெனப்
போற்றநின்ற புத்தமுதை நேர்ந்தவர்—அவர்
சாற்றரிய தவத்துறையில் சேர்ந்தவர்.

சிவபாத இருதயராய்
அவரையாரும் அழைக்கலுற்றார்
சிறுவனில்லா தேக்கமுற்று வாடியே—அரண்
மகவளித்தார் அன்புடனே நாடியே.

அவமறுக்கும் ஆதிரையில்
தவம்பெருகத் தானுதித்தார்
அம்புயத்தின் அக்குழவி போலவே—அவர்
வந்துதித்தார் அம்புவியிற் சாலவே.

மூன்றுவய தாகும்எல்லை
ஈன்றதந்தை நீர்படிய
முன்னியே முன்னவரும் ஏகினர்—அவர்
பின்னடைந்தார் பேரருளை நாடினர்.

ஆன்ற அந்த மதலைதன்னைச்
சான்றநீரின் கரையில்வைத்தே
அந்தணர்நீர் ஆடிடவே போயினர்—அவர்
முந்தைவினை யோடமுதல் மேயினர்.

மேலைஎண்ணம் மூண்டதாலோ
மேலும்பிள்ளைத் தன்மையாலோ
விம்மிவிம்மி இருகண்ணின்நீர் துளித்தனர்—உமை
அம்மையப்பர் என்னவே விளித்தனர்.

கோலமுறும் தோணியப்பர்
சீலமுள்ள சிகரம்நோக்கிக்
குழந்தைநின்று அழுதரற்றக் கண்டனன் - அரன்
மழவிடைமேல் உமையுடனே கொண்டனன்.

பங்கமார்ந்த பார்வதியைச்
சங்கரனர் நோக்கினாபை
பாலைவள்ளத் தேயளிக்கச செப்பினர்
நூலையொத்த இடையினளும் ஒப்பினள்.

தெள்ளுசிவ ஞானத்தோடே
உள்ளதாம்சம் பந்தத்தாலே,
திருஞான சம்பந்த மூர்த்தியாம்
தரணியெங்கும் பரவும்அவர் கீர்த்தியாம்.

## கிறிஸ்தவ இலக்கியம்

### தேவமாதாவின் பாட்டு

மருள் தரு வலியுருவே! மருள்அறு சினவுருவே!
அருள் தரு தயையுருவே! அளவுஅறு திருவுருவே!
தெருள் தரு கலையுருவே! செயிர்அறு மனுவுருவே!
பொருள் தரு மணியுருவே! பொழிமண அடிதொழுதேன்.

உரையில கலைநிலையே! உயர்அற மடையுரையே!
கரையில படர்கடலே! கதியுயிர் பெறுகரையே!
வரையில சுகநிலையே! வளர்தவ மடைவரையே!
புரையில மனுமகனே! பொதிமல ரடிதொழுதேன்.

மருமலி மலர்நிழலே! மறைமலி யுயர்பயனே!
திருமலி கரமுகிலே! சிவமலி தனிமுதலே!
இருமலி யுலகுளரே இணரொடு தொழும் அடியே!
குருமலி யறநெறியே! கொழுமலர் அடிதொழுதேன்.

— தேம்பாவணி

### சிலுவையின் பெருமை

கையயர்ந்து வாய்புலர்ந்து கண்ணிருண்டு காதடைத்து
வெய்ய சிலுவை சுமந்தலசி மெய்வருந்தித்
துய்ய திருவடிகள் சோர்ந்துநடை தள்ளாடி
அய்யன்மறு கூடுவரக் கண்டார் அணிநகரார்.

கண்டார் மனமும் பதைத்தார் கரைந்தழுதார்
கொண்டார் துணுக்கம், கொதித்தார், கடுவிடத்தை
உண்டார்போல் ஏங்கி உயங்கி, நெடிதுயிர்த்துத்
திண்டாடி நின்றினைய செப்புவா ராயினர்:

வள்ளல் குருராயன் மன்னுயிர்க்காத் தன்னுயிரை
எள்ளி யவதரித்த எம்மான் சருவேசன்
கொள்ளை புரிந்து கொலைத்தீர்ப்புப் பெற்றுவரும்
கள்ளர் இருவரொடும் கல்வாரி நோக்கினர்.

தன்னரிய திருமேனி சதைப்புண்டு தவிப்பெய்திப்
பன்னரிய பலபாடு படும்போதும், பரிந்தெந்தாய்
இன்னதென அறிகில்லார் தாம்செய்வ திவர்பிழையை
மன்னியும்என்று எழிற்கனிவாய் மலர்ந்தார்நம்
அருள்வள்ளல்

உலகம்மகிழ்ந் தீடேறப் பரலோக
வாசிகளுக் குவகை யேற
அலகையுளந் திகிலேற, அகண்டபரி
பூரணனுர் அருள்மெய் வாக்கு
விலகிலதாய் நிறைவேற, துதியேற,
நரவுருவாய் விளங்கி அன்பால்
சிலுவைமிசை ஏறியமெய்ஞ் ஞானசூ
ரியன்அடியைச் சிந்தை செய்வாம்.

## யேசு நாமம்

நன்னெறி புகுத்திடும், நவையின் நீக்கிடும்,
இன்னலே அகற்றிடும், இகல்செ குத்திடும்,
உன்னதத் துய்த்திடும், ஒருங்கு காத்திடும்
எந்நலத் தையும்தரும் யேசு நாமமே.

## புனிதக் கற்பனே

'பொய்யைப் புகலா திருங்கள்'எனும்
புனிதன் புனிதக் கற்பனேயை
அய்யோ! நினேயா தவமதித்தீர்,
அல்லும் பகலும் அனவரதம்
துய்ய மனச்சாட் சியைமழுக்கித்
துணிந்து முழுப்பொய் சொல்கின்றீர்
உய்யீர் உய்யீர் மெய்பேசி
உய்ய வாரும் ஜெகத்திரே!

## சிலுவைக் காட்சி

கள்ளமுறுங் கடையேனுங் கடைத்தேப் பெருங்கருணை
வெள்ளமுகந் தருள்பொழியும் விமலலோ சனநிதியை,
உள்ளமுவப் புறுதேனை, உயிர்க்குயிரை உலவாத
தெள்ளமுதைத் தீங்கனியைச் சிலுவைமிசைக் கண்டேனே.

பொய்த்திருக்கும் வஞ்சனையும் பொல்லாங்கும் புறங்கூற்றும்
எத்திருக்கு முடையேமை யெண்ணியொரு பொருளாகப்
பத்திருக்கும் பிரமாணப் படியொழுகி வினைமுடித்த
சித்திருக்குஞ் செழுந்தவனைச் சிலுவைமிசைக் கண்டேனே.

மூவினைக்கு மும்முதலாய் மும்முதலு மொருமுதலாம்
தேவினைக்கை தொழுதேத்துந் திரிகரண சுத்தருந்தம்
நாவினைக்கொண் டேத்தரிய நல்லறத்தின் தனித்தாயைத்
தீவினைக்கோ ரருமருந்தைச் சிலுவைமிசைக் கண்டேனே

— இரட்சணிய யாத்திரிகம்

உலகினுக் கணியா மிராமநா தபுரத்
துயர்நறை வாவியின் குணபால்
மலர்நிறை வனத்தில் சிவத்துறு நிட்டை
மருவிமெய் யொருவிவே தாந்தத்
திலகிய பொருளாய் வானமாய் நிறையு
மெந்தையே ! எனதுபந் தமும்போய்
நிலையுற நினது திருவரு ளளிப்பாய்
நின்மலா னந்தமே போற்றி !

— தாயுமானவரின் மாணுக்கர் அருளையர்

கோதற்ற பத்தி யறுபத்து மூவர்தங் கூட்டத்திலோ
தீதற்ற வெள்ளிச் சிலம்பகத் தோசெம்பொ னம்பலத்தோ
வேதத்தி லோசிவ லோகத்தி லோவிஸ்வ நாதனிரு
பாதத்தி லோசென்று புக்கான் பராக்ரம பாண்டியனே.

— குலசேகர பாண்டியன்

பூமா திருந்தென்ன, புவிமா திருந்தென்ன, பூதலத்தில்
நாமா திருந்தென்ன, நாமிருந் தென்ன,நன் னுவலர்க்குக்
கோமா னழகமர் மால்சீதக் காதி கொடைமிகுந்த
சீமா னிறந்திட்ட போதே புலமையுஞ் செத்ததுவே!

— நமச்சிவாயப் புலவர்

ஈயாத புல்ல ரிருந்தென்ன, போயென்ன, வெட்டிமரங்
காயா திருந்தென்ன, காய்த்துப் பலனென்ன, கைவிரித்துப்
போயா சகமென் றுரைப்போர்க்குச் செம்பொன் பிடிபிடியாய்
ஓயாம லீபவன் மால்சீதக் காதி யொருவனுமே.

— படிக்காசுப் புலவர்

பூவாது காய்க்கும் பொழில்போல் புலவர்களுக்கு
ஈவான் இருநிதியம் என்பதுகேட்டு எஞ்ஞான்றும்
பாவாணர் சென்றடையும் பாண்டித் துரையரசை
ஆவா ! உலகிழந்தது ஐயகோ ! ஐயகோ !

— மு. இராகவையங்கா

தமிழுலகப் பெருஞ்சேயே ! தமிழ்த்தாயின்
தமிழ்த்தாயே ! தங்கு மன்புச்
சிமிழெனுநற் சிந்தையனே ! சீர்த்திதரும்
புந்தியனே ! செல்வ மிக்காய் !
உமிழுமெழில் திருமுகனே ! உயர்பாண்டித்
துரையரசே ! உனைத்தோற் றிந்நாள்
அமிழ்கிறதே தமிழுலகம் பெருந்துயர
அளக்கருளே ! அந்தோ அந்தோ !

— கரந்தைத் தமிழ்ச் சங்கம்

புவிக்கினிய பெருங்குணமும் புகழ்க்கினிய
பெருங்கொடையும் புரிவிற் போந்தார்
செவிக்கினிய பணிமொழியான் முகமனுரை
பகர்பரிவுந் தெய்வக் கம்பன்
கவிக்கினிய பொருள்விரிக்கு மொழித்திறனும்
இனியெவர்பாற் காண்ப மென்னத்
தவிக்கவெமை உலகிடை நீத் தொருநீவிண்
புகுந்ததுதான் தகவோ ஐயா !

— அரங்கசாமி ஐயங்கார்

ஓங்குதமிழ்ப் புலவர்களைப் பண்டைநாள்
அரசர்போ லுவகை பூத்துத்
தாங்குசம மரியாதை செய்துகவி
கேட்டவர்தந் தகுதி நோக்கி
வாங்குகெனச் செம்பொனுத வியபாண்டித்
துரைவள்ளால்! மற்றுன் போல
ஈங்குதே டியுமொருவ ரெதிர்ப்படுவா
ரில்லையினி என்செய் வோமே!

எல்லாரும் புலவரா யிருக்குமிட
மேசிறந்த தெனவான் சென்று
சொல்லாரும் புலவர்சிலர் உள்ளவிந்த
உலகைவிட்டுத் துறந்தாய் போலும் !
பல்லாரும் புகழ்பொன்னுச் சாமிநரேந்
திரன்மகவாய்ப் பாரிற் ருேன்றி
நல்லாரு ணல்லவனு யிருந்தபாண்
டித்துரையாம் நங்கோ மானே!

— மு. ரா. அருணுசலக் கவிராயர்

ஈவாருங் கொள்வாரு மில்லாத
வானத்தி லிருந்து வாளா
வாழ்வாரே வன்கண்ணு ரெனத்தேவர்
வகுத்தகுறள் மறந்துற் ருேயோ?
பாவாணர் குலஞ்சூழும் படிமதுரைச்
சங்கத்தா பனஞ்செய் தென்றுஞ்
சாவாத புகழ்படைத்த தருவெனும்பாண்
டித்துரையாந் தரும வானே!

— சர்க்கரை இராமசாமிப் புலவர்

சித்திரத்தில் நீஇருப்பாய்; சிந்தையுளே
வீற்றிருப்பாய்; சிறப்பாய்ச் செய்த
புத்தகத்தில் நீஇருப்பாய், புலவர்கள்தம்
பாவிலெலாம் புகழாய் நிற்பாய்;
பத்திரிகை தனிலிருப்பாய்; தமிழ்ப்பாண்டித்
துரைவேந்தே! பாரி லெங்கும்
நித்தியமா யிருக்குநினை நிலங்கடந்தா
னென்றுலகர் நிகழ்த்த லென்னே?

— ஜீ. சதாசிவம் பிள்ளை

மன்னவ!பாண் டித்துரையே! வளர்கருணைக்
கொழுமுதலே! வறியோர் வாழ்வே!
கன்னவிலுந் திரள்தோளாய்! கலைக்கடலே!
தமிழ்க்கிழவோய்! கருதா ரேறே!
இந்நிலத்தி னகன்றனை நீ யாங்கொளித்தாய்?
இதுதகுமோ? முறையோ? எந்தாய்!
மன்னுயிர்க ளுறுமலக்க ணறிதியெனின்
வருகவினி வள்ளால் வள்ளால்!

— ந. மு. வேங்கடசாமி நாட்டார்

அன்னைபிதா வெனவென்னை யாதரித்துக்
கல்விநல மமையு மாறே
அன்னமுடன் கலையுதவிக் கலையளித்த
வான்பாண்டித் துரையே! அந்தோ!
பன்னுநலத் தமிழ்க்குழவி தனைப்பரிவோ
டினிக்காக்கப் பாரின் மீதே
இன்னொருகா லெய்துவையோ வின்முகநீ
காட்டுவையோ வியம்பி டாயே.

— ஆ. கார்மேகக் கோனார்

அடுத்தாரை யுயர்த்துபெருங் குணப்பாண்டித்
துரையே! நின் னருமை வாக்கால்
தொடுத்தார்வ முறக்கம்பன் கவிப்பொருளைக்
குறட்பொருளைச் சொல்லி வாழ்ந்தாய்;
படுத்தாலு மிருந்தாலு நடந்தாலுந்
தமிழ்ச்சிறப்பே பகர்வாய் அந்தோ!
எடுத்தார்கைப் பிள்ளையெனத் தமிழைவிட்டு
விண்புகுந்தா யென்னே யென்னே!

— எம்.கே.எம். அப்துல் காதிறு ராவுத்தர்

## தெம்மாங்கு

செக்கச் சிவந்திருப்பாள்—குட்டி
செட்டிமகள் போலிருப்பாள்
வாரி முடிஞ்சிருப்பாள்—குட்டி!
வந்திருப்பாள் சந்தைக்கடை.

சந்தையிலே மருக்கொழுந்து—குட்டி!
சரசமாத்தான் விற்குதடி
கையிலொரு காசும்இல்லே—குட்டி!
கடன்கொடுப்பார் ஆரும்இல்லே.

வட்டவட்டப் பாறையிலே—குட்டி!
வரகரிசி தீட்டையிலே
ஆர்கொடுத்த சாயச்சீலே—குட்டி!
ஆலவட்டம் போடுதடி.

மஞ்சள் புடைவைக்காரி!—குட்டி!
மாதுளம்பூக் கூடைக்காரி!
மஞ்சள் புடைவையிலே—குட்டி!
மருக்கொழுந்து வீசுதடி.

கானக் கரிசலிலே
களேயெடுக்கும் பெண்மயிலே!
நீலக் கருங்குயிலே!
நிற்கட்டுமா போகட்டுமா?

## தாலாட்டு

ஆராரோ ஆராரோ—கண்ணே நீ
ஆரரிரோ ஆராரோ
ஆரடித்தார் நீஅழுக—கண்ணே உனே
அடித்தவரைச் சொல்லியழு.

பஞ்சுமெத்தை பட்டுமெத்தை—கண்ணே உனக்குப்
பரமசிவன் கொடுத்தமெத்தை
மாமனுர் கொடுத்தமெத்தை—கண்ணே உனக்கு
மல்லிகைப்பூச் செண்டுமெத்தை.

அக்காள் கொடுத்தமெத்தை—கண்ணே உனக்கு
அழகான தங்கமெத்தை
மேலு வலிக்காமே—கண்ணே நீ
மெத்தைமேலே படுத்துறங்கு.

மானே மருக்கொழுந்தே!—கண்ணே நீ
மலர்விரிந்த மல்லிகைப்பூ
சீதைக்கு அதிபதியோ ?—கண்ணே நீ
சிலையேந்தும் ரகுபதியோ?

கரும்புச் சிலையானே?—கண்ணே நீ
கன்னிவள்ளி நாயகனே?
பரமசிவ னேஅடித்த—கண்ணே
பாண்டியன் நீதானே?

வட்டக் கலசத்திலே—கண்ணே நீ
வாய்நிரம்பப் பால்குடிச்சு
வாகான தொட்டிலிலே—கண்ணே நீ
வச்சிரம்போல் தூங்கிடம்மா!

# தெய்வம் மணக்கும் பாமாலை

## சிவபெருமான்

பிறந்து மொழிபயின்ற பின்னெல்லாங் காதல்
சிறந்துநின் சேவடியே சேர்ந்தேன்—நிறந்திகழும்
மைஞ்ஞான்ற கண்டத்து வானோர் பெருமானே!
எஞ்ஞான்று தீர்ப்ப திடர்?

அன்றுந் திருவுருவங் காணாதே ஆட்பட்டேன்;
இன்றுந் திருவுருவங் காண்கிலேன்;—என்றுந்தான்
'எவ்வுருவோன் நும்பிரான்?' என்பார்கட் கென்னுரைக்கேன்
எவ்வுருவோ நின்னுருவம் ஏது?

நூலறிவு பேசி நுழைவிலா தார்திரிக;
நீல மணிமிடற்றா னீர்மையே—மேலுலந்த
தெக்கோலத் தெவ்வுருவா யெத்தவங்கள் செய்வார்க்கும்
அக்கோலத் தவ்வுருவே யாம்.

வானத்தா னென்பாரு மென்க;மற் றும்பர்கோன்
தானத்தா னென்பாருந் தாமென்க;—ஞானத்தான்
முன்னஞ்சத் தாலிருண்ட மொய்யொளிசேர் கண்டத்தான்
என்னெஞ்சத் தான்என்பன் யான்.

அழலாட அங்கை சிவந்ததோ, அங்கை
அழகால் அழல்சிவந்த வாறோ?—கழலாடப்
பேயாடு கானிற் பிறங்க அனலேந்தித்
தீயாடு வாய்!இதனைச் செப்பு.

— காரைக்கால் அம்மையார்

மன்னிய நாள்மீன் மதிகனலி என்றிவற்றை
முன்னம் படைத்த முதல்வனைப்—பின்னரும்
'ஆதிரையான் ஆதிரையான்' என்றென்று அயருமால்
ஊர்திரைநீர் வேலி உலகு.

— முத்தொள்ளாயிரம்

ஆசையருய் பாசம்விடாய் ஆனசிவ பூசைபண்ணுய்
நேசமுடன் ஐந்தெழுத்தை நீநினையாய்—சீசீ!
சினமே தவிராய் திருமுறைகள் ஓதாய்
மனமே! உனக்கென்ன வாய்?

— சிவபோகசாரம்

சிந்தனை உனக்குத் தந்தேன்;
திருவருள் எனக்குத் தந்தாய்;
வந்தனை உனக்குத் தந்தேன்;
மலரடி எனக்குத் தந்தாய்;
பைந்துணர் உனக்குத் தந்தேன்;
பரகதி எனக்குத் தந்தாய்;
கந்தனைப் பயந்த நாதா;
கருவையில் இருக்கும் தேவே!

— கருவையந்தாதி

கல்லாலின் புடையமர்ந்து நான்மறைஆறு
அங்கமுதற் கற்ற கேள்வி
வல்லார்கள் நால்வருக்கும் வாக்கிறந்த
பூரணமால் மறைக்கப் பாலாய்
எல்லாமாய் அல்லதுமாய் இருந்ததனை
இருந்தபடி இருந்து காட்டிச்
சொல்லாமல் சொன்னவரை நினையாமல்
நினைந்துபவத் தொடக்கை வெல்வாம்.

— திருவிளையாடற்புராணம்

தேவார முதலியஐந் துறுப்பும் வாழ,
சிறந்தமறை ஆகமங்கள் செழித்து வாழ,
தாவாத சித்தாந்த சைவம் வாழ,
சந்தவரைச் செந்தமிழ்நூல் தழைத்து வாழ,
நாவாரும் புகழ்க்கச்சி நகரிற் காம
நயனியொடு முறையிறைசீர் நான்கு பாடி,
பூவாரு மலர்விழியீர்! ஆடீர் ஊசல்;
புத்தமுத நிகர்மொழியீர்! ஆடீர் ஊசல்.

— கச்சிக் கலம்பகம்

## அபிராமி

உடையாளை ஒல்குசெம் பட்டுடை
யாளை, ஒளிர்மதிச்செஞ்
சடையாளை, வஞ்சகர் நெஞ்சடை
யாளை, தயங்குநுண்ணூல்
இடையாளை, எங்கள்பெம் மானிடை
யாளை,இங் கென்னையினிப்
படையாளை, உங்களை யும்படை
யாவண்ணம் பார்த்திருமே.

அழகுக் கொருவரும் ஒவ்வாத வல்லி அருமறைகள்
பழகிச் சிவந்த பதாம்புயத் தாள்பனி மாமதியின்
குழவித் திருமுடிக் கோமள யாமளைக் கொம்பிருக்க
இழவுற்று நின்றநெஞ் சே!இரங் கேலுனக் கென்குறையே?

ஐய னளந்த படியிரு நாழிகொண்டு அண்டமெல்லாம்
உய்ய அறஞ்செயு முன்னையும் போற்றி ஒருவர் தம்பால்
செய்ய பசுந்தமிழ்ப் பாமாலை யுங்கொண்டு சென்றுபொய்யும்
மெய்யு மியம்பவைத் தாயிது வோஉன்றன் மெய்யருளே?

இல்லாமை சொல்லி ஒருவர்தம் பாற்சென்று இழிவுபட்டு
நில்லாமை நெஞ்சில் நினைகுவி ரேல்,நித்தம் நீடுதவம்
கல்லாமை கற்ற கயவர்தம் பாலொரு காலத்திலும்
செல்லாமை வைத்த திரிபுரை பாதங்கள் சேர்மின்களே.

சுடரும் கலைமதி துன்றுஞ் சடைமுடிக் குன்றிலொன்றிப்
படரும் பரிமளப் பச்சைக் கொடியைப் பதித்துநெஞ்சில்
இடருந் தவிர்த்திமைப் போதிருப் பார்பின்னும் எய்துவரோ
குடருங் கொழுவும் குருதியுந் தோயும் குரம்பையிலே?

— அபிராமி பட்டர் (அபிராமி அந்தாதி)

## கந்தர் அலங்காரம்

நாள்என் செயும்,வினை தான்என் செயும்,எனை நாடிவந்த
கோள்என் செயும்,கொடுங் கூற்றென் செயும்கும ரேசர்இரு
தாளும் சிலம்பும் சதங்கையும் தண்டையும் சண்முகமும்
தோளும் கடம்பும் எனக்குமுன் னேவந்து தோன்றிடினே!

தண்டா யுதமும் திரிசூல மும்விழத் தாக்கிஉன்னைத்
திண்டாட வெட்டி விழவிடு வேன்,செந்தில் வேலனுக்குத்
தொண்டா கியஎன் அவிரோத ஞானச் சுடர்வடிவாள்
கண்டாய டா,அந்த கா!வந்து பார்,சற்றென் கைக்கெட்டவே!

மொய்தார் அணிகுழல் வள்ளியை வேட்டவன், முத்தமிழால்
வைதா ரையும்அங்கு வாழவைப் போன்,வெய்ய வாரணம் [போல்
கைதான் இருப துடையான் தலைபத்துங் கத்தரிக்க
எய்தான் மருகன் உமையாள் பயந்த இலஞ்சியமே.

## கந்தர் அநுபூதி

செம்மான் மகளைத் திருடுந் திருடன்
பெம்மான் முருகன் பிறவா னிறவான்
'சும்மா இரு,சொல் லற'என் றலுமே
அம்மா பொருளொன் றுமறிந் திலனே.

உருவா யருவா யுளதா யிலதாய்
மருவாய் மலராய் மணியாய் ஒளியாய்,
கருவா யுயிராய் கதியாய் விதியாய்,
குருவாய் வருவாய் அருள்வாய் குகனே!

— அருணகிரிநாதர்

## சூரன் கண்ட முருகன்

கோலமா மஞ்ஞை தன்னில்
குலவிய குமரன் தன்னைப்
பாலன்என் றிருந்தேன் அந்நாள்
பரிசிவை உணர்ந்தி லேன்யான்,
மால்அயன் தனக்கும் ஏனை
வானவர் தமக்கும் யார்க்கும்
மூலகா ரணமாய் நின்ற
மூர்த்திஇம் மூர்த்தி யன்றோ?

ஒற்றென முன்னம் வந்தோன்
　　ஒருதனி வேலோன் தன்னைப்
பற்றிகல் இன்றி நின்ற
　　பராபர முதல்வன் என்றே
சொற்றனன், சொற்ற எல்லாம்
　　துணிபெனக் கொண்டி லேனல்
இற்றையிப் பொழுதில் ஈசன்
　　இவன்எனும் தன்மை கண்டேன்.

ஆயிர கோடி காமர்
　　அழகெலாம் திரண்டொன் றாகி
மேயின எனினும் செவ்வேள்
　　விமலமாம் சரணந் தன்னின்
தூயநல் எழிலுக் காற்றா
　　தென்றிடின், இனைய தொல்லோன்
மாயிரு வடிவிற் கெல்லாம்
　　உவமையார் வகுக்க வல்லார்?

சூழுதல் வேண்டும் தாள்கள்;
　　தொழுதிடல் வேண்டும் அங்கை;
தாழுதல் வேண்டும் சென்னி;
　　துதித்திடல் வேண்டும் தாலு;
ஆழுதல் வேண்டும் தீமை
　　அகன்றுநான் இவற்காள் ஆகி
வாழுதல் வேண்டும்; நெஞ்சம்
　　தடுத்தது மானம் ஒன்றே.

ஏதமில் அமரர் தம்மை
　　யான்சிறை செய்த தெல்லாம்
தீதென உரைத்தார் பல்லோர்,
　　அன்னதன் செயற்கை யாலே
வேதமும் அயனும் ஏனை
　　விண்ணவர் பலரும் காணா
நாதன்இங் கணுகப் பெற்றேன்
　　நன்றதே யான தன்றே.

—கச்சியப்பர் (கந்தபுராணம்)

## திருமால்

காயிலே தின்றும், கானி லுறைந்தும், கதிதேடித்
தீயிடை நின்றும், பூவலம் வந்தும் திரிவீர்காள்!
தாயிலு மன்பன், பூமகள் நண்பன், தடநாகப்
பாயல் முகுந்தன் கோயி லரங்கம் பணிவீரே.

பாதியா யழுகியகால் கைய ரேனும்
 பழிதொழிலும் இழிகுலமும் படைத்தா ரேனும்
'ஆதியாய்! அரவணையாய்!' என்ப ராகில்
 அவரன்றோ யாம்வணங்கும் அடிக ளாவார்?
சாதியால் ஒழுக்கத்தால் மிக்கோ ரேனும்
 சதுர்மறையால் வேள்வியால் தக்கோ ரேனும்
போதில்நான் முகன்பணியப் பள்ளி கொள்வான்
 பொன்னரங்கம் போற்றுதார் புலையர் தாமே.

— பிள்ளைப்பெருமாளையங்கார்

வானுகி மண்ணாய் மறிகடலாய் மாருதமாய்த்
தேனுகிப் பாலாம் திருமாலே!—ஆனுயா!
வெண்ணெய் விழுங்க நிறையுமோ மேலொருநாள்
மண்ணை யுமிழ்ந்த வயிறு?

நாவுண்டு நீயுண்டு நாமந் தரித்தோதப்
பாவுண்டு நெஞ்சே! பயமுண்டோ?—பூவுண்டு
வண்டுறங்குஞ் சோலை மதிலரங்கத் தேயுலகை
உண்டுறங்கு வானொருவ னுண்டு.

— பெருந்தொகை

தேனேங்கு நீழல் திருவேங் கடமென்றும்
வானேங்கு சோலை மலையென்றும்—வானேங்கு
தென்னரங்க மென்றும் திருவத்தி யூரென்றும்
சொன்னவர்க்கு முண்டோ துயர்?

— பாரதம் பாடிய பெருந்தேவனார்

நீல நெடுங்கடலோ, நீலமணிக் குன்றமோ,
கோலம் சுமந்தெழுந்த கொண்டலோ—நீலநிறக்
காயா மலரோ, களங்கனியோ, கண்மங்கை
மாயா! உனது வடிவு?

—காளமேகப் புலவர்

### பிள்ளையார்

திருவாக்கும் செய்கருமங் கைகூட்டும் செஞ்சொற்
பெருவாக்கும் பீடும் பெருக்கும்—உருவாக்கும்
ஆதலால் வானோரும் ஆனை முகத்தானைக்
காதலால் கூப்புவர் தம் கை.

—கபிலதேவர்

### கலைமகள்

ஆய கலைக ளறுபத்து நான்கினையும்
ஏய வுணர்விக்கும் என்னம்மை—தூய
உருப்பளிங்கு போல்வாள்;என் உள்ளத்தி னுள்ளே
இருப்பள்இங்கு வாரா திடர்.

—கம்பர்

### அருக தேவர்

அறிவன் அறவோன் அறிவுவரம்பு இகந்தோன்
செறிவன் சினேந்திரன் சித்தன் பகவன்
தரும முதல்வன் தலைவன் தருமன்
பொருளன் புனிதன் புராணன் புலவன்
சினவரன் தேவன் சிவகதி நாயகன்.

— இளங்கோவடிகள் (சிலப்பதிகாரம்)

மூவா முதலா உலகம் ஒருமூன்றும் ஏத்தத்
தாவாத இன்பம் தலையாயது தன்னின் எய்தி
ஓவாது நின்ற குணத்துஒண்ணிதிச் செல்வ னென்ப
தேவாதி தேவன் அவன்சேவடி சேர்து மன்றே.

—திருத்தக்கதேவர் (சீவக சிந்தாமணி)

கன்று காலனைக் கடந்தாய்! காதற் காமனைக் கடிந்தாய்!
தொன்று மூத்தலைத் துறந்தாய்! தோற்றமாக்கடல் இறந்தாய்!
ஒன்ற நோய்பகை யொருங்கே உடைந்து வெங்களத் துதிர
வென்றி ருந்தனை நீயே! வீரர் தம் வீரர்க்கும் வீரா!

பொங்கு சாமரை ஏந்திப் புடைபுடை இயக்கர் நின் றிரட்டச்
சிங்க ஆசனத் திருந்து தெளிந்தொளி மண்டிலம் நிழற்றத்
திங்கள் முக்குடை கவிப்பத் தேவர் தம் திருந்தவை தெருள
அங்க பூவம தறைந்தாய் அறிவர் தம் அறிவர்க்கும் அறிவா!

— நீலகேசி

அறிவினால் அளவிலை நீ; அன்பினால் அசைவிலை நீ;
செறிவினால் சிறந்தனை நீ; செம்மையால் செழுங்கதிர் நீ;
காட்சியால் கடையிலை நீ; கணஞ்சூழ்ந்த கதிர்ப்பினை நீ;
மாட்சியால் மகிழ்வினை நீ; மணிவரைபோல் வடிவினை நீ;

இந்திரற்கும் இந்திரன் நீ; இணையில்லா இருக்கையை நீ;
மந்திர மொழியினை நீ; மாதவர்க்கு முதல்வனும் நீ;
அருமைசால் அறத்தினை நீ; ஆருயிரும் அளித்தனை நீ;
பெருமைசால் குணத்தினை நீ; பிறர்க்கறியாத் திறத்தினை நீ.

— பெருந்தொகை

ஆதியாய் ஆதியிலாய் அந்தமாய்
அந்தமிலாய் அடையாது எய்தும்
போதியாய் போதியிலாய் புறத்தாய்எப்
பொருளினுக்கும் அகத்தாய் மூன்று
சோதியாய் சோதியிலாய் சுருங்காதாய்
பெருகாதாய் தோன்று மாயா
நீதியாய் நீதியிலாய் நினைப்பரியாய்
வினைப்பகையெம் இறைவன் நீயே.

ஒருமொழியே பதினெட்டாய் உலகறிய
இயம்பியதும் ஒளிகொள் மூன்றில்
திருமறுவாய்த் திகழ்கின்ற திருமூர்த்தி
அதனழகும் தேவ! நின்பால்
மருவினர்க்கும் அல்லவர்க்கு ஒத்திருந்தும்
அடைந்தவர்க்கு வார்த்தை நல்கும்
பெருமயமோ அதிசயமோ பிரான்நீயே
மூவுலகோர் பிரானு கின்ருய்.

— மேருமந்தர புராணம்

ஆதி யான்அற வாழியி னுன்அலர்ச்
சோதி யான்சொரி பூமழை யான்வினைக்
காதி வென்றபி ரானவன் பாதமே
நீதி யால்நினை வாழிய நெஞ்சமே!

— பெருந்தொகை

## சமணர் எட்டு மலைகள்

பரங்குன்று ஒருவகம் பப்பாரம் பள்ளி
அருங்குன்றம் பேராந்தை யானை—இருங்குன்றம்
என்றெட்டு வெற்பும் எடுத்தியம்ப வல்லார்க்குச்
சென்றெட்டு மோபிறவித் தீங்கு?

## திருப்பருத்திக்குன்றம் : குராமரம்

தன்னளவிற் குன்ரு துயராது தண்காஞ்சி
முன்னுளது மும்முனிவர் மூழ்கியது—மன்னவன்தன்
செங்கோல் நலங்காட்டும் தென்பருத்திக் குன்றமர்ந்த
கொங்கார் தருமக் குரா.

— கல்வெட்டுப் பாட்டு

## மயிலாப்பூர்

மறமே முனிந்து மயிலா புரிநின்று மன்னுயிர்கட்கு
அறமே பொழியும் அருட்கொண்ட லே!அத ரஞ்சிவந்த
நிறமே கரியவொண் மாணிக்க மே!நெடு நாளொளித்துப்
புறமே திரிந்த பிழையடி யேனைப் பொறுத்தருளே.

— திருநூற்றந்தாதி

# புத்த தேவர்

## திருவடிப் பெருமை

மாரனை வெல்லும் வீர நின்னடி
தீநெறிக் கடும்பகை கடிந்தோய் நின்னடி
பிறர்க்கறம் முயலும் பெரியோய் நின்னடி
துறக்கம் வேண்டாத் தொல்லோய் நின்னடி
எண்பிறக் கொழிய இறந்தோய் நின்னடி
கண்பிறர்க் களிக்கும் கண்ணோய் நின்னடி
தீமொழிக் கடைத்த செவியோய் நின்னடி
வாய்மொழி சிறந்த நாவோய் நின்னடி
நரகர் துயர்கெட நடப்போய் நின்னடி
உரகர் துயரம் ஒழிப்போய் நின்னடி

— மணிமேகலை

## திருமேனிச் சிறப்பு

இருட்பார வினை நீக்கி எவ்வுயிர்க்கும் காவலென
அருட்பாரம் தனிசுமந்த அன்றுமுதல் இன்றளவும்
மதுவொன்று மலரடிக்கீழ் வந்தடைந்தோர் யாவர்க்கும்
பொதுவன்றி நினக்குரித்தோ புண்ணிய நின் திருமேனி?

— வீரசோழியம்

## இன்ப நெறி

தோடார்இ லங்கு மலர்கோதி வண்டு
வரிபாட நீடு துணர்சேர்
வாடாத போதி நெறிநீழல் மேய
வர தன்ப யந்த அறநூல்
கோடாத சீல வதமேவி வாய்மை
குணனுக நாளும் முயல்வார்
வீடாத இன்ப நெறிசேர்வர்; துன்ப
வினைசேர் தல் நாளும் இலரே !

— பெருந்தொகை

## நபி நாயகம்

நெறிநிலை திரியா மருண்மதம் மிகுந்து
நெடுநிலம் எங்கணும் பரந்து
துறவறம் தவறி இல்லறம் மடிந்து
சுடரில்லா மனையது போலக்
குறைபடுங் காலம் இருளெனும் குபிரின்
குலமறுத் தறநெறி விளக்க
மறுவிலா தெழுந்த முழுமதி போல
முகம்மது நபிபிறந் தனரே.

பானுவின் கதிரா லிடருறுங் காலம்
படர் தரு தருநிழல் எனலாய்
ஈனமும் கொலையும் விளைந்திடும் பவநோய்,
இடர்தவிர்த் திடும்அரு மருந்தாய்,
தீனெனும் பயிர்க்கோர் செழுமழை எனலாய்,
குறைஷியர் திலதமே எனலாய்,
மானிலந் தனக்கோர் மணிவிளக் கெனலாய்
முகம்மது நபிபிறந் தனரே.

நானில வாழ்வை, நான்மறை வாழ்வை,
நபிகளின் வாழ்வை,என் னிதயந்
தானில வாழ்வை, தபோதனர் வாழ்வை,
சான்றவர் வாழ்வை,மே லோகப்
பானில வாழ்வை, பாவக வாழ்வை,
பதிமதி ஞநகர் வாழ்வை,
கானில வாழ்வை, முகம்மது நபியைக்
கண்களா லென்றுகாண் குவனே !

## கருத்தன்

திருவினும் திருவாய்ப் பொருளினும் பொருளாய்த்
தெளிவினும் தெளிவதாய்ச் சிறந்த
மருவினும் மருவாய் அணுவினுக்கு அணுவாய்
மதித்திடாப் பேரொளி யனைத்தும்
பொருவினும் பொருவா வடிவினும் வடிவாய்ப்
பூதலத்து உறைந்தபல் லுயிரின்
கருவினும் கருவாய்ப் பெருந்தலம் புரந்த
கருத்தனைப் பொருத்துதல் கருத்தே.

— சீருப்புராணம்

## கடவுள் வணக்கம்

('கீதாஞ்சலி'யிலுள்ள பாடலின் மொழிபெயர்ப்பு)

என்னுயிர்க் குயிரே! ஏழையே னுடலம்
எங்கணும் நின்திருப் பரிசம்
மன்னிய துணர்ந்தே உடலினைத் தூய்தா
வைத்திருக் குஞ்செயல் மறவேன்;
துன்னுமென் னுளத்தி லறிவொளி பெருக்குஞ்
சுடர்நிக ருண்மை நீ; அதனால்
இன்னல்செய் பொய்யி னெண்ணமே புகாமல்
என்றுநான் முயன்றகற் றிடுவேன்!

கோயிலாய் நீயென் இதயமே கொண்ட
குறிப்பினை யுணர்ந்துளே னதனால்
தீயன யாவு மகற்றியே உளத்திற்
செவ்விதா மன்பல ரமைப்பேன்;
மேயநின் னருளே வலிமையை யளிக்கும்
விதத்தினை யுணர்ந்தபான் மையினால்
நேயமாய்ச் செய்யுங் கருமங்க ளனைத்தும்
நின்னியல் புணர்த்திநின் றனவே.

— விபுலானந்தர்

## ஆலங்குடி ஈசன்

ஆலங் குடியானை ஆலால முண்டானை
ஆலங் குடியானென் றூர்சொன்னார்?—ஆலங்
குடியானே யாயில் குவலயத்தோ ரெல்லாம்
மடியாரோ மண்மீதி லே?

## சத்திரத்தில் சாப்பாடு

கத்துகடல் சூழ்நாகைக் காத்தான்தன் சத்திரத்தில்
அத்தமிக்கும் போதி லரிசிவரும்;—குற்றி
உலையிலிட வூரடங்கும்; ஓரகப்பை யன்னம்
இலையிலிட வெள்ளி யெழும்.

## விகடராமன் குதிரை

முன்னே கடிவாளம் மூன்றுபேர் தொட்டிழுக்கப்
பின்னே இருந்திரண்டு பேர் தள்ள—எந்நேரம்
வேதம்போம் வாயான் விகடரா மன்குதிரை
மாதம்போங் காத வழி.

## மோரின் முப்பெயர்

காரென்று பேர்படைத்தாய் ககனத்து றும்போது;
நீரென்று பேர்படைத்தாய் நெடுந்தரையில் வந்ததற்பின்
வாரொன்று பூங்குழலா ராய்ச்சியர்கை வந்ததற்பின்
மோரென்று பேர்படைத்தாய் முப்பேரும் பெற்றாயே!

## வினைதீர்த்தான் கோயில்

வாதக்கா லாந்தமக்கு; மைத்துனர்க்கு நீரிழிவாம்;
போதப் பெருவயிறும் புத்திரனுக்கு;—ஓதக்கேள்;
வந்தவினை தீர்க்க வகையறியா வேளூரர்
எந்தவினை தீர்ப்பா ரிவர்?

— காளமேகப் புலவர்

## இல்லாத சொன்னதனால் இல்லை

கல்லாத வொருவனை நான் கற்ற யென்றேன்;
    காடெறியு மறவனை நா டாள்வா யென்றேன்;
பொல்லாத வொருவனை நா னல்லா யென்றேன்;
    போர்முகத்தை யறியானைப் புலியே றென்றேன்;
மல்லாரும் புயமென்றேன் சூம்பற் றோளை
    வழங்காத கையனை நான் வள்ள லென்றேன்;
இல்லாது சொன்னேனுக் கில்லை யென்றான்;
    யானுமென் தன் குற்றத்தா லேகின் றேனே.

## பாவலரும் பரமனும் பட்ட பாடு

வஞ்சகர்பால் நடந்தலைந்த காலிற் புண்ணும்
    வாயில்தொறு முட்டுண்ட தலையிற் புண்ணும்
செஞ்சொல்லை நினைந்துருகு நெஞ்சிற் புண்ணும்
    தீருமென்றே சங்கரன்பாற் சேர்ந்தேன்; 'அப்பா!
கொஞ்சமல்ல பிரம்படியின் புண்ணும் வேடன்
    கொடுங்காலா லுதைத்தபுண்ணும் கோப மாகப்
பஞ்சவரில் ஒருவன்வில்லா லடித்த புண்ணும்
    பார்!'என்றே காட்டிநின்றான் பரமன் தானே.

## படைத்தவன் கொடுமை

கல்லைத்தான் மண்ணைத்தான் காய்ச்சித்தான்
    குடிக்கத்தான் கற்பித் தானா!
இல்லைத்தான் பொன்னைத்தான் எனக்குத்தான்
    கொடுத்துத்தான் இரட்சித் தானா!
அல்லைத்தான் சொல்லித்தா னரைத்தான்
    நோவத்தா னையோ எங்கும்
பல்லைத்தான் திறக்கத்தான் பதுமத்தான்
    புவியிற்றான் பண்ணி னானே!

— இராமசந்திரக் கவிராயர்

## ஓட்டைச் செவி

இருள்தீர் மணிவிளக்கத் தேழிலார் கோவே!
குருடேயும் அன்றுநின் குற்றம்;—மருள்தீர்ந்த
பாட்டும் உரையும் பயிலா தனஇரண்டு
ஓட்டைச் செவியும் உள.

## அடகு அமுதம்

வெய்தாய் நறுவிதாய் வேண்டளவும் தின்பதாய்
நெய்தா னளாவி நிறையிட்டுப்—பொய்யே
அடகென்று சொல்லி யமுதத்தை யிட்டாள்
கடகஞ் செறியாதோ கைக்கு!

## இல்லை என்ற சொல்

வாதவர்கோன் பின்னையென்றான்;
வத்தவர்கோன் நாளையென்றான்;
யாதவர்கோன் யாதொன்றும்
இல்லையென்றான்;—ஆதலால்,
வாதவர்கோன் பின்னையினும்
வத்தவர்கோன் நாளையினும்
யாதவர்கோன் இல்லை இனிது.

## சொல்லின் செல்வர்

ஆர்த்தசபை நூற்றொருவர்; ஆயிரத்தொன் றாம்புலவர்;
வார்த்தை பதினா யிரத்தொருவர்;—பூத்தமலர்த்
தண்டா மரைத்திருவே! தாதாகோ டிக்கொருவர்
உண்டாயி னுண்டென் றறு.

## நல்லான் கொடை

காலையிலொன் றாவர், கடும்பகலி லொன்றுவர்,
மாலையிலொன் றாவர் மனிதரெலாம்;—சாலவே
முல்லானைப் போல முகமுமக மும்மலர்ந்த
நல்லானைக் கண்டறியோம் நாம்,

## பெருமையும் சிறுமையும்

சொல்லாம லேபெரியர், சொல்லிற் சிறியர்செய்வர்;
சொல்லியுஞ் செய்யார் கயவரே;—நல்ல
குலாமாலே வேற்கண்ணாய்! கூறுவமை நாடில்
பலாமாவைப் பாதிரியைப் பார்.

## பேச்சும் கீச்சும்

காணாமல் வேணதெல்லாம் கத்தலாம்; கற்றோர்முன்
கோணாமல் வாய்திறக்கக் கூடாதே;—நாணாமல்
பேச்சுப்பேச் சென்னும்; பெரும்பூனை வந்தக்கால்
கீச்சுக்கீச் சென்னும் கிளி.

## நல்லமைச்சர்

நூலெனிலோ கோல்சாயும்; நுந்தமரேல் வெஞ்சமராம்;
கோலெனிலோ ஆங்கே குடிசாயும்;—நாலாவான்
மந்திரியு மாவான்; வழிக்குத் துணையாவான்;
அந்த அரசே யரசு.

## பகட்டுப் புலவர்

விரகர் இருவர் புகழ்ந்திடவே வேண்டும்;
விரல்நிறைய மோதிரங்கள் வேண்டும்;—அரையதனில்
பஞ்சேனும் பட்டேனும் வேண்டும்; அவர்கவிதை
நஞ்சேனும் வேம்பேனும் நன்று.

— ஔவையார்

## முடியும் மிடியும்

ஒளிமுடி யொடும்பி றந்தே உலகம்ஆண் டவரு மில்லை;
எளியராய் ஓடொன் றேந்தி இங்குதித் தவரு மில்லை;
குளிர்கடல் உடுத்த பாரில் குறைந்தவர் மேலோ ரென்னல்
வெளிமயக் கன்றிச் சற்றும் மெய்யல; உணர்வாய் நெஞ்சே!

## சித்திரப்பாவை

ஓவியர் நீள் சுவரெழுதும் ஓவியத்தைக் கண்ணுறுவான்
தேவியையாம் அழைத்திட, 'ஆண் சித்திரமேல் நான்பாரேன்;
பாவையர் தம் உருவெனில்நீர் பார்க்கமனம் பொறேன்,'
[என்றாள்;
காவிவிழி மங்கையிவள் கற்புவெற்பின் வற்புள தால்!

## வழக்கும் சழக்கும்

தொண்டையைக் கிழித்துக்கொண்டு
சண்டைசெய்யும் வக்கீல்கள்
அண்டையி லிருந்துநம்
மண்டையை உடைத்தால்
நினைப்பதெப் போதுநெஞ்சே!
ஐயன்ப தத்தை
நினைப்பதெப் போதுநெஞ்சே!

கரமிலான் வாதியைப் பிடித்தானும்—இரு
காலிலான் உதைத்துதைத்து இடித்தானும்
சிரமில்லா தவன்கடித் தடித்தானும்—பதம்
செப்பும்வே தநாயகன் படித்தானும்.

## காலமும் காலனும்

நெல்லறுக்க வோர்காலம், மலர்கொய்ய
வோர்காலம், நெடிய பாரக்
கல்லறுக்க வோர்காலம், மரமறுக்க
வோர்காலம் கணித முண்டு;
வல்லரக்க னேயனைய நமன்நினைத்த
போதெல்லாம் வாழ்நா ளென்னும்
புல்லறுக்க வருவனெனில் நெஞ்சமே!
மற்றினியாம் புகல்வ தென்னே!

— வேதநாயகம்பிள்ளை

## மூடனும் குருடனும்

'மூடர்முன்னே பாடல் மொழிந்தா லறிவரோ
ஆடெடுத்த தென்புலியூ ரம்பலவா!'—'ஆடகப்பொன்
செந்திருவைப் போலணங்கைச் சிங்காரித் தென்னபயன்
அந்தகனே நாயகனு னல்?'

## மூதேவியும் சீதேவியும்

'தேன்பொழிந்த வாயான் திருவேங் கடத்துடனே
ஏன்பிறந்தான் கண்ணுக் கினியானே?'—'வான்சிறந்த
சீதேவி யாருடனே செய்யதிருப் பாற்கடலில்
மூதேவி யேன்பிறந்தாள் முன்?'

## செல்காலமும் அல்காலமும்

'கேட்ட வரமளிக்குங் கீர்த்தியுள்ள தெய்வங்காள்!
கூட்டோடே எங்கே குடிபோனீர்?'—'பாட்டாய்!கேள்:
செல்கால மெல்லாஞ் செலுத்தினேம்; அல்காலம்
கல்லானேஞ் செம்பானேங் காண்!'

## இக்கலிங்கம் போனல் சொக்கலிங்கம்

'அப்பிலே தோய்த்திட்டு அடுத்தடுத்து நாமதனைத்
தப்பினல் நம்மையது தப்பாதோ?'—'இப்புவியில்
இக்கலிங்கம் போனலென்? ஏகலிங்க மாமதுரைச்
சொக்கலிங்க முண்டே துணை!'

— இரட்டையர்

## 'காய்' என்றெடுத்து 'இலை' என்று முடித்தது

காய்சினமில் லாதான் கருணைமுத்துச் சாமிவள்ளல்
வாய்மையுளான் பாடி வருவோர்க்குத்—தாய்நிகர்வான்
எல்லையில்லா மாண்பொருளை ஈவா னிவனிடத்தில்
இல்லையென்ற சொல்லே இலை.

## மலரும் மங்கையும்

வந்தனமே செய்து
வருந்துகிறேன்; காவிலுள்ள
சந்தனமே! கந்தமிகும்
தண்மலர்கள் தாரீரோ?

பாதிரியே! மெத்தப்
பரிதவித்து நான்திரியும்
மாதிரியே கண்டும்
வணங்கிமலர் தாரீரோ?

என்னையே கூட்டிவந்த
ஏந்திழையார் போயகன்றார்;
புன்னையே! கூந்தல்
புனையமலர் தாரீரோ?

கொம்பின்மே லுற்ற
குருகினங்காள்! கொன்றையின்மேல்
செம்பொன்நிற மாயிருக்கும்
சீதமலர் தாரீரோ?

தேங்குழலை நான்கோதிச்
சிங்கார மாய்முடிக்க
மாங்குயில்காள்! நீர்எனக்கு
வண்ணமலர் தாரீரோ?

இன்பாகப் பூமரத்தி
லேயிருக்கும் பூவைகளே!
அன்பாகப் பேசிஎனக்
கானமலர் தாரீரோ?

அண்டையிலே நின்றார்
அகன்றுவிட்டார்; உங்களைநான்
தெண்டனிட்டேன்; பைங்கிளிகாள்!
செய்யமலர் தாரீரோ?

பொய்கையிலே வாழும்அன்னப்
புள்ளினங்காள்! ஓடிவந்தேன்;
மொய்குழலில் வைத்து
முடிக்கமலர் தாரீரோ?

ஒண்டியாய் மாதரைவிட்டு
ஓடிவந்தேன் காவீரே!
கொண்டையிலே நான்சூடக்
கோலமலர் தாரீரோ?

— அழகிய சொக்கநாத பிள்ளை

## தமிழ் நாட்டில் தருமதேவதை

இரவு நண்பக லாகி லென்பகல்
இருள ருவிர வாகிலென்
இரவி யெண்டிசை மாறி லென்கடல்
ஏழு மேறிலென் வற்றிலென்
மரபு தங்கிய முறைமை பேணிய
மன்னர் போகிலென் ஆகிலென்
வளமை யின்புறு சோழ மண்டல
வாழ்க்கை காரண மாகவே
கருது செம்பொனி னம்ப லத்திலொர்
கடவு ணின்று நடிக்குமே
காவி ரித்திரு நதியி லேயொரு
கருணை மாமுகில் துயிலுமே
தருவு யர்ந்திடு புதுவை யம்பதி
தங்கு மானிய சேகரன்
சங்க ரன்தரு சடைய னென்றொரு
தரும தேவதை வாழவே.

— பெருந்தொகை

## புலவர் ஆற்றுப்படை

'தேரு ஊர்ப்புரவி வார ணத்தொகுதி
திறைகள் கொண்டுவரு மன்ன! நின்
தேய மேதுனது நாம மேதுபுகல்:'
'செங்கை யாழ்தடவு பாண! கேள்:
வாரு மொத்தகுடி நீரு நானுமக
தேச ஞறைநகர் காவலன்
வாண பூபதி மகிழ்ந்த ளித்தவெகு
வரிசை பெற்றுவரு புலவன்யான்;
நீரு மிப்பரிசு பெற்று மீளவர
லாகு மேகும்; அவன் முன்றில்வாய்
நித்தி லச்சிகர மாட மாளிகை
நெருங்கு கோபுர மருங்கெலாம்
ஆரு நிற்குமொரு வேம்பு நிற்குமுயர்
பனையு நிற்குமத னருகிலே
அரசு நிற்குமர சைச்சு மந்தசில
அத்தி நிற்குமடை யாளமே.'

— பெருந்தொகை

## இளங்கொடியின் வாட்டம்

மங்கல மங்கையராய் மன்னவர் கன்னியராய்
மைந்தர் வயிற்றினராய் வாழ்வின ராயதிலே
திங்கணி றைந்துவருஞ் சேயிழை யார்நடைபோல்
தென்ற லசைந்துவருஞ் செந்தமிழ் நாடுடையாய்!
கங்கையி னன்கொழுநா! காவிரி யின்கணவா!
கன்னித ஞயகனே! சென்னிந ஞடுடையாய்!
எங்க ளிளங்கொடிதா னுங்களி ளம்பிறையால்
எத்தனை கோடியிரா இப்படி வாடுவதே!

— பெருந்தொகை

வடவைக் கனலைப் பிழிந்துகொண்டு
மற்று மொருகால் வடித்தெடுத்து
வாடைத் துருத்தி வைத்தூதி
மறுகக் காய்ச்சிக் குழம்புசெய்து
புடவிக் கயவர் தமைப்பாடிப்
பரிசு பெருமல் திரும்பிவரும்
புலவர் மனம்போற் சுடுநெருப்பைப்
புழுகென் றிறைத்தால் பொறுப்பாளோ?
அடவிக் கதலிப் பசுங்குருத்தை
நச்சுக் குழலென் றஞ்சியஞ்சி
அஞ்சொற் கிளிகள் பஞ்சரம்விட்
டகலா நிற்கு மகளங்கா!
திடமுக் கடவா ரணமுகைத்த
தேவே! சோழ சிங்கமே!
திக்கு விசயஞ் செலுத்தியொரு
செங்கோல் நடாத்து மெங்கோவே!

— பெருந்தொகை

## அன்பிலான் இட்ட அமுது

வாயிலொன்று கல்லுமொன்று நெல்லுமான அன்னமும்
வாடலாக ஆறுமாதம் வைத்திருந்த கத்தரிக்
காயிலிட்ட கறியுமுப்பி லாதகஞ்சி வண்ணமும்
காம்பொடிந்த வோரகப்பை கைப்பிடித்த வண்ணமும்
தூயதாய்த்து லக்கலின்றி யழுக்கடைந்த பாத்திரம்
தூக்கியுள் ளசுத்தநீர் துறுத்துவந்த நேர்த்தியும்
ஓயலின்றி ஈக்கள்வீழ்ந்து மொலுமொலென்ற சட்டியும்
உடன்கொணர்ந்த நாகதேவ னூண்மறப்ப தில்லையே!

— அந்தகக்கவி வீரராகவ முதலியார்

## பட்டினத்தார் பரிவுரை

நாப்பிளக்கப் பொய்யுரைத்து நவநிதியந் தேடி
நலமொன்று மில்லாத நாரியரைக் கூடி,
பூப்பிளக்க எழுகின்ற புற்றீசல் போல,
புலபுலெனக் கலகலெனப் புதல்வர்களைப் பெறுவீர்;
காப்பதற்கும் வகையறியீர்; கைவிடவு மாட்டீர்;
கவட்டுமரத் திடுக்கதனில் கால்நுழைத்துக் கொண்டே
ஆப்பதனை அசைத்துவிட்ட பேய்க்குரங்கு போல
அகப்பட்டீர் கிடந்துழல அகப்பட்டீர் நீரே!

— பெருந்தொகை

## வெண்ணெய் வள்ளல்

மோட்டெருமை வாவிபுக முட்டுவரால் கன்றென்று
வீட்டளவும் பால்சொரியும் வெண்ணெயே—நாட்டில்
அடையா நெடுங்கதவு மஞ்சலென்ற சொல்லும்
உடையான் சரராம னூர்.

— புகழேந்தியார்

## மாந்தைத் தியாகி

மாந்தையிலே வாழு மகுடத் தியாகி!உனக்
கேந்து தழும்போ இரண்டுண்டு:—வேந்தர்
முடித்தழும்புன் காலிலே, முத்தமிழோர்க் கீயும்
படித்தழும்புன் கையிலே பார்.

— பெருந்தொகை

## சேந்தன் பெருமை

இன்னமிழ்த மூட்டி யெழில்வளைசேர் முன்கைக்கொண்டு
என்னையர்பேர் சொல்லென் றிரந்தாலும்-தென்னையம்பைச்
செஞ்சுடர்வாள் வெஞ்சினவேல் சீர்ச்சேந்தன் என்னுமால்
கிஞ்சுகவா யஞ்சொற் கிளி.

— பெருந்தொகை

## வறுமையே, சற்றே இரு!

நீளத் திரிந்துழன்ருய் நீங்கா நிழல்போல
நாளைக் கிருப்பாயோ நல்குரவே!—காளத்தி
நின்றைக்கே சென்றக்கால் நீயெங்கே நானெங்கே
இன்றைக்கே சற்றே யிரு!

— மதுர கவிராயர்

## பள்ளி கொண்டான் புகழ்

வள்ளிகொண் டான்மயி லேறிக்கொண்
டான்மதி போலுமலை
வெள்ளிகொண் டான்விடை யேறிக்கொண்
டான்விண் ணவர்க்கமுதம்
துள்ளிகொண் டான்புள்ளி லேறிக்கொண்
டான்சுப சோபனஞ்சேர்
பள்ளிகொண் டான்புக ழேறிக்கொண்
டானென்று பார்ப்பதற்கே.

— பெருந்தொகை

## கூற்றினும் கொடியர்

போற்றினும் போற்றுவர், பொருள்கொ டாவிடின்
தூற்றினும் தூற்றுவர், சொன்ன சொற்களை
மாற்றினும் மாற்றுவர், வன்க ணாளர்கள்
கூற்றினும் பாவலர் கொடிய ராவரே!

— பெருந்தொகை

## வஞ்சியான் வஞ்சித்தான்

வஞ்சியே னென்றவன்ற னூருரைத்தான்; யானுமவன்
வஞ்சியா னென்பதனல் வாய்நேர்ந்தேன்;—வஞ்சியான்
'வஞ்சியேன் வஞ்சியேன்' என்றுரைத்தும் வஞ்சித்தான்
வஞ்சியாய்! வஞ்சியார் கோ.

— பெருந்தொகை

## விக்கிரமன் வீரம்

மாறுபடு மன்னவர் தங் கைபூண்ட வாளிரும்பு
வேறுமவர் கால்பூண்டு விட்டதே—சீறிமிக
வேட்டந் திரிகளிற்று விக்கிரம பாண்டியன் தன்
நாட்டங் கடைசிவந்த நாள்.

— பெருந்தொகை

## கடைத்தலை காத்தது இளந்தலை

முத்தலை சிந்தும் பொருநா நதித்துறை மூழ்கியெழுந்து
அத்தலை நின்று விடாயாறிக் கல்வி யளைந்துநறுங்
கொத்தலர் சண்பகக் காவொடு நின்று குலாவியயான்
இத்தலை வந்துன் கடைத்தலை காத்த திளந்தலையே.

— பெருந்தொகை

## புயல்

எல்லைநீர் வையகத் தெண்ணிறந்த எவ்வுயிர்க்கும்
சொல்லரிய பேரின்பந் தோற்றிய தால்—முல்லைசேர்
தாதலைத்து வண்கொன்றைத் தாரலைத்து வண்டார்க்கப்
பூதலத்து வீழ்ந்த புயல்.

— பெருந்தொகை

## உழவின் பெருமை

காராளர் அணிவயலில் உழுது தங்கள்
கையார நட்டமுடி திருந்தில் இந்தப்
பாராளுந் திறல்அரசர் கவித்த வெற்றிப்
பசும்பொன்மணி முடிதிருந்தும்; கலப்பை பூண்ட
ஏரால்எண் திசைவளர்க்கும் புகழ்வே ளாளர்
ஏரடிக்கும் சிறுகோலால் தரணி யாளச்
சீராரு முடியரசர் இருந்து செங்கோல்
செலுத்துவர்;வே ளாளர்புகழ் செப்ப லாமோ!

— சேக்கிழார் புராணம்

## காராளர் கை

மேழி பிடிக்குங்கை வேல்வேந்தர் நோக்குங்கை
ஆழி தரித்தே அருளுங்கை—சூழ்வினையை
நீக்குங்கை என்றும் நிலைக்கும்கை நீடுழி
காக்கும்கை காராளர் கை.

## நெடுஞ்சுவரே, நில்!

மற்கொண்ட திண்புயத்தான் மாநகர்விட் டிங்குவந்தேன்
சொற்கொண்ட பாவின் சுவையறிவா ரீங்கிலையே!
விற்கொண்ட வாணுதலாள் வேலி தருங்கூலி
நெற்கொண்டு போமளவும் நில்லாய் நெடுஞ்சுவரே!

## மனம் மறக்குமோ?

ஆன்பாலுந் தேனும் அரம்பைமுதல் முக்கனியும்
தேன்பாய வுண்டு தெவிட்டுமனம்—தீம்பாய்
மறக்குமோ வெண்ணெய் வருசடையா! கம்பன்
இறக்கும்போ தல்லால் இனி?

## இடம் இல்லையோ?

காதம் இருபத்து நான்கொழியக் காசினியை
ஓதக் கடல்கொண் டொளித்ததோ?—மேதினியில்
கொல்லிமலைத் தேன்சொரியும் கொற்றவா! நீமுனிந்தால்
இல்லையோ எங்கட்கு இடம்?

## கொள்ளாத வேந்துண்டோ?

மன்னவனு நீயோ? வளநாடு முன்னதோ?
உன்னையறிந் தோதமிழை ஓதினேன்?—என்னை
விரைந்துஏற்றுக் கொள்ளாதவேந்து உண்டோ? உண்டோ
குரங்குஏற்றுக் கொள்ளாத கொம்பு?

— கம்பர்(?)

## எல்லை வரையறை

வாணன் புகழ்க்குஎல்லை வாழ்த்துவோர் நாவெல்லை;
வாணன் புகழ்க்குஎல்லை மண்ணெல்லை;—வாணன்
படைக்கெல்லை திக்கெல்லை; பைந்தமிழ்தேர் வாணன்
கொடைக்கெல்லை ஏற்பவர்தம் கோள்.

— பெருந்தொகை

## சீதக்காதி

ஓர்தட்டி லேபொன்னும் ஓர்தட்டி
லேநெல்லும் ஒக்கவிற்கும்
கார்தட் டியபஞ்ச காலத்தி
லேதங்கள் காரியப்பேர்
ஆர்தட் டினுந்தட்டு வாராம
லேஅன்ன தானத்துக்கு
மார்தட் டியதுரை மால்சீதக்
காதி வரோதயனே.

மறந்தா கிலுமரைக் காசுங் கொடாமட மாந்தர்மண்மேல்
இறந்தாவ தென்ன, இருந்தாவ தென்ன? இறந்துவிண்
சிறந்தாளுங் காயற் றுரைசீதக் காதி திரும்பிவந்து [போய்ச்
பிறந்தா லொழியப் புலவோர் தமக்குப் பிழைப்பில்லையே!

— படிக்காசுப் புலவர்

## தலை விலை

அந்தநாள் வந்திலை அருங்கவிப் புலவோய்!
இந்தநாள் வந்துநீ நொந்தெனை யடைந்தாய்;
தலைதனைக் கொடுபோய்த் தம்பிகைக் கொடுத்ததன்
விலைதனை மீட்டுஉன் வெறுமைநோய் களையே.

— குமணன் (?)

## கந்தப்பா, பாதம் காட்டப்பா!

சந்தப்பா விருத்தப்பா கலிப்பா வெண்பா
தாழிசைப்பா கொச்சகப்பா தனிப்பா வுக்கும்
விந்தைப்பா வாகியகி ரந்தப் பாவும்
வெல்லப்பா வதுபோல விகடப் பாவும்
எந்தப்பா வுரைத்திடினு மொருபே றில்லா
ஏதப்பா விக்குநின திணைப்பா தத்தைக்
கந்தப்பா! முருகப்பா! போரி வாழ்வே!
கையப்பா மெய்யப்பா காட்டப்பாவே.

— தனிச் செய்யுள்

## பிரிவுத் துயர்

கன்னல்எனும் சிறுகுருவி
ககனமழைக்கு ஆற்ருமல்
மின்னல்எனும் புழுவெடுத்து
விளக்கேற்றும் கார்காலம்
மன்னவனுந் தென்மதுரை
மாவலிவா ணனைப்பிரிந்திங்கு
என்னபிழைப்பு என்னஇருப்பு
என்ன நகைப்பு இன்னமுமே!

— பெருந்தொகை

## இன்பமும் துன்பமும்

கல்லா மழலைக் கனியூறல் கலந்து கொஞ்சும்
சொல்லால் உருக்கி, அழுதுஓடித் தொடர்ந்துபற்றி
மல்லார் புயத்தில் விளையாடு மகிழ்ச்சி மைந்தர்
இல்லா தவர்க்கு மனைவாழ்வின் இனிமை யென்னும்?

— வில்லி பாரதம்

மதலையைப் பெறுநாள் துன்பம்; வளர்த்திடும் நாளும் துன்பம்;
விதலைநோ யடையில் துன்பம்; வியன்பரு வத்தும் துன்பம்;
கதமுறு காலர் வந்து கைப்பற்றில் கணக்கில் துன்பம்;
இதமுறல் எந்நாள் சேயால் என்றைக்கும் துன்ப மானல்?

— குசேலோபாக்கியானம்

## நாளும் சாவும்

பாளையாம் தன்மை செத்தும், பாலனும் தன்மை செத்தும்
காளையாம் பருவம் செத்தும், காமுறும் இளமை செத்தும்
மீளுமிவ் வயது மின்னே மேல்வரு மூப்பு மாகி
நாளுநாட் சாகின் றுமால் நமக்குநாம் அழாத தென்னே!

— குண்டலகேசி

## பொடிப் பாட்டு

கொடியணி மாட மோங்கிக் குலவுசீ ராணைக் காவில்
படியினி லுள்ளார் செய்த பாக்கிய மனையான், செங்கைத்
தொடியினர் மதனன், சோம சுந்தரன் கடையிற் செய்த
பொடியினைப் போடா மூக்குப் புண்ணியஞ் செய்யா மூக்கே.

— தியாகராசச் செட்டியார், சாமிநாதையர்

## பொன் ஆக்கினுன்

தில்லையிற்பொன் னம்பலத்தைச்
செம்பொனல் வேய்ந்துவான்
எல்லையைப்பொன் ஆக்கினுன்
என்பரால்—ஒல்லை
வடவேந்தர் செல்வமெலாம்
வாங்கவேல் வாங்குங்
குடைவேந்தன் தொண்டையார் கோ.

— கல்வெட்டுப் பாட்டு

## என்ன பகை?

உலைக்குரிய பண்டம் உவந்திரக்கச் சென்றல்
கொலைக்குரிய வேழம் கொடுத்தான்—கலைக்குரிய
வாணர்கோன் ஆறை மகதேச னுக்குஇந்தப்
பாணரேடு என்ன பகை?

— பெருந்தொகை

## வள்ளல் தன்மை

படைமயக் குற்ற போதும்
படைமட மொன்றி லாதான்
மடைசெறி கடகத் தோளான்
மதிக்குடை மன்னர் மன்னன்
கெடிமன்னர் வணங்குந் தாளான்
கிருட்டிண ராயன் கைபோல்
கொடைமடம் என்பது அம்ம
வரையாது கொடுத்த லாமே.

— சூடாமணி நிகண்டு

# அம்மானை

வற்றாத வையையிலும் வாள்விசயன் தன்கையிலும்
பற்றும லண்ணல்அடி பட்டனர்காண் அம்மானை:
பற்றும லண்ணல்அடி பட்டனரே யாமாயின்
பெற்றோரில் லாதசிறு பிள்ளையோ அம்மானை?
பிள்ளை மதியுடைய பித்தர்காண் அம்மானை.

கற்றைச் சடைமுடியார் கச்சியே கம்பருக்கு
நெற்றிக்கண் ணொன்று நெருப்பதுகா ணம்மானை;
நெற்றிக்கண் ணொன்று நெருப்பதுவே யாமாயின்
பற்றிச் சடையிற் படராதோ அம்மானை?
படருமென்றே கங்கை பதிவிருந்தாள் அம்மானை.

மன்னுவெள்ளி யம்பலமும் மாசறுபொன் னம்பலமும்
என்னுடைய ஈசற் கிவைஇரண்டுண்டு அம்மானை;
என்னுடைய ஈசற் கிவைஇரண்டுண் டாமாயின்
இன்னும்இருப் பம்பலம்ஒன் றில்லையோ அம்மானை?
இருப்பம் பலம்அடியார் இதயங்காண் அம்மானை.

செல்லார் வலஞ்சுழியிற் செங்கழுநீர்ப் பிள்ளையார்
எல்லார்க்கும் நல்லவரம் ஈவர்காண் அம்மானை;
எல்லார்க்கும் நல்லவரம் ஈவரே யாமாயின்
தொல்லுலகில் உள்ளோர் துதியாரோ அம்மானை?
துதிக்கை அவர்தமக்குச் சொந்தமன்றோ அம்மானை?

அம்புலியூர் என்னும் அணிகொள் சிதம்பரத்தே
வெம்புலியொன்று எந்நாளும் மேவுங்காண் அம்மானை;
வெம்புலியொன் றெந்நாளும் மேவுமே யாமாயின்
அம்பலத்தைத் தான்விட் டகலாதோ அம்மானை?
ஆட்டைவிட்டு வேங்கை யகலுமோ அம்மானை?

— தனிச் செய்யுட் சிந்தாமணி

## பணத்தின் பண்பு

பணந்தானே அறிவாகும்; பணந்தானே
வித்தையுமாம்; பரிந்து தேடும்
பணந்தானே மணமாகும்; பணமில்லா
தவர்பிணத்தின் பான்மை யன்றோ?
பணந்தானே பேசுவிக்கும்; தண்டலைநீள்
நெறியாரே! பாரின் மீது
பணந்தானே பந்தியிலே; குலந்தானே
குப்பையிலே படுக்குந் தானே.

## பொறுமைப் பரிசு

கறுத்தவிடம் உண்டருளும் தண்டலையார்
வளநாட்டில் கடிய தீயோர்
குறித்தமனை யாளரையில் துகிலுரிந்தும்
ஐவர் அன்று கோபித் தாரோ?
பறித்தரிய பொருள்முழுதுங் கவர்ந்தாலும்
அடித்தாலும் பழிசெய் தாலும்
பொறுத்தவரே அரசாள்வர்; பொங்கினவர்
காடுறைந்து போவர் தாமே.

## பெரியோரும் சிறியோரும்

பொறுமையுடன் அறிவுடையார் அடங்கிநடந்
தேளவரும் புகழ வாழ்வார்;
கெறுவமுடன் அகந்தைஉள்ளார் இறுமாந்து
நடந்துதலை கீழா வீழ்வார்;
மறுமையினும் இம்மையினும் காணவருந்
தண்டலையார் வாழு நாட்டில்
நிறைகுடமோ தளும்பாது; குறைகுடமே
கூத்தாடி நிற்குந் தானே.

## கல்லாதான் கவி

பாரறிய நாமரிய புலவரென்பார்
கல்வியினில் பயிற்சி இல்லார்
சீரறியார் தளையறியார் சிவிகையே
றுவர்புலமை செலுத்திக் கொள்வார்;
ஆரணியுந் தண்டலைநீள் நெறியாரே!
இலக்கணநூல் அறியா ரேனும்
காரிகையா கிலுங்கற்றுக் கவிசொல்லார்
பேரிகொட்டக் கடவர் தாமே.

## முழு மூடர்

சிறியவராம் முழுமூடர் துரைத்தனமாய்
உலகாளத் திறம்பெற் ருலும்
அறிவுடையார் தங்களைப்போல் அன்புடையார்
புகழுடையா ராக மாட்டார்;
மறிதருமான் மழுஏந்தும் தண்டலைநீள்
நெறியாரே! வாரி வாரிக்
குறுணிமைதா னிட்டாலும் குருடிகண்நற்
கண்ணுகிக் குணங்கொ டாதே.

## சிறியோர் அடங்கார்

சங்கையறப் படித்தாலும், கேட்டாலும்,
பிறர்க்குறுதி தனைச்சொன் ஞலும்
அங்கணுல கிற்சிறியோர் தாம்அடங்கி
நடந்துகதி அடைய மாட்டார்;
திங்கள்அணி சடையாரே! தண்டலையா
ரே!சொன்னேன்: சிறிது காலம்
கங்கையிலே படர்ந்தாலும் பேய்ச்சுரைக்காய்
நல்லசுரைக் காயா காதே!

— சாந்தலிங்கக் கவிராயர்

# சோமேசர் முதுமொழி வெண்பா

## கல்லாமை

மெய்த்ததிரு வள்ளுவனார் வென்றுயர்ந்தார்; கல்விநலந்
துய்த்தசங்கத் தார்தாழ்ந்தார் சோமேசா!—உய்த்தறியின்
மேற்பிறந்தா ராயினுங் கல்லாதார் கீழ்ப்பிறந்தும்
கற்றா ரனைத்திலர் பாடு.

## மடியின்மை

பொன்மலையின் வேங்கை பொறித்துமீண் டான்சென்னி
தொன்மைவலி யாண்மையினால் சோமேசா!—பன்னின்
மடியிலா மன்னவ னெய்து மடியளந்தான்
தாஅய தெல்லா மொருங்கு.

## வினைத்திட்பம்

செவ்வேளைப் பாலனென எள்ளித் திறலழிந்தான்
துவ்வாத வெஞ்சூரன் சோமேசா!—வவ்வா
உருவுகண்டு எள்ளாமை வேண்டும் உருள்பெருந்தேர்க்
கச்சாணி யன்னா ருடைத்து.

## பகைத்திறம் தெளிதல்

நந்தி கலம்பகத்தால் மாண்டகதை நாடறியும்
சுந்தரஞ்சேர் தென்குளத்தூர்ச் சோமேசா!—சந்ததமும்
வில்லே ருழவர் பகைகொளினுங் கொள்ளற்க
சொல்லே ருழவர் பகை.

## மருந்து

நல்ல திலகவதி யார்மொழியை நம்பிவெந்நோய்
சொல்லரசர் தீர்ந்துய்ந்தார் சோமேசா!—புல்லியதன்
நோய்நாடி நோய்முதல் நாடி அதுதணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் செயல்.

— சிவஞான முனிவர்

## உடைமையும் வறுமையும்

சிறியரே மதிக்கும் இந்தச்
        செல்வம்வந் துற்ற ஞான்றே
வறியபுன் செருக்கு மூடி
        வாயுளார் மூக ராவர்;
பறியணி செவியு ளாரும்
        பயில்தரு செவிட ராவர்;
குறிபெறு கண்ணு ளாரும்
        குருடராய் முடிவ ரன்றே?

பொருவறு பந்த மெல்லாம்
        புணர்த்திடும்; தெய்வச் சிந்தை
ஒருவமே லிட்டு நிற்கும்;
        உறக்கமும் இறக்கச் செய்யும்;
கருவினுட் புகுத்தும்; இன்ன
        கரிசுகண் டதனு லன்றே
இருநிலத் திடைவெ றுக்கை
        என்மனுர் புலமை சான்றேர்?

முறைதவிர் கொடுங்கோல் மன்னர்
        முனிவிற்கு நனியு மச்சம்
கறைகெழு கரவு செய்வார்
        கரத்திற்கு மழற்கு மச்சம்
மறைவறு தாய மாக்கள்
        வௌவுவ ரென்று மச்சம்
அறைபொருள் பெற்றுர் அல்லர்
        அச்சமே பெற்றுர் போலும்!

வளநிதி படைத்தோம் என்றும்
வடிவிலு லுடையோம் என்றும்
அளவில்சே யீன்றே மென்றும்
அனுபவத்து அமைந்தோ மென்றும்
இளமையில் சிறந்தோம் என்றும்
எழில்நலம் உடையோம் என்றும்
உளமகிழ் கூர்வர் சற்றும்
உண்மைநூல் உணர்ச்சி யில்லார்.

பல்லெலாம் தெரியக் காட்டிப்
பருவரல் முகத்திற் கூட்டிச்
சொல்லெலாம் சொல்லி நாட்டித்
துணைக்கரம் விரித்து நீட்டி
மல்லெலாம் அகல ஓட்டி
மானம்என் பதனை வீட்டி
இல்லெலாம் இரத்தல் அந்தோ
இழிவுஇழிவு எந்த ஞான்றும்!

## அல்லல் விளைக்கும் செல்வம்

'பல்கதிர் விரித்துத் தோன்றிப்
பாடுசெய் கதிரே போல
மல்லல்நீர் உலகில் தோன்றி
மறைந்திடும் நும்மை விட்டுச்
செல்வம்'என்று உறுவ தற்கும்
'செல்வம்'என்று உரைக்கும் பேர் நன்று!
அல்லலை விளைப்பது; ஆகாது
அரும்பெறற் செல்வம் பாவாய்!

செல்வம்வந் துற்ற காலைத்
தெய்வமும் சிறிது பேணார்
சொல்வன அறிந்து சொல்லார்
சுற்றமும் துணையும் நோக்கார்
வெல்வதே நினைவ தல்லால்
வெம்பகை வலிதென்று எண்ணார்
வல்வினை விளைவை ஓரார்
மண்ணின்மேல் வாழும் மாந்தர்.

— தேவராசப் பிள்ளை

## பந்தாட்டப் பாட்டு

பொன்னி லங்கு பூங்கொடி பொலம்செய் கோதை வில்லிட
மின்னி லங்கு மேகலைகள் ஆர்ப்ப ஆர்ப்ப எங்கணும்,
'தென்னன் வாழ்க வாழ்க' சென்று என்றுபந் தடித்துமே
'தேவ ரார மார்பன் வாழ்க' என்றுபந் தடித்துமே.

பின்னு முன்னும் எங்கணும் பெயர்ந்து வந்தெ ழுந்துலாய்
மின்னு மின்னி ளங்கொடி வியனி லத்தி ழிந்தெனத்
'தென்னன் வாழ்க வாழ்க' என்று சென்றுபந் தடித்துமே
'தேவ ரார மார்பன் வாழ்க' என்றுபந் தடித்துமே.

துன்னி வந்து கைத்தலத் திருந்த தில்லை; நீணிலந்
தன்னி னின்றும் அந்தரத் தெழுந்த தில்லை; தானெனத்
'தென்னன் வாழ்க வாழ்க' என்று சென்றுபந் தடித்துமே
'தேவ ரார மார்பன் வாழ்க' என்றுபந் தடித்துமே.

— இளங்கோவடிகள் (சிலப்பதிகாரம்)

முத்தம் வாய்பு ரித்தன மொய்க திர்ப்ப சும்பொனுல்
சித்தி ரத்தி யற்றிய செல்வம் மல்கு பன்மணி
பத்தி யிற்கு யிற்றிவான் பதித்து வைத்த போல்வன
இத்தி றத்த பந்தெறிந்து இளையர் ஆடு பூமியே.

வைத்த பந்தெ டுத்தலும், மாலை யுட்க ரத்தலும்,
கைத்த லத்தின் ஓட்டலும் கண்ணி நெற்றி தீட்டலும்
பத்தி யிற்பு டைத்தலும் பைய ரவ்வின் ஆடலும்
இத்தி றத்த பந்தினோ டின்ப மெல்லை இல்லையே.

துணையில் தோகை மஞ்ஞை ஈயற் கிவரும் வகைபோல்
மணியார் வளைசேர் முன்கை வலனும் இடனும் போக்கி
இணைஇல் தோழி மார்கள் இறுமால் இடையென்று இரங்க
அணியார் கோதை பூம்பந் தாடும் அவளைக் காண்மின்.

— திருத்தக்கதேவர் (சிந்தாமணி)

பொங்கு கனங்குழை மண்டிய கெண்டை
புரண்டு புரண்டாடக் குழல்
மங்குலில் வண்டு கலைந்தது கண்டு
மதன்சிலை வண்டோட இனி
இங்கிது கண்டுல கென்படு மென்படு
மென்றிடை திண்டாட மலர்ப்
பங்கய மங்கை வசந்த சவுந்தரி
பந்து பயின்றாளே.

சூடக முன்கையில் வால்வளை கண்டிரு
தோள்வளை நின்றாடப் புனை
பாடக முஞ்சிறு பாதமு மங்கொரு
பாவனை கொண்டாட நய
நாடக மாடிய தோகை மயிலென
நன்னகர் வீதியிலே யணி
ஆடக வல்லி வசந்தவொய் யாரி
அடர்ந்துபந் தாடினளே.

இந்திரை யோஇவள் சுந்தரி யோதெய்வ
ரம்பையோ மோகினியோ மன
முந்திய தோவிழி முந்திய தோகர
முந்திய தோளனவே உயர்
சந்திர சூடர் குறும்பல வீசுரர்
சங்கணி வீதியிலே மணிப்
பைந்தொடி நாரி வசந்தவொய் யாரிபொற்
பந்துகொண் டாடினளே.

— திரிகூடராசப்பக் கவிராயர் (குற்றாலக் குறவஞ்சி)

## தமிழ் நாடு

வேழ முடைத்து மலைநாடு; மேதக்க
சோழ வளநாடு சோறுடைத்து;—பூழியர்கோன்
தென்னாடு முத்துடைத்து; தெண்ணீர் வயற்றொண்டை
நன்னாடு சான்றோ ருடைத்து.

— ஔவையார்

## சோழநாடு

கோரத்துக் கொப்போ கனவட்டம் அம்மானே!
கூறுவதுங் காவிரிக்கு வையையோ அம்மானே!
ஆருக்கு வேம்புநிக ராகுமோ அம்மானே!
ஆதித்த னுக்குநிகர் அம்புலியோ அம்மானே!
வீரர்க்குள் வீரனொரு மீனவனோ அம்மானே!
வெற்றிப் புலிக்கொடிக்கு மீன்கொடியோ அம்மானே!
ஊருக்கு உறந்தைநிகர் கொற்கையோ அம்மானே!
ஒக்குமோ சோணாட்டைப் பாண்டிநா டம்மானே!

— ஒட்டக்கூத்தர்

## பாண்டி நாடு

ஒருமுனிவன் நேரியிலோ வுரைதெளித்த தம்மானே!
ஒப்பரிய திருவிளையாட் டுறந்தையிலோ அம்மானே!
திருநெடுமா லவதாரஞ் சிறுபுலியோ அம்மானே!
சிவன்முடியி லேறுவதுஞ் செங்கதிரோ அம்மானே!
கரையெதிரல் காவிரியோ வையையோ அம்மானே!
கடிப்பகைக்குத் தாதகியங் கண்ணியோ அம்மானே!
பரவைபணிந் ததுஞ்சோழன் பதந்தனையோ அம்மானே
பாண்டியனார் பராக்கிரமம் பகர்வரிதே அம்மானே

— புகழேந்திப் புலவர்

அத்தி ருத்தகு நாட்டினை அண்டர்நாடு
ஒத்தி ருக்குமென் றுல்உரை ஒக்குமோ?
எத்தி றத்தினும் ஏழுல கும்புகழ்
முத்தும் முத்தமி ழும்தந்து முற்றலால்.

— கம்பர்

நல்லம்பர் நல்ல குடியுடைத்து; சித்தன்வாழ்வு
இல்லந் தொறுமூன் றெரியுடைத்து;—நல்லரவப்
பாட்டுடைத்து சோமன் வழிவந்த பாண்டிய! நின்
நாட்டுடைத்து நல்ல தமிழ்.

சந்தனப் பொதியச் செந்தமிழ் முனிவனுஞ்
சவுந்தர பாண்டிய னெனுந்தமிழ் நாடனும்
சங்கப் புலவருந் தழைத்தினி திருந்தது
மங்கலப் பாண்டி வளநா டென்ப.

— பெருந்தொகை

செந்தமிழும் சந்தனமுந் திசையெலாம் பரிமளிக்க
மந்தவளி யுமிழ்மலய வரைக்குடுமி நின்றிழிந்து
கொந்தவிழு மலர்வீசிக் குளிர்கெழுமுத் தெடுத்திறைத்து
முந்தவெழு புனற்பொருநை முழுவளத்தது அந்நாடு.

—மீனாட்சிசுந்தரம் பிள்ளை

## நான்மாடக்கூடல் (மதுரை)

ஆடல் புரியு மரனென்றும் மூவர்தமிழ்ப்
பாடல் புரியும் பரனென்றும்—கூடலிலே
நன்னரிவா சிக்கு நடைபயிற்றி னேனென்றுங்
கின்னரிவா சிக்கும் கிளி.

— பெருந்தொகை

## கோபுரக் கொடி

அன்னமிட வாவென் றழைக்குமே, ஆதுலர்க்குச்
சொன்னமெலாம் வாரிச் சொரியுமே,—முன்னமே
மாபுரத்தைத் தீயெரித்து வாழ்சொக்க நாதரெழிற்
கோபுரத்தி லாடுங் கொடி.

— பலபட்டடைச் சொக்கநாதப் புலவர்

## ஆழ்வார் திருநகரி

இதுவோ திருநகரி? ஈதோ பொருநல்?
இதுவோ பரமபதத் தெல்லை?—இதுவோ தான்
வேதந் தமிழ்செய்து மெய்ப்பொருட்கு முப்பொருளாய்
ஓதுஞ் சடகோப னூர்?

— பெருந்தொகை

## ஸ்ரீவில்லிபுத்தூர்

கோதை பிறந்தவூர் கோவிந்தன் வாழுமூர்
சோதி மணிமாடந் தோன்றுமூர்—நீதியால்
நல்லபத்தர் வாழுமூர் நான்மறைக ளோதுமூர்
வில்லிபுத்தூர் வேதக்கோ னூர்.

— பெருந்தொகை

## உறையூர்

குலகிரியின் கொடுமுடிமேல் கொடிவேங்கைக் குறியெழுதி
நிலவுதரு மதிக்குடைக்கீழ் நெடுநிலங்காத் தினிதளிக்கும்
மலர்புகழ்வண் தமிழ்ச்சோழர் வளநாட்டு மாமூதூர்
உலகில்வளர் அணிக்கெல்லாம் உள்ளுறையூ ராமுறையூர்.

— சேக்கிழார்

## புகார்

சென்னி வெண்குடை நீடந பாயன்
திருக்கு லம்புகழ் பெருக்கிய சிறப்பின்
மன்னு தொல்புகழ் மருதநீர் நாட்டு
வயல்வ ளந்தர வியல்பினில் அளித்துப்
பொன்னி நன்னதி மிக்கநீர் பாய்ந்து
புணரி தன்னையும் புனிதமாக் குவதோர்
நன்னெ டும்பெருந் தீர்த்தமுன் னுடைய
நலஞ்சி றந்தது வளம்புகார் நகரம்.

— சேக்கிழார்

## திருவரங்கம்

கங்கையிற் புனித மாய காவிரி நடுவு பாட்டுப்
பொங்குநீர் பரந்து பாயும் பூம்புனல் அரங்கந் தன்னுள்
எங்கள்மால், இறைவன், ஈசன் கிடந்ததோர் கிடக்கை கண்டும்
எங்ஙனம் மறந்து வாழ்கேன் ஏழையேன் ஏழை யேனே!

—தொண்டரடிப்பொடி ஆழ்வார்

## நாகபட்டினம்

மன்னி நீடிய செங்கதி ரவன்வழி மரபில்
தொன்மை யாமுதல் சோழர்தம் திருக்குலத் துரிமைப்
பொன்னி நாடெனும் கற்பகப் பூங்கொடி மலர்போல்
நன்மை சான்றது நாகபட் டினத்திரு நகரம்.

— சேக்கிழார்

## தஞ்சாவூர்

உள்ளும் புறம்பும் குலமரபின்
ஒழுக்கம் வழுக்கா ஒருமைநெறி
கொள்ளும் இயல்பின் குடிமுதலோர்
மலிந்த செல்வக் குலப்பதியாம்
தெள்ளுந் திரைகள் மதகுதொறும்
சேலும் கயலும் செழுமணியும்
தள்ளும் பொன்னி நீர்நாட்டு
மருக நாட்டுத் தஞ்சாவூர்.

— சேக்கிழார்

## திருமுனைப்பாடி நாடு

மறந்தருதீ நெறிமாற மணிகண்டர் வாய்மைநெறி
அறந்தருநா வுக்கரசும் ஆலால சுந்தரரும்
பிறந்தருள உள தானல் நம்மளவோ பேருலகில்
சிறந்ததிரு முனைப்பாடித் திறம்பாடுஞ் சீர்ப்பாடு?

— சேக்கிழார்

## தொண்டை நாடு

நன்மை நீடிய நடுநிலை ஒழுக்கத்து நயந்த
தன்மை மேவிய தலைமைசால் பெருங்குடி தழைப்ப
வன்மை யோங்கெயில் வளம்பதி பயின்றது வரம்பின்
தொன்மை மேன்மையின் நிகழ்பெருந் தொண்டைநன் னாடு.

நற்றி றம்புரி பழையனூர்ச் சிறுத்தொண்டர் நவைவந்து
உற்ற போதுதம் உயிரையும் வணிகனுக்கு ஒருகால்
சொற்ற மெய்ம்மையுந் தூக்கியச் சொல்லையே காக்கப்
பெற்ற மேன்மையில் நிகழ்ந்தது பெருந்தொண்டை நாடு.

—சேக்கிழார்

## காஞ்சி

ஏரி இரண்டும் சிறகா எயில்வயிருக்
காருடைய பீலி கடிகாவாச்—சீரிய
அத்தியூர் வாயா அணிமயிலே போன்றதே
பொற்றோான் கச்சிப் பொலிவு.

— பெருஞ்சித்திரனார்

## திருவொற்றியூர்

பேருலகில் ஓங்குபுகழ்ப் பெருந்தொண்டை நன்னாட்டு
நீருலவுஞ் சடைக்கற்றை நிருத்தர்திருப் பதியாகும்
காருலவு மலர்ச்சோலைக் கன்னிமதில் புடைசூழ்ந்து
தேருலவு நெடுவீதி சிறந்ததிரு வொற்றியூர்.

— சேக்கிழார்

## திருமயிலாபுரி

சொல்வி ளங்குசீர்த் தொண்டைநன் னாட்டிடை
மல்லல் நீடிய வாய்மை வளம்பதி
பல்பெ ருங்குடி நீடு பரம்பரைச்
செல்வ மல்கு திருமயி லாபுரி.

— சேக்கிழார்

### கொடுங்கோளூர்

மாவீற் றிருந்த பெருஞ்சிறப்பின்
மன்னுந் தொன்மை மலைநாட்டுப்
பாவீற் றிருந்த பல்புகழார்
பயிலும் இயல்பிற் பழம்பதிதான்
சேவீற் றிருந்தார் திருவஞ்சைக்
களமும் நிலவிச் சேரர்குலக்
கோவீற் றிருந்து முறைபுரியுங்
குலக்கோ மூதூர் கொடுங்கோளூர்.

—சேக்கிழார்

## ஆற்று வளம்

### காவேரி யாறு

பூவர் சோலை மயிலாலப்
புரிந்து குயில்க ளிசைபாடக்
காமர் மாலை யருகசைய
நடந்தாய் வாழி காவேரி!
காமர் மாலை யருகசைய
நடந்த எல்லாம் நின்கணவன்
நாம வேலின் திறங்கண்டே
அறிந்தேன் வாழி காவேரி!

உழவ ரோதை மதகோதை
உடைநீ ரோதை தண்பதங்கொள்
விழவ ரோதை சிறந்தார்ப்ப
நடந்தாய் வாழி காவேரி!
விழவ ரோதை சிறந்தார்ப்ப
நடந்த எல்லாம் வாய்காவா
மழவ ரோதை வளவன்றன்
வளனே வாழி காவேரி!

வாழி யவன் தன் வள நாடு
மகவாய் வளர்க்குந் தாயாகி
ஊழி யுய்க்கும் பேருதவி
ஒழியாய் வாழி காவேரி!
ஊழி யுய்க்கும் பேருதவி
ஒழியா தொழுகல் உயிரோம்பும்
ஆழி யாள்வான் பகல்வெய்யோன்
அருளே வாழி காவேரி!

மருங்கு வண்டு சிறந்தார்ப்ப
மணிப்பூ வாடை யதுபோர்த்துக்
கருங்க யற்கண் விழித்தொல்கி
நடந்தாய் வாழி காவேரி!
கருங்க யற்கண் விழித்தொல்கி
நடந்த எல்லாம் நின்கணவன்
திருந்து செங்கோல் வளையாமை
அறிந்தேன் வாழி காவேரி!

— இளங்கோவடிகள்

பாடல்சால் சிறப்பின் பரதத் தோங்கிய
கோடாச் செங்கோல் சோழர் தங் குலக்கொடி
கோள் நிலை திரிந்து கோடை நீடினும்
தானிலை திரியாத் தண்டமிழ்ப் பாவை.

— சீத்தலைச் சாத்தனார்

## வையை யாறு

உலகுபுரந் தூட்டும் உயர்பே ரொழுக்கத்துப்
புலவர் நாவில் பொருந்திய பூங்கொடி
வையை என்ற பொய்யாக் குலக்கொடி.

— இளங்கோவடிகள்

## பொருநை யாறு

தென் தமிழ்நாட் டகன்பொதியில் திருமுனிவன்
தமிழ்ச்சங்கம் சேர்கிற் பீரேல்,
என்றுமவ னுறைவிடமா மாதலினல்
அம்மலையை யிறைஞ்சி யேகிப்
பொன் திணிந்த புனல்பெருகும் பொருநையெனும்
திருநதிபின் பொழிய நாகக்
கன்றுவளா தடஞ்சாரல் மகேந்திரமா
நெடுவரையுங் கடலுங் காண்டிர்.

— கம்பர்

## பெண்ணை யாறு

புனப்பண்ணை மணியிெெடும்
புறவின் நறும் புதுமலரின்
கனப்பெண்ணில் திரைசுமந்து
கரைமருங்கு பெரும்பகட்டேர்
இனப்பண்ணை உழும்பண்ணை
எறிந்துலவி எவ்வுலகும்
வனப்பெண்ண வரும்பெண்ணை
மாநதிபாய் வளம்பெருகும்.

— சேக்கிழார்

## பாலாறு

பாலாறு வளஞ்சுரந்து நல்க மல்கும்
பாளைவிரி மணங்கமழ்பூஞ் சோலை தோறும்
காலாறு கோலிஇசை பாட நீடும்
களிமயில்நின் ருடும்இயல் தொண்டை நாட்டுள்
நாலாறு கோட்டத்துப் புலியூர்க் கோட்டம்
நன்றிபுனை குன்றைவள நாட்டு மிக்க
சேலாறு கின்றவயற் குன்றத் தூரில்
சேக்கிழார் திருமரபு சிறந்த தன்றே.

— சேக்கிழார் புராணம்

பிள்ளை தைவரப் பெருகுபால் சொரிதரு தாய்போல்
மள்ளர் வேனிலின் மணற்றிடர் பிசைந்துகை வருட
வெள்ள நீரிரு மருங்குகால் வழிமிதந் தேறிப்
பள்ள நீள்வயல் பருமடை உழைப்பது பாலி.

— சேக்கிழார்

## காற்று வளம்

### பொதியத் தென்றல்

மலையத்து ஓங்கி மதுரையில் வளர்ந்து
புலவர் நாவில் பொருந்திய தென்றல்.

— இளங்கோவடிகள்

திங்கள்முடி சூடுமலை
தென்றல்விளை யாடுமலை
தங்குமுகில் சூழுமலை
தமிழ்முனிவன் வாழுமலை
அங்கயற்கண் அம்மைதிரு
அருள்சுரந்து பொழிவதெனப்
பொங்கருவி தூங்குமலை
பொதியமலை என்மலையே.

— குமரகுருபரர்

மலர்ச்சூழல் அமர்ந்தினிய வண்டார்க்கும் காலம்
வரிக்குயில்கள் மாவில்இளந் தளிர்கோதும் காலம்
சிலர்க்கெல்லாம் செழுந்தென்றல் அமுதளிக்கும் காலம்
தீவினையேற்கு அத்தென்றல் தீவீசும் காலம்
பலர்க்கெல்லாம் கோன்நந்தி பன்மாடக் கச்சிப்
பனிக்கண்ணார் பருமுத்தம் பார்த்தாடும் காலம்
அலர்க்கெல்லாம் ஐங்கணைவேள் அலர்தூற்றும் காலம்
அகன்றுபோனவர் நம்மை அயர்த்துவிட்ட காலம்.

— நந்திக் கலம்பகம்

## தமிழ் வளம்

சிறைவான் புனல்தில்லைச் சிற்றம்
பலத்தும்என் சிந்தையுள்ளும்
உறைவான் உயர்மதிற் கூடலின்
ஆய்ந்தஒண் தீந்தமிழின்
துறைவாய் நுழைந்தனையோ,அன்றி
ஏழிசைச் சூழல்புக்கோ,
இறைவா! தடவரைத் தோட்குஎன்கொ
லாம்புகுந் தெய்தியதே?

— திருக்கோவையார்

கண்ணுதற்பெருங் கடவுளும்
கழகமோ டமர்ந்து
பண்ணுறத்தெரிந் தாய்ந்தஇப்
பசுந்தமிழ் ஏனை
மண்ணிடைச்சில இலக்கண
வரம்பிலா மொழிபோல்
எண்ணிடைப்படக் கிடந்ததா
எண்ணவும் படுமோ?

தொண்டர் நாதனைத் தூதிடை விடுத்ததும் முதலை
உண்ட பாலனை அழைத்ததும் என்புபெண் ணுருவாக்
கண்டதும்மறைக் கதவினைத் திறந்ததுங் கன்னித்
தண்டமிழ்ச்சொலோ, மறுபுலச் சொற்களோ? சாற்றீர்.

பாரறியு மறிவினுமிப் பார்மேனின்ற
பசுஞானத் தாலுமெட்டிப் பார்க்கொணாத
பேரறிவே! சிற்றறிவேற் கிருளை நீக்கும்
பேரொளியே! அங்கயற்கண் பிரியா தானே!
'யாரறிவார் தமிழருமை?' என்கின் றேனென்
அறிவீனமன்றோ?உன் மதுரை மூதூர்
நீரறியும்; நெருப்பறியும்; அறிவுண் டாக்கி
நீயறிவித் தாலறியும் நிலமுந் தானே!

— பரஞ்சோதியார்

## தமிழின் சீர்மை

நீராரும் கடலுடுத்த நிலமடந்தைக்கு எழிலொழுகும்
சீராரும் வதனமெனத் திகழ்பரத கண்டமிதில்
தக்கசிறு பிறைநுதலுந் தரித்தநறுந் திலகமுமே
தெக்கணமும் அதிற்சிறந்த திரவிடநற் றிருநாடும்;
அத்திலக வாசனைபோல் அனைத்துலகும் இன்பமுற
எத்திசையும் புகழ்மணக்க இருந்தபெருந் தமிழணங்கே!

## தமிழ்த்தாய் வாழ்த்து

பல்லுயிரும் பலவுலகும்
படைத்தளித்துத் துடைக்கினுமோர்
எல்லையறு பரம்பொருள்முன்
இருந்தபடி யிருப்பதுபோல்
கன்னடமும் களிதெலுங்கும்
கவின்மலையா ளமுந்துளுவும்
உன்னுதரத் துதித்தெழுந்தே
ஒன்றுபல ஆயிடினும்
ஆரியம்போல் உலகவழக்
கழிந்தொழிந்து சிதையாஉன்
சீரிளமைத் திறம்வியந்து
செயல்மறந்து வாழ்த்துதுமே!

— சுந்தரம் பிள்ளை

இயற்கையிலே கருத்தாங்கி
இனிமையிலே வடிவெடுத்துச்
செயற்கைகடந் தியலிசையில்
செய்நடமே! வாழியரோ!
பயிற்சிநிலப் பயிர்களெலாம்
பசுமையுற ஒளிவழியே
உயிர்ப்பருளும் திறம்வாய்ந்த
உயர்தமிழ்த்தாய்! வாழியரோ!

— திரு. வி. கலியாணசுந்தர முதலியார்

தேவினை நெஞ்சில் திகழவும் வைத்தாய்;
சித்தியை ஞானியர் செப்பவும் வைத்தாய்;
பாவினை நூலிற் சுவைக்கவும் வைத்தாய்;
பத்தியைத் தொண்டர் புகழ்க்கிடை நட்டாய்;
பூவினைக் காக்கென வேத்தியல் சொற்றாய்;
புத்தியைக் காக்கப் புலவரை யுய்த்தாய்;
யாவினைக் குங்குடி மக்களை வைத்தாய்;
எத்தனை செய்தனை? நற்றமி ழன்னே!

— ரா. இராகவையங்கார்

## புலவர் புகழ் மாலை

### திருவள்ளுவர்

மும்மலையும் முந்நாடும் முந்நதியும் முப்பதியும்
மும்முரசும் முத்தமிழும் முக்கொடியும்—மும்மாவும்
தாமுடைய மன்னர் தடமுடிமேல் தாரன்றே
பாமுறைதேர் வள்ளுவர்முப் பால்?

— திருவள்ளுவமாலை

சமயக் கணக்கர் மதிவழி கூறாது
உலகியல் கூறிப் பொருள்இது என்ற
வள்ளுவன்.

— கல்லாடம்

தேவர் குறளும் திருநான் மறைமுடிவும்
மூவர் தமிழும் முனிமொழியும்—கோவை
திருவா சகமும் திருமூலர் சொல்லும்
ஒருவா சகமென் றுணர். — ஔவையார்

பாலெல்லா நல்லாவின் பாலாமோ? பாரிலுள்ள
நூலெல்லாம் வள்ளுவர்செய் நூலாமோ?—நூலிற்
பரித்தவுரை யெல்லாம் பரிமே லழகன்
தெரித்தவுரை யாமோ? தெளி. — பெருந்தொகை

அறமுரைத் தானும் புலவன்;முப் பாலின்
திறமுரைத் தானும் புலவன்;—குறுமுனி
தானும் புலவன்; தரணி பொறுக்குமோ
யானும் புலவன் எனின்? — பொய்யாமொழிப் புலவர்

## திருஞான சம்பந்தர்

சீரார் சண்பைக் கவுணியர்தம்
தெய்வ மரபில் திகழ்விளக்கே!
தெவிட்டா துளத்தில் தித்திக்கும்
தேனே! அழியாச் செல்வமே!
காரார் மிடற்றுப் பவளமலைக்
கண்ணின் முளைத்த கற்பகமே!
கரும்பே! கனியே! என்னிரண்டு
கண்ணே! கண்ணிற் கருமணியே!
ஏரார் பருவ மூன்றிலுமை
இனிய முப்பா லெடுத்தூட்டும்
என்னு ருயிருக் கொருதுணையே!
இன்பக் குதலை மொழிக்குருந்தே!
பேரார் ஞான சம்பந்தப்
பெருமா னே!நின் திருப்புகழைப்
பேசு கின்றோர் மேன்மேலும்
பெருஞ்செல் வத்திற் பிறங்குவரே!

— இராமலிங்க அடிகள்

## திருநாவுக்கரசர்

இடையருப் பேரன்பும் மழைவாரும்
இணைவிழியும், உழவா ரத்திண்
படையருத் திருக்கரமும், சிவபெருமான்
திருவடிக்கே பதித்த நெஞ்சும்
நடையருப் பெருந்துறவும், வாகீசப்
பெருந்தகைதன் ஞானப் பாடல்
தொடையருச் செவ்வாயும் சிவவேடப்
பொலிவழகும் துதித்து வாழ்வாம்.

— காஞ்சிப் புராணம்

அறிந்து செல்வ முடையானும்
அளகைப் பதியாற் றேழமைகொண்டு
உறழ்ந்த கல்வி யுடையானும்
ஒருவன் வேண்டு மெனவிருந்து
துறந்த முனிவர் தொழும்பரவை
துணைவா! நினைத்தோ ழமைகொண்டான்
சிறந்த அறிவு வடிவமாய்த்
திகழு நுதற்கட் பெருமானே.

— சிவப்பிரகாசர்

## மாணிக்கவாசகர்

வான்கலந்த மாணிக்க வாசக! நின் வாசகத்தை
நான்கலந்து பாடுங்கால் நற்கருப்பஞ் சாற்றினிலே
தேன்கலந்து பால்கலந்து செழுங்கனித்தீஞ் சுவைகலந்தென்
ஊன்கலந்து உயிர்கலந்து உவட்டாமல் இனிப்பதுவே!

— இராமலிங்க அடிகள்

## திருக்கோவையார்

ஆரணங் காணென்பர் அந்தணர்;
யோகியர் ஆகமத்தின்
காரணங் காணென்பர்; காமுகர்
காமநன் னூலிதென்பர்;
ஏரணங் காணென்பர் எண்ணர்;
எழுத்தென்பர் இன்புலவோர்;
சீரணங் காயசிற் றம்பலக்
கோவையைச் செப்பிடினே.

— பெருந்தொகை

## நம்மாழ்வார்

ஈயா டுவதோ கருடற் கெதிரே?
இரவிக் கெதிர்மின் மினியா டுவதோ?
நாயா டுவதோ உறுமிப் புலிமுன்?
நரிகே சரிமுன் னடையா டுவதோ?
பேயா டுவதோ எழிலூர் வசிமுன்?
பெருமா னடிசேர் வகுளா பரணன்
ஓரா யிரமா மறையின் தமிழின்
ஒருசொற் பொருமோ உலகிற் கவியே?

## கம்பர்

இம்பர் நாட்டிற் செல்வமெலாம்
எய்தி அரசாண் டிருந்தாலும்
உம்பர் நாட்டிற் கற்பகக்கா
ஓங்கு நீழல் இருந்தாலும்
செம்பொன் மேரு வனையபுயத்
திறல்சே ரிராமன் திருக்கதையில்
கம்ப நாடன் கவிதையிற்போல்
கற்றோர்க்கு இதயம் களியாதே.

— தனியன்

## சேக்கிழார்

ஒப்பரிய தொண்டர்தம் அருமையும் பெருமையும்,
உவக்கும்அவர் தம்செய்கையும்,
உவமையில் லாச்செய்கை நுட்பமுந் திட்பமும்
உம்பர்கோன் அருள்தட்பமும்
தப்பரிய செந்தமிழ்த் தொடைநடையும் அடையும்
தவாப்பொருள் அணிச்சிறப்பும்
தமிழ்மறை யடங்குபல மந்தணமும் வெள்ளிடைத்
தவிரும்வெற் பெனவிளங்க,
வெப்பரிய முழுமதிக் குடைநிழற்று அனபாயன்
மேயவவை யகநயந்து
வியந்துமெய்ப் பாட்டினெடு பாராட்டி மகிழமேன்
மேல்விரித் தருளியபிரான்
செப்பரிய குன்றையம் பதியருண்மொ ழித்தேவ!
செங்கீரை யாடியருளே!
திருத்தொண்டை நன்னாட்டு வேளாளர் குலதிலக!
செங்கீரை யாடியருளே!

— மீனாட்சிசுந்தரம் பிள்ளை

## படிக்காசுப் புலவர்

மட்டாருந் தென்களந்தைப் படிக்காசன்
உரைத்ததமிழ் வரைந்த ஏட்டைப்
பட்டாலே சூழ்ந்தாலும் மூவுலகும்
பரிமளிக்கும்; பரிந்தவ் வேட்டைத்
தொட்டாலுங் கைமணக்கும்; சொன்னாலும்
வாய்மணக்கும்; துய்ய சேற்றில்
நட்டாலும் தமிழ்ப்பயிராய் விளைந்திடுமே
பாட்டினுறு நளினந் தானே.

— பெருந்தொகை

## கவிஞர் சிறப்பு

வெண்பாவிற் புகழேந்தி; பரணிக்குஓர்
சயங்கொண்டான்; விருத்தம் என்னும்
ஒண்பாவிற் குயர்கம்பன்; கோவைஉலா
அந்தாதிக்கு ஒட்டக் கூத்தன்;
கண்பாய கலம்பகத்திற்கு இரட்டையர்கள்;
வசைபாடக் காள மேகம்;
பண்பாய பகர்சந்தம் படிக்காசுஅ
லாதொருவர் பகரொ ணாதே.

— பலபட்டடைச் சொக்கநாதப் புலவர்

## கபிலக் கல்

வன்கரை பொருது வருபுனற் பெண்ணைத்
தென்கரை உள்ளது தீர்த்தத் துறையது
மொய்வைத் தியலும் முத்தமிழ்க் கபிலன்
மூரிவண் தடக்கைப் பாரிதன் அடைக்கலப்
பெண்ணை மலையற்கு உதவிப் பெண்ணை
அலைபுனல் அழுவத் தந்தரிட் டஞ்செல
மினல்புகும் வீடுபேறு எண்ணிக்
கனல்புகும் கபிலக் கல்லது...

— கல்வெட்டுப் பாட்டு

## தமிழ் நாடு

செந்தமிழ் நாடெனும் போதினிலே —இன்பத்
தேன்வந்து பாயுது காதினிலே—எங்கள்
தந்தையர் நாடென்ற பேச்சினிலே ஒரு
சக்தி பிறக்குது மூச்சினிலே. (செந்தமிழ்)

காவிரி தென்பெண்ணை பாலாறு—தமிழ்
கண்டதோர் வையை பொருநைநதி—என
மேவிய யாறு பலவோடத்—திரு
மேனி செழித்த தமிழ்நாடு. (செந்தமிழ்)

முத்தமிழ் மாமுனி நீள்வரையே—நின்று
மொய்ம்புறக் காக்கும் தமிழ்நாடு—செல்வம்
எத்தனை யுண்டு புவிமீதே—அவை
யாவும் படைத்த தமிழ்நாடு. (செந்தமிழ்)

நீலத் திரைக்கட லோரத்திலே—நின்று
நித்தம் தவஞ்செய் குமரிஎல்லை—வட
மாலவன் குன்றம் இவற்றிடையே—புகழ்
மண்டிக் கிடக்குந் தமிழ்நாடு. (செந்தமிழ்)

கல்வி சிறந்த தமிழ்நாடு—புகழ்க்
கம்பன் பிறந்த தமிழ்நாடு—நல்ல
பல்வித மாயின சாத்திரத்தின்—மணம்
பாரெங்கும் வீசுந் தமிழ்நாடு. (செந்தமிழ்)

வள்ளுவன் தன்னை உலகினுக்கே—தந்து
வான்புகழ் கொண்ட தமிழ்நாடு—நெஞ்சை
அள்ளும் சிலப்பதி காரமென்றோர்—மணி
யாரம் படைத்த தமிழ்நாடு. (செந்தமிழ்)

## தமிழ் மொழி

யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல்
இனிதாவது எங்கும் காணோம்;
பாமரராய், விலங்குகளாய், உலகனைத்தும்
இகழ்ச்சிசொலப் பான்மை கெட்டு,
நாமமது தமிழரெனக் கொண்டுஇங்கு
வாழ்ந்திடுதல் நன்றோ? சொல்லீர்!
தேமதுரத் தமிழோசை உலகமெலாம்
பரவும்வகை செய்தல் வேண்டும்.

யாமறிந்த புலவரிலே கம்பனைப்போல்,
வள்ளுவர்போல், இளங்கோ வைப்போல்,
பூமிதனில் யாங்கணுமே பிறந்ததில்லை;
உண்மை;வெறும் புகழ்ச்சி யில்லை;
ஊமையராய்ச் செவிடர்களாய்க் குருடர்களாய்
வாழ்கின்றோம்; ஒருசொற் கேளீர்:
சேமமுற வேண்டுமெனில் தெருவெல்லாம்
தமிழ்முழக்கம் செழிக்கச் செய்வீர்!

பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள்
தமிழ்மொழியிற் பெயர்த்தல் வேண்டும்;
இறவாத புகழுடைய புதுநூல்கள்
தமிழ்மொழியில் இயற்றல் வேண்டும்;
மறைவாக நமக்குள்ளே பழங்கதைகள்
சொல்வதிலோர் மகிமை இல்லை;
திறமான புலமையெனில் வெளிநாட்டோர்
அதைவணக்கஞ் செய்தல் வேண்டும்.

உள்ளத்தில் உண்மையொளி உண்டாயின்,
வாக்கினிலே ஒளியுண் டாகும்;
வெள்ளத்தின் பெருக்கைப்போல் கலைப்பெருக்கும்
கவிப்பெருக்கும் மேவு மாயின்,
பள்ளத்தில் வீழ்ந்திருக்கும் குருடரெலாம்
விழிபெற்றுப் பதவி கொள்வார்;
தெள்ளுற்ற தமிழமுதின் சுவைகண்டார்
இங்கமரர் சிறப்புக் கண்டார்.

## வாழிய செந்தமிழ்

வாழிய செந்தமிழ்! வாழ்கநற் றமிழர்!
வாழிய பாரத மணித்திரு நாடு!
இன்றெமை வருத்தும் இன்னல்கள் மாய்க!
நன்மைவந் தெய்துக! தீதெலாம் நலிக!
அறம்வளர்ந் திடுக! மறம்மடி வுறுக!
ஆரிய நாட்டினர் ஆண்மையோடு இயற்றும்
சீரிய முயற்சிகள் சிறந்துமிக் கோங்குக!
நந்தே யத்தினர் நாடொறும் உயர்க!
வந்தே மாதரம்! வந்தே மாதரம்!

## நம் நாடு

எந்தையும் தாயும் மகிழ்ந்து குலாவி
        இருந்ததும் இந்நாடே;—அவர்
முந்தையர் ஆயிரம் ஆண்டுகள் வாழ்ந்து
        முடிந்ததும் இந்நாடே;—அவர்
சிந்தையில் ஆயிரம் எண்ணம் வளர்ந்து
        சிறந்ததும் இந்நாடே;—இதை
வந்தனை கூறி மனத்தில் இருத்தி,என்
        வாயுற வாழ்த்தேனோ?—இதை
    'வந்தே மாதரம், வந்தே மாதரம்'
        என்று வணங்கேனோ?

இன்னுயிர் தந்தெமை ஈன்று வளர்த்து,அருள்
        ஈந்ததும் இந்நாடே;—எங்கள்
அன்னையர் தோன்றி மழலைகள் கூறி
        அறிந்ததும் இந்நாடே;—அவர்
கன்னிய ராகி நிலவினி லாடிக்
        களித்ததும் இந்நாடே;—தங்கள்
பொன்னுடல் இன்புற நீர்விளை யாடி,இல்
        போந்ததும் இந்நாடே;—இதை
    'வந்தே மாதரம், வந்தே மாதரம்'
        என்று வணங்கேனோ?

மங்கைய ராயவர் இல்லறம் நன்கு
வளர்த்ததும் இந்நாடே;—அவர்
தங்க மதலைகள் ஈன்றமு தூட்டித்
தழுவியது இந்நாடே;—மக்கள்
துங்கம் உயர்ந்து வளர்கெனக் கோயில்கள்
சூழ்ந்ததும் இந்நாடே;—பின்னர்
அங்கவர் மாய அவருடற் பூந்துகள்
ஆர்ந்ததும் இந்நாடே;—இதை
'வந்தே மாதரம், வந்தே மாதரம்'
என்று வணங்கேனோ?

## பாரத நாடு

### பல்லவி

பாருக்குள் ளே நல்ல நாடு—எங்கள்
பாரத நாடு.

### சரணங்கள்

ஞானத்தி லேபர மோனத்திலே—உயர்
மானத்தி லேஅன்ன தானத்திலே
கானத்தி லேஅமு தாகநி றைந்த
கவிதையி லேஉயர் நாடு—இந்தப் (பாரு)

ஆக்கத்தி லேதொழில் ஊக்கத்திலே—புய
வீக்கத்தி லேஉயர் நோக்கத்திலே
காக்கத் திறல்கொண்ட மல்லர்தம் சேனைக்
கடலினி லேஉயர் நாடு—இந்தப் (பாரு)

ஆற்றினி லேசுனை யூற்றினிலே
காற்றினி லேமலைப் பேற்றினிலே
ஏற்றினி லேபயன் ஈந்திடுங் காலி
இனத்தினி லேஉயர் நாடு—இந்தப் (பாரு)

## விடுதலை

விடுதலை! விடுதலை! விடுதலை!

பறைய ருக்கும் இங்குத் தீயர்
புலைய ருக்கும் விடுதலை;
பரவ ரோடு குறவ ருக்கும்
மறவ ருக்கும் விடுதலை;
திறமை கொண்ட தீமை யற்ற
தொழில்பு ரிந்து யாவரும்
தேர்ந்த கல்வி ஞானம் எய்தி
வாழ்வம் இந்த நாட்டிலே. (விடுதலை)

ஏழை யென்றும் அடிமை யென்றும்
எவனும் இல்லை சாதியில்;
இழிவு கொண்ட மனித ரென்பது
இந்தி யாவில் இல்லையே;
வாழி கல்வி செல்வம் எய்தி
மனம கிழ்ந்து கூடியே,
மனிதர் யாரும் ஒருநி கர்ச -
மான மாக வாழ்வமே. (விடுதலை)

மாதர் தம்மை இழிவு செய்யும்
மடமை யைக்கொ ளுத்துவோம்;
வைய வாழ்வு தன்னில் எந்த
வகையி னும்ந மக்குளே
தாதர் என்ற நிலைமை மாறி
ஆண்க ளோடு பெண்களும்
சரிநி கர்ச மான மாக
வாழ்வம் இந்த நாட்டிலே. (விடுதலை)

## சுதந்திரப் பள்ளு

### பல்லவி

ஆடு வோமே—பள்ளுப்
பாடு வோமே;
ஆனந்த சுதந்திரம்
அடைந்துவிட் டோமென்று. (ஆடுவோமே)

### சரணங்கள்

பார்ப்பானை ஐயரென்ற
காலமும் போச்சே—வெள்ளைப்
பரங்கியைத் துரையென்ற
காலமும் போச்சே—பிச்சை
ஏற்பாரைப் பணிகின்ற
காலமும் போச்சே—நம்மை
ஏய்ப்போருக் கேவல்செய்யும்
காலமும் போச்சே. (ஆடுவோமே)

எங்கும் சுதந்திரம்
என்பதே பேச்சு—நாம்
எல்லோரும் சமமென்பது
உறுதி யாச்சு;
சங்குகொண் டேவெற்றி
ஊது வோமே—இதைத்
தரணிக்கெல் லாமெடுத்து
ஓது வோமே. (ஆடுவோமே)

எல்லோரும் ஒன்றென்னும்
காலம் வந்ததே—பொய்யும்
ஏமாற்றும் தொலைகின்ற
காலம் வந்ததே—இனி
நல்லோர் பெரியரென்னும்
காலம் வந்ததே—கெட்ட
நயவஞ்சக் காரருக்கு
நாசம் வந்ததே. (ஆடுவோமே)

உழவுக்கும் தொழிலுக்கும்
வந்தனை செய்வோம்—வீணில்
உண்டுகளித் திருப்போரை
நிந்தனை செய்வோம்
விழலுக்கு நீர்பாய்ச்சி
மாய மாட்டோம்—வெறும்
வீணருக்கு உழைத்துடலம்
ஓய மாட்டோம். (ஆடுவோமே)

நாமிருக்கும் நாடுநமது
என்ப தறிந்தோம்—இது
நமக்கே உரிமையாம்
என்ப தறிந்தோம்—இந்தப்
பூமியில் எவர்க்கும்இனி
அடிமை செய்யோம்—பரி
பூரணனுக் கேயடிமை
செய்து வாழ்வோம். (ஆடுவோமே)

## கரும்புத் தோட்டத்திலே

பல்லவி

கரும்புத் தோட்டத்திலே—ஆ!
கரும்புத் தோட்டத்திலே

சரணங்கள்

கரும்புத் தோட்டத்திலே—அவர்
கால்களும் கைகளும் சோர்ந்து விழும்படி
வருந்து கின்றனரே!—இந்து
மாதர் தம் நெஞ்சு கொதித்துக் கொதித்துமெய்
சுருங்கு கின்றனரே!—அவர்
துன்பத்தை நீக்க வழியில்லை யோ?ஒரு
மருந்தி தற்கிலையோ?—செக்கு
மாடுகள் போலுழைத் தேங்குகின் றார்,அந்தக்
(கரும்புத் தோட்டத்திலே)

பெண்ணென்று சொல்லிடிலோ—ஒரு
    பேயும் இரங்கும்என் பார்;தெய்வ மே!நினது
எண்ணம் இரங்காதோ?—அந்த
    ஏழைகள் அங்குச் சொரியுங்கண் ணீர்வெறும்
மண்ணிற் கலந்திடுமோ?—தெற்கு
    மாகட லுக்குந டுவினி லே,அங்கோர்
கண்ணற்ற தீவினிலே—தனிக்
    காட்டினிற் பெண்கள் புழுங்குகின் றார்,அந்தக்

(கரும்புத் தோட்டத்திலே)

நாட்டை நினைப்பாரோ?—'எந்த
    நாளினிப் போயதைக் காண்பதெ' ன்று அன்னை
வீட்டை நினைப்பாரோ?—அவர்
    விம்மிவிம் மிவிம்மிய ழுங்குரல்
கேட்டிருப் பாய்காற்றே!—துன்பக்
    கேணியி லேயெங்கள் பெண்க ளழுதசொல்
மீட்டு முரையாயோ?—அவர்
    விம்மி யழவும் திறங்கெட்டுப் போயினர்.

(கரும்புத் தோட்டத்திலே)

நெஞ்சங் குமுறுகிறார்—கற்பு
    நீங்கிடச் செய்யுங் கொடுமையி லேஅந்தப்
பஞ்சை மகளிரெல்லாம்—துன்பப்
    பட்டும டிந்தும டிந்தொரு
தஞ்சமு மில்லாதே—அவர்
    சாகும்வ ழக்கத்தை இந்தக் கணத்தினில்
மிஞ்ச விடலாமோ?—ஹே!
    வீரக ராளி, சாமுண்டி, காளீ!

(கரும்புத் தோட்டத்திலே)

## கிளி விடு தூது

பல்லவி

சொல்ல வல்லாயோ?—கிளியே!
சொல்ல நீ வல்லாயோ?

சரணங்கள்

தில்லை யம்பலத்தே—நடனம்
செய்யும் அமரர்பிரான்—அவன்
செல்வத் திருமகனை—இங்குவந்து
சேர்ந்து கலந்து மகிழ்ந்திடு வாயென்று (சொல்ல)

அல்லிக் குளத்தருகே—ஒருநாள்
அந்திப் பொழுதினிலே—அங்கொர்
முல்லைச் செடியதன்பால்—செய்தவினை
முற்றும் மறந்திடக் கற்றதென் னேயென்று
(சொல்ல)

பாலை வனத்திடையே—தனைக்கைப்
பற்றி நடக்கையிலே—தன்கை
வேலின் மிசையாணை—வைத்துச்சொன்ன
விந்தை மொழிகளைச் சிந்தைசெய் வாயென்று
(சொல்ல)

## நந்த லாலா

காக்கைச் சிறகினிலே நந்த லாலா!—நின்தன்
கரியநிறந் தோன்று தையே, நந்த லாலா!
பார்க்கும் மரங்க ளெல்லாம் நந்த லாலா!—நின்தன்
பச்சைநிறந் தோன்று தையே, நந்த லாலா!
கேட்கு மொலியி லெல்லாம் நந்த லாலா!—நின்தன்
கீத மிசைக்குதடா, நந்த லாலா!
தீக்குள் விரலை வைத்தால் நந்த லாலா!—நின்னைத்
தீண்டு மின்பம் தோன்றுதடா, நந்த லாலா!

## கலைமகள் வழிபாடு

வெள்ளை தாமரைப் பூவில் இருப்பாள்;
வீணை செய்யும் ஒலியில் இருப்பாள்;
கொள்ளை யின்பம் குலவு கவிதை
கூறு பாவலர் உள்ளத் திருப்பாள்;
உள்ள தாம்பொருள் தேடி யுணர்ந்தே
ஓதும் வேதத்தின் உள்நின் ருெளிர்வாள்;
கள்ள மற்ற முனிவர்கள் கூறும்
கருணை வாசகத் துட்பொரு ளாவாள். (வெள்ளைத்)

மாதர் தீங்குரற் பாட்டில் இருப்பாள்;
மக்கள் பேசும் மழலையில் உள்ளாள்;
கீதம் பாடும் குயிலின் குரலைக்
கிளியின் நாவை இருப்பிடங் கொண்டாள்;
கோத கன்ற தொழிலுடைத் தாகிக்
குலவு சித்திரம் கோபுரம் கோயில்
ஈத னைத்தின் எழிலிடை யுற்ருள்
இன்ப மேவடி வாகிடப் பெற்ருள். (வெள்ளைத்)

வஞ்ச மற்ற தொழில்புரிந் துண்டு
வாழும் மாந்தர் குலதெய்வ மாவாள்;
வெஞ்ச மர்க்குயி ராகிய கொல்லர்,
வித்தை யோர்ந்திடு சிற்பியர், தச்சர்,
மிஞ்ச நற்பொருள் வாணிகஞ் செய்வோர்,
வீர மன்னர்,பின் வேதியர் யாரும்
தஞ்ச மென்று வணங்கிடுந் தெய்வம்
தரணி மீதறி வாகிய தெய்வம். (வெள்ளைத்)

தெய்வம் யாவும் உணர்ந்திடுந் தெய்வம்;
தீமை காட்டி விலக்கிடுந் தெய்வம்;
உய்வ மென்ற கருத்துடை யோர்கள்
உயிரி னுக்குயி ராகிய தெய்வம்;
செய்வ மென்ருெரு செய்கை யெடுப்போர்
செம்மை நாடிப் பணிந்திடுந் தெய்வம்;
கைவ ருந்தி உழைப்பவர் தெய்வம்
கவிஞர் தெய்வம், கடவுளர் தெய்வம். (வெள்ளைத்)

செந்த மிழ்மணி நாட்டிடை யுள்ளீர்!
சேர்ந்தித் தேவை வணங்குவம் வாரீர்!
வந்த னம்இவட் கேசெய்வ தென்றால்
வாழி யஃதிங் கெளிதன்று கண்டீர்!
மந்தி ரத்தை முணுமுணுத் தேட்டை
வரிசை யாக அடுக்கி அதன்மேல்
சந்த னத்தை மலரை இடுவோர்
சாத்தி ரம்இவள் பூசனை யன்றாம். (வெள்ளைத்)

வீடு தோறும் கலையின் விளக்கம்,
வீதி தோறும் இரண்டொரு பள்ளி,
நாடு முற்றிலும் உள்ளன ஊர்கள்
நகர்க ளெங்கும் பலபல பள்ளி,
தேடு கல்வியி லாததொ ரூரைத்
தீயி னுக்கிரை யாக மடுத்தல்
கேடு தீர்க்கும் அமுதமென் அன்னை
கேண்மை கொள்ள வழியிவை கண்டீர். (வெள்ளைத்)

இன்ன றுங்கனிச் சோலைகள் செய்தல்,
இனிய நீர்த்தண் சுனைகள் இயற்றல்,
அன்ன சத்திரம் ஆயிரம் வைத்தல்,
ஆல யம்பதி னாயிரம் நாட்டல்,
பின்ன ருள்ள தருமங்கள் யாவும்
பெயர்வி ளங்கி யொளிர நிறுத்தல்,
அன்ன யாவினும் புண்ணியம் கோடி
ஆங்கோர் ஏழைக் கெழுத்தறி வித்தல். (வெள்ளைத்)

நிதிமி குத்தவர் பொற்குவை தாரீர்!
நிதிகு றைந்தவர் காசுகள் தாரீர்!
அதுவு மற்றவர் வாய்ச்சொல் அருளீர்!
ஆண்மை யாளர் உழைப்பினை நல்கீர்!
மதுரத் தேமொழி மாதர்க ளெல்லாம்
வாணி பூசைக் குரியன பேசீர்!
எதுவும் நல்கியிங் கெவ்வகை யானும்
இப்பெ ருந்தொழில் நாட்டுவம் வாரீர்! (வெள்ளைத்)

## பண்டாரப் பாட்டு

அச்ச மில்லை அச்ச மில்லை
அச்ச மென்ப தில்லையே.

இச்ச கத்து ளோரெ லாம்எ
திர்த்து நின்ற போதினும்,
அச்ச மில்லை அச்ச மில்லை
அச்ச மென்ப தில்லையே.

துச்ச மாக எண்ணி நம்மைத்
தூறு செய்த போதினும்,
அச்ச மில்லை அச்ச மில்லை
அச்ச மென்ப தில்லையே.

பிச்சை வாங்கி உண்ணும் வாழ்க்கை
பெற்று விட்ட போதினும்,
அச்ச மில்லை அச்ச மில்லை
அச்ச மென்ப தில்லையே.

இச்சை கொண்ட பொருளெ லாம்இ
ழந்து விட்ட போதினும்,
அச்ச மில்லை அச்ச மில்லை
அச்ச மென்ப தில்லையே.

* * *

நச்சை வாயி லேகொ ணர்ந்து
நண்ப ரூட்டு போதினும்,
அச்ச மில்லை அச்ச மில்லை
அச்ச மென்ப தில்லையே.

பச்சை யூனி யைந்த வேற்ப
டைகள் வந்த போதினும்,
அச்ச மில்லை அச்ச மில்லை
அச்ச மென்ப தில்லையே.

உச்சி மீது வானி டிந்து
வீழு கின்ற போதினும்,
அச்ச மில்லை அச்ச மில்லை
அச்ச மென்ப தில்லையே.

## பாப்பாப் பாட்டு

ஓடி விளையாடு பாப்பா!—நீ
ஓய்ந்திருக்க லாகாது பாப்பா!
கூடி விளையாடு பாப்பா!—ஒரு
குழந்தையை வையாதே பாப்பா!

சின்னஞ் சிறுகுருவி போலே—நீ
திரிந்து பறந்துவா பாப்பா!
வன்னப் பறவைகளைக் கண்டு—நீ
மனதில் மகிழ்ச்சி கொள்ளு பாப்பா!

பாலைப் பொழிந்துதரும் பாப்பா!—அந்தப்
பசுமிக நல்லதடி பாப்பா!
வாலைக் குழைத்துவரும் நாய்தான்—அது
மனிதர்க்குத் தோழனடி பாப்பா!

வண்டி இழுக்கும்நல்ல குதிரை;—நெல்லு
வயலில் உழுதுவரும் மாடு;
அண்டிப் பிழைக்கும் நம்மை ஆடு;—இவை
ஆதரிக்க வேணுமடி பாப்பா!

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற—எங்கள்
தாயென்று கும்பிடடி பாப்பா!
அமிழ்தில் இனியதடி பாப்பா!—நம்
ஆன்றோர்கள் தேசமடி பாப்பா!

சாதிகள் இல்லையடி பாப்பா!—குலத்
தாழ்ச்சி உயர்ச்சிசொல்லல் பாவம்;
நீதி, உயர்ந்தமதி, கல்வி,—அன்பு
நிறைய உடையவர்கள் மேலோர்.

## முரசுப் பாட்டு

வெற்றி எட்டுத் திக்கும் எட்டக்
கொட்டு முரசே!
வேதம் என்றும் வாழ்க என்று
கொட்டு முரசே!
நெற்றி யொற்றைக் கண்ண னோடே
நிர்த்தனம் செய்தாள்
நித்த சக்தி வாழ்க என்று
கொட்டு முரசே!

ஊருக்கு நல்லது சொல்வேன்—எனக்
குண்மை தெரிந்தது சொல்வேன்;
சீருக்கெல் லாம்முத லாகும்—ஒரு
தெய்வம் துணைசெய்ய வேண்டும்.
பெண்ணுக்கு ஞானத்தை வைத்தான்—புவி
பேணி வளர்த்திடும் ஈசன்;
மண்ணுக்குள் ளேசில மூடர்—நல்ல
மாத ரறிவைக் கெடுத்தார்.

தெய்வம்ப லபல சொல்லிப்—பகைத்
தீயைவ ளர்ப்பவர் மூடர்;
உய்வத னைத்திலும் ஒன்றாய்—எங்கும்
ஓர்பொரு ளானது தெய்வம்.
யாரும்ப ணிந்திடும் தெய்வம்,—பொருள்
யாவினும் நின்றிடும் தெய்வம்,
பாருக்குள் ளேதெய்வம் ஒன்று;—இதில்
பற்பல சண்டைகள் வேண்டா.

நிகரென்று கொட்டு முரசே!—இந்த
நீணிலம் வாழ்பவ ரெல்லாம்;
தகரென்று கொட்டு முரசே!—பொய்மைச்
சாதி வகுப்பினை யெல்லாம்.
ஒன்றென்று கொட்டு முரசே!—அன்பில்
ஓங்கென்று கொட்டு முரசே!
நன்றென்று கொட்டு முரசே!—இந்த
நானில மாந்தருக் கெல்லாம்.

## பெண்கள் விடுதலைக் கும்மி

கும்மி யடி! தமிழ் நாடு முழுதும்
குலுங்கிடக் கைகொட்டிக் கும்மியடி!
நம்மைப் பிடித்த பிசாசுகள் போயின
நன்மைகண் டோமென்று கும்மியடி! (கும்மி)

ஏட்டையும் பெண்கள் தொடுவது தீமையென்
றெண்ணி யிருந்தவர் மாய்ந்துவிட்டார்;
வீட்டுக்குள் ளேபெண்ணைப் பூட்டிவைப் போமென்ற
விந்தை மனிதர் தலைகவிழ்ந்தார். (கும்மி)

மாட்டை யடித்து வசக்கித் தொழுவினில்
மாட்டும் வழக்கத்தைக் கொண்டுவந்தே,
வீட்டினில் எம்மிடங் காட்ட வந் தார், அதை
வெட்டிவிட் டோமென்று கும்மியடி! (கும்மி)

பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும்
பாரினில் பெண்கள் நடத்தவந்தோம்;
எட்டும அறிவினில் ஆணுக்கிங் கேபெண்
இளைப்பில்லை காணென்று கும்மியடி! (கும்மி)

## ஆங்கிலப் பயிற்சி

கம்ப னென்றொரு மானிடன் வாழ்ந்ததும்,
காளி தாசன் கவிதைபு னைந்ததும்,
உம்பர் வானத்துக் கோளையும் மீனையும்
ஓர்ந்த ளந்ததோர் பாஸ்கரன் மாட்சியும்,
நம்ப ருந்திற லோடொரு பாணினி
ஞால மீதில் இலக்கணங் கண்டதும்,
இம்பர் வாழ்வின் இறுதிகண் டுண்மையின்
இயல்பு ணர்த்திய சங்கரன் ஏற்றமும்

சேரன் தம்பி சிலம்பை இசைத்ததும்,
தெய்வ வள்ளுவன் வான்மறை செய்ததும்,
பாரில் நல்லிசைப் பாண்டிய சோழர்கள்
பாரளித்ததும், தர்மம் வளர்த்ததும்,
பேர ருட்சுடர் வாள்கொண் டசோகனுர்
பிழைப டாது புவித்தலங் காத்ததும்,
வீரர் வாழ்த்த மிலேச்சர் தந் தீயகோல்
வீழ்த்தி வென்ற சிவாஜியின் வெற்றியும்

அன்ன யாவும் அறிந்திலர் பாரதத்
தாங்கி லம்பயில் பள்ளியுட் போகுநர்;
முன்னர் நாடு திகழ்ந்த பெருமையும்,
மூண்டி ருக்குமிந் நாளின் இகழ்ச்சியும்,
பின்னர் நாடுறு பெற்றியுந் தேர்கிலார்
பேடிக் கல்வி பயின்றுழல் பித்தர்கள்;
என்ன கூறிமற் றெங்ஙன் உணர்த்துவேன்
இங்கி வர்க்கென துள்ளம் எரிவதே!

## கண்ணம்மா - என் குழந்தை

சின்னஞ் சிறுகிளியே!—கண்ணம்மா!
செல்வக் களஞ்சியமே!
என்னைக் கலிதீர்த்தே—உலகில்
ஏற்றம் புரியவந்தாய்!

பிள்ளைக் கனியமுதே!—கண்ணம்மா!
பேசும்பொற் சித்திரமே!
அள்ளி யணைத்திடவே—என்முன்னே
ஆடி வருந்தேனே!

ஓடி வருகையிலே—கண்ணம்மா!
உள்ளங் குளிருதடீ!
ஆடித் திரிதல்கண்டால்—உன்னைப்போய்
ஆவி தழுவுதடீ!

உன்கண்ணில் நீர்வழிந்தால்—என்னெஞ்சில்
உதிரங் கொட்டுதடீ!
என்கண்ணிற் பாவையன்றோ?—கண்ணம்மா!
என்னுயிர் நின்னதன்றோ?

இன்பக் கதைகளெல்லாம்—உன்னைப்போல்
ஏடுகள் சொல்வதுண்டோ?
அன்பு தருவதிலே—உனைநேர்
ஆகுமோர் தெய்வமுண்டோ?

## கண்ணன் — என் விளையாட்டுப் பிள்ளை

தீராத விளையாட்டுப் பிள்ளை—கண்ணன்
தெருவிலே பெண்களுக் கோயாத தொல்லை. (தீராத)

தின்னப் பழங்கொண்டு தருவான்;—பாதி
தின்கின்ற போதிலே தட்டிப் பறிப்பான்;
என்னப்பன் என்னையன் என்றால்—அதனை
எச்சிற் படுத்திக் கடித்துக் கொடுப்பான். (தீராத)

அழகுள்ள மலர்கொண்டு வந்தே—என்னை
அழஅழச் செய்துபின், "கண்ணைமூ டிக்கொள்;
குழலிலே சூட்டுவேன்," என்பான்;—என்னைக்
குருடாக்கி மலரினைத் தோழிக்கு வைப்பான்.(தீராத)

பின்னலைப் பின்னின் றிழுப்பான்;—தலை
பின்னே திரும்புமுன் னேசென்று மறைவான்;
வன்னப் புதுச்சேலை தனிலே—புழுதி
வாரிச் சொரிந்தே வருத்திக் குலைப்பான். (தீராத)

புள்ளாங் குழல்கொண்டு வருவான்;—அமுது
பொங்கித் ததும்புநற் கீதம் படிப்பான்;
கள்ளால் மயங்குவது போலே—அதைக்
கண்மூடி வாய்திறந் தேகேட் டிருப்போம். (தீராத)

அங்காந் திருக்கும்வாய் தனிலே—கண்ணன்
ஆறேழு கட்டெறும் பைப்போட்டு விடுவான்;
எங்காகி லும்பார்த்த துண்டோ?—கண்ணன்
எங்களைச் செய்கின்ற வேடிக்கை யொன்றோ?

(தீராத)

## கண்ணம்மா—என் காதலி

பாயுமொளி நீயெனக்கு,
பார்க்கும்விழி நானுனக்கு;
தோயும்மது நீயெனக்கு,
தும்பியடி நானுனக்கு;
வாயுரைக்க வருகுதில்லை,
வாழிநின்றன் மேன்மையெல்லாம்;
தூயசுடர் வானொளியே!
சூறையமு தே!கண்ணம்மா!

வீணையடி நீயெனக்கு,
மேவும்விரல் நானுனக்கு;
பூணும்வடம் நீயெனக்கு,
புதுவயிரம் நானுனக்கு;
காணுமிடந் தோறுநின்றன்
கண்ணினொளி வீசுதடீ!
மாணுடைய பேரரசே!
வாழ்வுநிலை யே!கண்ணம்மா!

வானமழை நீயெனக்கு,
வண்ணமயில் நானுனக்கு;
பானமடி நீயெனக்கு,
பாண்டமடி நானுனக்கு;
ஞானவொளி வீசுதடி,
நங்கைநின்றன் சோதிமுகம்;
ஊனமறு நல்லழகே!
ஊறுசுவை யே!கண்ணம்மா!

வெண்ணிலவு நீயெனக்கு,
மேவுகடல் நானுனக்கு;
பண்ணுசுதி நீயெனக்கு,
பாட்டினிமை நானுனக்கு;
எண்ணியெண்ணிப் பார்த்திடிலோர்
எண்ணமிலை நின்சுவைக்கே;
கண்ணின்மணி போன்றவளே!
கட்டியமு தே!கண்ணம்மா!

## பாஞ்சாலி சபதம்

துச்சா தனன்எழுந்தே—அன்னை
துகிலினை மன்றிடை யுரிதலுற்ருன்.
'அச்சோ, தேவர்களே!'—என்று
அலறிஅவ் விதுரனுந் தரைசாய்ந்தான்.
பிச்சே றியவனைப்போல்—அந்தப்
பேயனுந் துகிலினை உரிகையிலே,
உட்சோ தியிற்கலந்தாள்;—அன்னை
உலகத்தை மறந்தாள்; ஒருமையுற்ருள்.

'அரி,அரி, அரி' என்ருள்;—'கண்ணா!
அபய மபயமுனக் கபயம்!'என்ருள்.
'கரியினுக் கருள்புரிந்தே - அன்று
கயத்திடை முதலையின் உயிர்மடித்தாய்!
கரியநன் னிறமுடையாய்! - அன்று
காளிங்கன் தலைமிசை நடம்புரிந்தாய்!
பெரியதொர் பொருளாவாய்! - கண்ணா!
பேசரும் பழமறைப் பொருளாவாய்!

'ஆதியி லாதியப்பா! - கண்ணா!
அறிவினைக் கடந்தவிண் ணகப்பொருளே!
சோதிக்குஞ் சோதியப்பா! - என்றன்
சொல்லினைக் கேட்டருள் செய்திடுவாய்!
மாதிக்கு வெளியினிலே—நடு
வானத்திற் பறந்திடும் கருடன்மிசை
சோதிக்குள் ஊர்ந்திடுவாய்,—கண்ணா!
சுடர்ப்பொரு ளே!பே ரடற்பொருளே!

'வையகம் காத்திடுவாய்!—கண்ணா!
மணிவண் ணா,என்றன் மனச்சுடரே!
ஐய,நின் பதமலரே—சரண்.
அரி,அரி, அரி,அரி, அரி!'என்றாள்.
பொய்யர் தந் துயரினைப்போல்,—நல்ல
புண்ணிய வாணர்தம் புகழினைப்போல்,
தையலர் கருணையைப்போல்,—கடல்
சலசலத் தெறிந்திடும் அலைகளைப்போல்

பெண்ணொளி வாழ்த்திடுவார்—அந்தப்
பெருமக்கள் செல்வத்தின் பெருகுதல்போல்
கண்ணபி ரானருளால்,—தம்பி
கழற்றிடக் கழற்றிடத் துணிபுதிதாய்
வண்ணப்பொற் சேலைகளாம்—அவை
வளர்ந்தன, வளர்ந்தன, வளர்ந்தனவே!
எண்ணத்தி லடங்காவே;—அவை
எத்தனை எத்தனை நிறத்தனவோ!

தேவர்கள் பூச்சொரிந்தார்—'ஓம்
செயசெய பாரத சக்தி'என்றே.
ஆவலொ டெழுந்துநின்று—முன்னை
ஆரிய வீட்டுமன் கைதொழுதான்.
சாவடி மறவரெல்லாம்—'ஓம்
சக்தி சக்தி'என்று கரங்குவித்தார்.
காவலின் நெறிபிழைத்தான்,—கொடி
கடியர வுடையவன் தலைகவிழ்ந்தான்.

## வீமன் செய்த சபதம்

வீம னெழுந்துரை செய்வான்:—'இங்கு
விண்ணவ ராணை,ப ராசக்தி யாணை;
தாமரைப் பூவினில் வந்தான்—மறை
சாற்றிய தேவன்தி ருக்கழ லாணை;
மாமக ளைக்கொண்ட தேவன்—எங்கள்
மரபுக்குத் தேவன்கண் ணன்பதத் தாணை
காமனைக் கண்ணழ லாலே—சுட்டுக்
காலனை வென்றவன் பொன்னடி மீதில்

'ஆணையிட் டிஃதுரை செய்வேன்:—இந்த
ஆண்மையி லாத்துரி யோதனன் தன்னை,
பேணும் பெருங்கன லொத்தாள்—எங்கள்
பெண்டு திரௌபதி யைத்தொடை மீதில்
நாணின்றி 'வந்திரு' என்றான்—இந்த
நாய்மக னாந்துரி யோதனன் தன்னை,
மாணற்ற மன்னர்கண் முன்னே,—என்றன்
வன்மையி னால்யுத்த ரங்கத்தின் கண்ணே

'தொடையைப் பிளந்துயிர் மாய்ப்பேன்!—தம்பி
சூரத்துச் சாதனன் தன்னையு மாங்கே
கடைபட்ட தோள்களைப் பிய்ப்பேன்!—அங்குக்
கள்ளென ஊறு மிரத்தங் குடிப்பேன்!
நடைபெறுங் காண்பி ருலகீர்!—இது
நான்சொல்லும் வார்த்தைஎன் றெண்ணிடல் வேண்டா!
தடையற்ற தெய்வத்தின் வார்த்தை,—இது
சாதனை செய்க, பராசக்தி!' என்றான்.

## அருச்சுனன் சபதம்

பார்த்த னெழுந்துரை செய்வான் :—'இந்தப்
பாதகக் கர்ணனைப் போரில் மடிப்பேன்!
தீர்த்தன் பெரும்புகழ் விஷ்ணு—எங்கள்
சீரிய நண்பன்கண் ணன்கழ லாணை!
கார்த்தடங் கண்ணிளந் தேவி—அவள்
கண்ணிலும் காண்டிவ வில்லினும் ஆணை!
போர்த்தொழில் விந்தைகள் காண்பாய், ஹே!
பூதல மேஅந்தப் போதினில்!' என்றான்.

## திரௌபதி சபதம்

தேவி திரௌபதி சொல்வாள் :—'ஓம்,
தேவி பராசக்தி ஆணை யுரைத்தேன்:
பாவிதுச் சாதனன் செந்நீர்,—அந்தப்
பாழ்த்துரி யோதனன் ஆக்கை இரத்தம்,
மேவி இரண்டுங் கலந்து—குழல்
மீதினிற் பூசி நறுநெய் குளித்தே
சீவிக் குழல்முடிப் பேன்யான்!—இது
செய்யுமுன் னேமுடி யேன்!'என் றுரைத்தாள்.

ஓமென் றுரைத்தனர் தேவர் ;—ஓம்
ஓமென்று சொல்லி உறுமிற்று வானம் ;
பூமி யதிர்ச்சிஉண் டாச்சு ;—விண்ணைப்
பூழிப் படுத்திய தாஞ்சுழற் காற்று ;
'சாமி தருமன் புவிக்கே'—என்று
சாட்சி யுரைத்தன பூதங்க ளைந்தும்.
நாமுங் கதையை முடித்தோம்—இந்த
நானில முற்றும்நல் லின்பத்தில் வாழ்க !

## நல்ல மருந்து

நல்ல மருந்திம் மருந்து!—சுகம்
நல்கும் வயித்திய நாத மருந்து! (நல்ல)

சஞ்சலம் தீர்க்கு மருந்து!—எங்கும்
தானேதான் ஆகித் தழைக்கு மருந்து!
அஞ்சலென் றருளு மருந்து!—சச்சி
தானந்த மாக அமர்ந்த மருந்து! (நல்ல)

பால்வண்ண மாகு மருந்து!—அதிற்
பச்சை நிறமும் படர்ந்த மருந்து!
நூல்வண்ண நாடு மருந்து!—உள்ளே
நோக்குகின் றோர்களை நோக்கு மருந்து!
(நல்ல)

பெண்ணாசை தீர்க்கு மருந்து!—பொருட்
பேராசை யெல்லாம் பிளக்கு மருந்து!
மண்ணாசை தீர்க்கு மருந்து!—எல்லாம்
வல்ல மருந்தென்று வாழ்த்து மருந்து (நல்ல)

— இராமலிங்க அடிகள்

## தெண்டனிட்டேன்

இராகம்: தோடி] [தாளம்: ஆதி

பல்லவி

தெண்டனிட்டேன் என்று சொல்லடி!—சுவாமிக்குநான்
தெண்டனிட்டேன் என்று சொல்லடி!

அனுபல்லவி

தண்டலை விளங்குந் தில்லைத் தலத்திற்பொன் னம்பலத்தே
கண்டவர் மயங்க வேடங் கட்டியாடு கின்றவர்க்கு (தெண்ட)

சரணங்கள்

கற்பூர வாசம்வீசும் பொற்பாந் திருமுகத்தே
கனிந்தபுன் னகையாடக் கருணைக்க டைக்கணுட
அற்பார்பொன் னம்பலத்தே ஆநந்தத் தாண்டவம்
ஆடிக்கொண் டேயென்னை ஆட்டங்கண் டாருக்கு
(தெண்ட)

பாட்டுக்காசைப் பட்டுமுன்னம் பரவைதன் வாயிலிற்போய்,
பண்புரைத்துத் தூதனென்றே பட்டங்கட்டிக் கொண் டவர்க்கு
வீட்டுக்காசைப் படுவாரை வீட்டைவிட்டுத் துரத்தியே
வேட்டாண்டி யாய்உலகில் ஓட்டாண்டி யாக்குவார்க்கு

(தெண்ட)

—இராமலிங்க அடிகள்

## தீராத வழக்கு

இராகம் : பைரவி] [தாளம் : ரூபகம்

### பல்லவி

இவர்க்கும் எனக்கும்பெரு வழக்கிருக் கின்றதுஅது
என்றுந்தீரா வழக்குக் காணடி !

### அனுபல்லவி

எவர்க்கும் பெரியவர்பொன் னம்பலத் தேநடம்
இட்டார் எனக்குமாலை யிட்டார்இதோ வந்தார்

(இவர்க்கும்)

### சரணங்கள்

அன்றிதோ வருகின்றேன் என்றுபோ னவரங்கே
ஆர்செய்த தடையாலோ விருந்தாரென் கையிற்சங்கை
இன்றுதங் கையிற்கொண்டே வந்துநிற் கின்றாரிங்கே
இந்தக் கதவைமூடு! இவர்போவ தினியெங்கே?

(இவர்க்கும்)

சின்ன வயதில்என்னைச் சேர்ந்தார்புன் னகையோடு
சென்றார் தயவாலின்று வந்தார் இவர்க்கார்ஈடு?
என்னைவிட்டு இனியிவர் எப்படிப் போவார்?ஓடு
இந்தக் கதவைமூடு! இரட்டைத்தாட் கோலைப்போடு !

(இவர்க்கும்)

— இராமலிங்க அடிகள்

## என்ன வர்மம்?

இராகம் : காம்போதி] [தாளம்: ஆதி

பல்லவி

இன்னம் தயவுவர விலையா?—உனக்கென்மீதில்
என்ன வர்மஞ் சொலையா?

சரணங்கள்

அன்னம் பாலிக்கும் தில்லைப் பொன்னம்ப லத்தி லாடும்
அரசே —அரசே—அரசேஎன்று அலறவும் (இன்)

சின்னஞ் சிறுவயதில் என்னை யடிமைகொண்ட
சிவமே—சிவமே—சிவமேஎன்று அலறவும் (இன்)

தன்னை யறியா என்னை இன்னலு றச்செய் தாயே
தகுமோ—தகுமோ—தகுமோஎன்று அலறவும் (இன்)

— இராமலிங்க அடிகள்

## சண்முகக் கொம்மி

மாமயி லேறி வருவாண்டி !—அன்பர்
வாழ்த்த வரங்கள் தருவாண்டி !
தீமையி லாத புகழாண்டி !—அவன்
கீர்த்தியைப் பாடி யடியுங்கடி !

வேங்கை மரமாகி நின்ருண்டி !—வந்த
வேடர் தமையெலாம் வென்ருண்டி !—அந்தத்
தீங்குசெய் சூரனைக் கொன்ருண்டி !—அந்தத்
தீரனைப் பாடி யடியுங்கடி !

ஆனந்த மான அமுதனடி !—பர
மானந்த நாட்டுக் கரசனடி !
தானந்த மில்லாச் சதுரனடி !—சிவ
சண்முக நங்குரு சாமியடி !

— இராமலிங்க அடிகள்

## சங்கீத சுகம்

இராகம்: பெஹாக்] [தாளம்: ஆதி

பல்லவி

சரிகம பதநியாம் எழுசுர நிலைய
சங்கீத சுகமே பெரியசுகம்—இசை

சரணம்

கரியுரி யுடையவன் அடிதொழு தநுதினம்
கதிபெறும் வகையது கருதுவ துவேமனம்
சுரிகுழல் நெடுவிழி மடவரி வையரினம்
தோய்மன மடையுமோ சுகமௌனம்—இசை (ச)

செவியுண வுக்குநிகர் அவியுண வுமாகாது
தேடி னுலும்உவமை ஓர்பொருள் கிடையாது
குவியுமைம் பொறிஇசை கொண்டிடில் விரியாது
குரங்காம் மனம்ஒடுங்கும் தாவாது—இசை (ச)

## கல்வி

இராகம்: காம்போதி] [தாளம்: சாபு

பல்லவி

கல்வியை யல்லது நல்லப யன்தர
வல்லது சொல்லவுண்டோ உய்வுமுண்டோ

அனுபல்லவி

செல்வ மொழிந்திடுந் தேக மழிந்திடும்
தேவ போகங்களுஞ் சேதம் விளைந்திடும் (க)

சரணம்

தீயாலே வேகாது நீரால் நனையாது
திருடர் கொள்ளலா காது—தன்னைச்
சேர்ந்த சகோதரர் பங்கிட லாகாது
சிந்தை மயங்காது
ஓயாம லீந்தாலும் ஓங்கும் குறையாது
ஒருமையே யெழுமையும் உதவும் தவருது (க)

## பெண் வேஷம்

இராகம் : புன்னாகவராளி] [தாளம் : ஆதி

பெண்வேஷம் போட்டுவிட்டா
இவனுக்கின்று
விண்ணவ ரம்பையை
எண்ணி வியந்திட (பெண்)

விரித்த குழலை எடுத்துக் கூட்டி
முடித்து மலர்கள் தொடுத்துச் சூட்டி (பெண்)

விழியிரு கணையென யெதிர்பவர்விலக
அழகுற எழுதிய கருமையு மிலகப் (பெண்)

நெற்றிச் சுட்டி சடைபில்லை கொப்பு
நிகரறு தலையணி இருபிறை வைப்பு
அட்டிகை வைரம் பட்டை சிவப்பு
அழகிய பதக்கம் உலக மதிப்பு
கம்மல் ஜிமிக்கி புலாக்கொடு நத்து
கண்ட சரப்பளி கண்டிகை முத்து
காசு மாலைகடி காரச் சங்கிலி
கம்பி காறைபொன் சன்னச் சங்கிலி
வாகு வலையமொடு காப்புக் கொலுசு
வளையல் கங்கணவகை பலபல தினுசு
பச்சைநீ லமுத லாம்நவ ரத்னம்
பதித்த தாகபத்து விரலுக்கு மோதிரம்
இறுக்கி மேலேபூட்டும் இடைஒட்டி யாணம்
இணைமுகப் புவயிரம் கழற்காய்ப் பிரமாணம்
பாதசரங் கிண்கிணி தண்டை மயங்கை
பணித்த காலாழிபீலி மிஞ்சி சதங்கை
பக்கஞ் சரிகையுள்ள பட்டு ரவிக்கை
பளபளப் பானசேலை பணியணி விதத்தை
கொண்டுசிங் காரித்துக் கோலமென் மேலே
கோரி யெழுதிமத னரதி போல (பெண்)

கட்டப்பா ரைகையில் கொண்டு குழிதோண்டி
காட்டுக் கழிகள் ஊணி நடுங்கள்
கண்டு மிருகங் குதித்தோடிப் போகாமல்
கான முழுதும் வலைகட் டுங்கள்
கொட்டுத் தவில்பெரும் பம்பை முரசு
கொடிய உறுமி பறைகொட் டுங்கள்
கோர மிருகங்கள் தப்பியோ டாமல்
குடல்கள் சரியக் குத்திவெட் டுங்கள்
ஒப்பற்ற கொம்பு நாகசுரம் எக்காளம்
ஊதிப் பக்கங்கள் எல்லாஞ் செல்லுங்கள்
ஓடிவ ருமிரு கங்கள் தவருமல்
உங்கள் உங்கள் வலியால் வெல்லுங்கள்
தப்பட்டை கொட்டுங்கள் வேட்டு முழக்குங்கள்
தாளங்கள் போட்டுச் சூழ்ந்து நில்லுங்கள்
தாவி வரும்மிரு கங்கள் தவருமல்
சஸ்திர அஸ்திரத் தால்கொல் லுங்கள்
வேலால் எறியுங்கள் வாளாலே வெட்டுங்கள்
வில்லை வளைத்தம்பை எய்தி டுங்கள்
வேட்டைநாய் ஏவுங்கள் ஈட்டியாற் குத்துங்கள்
வீரப்பன் றிதலை கொய்தி டுங்கள்
காலாலே யெற்றுங்கள் கையாலே பற்றுங்கள்
கண்ட கோடரி கொண்டு குத்துங்கள்
கைத்தடி யாலே இடுப்பை ஒடித்துக்
கழுத்து முறிந்தி டவுமொத் துங்கள்.

## இராக மாலிகை

[தாளம் : ஆதி

ஸ்ரீராகம்

நீபோ யுரைப்பாய் அனுமானே
நான் சொன்னதாக
நீயாரெனவே அவள்வினவிடில்
**ஸ்ரீராக**வ தூதன் நானென (நீ)

தோடி

தீய விராதன் எடுத் **தோடி**னன் நாங்களப்போ
மாய அவனை வதைத்தோமே அதனை இப்போ (நீ)

கானடா

கொடுங்**கான டா**துவரக்
கூடாதென்று நான்சொல்ல
நடுங்கினள் வாவென்றேன்
நகைத்தாள்அப் போதுமெல்ல (நீ)

கமாசு

கானில்துக் **கமாசு**கமா
எதுவந் தாலென்ன
நானும்மைப் பிரிகிலேன்
நாதாஎன் றுமுன்சொன்னள் (நீ)

தன்யாசி

முனியொருத் **தன்யாசி**க்க
மூடியாந் தாடகையைப்
பனைபோல் விழஅடித்தேன்
பகருவா யிச்செய்கையை (நீ)

மோகனம்

பார**மோ கனம்**இல்லை
பாருமென் றரன்வில்லை
நேரே ஒடித்தெறிந்தேன்
நிகழ்த்துவா யிந்தச்சொல்லை (நீ)

# நந்தனார் சரித்திரக் கீர்த்தனை

## சேவித்திடுவோம்!

இராகம் : மாயாமாளவ கௌளம்] [தாளம் : ரூபகம்

பல்லவி

சிவலோக நா தனைக் கண்டுசேவித் திடுவோம் வாரீர்!

அனுபல்லவி

பவப யங்களைப் போக்கி அவர்
பரம பதத்தைக் கொடுப்பா ரந்த (சிவ)

சரணங்கள்

ஆசைக் கடலில் விழுந்தோம் இனி
அறிவுக் கறிவை யிழந்தோம்
பாச மகல வழிதே டாமல்
பரித விக்கும் பாவி யானோம் (சிவ)

மானிட சன்மங் கொடுத்தார் தம்மை
வழுத்தக் கரங்கள் அளித்தார்
தேனும் பாலும் போலே சென்று
தேரடியில் நின்று கொண்டு (சிவ)

## தரிசனஞ் செய்தாரே!

இராகம் : கல்யாணி] [அட தாளம்

பல்லவி

தரிசனஞ் செய்தாரே நந்தனார் தரிசனஞ் செய்தாரே.

அனுபல்லவி

தரிசனஞ் செய்தார் தேன்மழை சொரிந்து
வரிசை யுடன்அவர் வாழி வாழியென்று (தரிசனம்)

சரணங்கள்

குதித்துக் குதித்துக் கும்பிடு போட்டுத்
துதித்துத் துதித்துத்தம் துன்பங்கள் தீர (தரிசனம்)

போற்றி போற்றியென்று பொன்னடி வணங்கிப்
பார்த்துப் பார்த்துப்பர மானந்தம் கொண்டு (தரிசனம்)

## இது ஞாயந்தானோ?

இராகம் : பெஹாக்] [தாளம் : ஆதி

பல்லவி

ஞாயந் தானோநீர் சொல்லும் - ஓய்
நந்த னாரே! நம்ம சாதிக் கடுக்குமோ?

சரணங்கள்

சேரியில் இல்லா வழக்கம்— நீர்
செய்து கொண்டுவந்த பழக்கம்—இந்த
ஊரி லெங்குமது முழக்கம் — வெகு
உறுதி யாச்சுதும் ஒழுக்கம் — இது (ஞாயந்)

சிதம்பர மென்கிற பேச்சு—நாங்கள்
செய்திடும் காரியம் போச்சு—அது
மதம்பிடித் ததுபோ லாச்சு— இந்த
மண்டலப் பறையருக் கேச்சு - இது (ஞாயந்)

## சிதம்பரம் போகாமல் இருப்பேனோ?

இராகம் : பெஹாக்] [தாளம் : ஆதி

பல்லவி

சிதம்பரம் போகாமல் இருப்பேனோ
சென்மத்தை வீணாக்கிக் கெடுப்பேனோ?

சரணம்

பத்தியு மனமும் பொருந்தின தங்கே
சத்தியஞ் சொன்னேன் சடலமு மிங்கே (சிதம்)

ஆசையு நேசமு மானந்த மங்கே
பேசலும் பாசமும் பிதற்றலு மிங்கே (சிதம்)

## 'போய் வா' என்று சொல் ஐயே!

இராகம் : யமுனு கல்யாணி] [தாளம் : ஆதி

கண்ணிகள்

மார்கழி மாதம் திருவா திரைநாள்
வரப்போ குதையே!
மனதைப்புண் ணுகப்பண் ணும லொருதரம்
போய்வா என்றுசொல் லையே!
கட்டை யிருக்கையில் சிதம்பரம் போய்நான்
காண வேணுமையே!
கசட ஞகிலு மாசை விளையுதும்
காலுக்குக் கும்பிடையே!
காலில் நகமுளைத்த நாள்முத லாயுமக்கு
அடிமைக் காரனையே!
கால பாசத்தில் காட்டிக்கொ டாமல்
காப்பாற் றிடுமையே!
உள்ளங் காலில் வெள்ளெலும் பாட
ஓடி யுழைத்தேனையே!
உண்டு முறங்கின தன்றியில் வேறே
ஒன்றும் காணேனையே!
எட்டு மிரண்டும் அறியாத பேதைநான்
எளியேன் நானையே!
இன்னம் தாய்வயிற் றிடையணு காமல்
இடங்காட் டிடுமையே!

## ஆருக்குத்தான் தெரியும் அவர் மகிமை?

இராகம் : தேவமனேகரி] [தாளம் : ஆதி

பல்லவி

ஆருக்குத் தான்தெரியும் அவர்மகிமை
அம்பல நாடகம் ஆடிய பெருமை

அனுபல்லவி

பாருக்குள் மாந்தர்கள் காண்பது தொல்லை
பதஞ்சலி பண்ணிய புண்ணிய எல்லை (ஆருக்)

சரணங்கள்

தேவர்கள் பூமழை கொண்டு சொரிந்தார்
சித்தவித் தியாதரர் கண்டு மகிழ்ந்தார்
பாவலர் நாவலர் உள்ளங் குளிர்ந்தார்
பார்வதி யம்மனுங் கூட விருந்தார் (ஆருக்)
காதில் குழையது விழுந்தது காட்டார்
கண்டும் அன்பரை விண்டிட மாட்டார்
பாதலம் நடுங்கவே தாண்டவம் போட்டார்
பத்தியில் லாதவர் தங்களைக் கூட்டார் (ஆருக்)

## கனவோ? நனவோ?

இராகம் : பைரவி] [தாளம் : சாபு

பல்லவி

கனவோ நனவோ கண்டது வீணே?

அனுபல்லவி

மனதி லுறுதிகொள்ள வழியொன்றுங் காணேன் (கன)

சரணங்கள்

நித்திரை தனிலொரு சித்த னுருவாய்வந்து
முத்தி தருவேனென்று நத்திப்பே சினதுண்டு (கன)
ஆரு மிகழ்ந்துதள்ளும் நாறும் புலையனென்னை
வாரும் பரமபதம் சேருமென் றழைத்தது (கன)
கிட்ட நெருங்கிவந்து தட்டியெ ழுப்பியொரு
வெட்ட வெளியைக்காட்டிக் கட்டளை யிட்டது (கன)

— கோபாலகிருஷ்ண பாரதி

## காணாமல் இருக்கலாகாது!

இராகம் : சௌராட்டிரம்] [தாளம் : சாபு

ஆனந்தக் களிப்பு

பல்லவி

காணாமல் இருக்கலா காது—பாழுங்
கட்டைக டைத்தேற வேண்டி யிருந்தால்

சரணம்

முத்திய ளித்திடும் பாதம் - தில்லை
மூவாயி ரம்பேர்கள் பூசிக்கும் பாதம்
சத்திக்கி ணையான பாதம் - வேத
சாத்திரங் கள்நாலும் தேடிய பாதம் (காணம)

## தாழ்வெல்லாம் வருமோ ஐயா!

இராகம்: முகாரி] [தாளம்: சாபு

பல்லவி

தந்தைதா யிருந்தால்இவ் வுலகத்தில் உமக்கிந்தத்
தாழ்வெல்லாம் வருமோ ஐயா! (தந்தை)

அனுபல்லவி

அந்தமில் நடஞ்செயும் அம்பல வாணரே!
அருமையா கவேபெற்று ஒருமையு டன்வளர்த்த (தந்தை)

சரணம்

கல்லால் ஒருவன்கடிந் தடிக்க உடல்பதைக்கக்
காலின் செருப்பால்ஒரு வேடன் எதிர்த்துதைக்க
வில்லினல் ஒருவன்வந் தடிக்க உமதுதிரு
மேனி என்னவாய் நொந்ததோ ஐயாஒரு (தந்தை)

## பெண்களுக்கு அழகாமோ?

இராகம்: சாரங்கா] [தாளம்: சாபு

பல்லவி

பேயாண்டி தனைக்கண்டு நீயேண்டி மையல்கொண்டாய்
பெண்களுக் கழகா மோடி! (பேயா)

அனுபல்லவி

மாயாண்டி சுடலையில் வாழ்வாண்டி காளியுடன்
வா தாடிச் சூதாடி வழக்காடித் திரிவாண்டி (பேயா)

சரணம்

கண்ணப்பன் எச்சிலை உகந்துதின் ருண்டி
காலனைக் காலால் உதைத்துக்கொன் ருண்டி
பெண்ணைச் சடைமீதில் வைத்துக்கொண் டாண்டி
பிட்டாசை யாலேபிரம் படிபட் டாண்டி (பேயா)

—கோபாலகிருஷ்ண பாரதி

## இராம நாடகக் கீர்த்தனை

### சானகி வந்தாளே

இராகம் : பூபாளம்] [தாளம் : ஆதி

பல்லவி

அன்னை சானகி வந்தாளே—ராசாதிராசர்
அனைவருக்கும் காட்சி தந்தாளே! (அன்னை)

அனுபல்லவி

கன்னிமார் என்னுந்தாரா கணத்தில்சந் திரனைநேராப்
பொன்னின் ஒளியும்பூ மணமுங்கொண், டுதொடர்ந்து
மன்னன் சனகன்மணி மண்டபத் தில்நடந்து (அன்னை)

சரணம்

சுந்தரப்பாதம் வைக்கவே ரத்தினச் சிலம்பின்
சோதி நிலத்தில் மொய்க்கவே பூமியாகிய
தன் தாய் மகளுக்கென்னவே விரித்த தேமாந்
தளிர்போல்எங் கெங்கும் மின்னவே
அந்த அமுதங்கண்ட இந்திரன் போலேதாகம்
ஆகிய ராமன்முன்னே தோகையர் நடுவாகக்
கந்தமலர்க் கைவளைச் சோதியி னுலிரண்டு
மடைக்கண்கள் கொண்டுராமன்
வடிப்பங்கள் கண்டுகொண்டு (அன்னை)

### கூனி வந்தாளே

இராகம் : வசந்தா] [தாளம் : சாபு

பல்லவி

கூனி வந்தாளே-பொல்லாத-கூனி வந்தாளே

அனுபல்லவி

போனநாள் ராமன்செய்த - பகையால் காய்ந்து
பூனைபோ லிருந்து - புலிப்போலப் பாய்ந்து (கூனி)

சரணம்

கொட்டிய பஞ்சுபோல் - உடம்பெல்லாந் தளர்ந்து
கூனிக் குறுகுறுத்து - வில்லைப்போல் வளைந்து
பட்டம் கட்டஒட்டு வேனோஎன் றளைந்து
பழைய பகையையெண்ணிப் - பழமுள்ளு களைந்து (கூனி)

## என்னத்துக்கு வந்தது ?

இராகம் : காபி] [தாளம் : ஜம்பை

பல்லவி

என்னத்துக்குப் பரதன் படைவந்தது ?
என்திராணி பாருங்கள் வேடரே!

அனுபல்லவி

மன்னவ னுக்கடிமை நான்என்று தெரியாமல்
வனத்தில் வந்தும் துரத்திப்பிடிக்க வந்தாரோ!
(என்ன)

சரணங்கள்

ஆழநெடுந் திரைக்கங்கை ஆறுகடந் தாலும்என்ன
தோழன்என்று ராமன்என்னைச் சொல்லியரு ளியதொரு
சொல்லேனோ சொன்னபடிக்கு
நில்லேனோ நான்பிடித்தகை
வில்லேனோ இவரைக்
கொல்லேனோ (என்ன)

## இருபது கண் போதுமோ ?

ராகம் : சுருட்டி] [தாளம் : சாபு

பல்லவி

காணவேணும் லட்சங் கண்கள்! சீதாதேவிதன்
காலுக்கு நிகரோ பெண்கள் ? (காண)

அனுபல்லவி

சேணுல கெங்கும்வாட்டித் திசைஎங்குங் கீர்த்திநாட்டித்
திரியும்ரா வணா!உன்றன் இருபது கண்போதுமோ? (காண)

சரணம்

குவளை விழிகளோ பாணம் அவள்தன் வார்த்தை
கொண்டால் அதுவேகல் யாணம்
நவரத்தினத் தங்கத்தோடு நடையிலே அன்னப் பேடு
அவனிமேல் இல்லை ஈடு அவளுக் கவளே சோடு
(காண)

## மோதிரம் கண்டாளே!

இராகம் : சங்கராபரணம்] [தாளம் : சாபு

பல்லவி

கொண்டாளே! சாமி மோதிரம் கண்டாளே! சீதை!

அனுபல்லவி

எண்டிசை போற்றிய இலங்கா புரத்திலே
என் அனு மானிட பொன்னிரு கரத்திலே (கொண்)

சரணம்

கந்த மலர்க்குழல் மேலே சூடிக்
கண்ணுக் குக்கலத் தண்ணீர் விட்டுக்
காணக் கிடைத்ததே - கார்த்திகைப் பிறைபோலக்
கண்டே னேஎன் றுமுறை பட்டு
அந்த ராம மந்திரம் எழுதிய
அடையாள மோதிரம் தொட்டு
அணைத்து மார்பில் இணைத்து டம்பிலே
அடங்கா மகிழ்ச்சிகொண் டடிக்கடி முத்தமிட்டு
(கொண்)

## கண்டேன் சீதையை

இராகம் : முகாரி] [தாளம் : சாபு

பல்லவி

கண்டேன் கண்டேன் கண்டேன் சீதையைக்
கண்டேன் ராகவா!

அனுபல்லவி

அண்டருங் காணாத இலங்கா புரத்திலே
அரவிந்த வேதாவைத் தரவந்த மாதாவை (கண்)

சரணம்

காவி விழிகளில் உன்உரு வெளிமின்னக்
கனிவாய் தனிலேஉன் திருநாம மேபன்ன
ஆவித் துணையைப் பிரிந்த மடஅன்னம்
ஆனால்நான் சொல்லுவ தென்ன?
பூவை திரிசடை நித்தம்நித் தம்சொன்ன
புத்தி வழியேதன் புத்தி நிலைமன்ன
பாவி அரக்கியர் காவல் சிறைதுன்னப்
பஞ்சு படிந்தப ழஞ்சித்தி ரம்என்ன (கண்)

## இந்தா விபீஷணு!

இராகம்: பரசு] [தாளம்: சாபு

பல்லவி

இந்தா விபீஷணு! லங்காபுரி ராச்சியம்
இந்திராதி தேவர்கள் உள்ள நாள் வரைக்கும்!

அனுபல்லவி

என்றன் துணையாகவே இருக்கவே ணுமென்று
தந்தேன் விபீஷணு சகல சனமறிய (இந்தா)

சரணங்கள்

வேதம் உள்ளளவும், வேத கீதம் உள்ளளவும் பாரி
சாதம் உள்ளளவும், பஞ்ச பூதம் உள்ளளவும்
இந்தா இந்தா இந்தா இந்தா! (இந்தா)
கார்உள் ளளவும்,கடல் நீர்உள் ளளவும்,ஈரேழ்
பார்உள் ளளவும்,என்றன் பேர்உள் ளளவும்
தந்தேன் தந்தேன் தந்தேன் தந்தேன்! (இந்தா)

## வந்ததோ தீமை?

இராகம்: புன்னுகவராளி] [தாளம்: சாபு

பல்லவி

வந்ததோ தீமை—இலங்கைக்கு—வந்ததோ தீமை!

அனுபல்லவி

வந்ததோ சீதைப்பெண் நொந்ததோ நகர்எங்கும்
வெந்ததோ கலகம்பு குந்ததோ உன்னுலே! (வந்த)

சரணங்கள்

புலத்தியன் குலம்கெட்டதோ—நமக்கிந்தத்
தலத்தில் இருப்புவிட்டதோ
விலக்காத பழிமூண்டதோ—மூவுலகமும்
செலுத்தும்செங் கோல்மாண்டதோ
கலைப்பவர் சொற்கொண்டு கலங்கினுய் நீகுட்டி
குலைத்துத்தாய் மேல்வைத்த கொள்கைபோ
[லேகிட்டி (வந்த)
முழுதும்லட்சு மணன்அம்பாலே—இந்திரசித்து
விழுவான்பார் இனிமண்மேலே
எழுதும் எழுத்தின்படியே—ராமன்அம்பாலே
விழும்என்றன் மணிமுடியே
பிழைபொறு சீதையைப் பிறகாகி லும்விடு
ஒழிவாய்ஆ னுல்உன்றன் உயிரும்போம் படுபடு
(வந்த)

## போர் மேற்கொண்டானே !

இராகம் : கல்யாணி] [தாளம் : சாபு

பல்லவி

தேர்மேற் கொண்டானே—இராவணன்
போர்மேற் கொண்டானே

அனுபல்லவி

பார்மே லும்திசை மேலும் மலைமேலும்
பாயும் திரைகடல் மேலும் மூட்டிய
ஆயி ரம்புர விகளும் கட்டிய (தேர்)

சரணங்கள்

இனத்தோடே வரச்சொல்லி உறுக்கினன் — தப்பி
இருந்தோரில் நூறுவெள்ளம் பொறுக்கினன்-சங்கம்
தொனித்துக்கை யொடுகையை முறுக்கினன்—மேலே
தூணியும் கவசமும் இறுக்கினன்

கனத்த பூமியும் மலையும் வெடித்திட
முனைத்த பேரிகை குமுறி இடித்திட
சினத்தி னல்முக வேர்வை பொடித்திட
தனக்கும் சீதைக்கும் இடக்கண் துடித்திட (தேர்)

## இராமன் வந்தான் !

இராகம் : மத்தியமாவதி] [தாளம் : ரூபகம்

பல்லவி

வந்தான் வந்தான் பரதா! ரகுராமன்
வந்தான் வந்தான் பரதா!

அனுபல்லவி

வந்தான் வந்தான்! மோதிரம் தந்தான் தந்தான்! கைமேல்
இந்தா இந்தா! தீயினில் முந்தாதே முந்தாதே! (வந்)

சரணம்

தீமைவி னைகள்மண்டும் இராவணப்
பாமரன் ஆவிஉண்டு,
சேமவெஞ் சேனைகொண்டு பரத்துவாச
மாமுனி பூசைகண்டு,
சாமி ரகுகுல சோமன் இதோவந்தான்!
பூமகள் சானகி வாமன் இதோவந்தான்!
ஓமென்னும் ஆயிர நாமன் இதோவந்தான்!
நீமற வாரகு ராமன் இதோவந்தான்! (வந்)

இராகம்: சாவேரி]  தாளம்: ஆதி

பல்லவி

ராமன் எழுந்தருளினன்!-பரதன்முன்சீதா-
ராமன் எழுந்தருளினன்!

அநுபல்லவி

ஆம்எனும் தேவர்களுக்
கமுதம் தந் தாற்போல
பூமியில் உள்ளோர்க்கெல்லாம்
போனபொருள் வந்தாற்போல (ராமன்)

சரணம்

தூயவர்க் கெல்லாம் முத்தித்
துறைகள்சித் தித்தாற் போல
ஓயும் உடலோர்க் கெல்லாம்
உயிர்புகுந் துற்றுற் போல
நேயமா தர்க்கெல் லாங்கண்
நிழல்வந் துதித்தாற் போலத்
தாயர்க்கெல் லாம்அப் போது
தான்பிள்ளை பெற்றுற் போல (ராமன்)

— அருணசலக் கவிராயர்

## மகாபாரதக் கீர்த்தனை

### என் கருத்து இதுவே

இராகம்: தோடி]  [தாளம்: சாபு

பல்லவி

என்கருத்திதுவே—நம்பும் எங்கள்—எல்லோர்க் கும்பொதுவே

அனுபல்லவி

தன்மமாய்த் தண்ணீ ரும்முப் பிழைபொறுக்கு தேகாணும்
தட்டாதி னியோர்தூது விட்டுப்பார்க் கவேணும் (என்கரு)

சரணம்

உயர்பங் கைக்கேளும் மறுத்திடில்ஐந்
தூரே னுங்கேளும்—அதைமறுத்தால்
அயர்வி லாதிருக்க ஐந்துவீடு கேளும்
அதையு மறுக்கில்போருக் காகவ லக்கைகேளும் (என்கரு)

## ஏனிப்படிப் பேசுகிறீர் ?

இராகம் : அடாணு] [தாளம் : ஆதி

பல்லவி

ஏனின்ன மிப்படிப் பேசுகி றீர்அண் ணு! - இது
போதும் போதும் போதும்

அனுபல்லவி

ஈனமா கவுரைத்தா லெந்நேரம் பொறுக்கலாம்?
இதைவிட எங்கள்கழுத் தினையாவ தறுக்கலாம்! (ஏனின்)

சரணம்

படியளந் திடுமாயன் அடிவருந் திடஅந்தப்
பாவி யிடத்தில் தூது—செல்லவேண்டா
அடியேனை விடும்நான்போய்ச் சீராயென் வேலைகள்
யாவும் பார்த்துக் கொண்டு—தப்பாது
முடியுமக் குத்தருவேன் ஐயையோ இந்தநச்சை
மூட்டைகட் டுமிதுவே முழுது மென்றனிச்சை
கெடிகொள் நமதுநாட்டை அவனிடத் தினிற்பிச்சை
கேட்பதி னுமுயிரை மாய்ப்பதி லில்லைலச்சை (ஏனின்)

## எள்ளளவும் பொறுப்பேனு ?

இராகம் : பந்துவராளி] [தாளம் : சாபு

பல்லவி

இன்னம் இந்த யோசனை தானு?—அண் ணுஇனி
எள்ளளவும் பொறுப்பேனு?

அனுபல்லவி

மன்னவர் சபையில்அன்று மானந் தனைக்கெடுத்தும்
மந்தைவெளிக் கல்லாயெம்மை மதிக்கும்ப டிவிடுத்தும்
(இன்ன)

சரணங்கள்

அண்டரே வந்தெதிர்த்தாலும் அவர்களன்றி
எண்டிசையோர் கதித்தாலும்—அவர்களையும்
கண்டதுண்ட மாக்கிஒன்னர் கள்குலத்தை ஒருமிக்க
கருவறுத் திடுமுக்ர காண்டீபம் என்கையிலிருக்க
(இன்ன)

மாலேபோய்ச் சொன்னாலும் அவன்தரச்சம்
மதித்திடான் ஒருக்காலும்—ஐயோஇது
வேலையில்லா வேலையிதை விட்டமர்க்கு முனையாமல்
வீரர்முன்அன் றுநாம்சொன்ன விதங்களை
நினையாமல் (இன்ன)

சூதாடினபின் குதித்து—நம்மைச்செத்த
பிரேதங்க ளாய்மதித்து—அந்தச் சபையில்
வாதிட்டி வளைவிர மாதாவென்று பார்க்காமல்
மானபங்கஞ் செய்தோரை வானுலகிற் சேர்க்காதல்
(இன்ன)

## ஹரி ஹரி பரந்தாமா!

இராகம்: புன்னாகவராளி] [தாளம்: ஆதி

பல்லவி

ஹரிஹரி பரந்தாமா!-என்றுவிரதம் - அவமாகிப் போகலாமா?

அனுபல்லவி

உரமாக வந்தசபை யோர்கேட்க வேவாக்கினால்
உரைத்ததெல் லாம்ஆற்றினில் கரைத்த புளியாக்கினார்
(ஹரிஹரி)

சரணம்

முடித்த குழலைத் தீண்டி யின்று—வலித்த
மூர்க்கன் துடிக்கக் கொள்வோ மென்று
படித்ததெல் லாம்பாழாக்கிப் பதிக்கிச்சைப் பட்டுநேரே
பசிக்குப் பனம்பழத்தைப் புசிக்கம னங்கொண்டாரே
(ஹரிஹரி)

— மகாபாரதக் கீர்த்தனை

## அருமருந்து

இராகம் : மோகனம்] [தாளம் : ரூபகம்

பல்லவி

அருமருந்தொரு தனிமருந்து-அம்பலத்தே கண்டேனே

அனுபல்லவி

திருமருந்துடன் பாகமருந்து - தில்லையம்பலத் தாடுமருந்து
இருவினைக ளறுக்கும்மருந்து-ஏழையடியார்க் கிரங்கும்
[மருந்து (அரு)

சரணம்

கொன்றை தும்பை அணிந்த மருந்து
கோதை மீதிற் படர்ந்த மருந்து
மன்று ளேநின்ருடு மருந்து
மாணிக்க வாசகர் கண்ட மருந்து (அரு)

## கண் ஆயிரம் வேண்டும்

இராகம் : மாயாமாளவ கௌளம்] [தாளம் : ஆதி

பல்லவி

ஆடிக்கொண்டார் அந்த வேடிக்கை காணக்கண்
ஆயிரம் வேண்டாவோ?

அனுபல்லவி

நாடித் துதிப்பவர் பங்கில் உறைபவர்
நம்பர் திருச்செம்பொன் அம்பல வாணர் (ஆடிக்)

சரணங்கள்

பங்கய பாதச் சிலம்பசைந் தாட
பாதச் சதங்கைகள் கிண்கிணென ருட
பொங்க முடனே யுரித்துத் தரித்த
புலித்தோல் அசைந்தாட
செங்கையில் ஏந்திய மான்மழு ஆட
செம்பொற் குழைகள் முயலகன் ஆட
கங்கை யிளம்பிறைச் செஞ்சடை ஆடக்
கனக சபைதனிலே (ஆடிக்)

ஆரந வமணி மாலைகள் ஆட
ஆடும் அரவம் படம்விரித் தாட
சீரணி கொன்றை மலர்த்தொடை ஆட
சிதம்பரத் தேர்ஆட
பேரணி வேதியர் தில்லைமூ வாயிரம்
பேர்களும் பூசித்துக் கொண்டு நின்றாட
காரணி காளி யெதிர்த்துநின் றாடக்
கனக சபைதனிலே (ஆடிக்)

— முத்துத் தாண்டவர்

## காலைத் தூக்கி நின்றாடும் தெய்வம்

இராகம்: யதுகுல காம்போதி] [தாளம்: ஆதி

பல்லவி

காலைத் தூக்கி நின்றாடுந் தெய்வமே! என்னைக்
கைதூக்கியாள் தெய்வமே!

அனுபல்லவி

வேலைத் தூக்கும் பிள்ளை—தனைப்பெற்ற தெய்வமே
மின்னும் புகழ்சேர் தில்லைப்—பொன்னம்பல லத்திலொரு (காலை)

சரணங்கள்

செங்கையில் மான் தூக்கி—சிவந்த மழுவும் தூக்கி
அங்கத்தில் ஒருபெண்ணை—அநுதின மும்தூக்கி
கங்கையைத் திங்களைக்—கதித்த சட்டையில்தூக்கி
இங்குமங் குமாய்த்தேடி—இருவர்கண் டறியாத (காலை)

நந்திமத் தளம்தூக்க—நாரதர் யாழ்தூக்க
தொந்தமென் றயன்தாளம்—சுருதியொ டுந்தூக்க
சிந்தை மகிழ்ந்துவானோர்—சென்னிமேல் கரம்தூக்க
முந்தும் வலியுடைய—முயலகன் உனைத்தூக்க (காலை)

## இருக்காது ஊழ்வினை

இராகம்: ஆரபி] [தாளம்: ஆதி

பல்லவி

ஒருக்கால் சிவசிதம் பரம்என்று நீசொன்னால்
இருக்கா தூழ்வினையே.

அனுபல்லவி

கருக்கா ரருக்கிது தெரியும்பொ துவில்ஒரு
காலைத் தூக்கிநின்ற கோலத்தை மனத்தில்வைத்து
(ஒருக்கால்)

சரணங்கள்

சூழ்வலி யுடையபஞ் சாக்கினி யிடைநின்று
சொரூபம் கரிவானேன்?—மனை
வாழ்வை வெறுத்துக்கனி காயுஞ் சருகுந்தின்று
மாதவம் புரிவானேன்?—பல
வேள்விகள் செய்தந்த ஓமகுண் டத்தில்நெய்யை
வீணிலே சொரிவானேன்?—காதும்
கேள்வியில் லாதமுழு மோனிக ளாய்த்தலையில்
கிளைத்திட்ட சடைதனை வளைத்திட்டுத்திரிவானேன்
(ஒருக்கால்)

வேதமந் திரஞ்சொல்லி ஆயிரந் தெண்டன்புவி
மீதினில் விழுவானேன்?—இரு
பாதமுஞ் சிவந்திடத் தலங்கள் தொறுந்திரிந்து
பலதெய்வந் தொழுவானேன்?—கொல்லன்
ஊதும் துருத்திபோலே வாயுவைக் கும்பித்துடல்
யோகத்தில் எழுவானேன்?—ஐந்து
பூதங்க ளுங்கலங்க அங்கப்பிர தட்சணமாய்ப்
புரண்டு புரண்டுமதி மருண்டெழு வானேன்?
(ஒருக்கால்)

— மாரிமுத்தா பிள்ளை

## பாலர்களை வந்து கண்டார்

இராகம் : மோகனம்] [தாளம் : ஆதி

பல்லவி

பாலர்களை வந்து கண்டாரோ—சிவனுமையும்
பரவச மிகுந்து கொண்டாரே

அனுபல்லவி

காலையி ளங்கதிர்கள் போலுயர் வடிவொடும்
கஞ்சச் சரவணப்பூ மஞ்சத்தில் விளையாடும் (பாலர்)

சரணம்

மாமுகங்கள் ஓராறும் மலர்க்கரங்கள் ஈராறும்
கோமளச் செவிசேரும் குண்டலங் களின்சீரும்
காமயில்கள் கண்டுசீ ராட்டுவதும்—சிறைக்
கருவரி வண்டுகள்தா லாட்டுவதும்—வெண்
சாமரை கவரிகள் ஆட்டுவதும்—நிறை
தண்மதியம் கண்ணுடி காட்டுவதும்—ஆன (பாலர்)

## எல்லோரையும் போலவே

இராகம் : சுத்தசாவேரி] [தாளம் : ரூபகம்

பல்லவி

எல்லோ ரையும் போல வேநீ
எண்ண லாகு மோடி போடி!

அனுபல்லவி

வல்லமை சேர்ந்தருள் செல்வ னெனுஞ்சுப்ர
மண்ணிய னிடத்தில் கண்ணியமில் லாமலே(எல்)

சரணம்

அரக ரவென் பார்கள் கோடி
ஆண்டிக் கன்னமி டார்கள் தேடி
பொருதில் வேடிக்கை பார்ப்ப வர்க்கென்ன
பொருட்செ லவுமுண் டோடி!
குருதி வேற்கொண்ட முருக னைக்கவி
குஞ்ச ரம்பணி செஞ்ச ரணனைக்
கொஞ்சி மருவியே ரஞ்சித மாகிய
வஞ்சியே சாமிக்குள் அஞ்சி நடவாமல் (எல்)

— கவி குஞ்சரபாரதி

## சிவன் வருவார்

இராகம்: தர்பார்] [தாளம்: ஆதி

பல்லவி

சிவன்வ்ரு வார் துணை அவர் தரு வார்கதி
தேறிக்கொள் நீமனமே!

அனுபல்லவி

எவரும் இவர்போல்தஞ்சம் அவனியில் இல்லைநெஞ்சம்
ஏங்காதே மயங்காதே தூங்காதே தியங்காதே (சிவன்)

சரணம்

ஆறு மதங்கள்தோறும் வேறுவே ருகித்தோன்றும்
அந்த ரகசியத்தைச் சிந்தையில் ஒன்ருய்க்கண்டார்
தேறும் படிக்குஞானம் கூறும் கருணுகரத்
தெட்சணு மூர்த்திபாதம் பட்சமாய் வேண்டிக்கொண்டால்
(சிவன்)

— நீலகண்ட சிவன்

## எக்காலத்தும் மறவேன்

இராகம்: நாட்டைக் குறிஞ்சி] [தாளம்: ரூபகம்

பல்லவி

எக்காலத்திலு மறவேனே - இனிநானே

அனுபல்லவி

மைக்காலனை - அக்காலத்தில்
மடியவுதைத்த - அடிமலரினை (எக்கா)

சரணம்

விடையை யும்கொன்றைத் - தொடையை யுமதிச்
சடையை யுமழுப் - படையை யும்தோல்
உடையை யுமணி - இடையை யும்விழிக்
கடையை யும்நல - மடைய வேநான் (எக்கா)

## தீவினை அணுகாது

இராகம் : மோகனம்] [தாளம் : திரிபுடைதாள

பல்லவி

திருநட னஞ்செய்யும் ஒருவனைத் தரிசித்தால்
தீவினை யணுகாதே .

அனுபல்லவி

பொருவி லா தமலர் விரிபொழில் சூழ்ந்தேஅற்
புதம்பர வுமொரு சிதம்பர மதனில்
இதம்பெற வடியர் நிதம்பர வவுயர் (திரு)

சரணங்கள்

சங்கக் குழையசையத் தடக்கை யுழையசையத்
தங்கும் புலித்தோலிடை தன்னுழை யசையக்
கங்கை நதியசைய அங்கு மதியசையக்
கலந்த அரவினம் நலந்தனில் அசைய
நிலந்தனி லடியவர் குலந்தழைத் திசையத் (திரு)
தவத்தோர் துதிமுழக்கத் தாளம் விதிமுழக்க
உவப்பாய்நந் திமத்தளத் துயர்கதி முழக்க
சிவத்தைவே தமுழக்கச் சிலம்பைப்பா தமுழக்க
சிறந்த கிண்கிணி யுறைந்தொலி முழக்க
நிறைந்த அன்பரினிப் பிறந்திடல் ஒழிக்க (திரு)

— வையை. இராமஸ்வாமி ஐயர்

## கனக் கண்டேன்

இராகம் : சுத்த தன்யாசி] இராக மாலிகை [தாளம் : ஆதி

பல்லவி

இன்பக்கனு ஒன்று கண்டேன் - பாங்கி
என்னுள்ளம் மகிழ்வு கொண்டேன் என்பாங்கி!

அனுபல்லவி

தென்பழ நியூரன் சேவற் கொடிக்காரன்
என்னுயிர்க் காதாரன் இரவில் எனை அணைய (இன்பக்)

சரணங்கள்

இராகம் : சரசாங்கி

பன்னிரு தோளழகும் பரந்த விழியழகும்
மின்னொளி வேல்அழகும் மேனிஅ ழகும்காதற்
கன்னல் மொழிஅழகும் களிற்றின் நடையழகும்
பொன்மயில் தன்னழகும் புன்னகை யின்அழகும்
(இன்பக்)

இராகம்: மலயமாருதம்

தென்றல் மலர்ம ணத்தை வாரி யிறைத்து எங்கும
திங்க ளெழுந்த தென்றன் தேகம் சிலிர்த்த தங்கு
அன்றிற்பே டோடுநடம் ஆடிக் களித்த போது
ஆறுமு கன்வந் தென்னை அணைந்து சுகித்த தைப்போல்
(இன்பக்)

## அள்ளி உண்டிடலாம்

இராகம்: காமவர்த்தனி] [தாளம்: ஆதி

பல்லவி

அள்ளி உண்டிடலாம் வாரீர் எல்லோரும்
தெள்ளமு தாகிய செந்தமிழ்த் தேனை

அனுபல்லவி

உள்ளமெல் லாங்கலை வெள்ளத்தால் நனைய
உவகைகொண்டு ஆனந்தக் கண்ணீர் சொரிய (அள்ளி)

சரணம்

வள்ளுவன் மறையும் மணிமே கலையும்
வளையா பதியும் குண்டல கேசியும்
விள்ளும் தரமில்லாச் சிலப்பதி காரமும்
விலைமதிப் பில்லாச் சிந்தாமணியும் மற்றதுமுண்டு

— கு. சா. கிருஷ்ணமூர்த்தி

## அழைத்திடுவாய் குயிலே!

இராகம்: பந்துவராளி] [தாளம்: மிஸ்ரஜம்பை

பல்லவி

அகிலமெல்லாம் கூவி அழைத்திடுவாய் குயிலே!
ஆதித் தமிழ்மொழியை ஓதி மகிழ்ந்திடவே

அனுபல்லவி

பகைவரே ஆயினும் பரிந்துண வூட்டும்
பைந்தமிழ்த் தேனைப் பருகுவோம் வாருமென (அகி)

சரணம்

அறம்வ ளர்த்ததமிழ் ஒளவையின் நூலே
ஐம்பெருங் காப்பியச்சொல் அழகும்மென் மேலே
திறம்வி ளங்கும்திருக் குறளின்முப் பாலே
திதிக்கத் திதிக்கநாமே அருந்துவ தாலே (அகி)

## தாமரை பூத்த தடாகம்

இராகம் : இந்துஸ்தானி காந்தாரி] [தாளம் : ஆதி

பல்லவி

தாமரை பூத்த தடாகமடி—செந்
தமிழ்மணத் தேன்பொங்கிப் பாயுதடி ஞானத் (தாம)

அனுபல்லவி

பாமழை யால்வற்ருப் பொய்கையடி—தமிழ்
பைங்கிளி கள்சுற்றிப் பாடுதடி—ஞானத் (தாம)

சரணம்

காவியச் சோலையதன் கரையழகே—பெருங்
கவிஞர்கள் கற்பனைக்கோர் தனிச்சுவையே
ஆவிம கிழும்தமிழ்த் தென்றலதே—இசை
அமுதினைக் கொட்டுதுபார் இதன்அருகே!—ஞானத்
(தாம)

— திருச்சி தியாகராசன்

## இல்லை என்பான் யார் ?

இராகம் : மோகனம்] [தாளம் : மிஸ்ரசாபு

பல்லவி

இல்லையென் பான்யாரடா என் அப்பனைத்
தில்லையி லேபாரடா!

அனுபல்லவி

கல்லும் கசிந்துருகக் கனிந்த முறுவலுடன்
காட்சி அளிக்கும்அந்தக் கருணைச் சுடரொளியை (இல்லை)

சரணம்

கல்லைக் கனியாக்க வல்ல புலவனைக்
கலைவடி வாகியென் கண்ணுனை கண்ணனை
எல்லா உலகினுக்கும் இறைவனை அன்பரின்
இதயத்தில் நடமாடும் சிதம்பர நாதனை (இல்லை)

—சுத்தானந்த பாரதியார்

## இறைவா என் தோழா!

இராகம்: சண்முகப்ரியா] [தாளம்: ஆதி

பல்லவி

இன்பமெல்லாம் அளித்த இறைவா! என்றன்
துன்பமெல்லாம் தீர்த்த துணைவா என்தோழா!

அனுபல்லவி

உன்னருள் என்னை நாட - உள்ளம் நெகிழ்ந்தாட
கன்மனம் கரைந்தாட கண்ணீர் வழிந்தோட (இன்ப)

சரணம்

பார்க்கும் இடமெல்லாம் பரம்பொரு ளாம்நீயே!
பார்த்துப் பணியவைத்தாய் பழம்பெரும் பதிநீயே!!
காற்றுடன் நீராகிக் கனலாகிப் பதியாகி,
ஏற்றிடுவார் மகிழ்ந்த வான்ஒளி யும்நீயே (இன்ப)

—சி. என். ஆதிசேஷன்

## நல்ல சமயம்

இராகம்: மத்தியமாவதி] [தாளம்: ரூபகம்

பல்லவி

நல்ல சமயமடா!—இதை
நழுவ விடுவாயோ?

அனுபல்லவி

நாட்டில் சுதந்தரம் நாட்டி மனிதருள்
தீட்டும்தீண் டாமையும் தீர்த்து விடுதற்கு (நல்)

சரணம்

காந்தியைப் போல்தலைவர் எந்தக்—காலத்திற்கிட்டுமடா
வாய்ந்த தருணமிதை நீ—வழுவ விடுவாயோ?
சூழ்ந்திடும் துன்பங்கள் வீழ்ந்திட நாமினி
வாழ்ந்திட வும்மனச் சாந்தி யடையவும் (நல்)

வேதம் ஒலிக்குதடா காந்தி ஓதும் மொழிகளிலே
கீதை ஜொலிக்குதடா அவர் செய்யும் கிரியையெல்லாம்
வேற்றுமை இல்லாமல் நாட்டின் நலத்தினைப்
போற்றின யாரையும் கூட்டி உழைத்திட (நல்)

—வெ. இராமலிங்கம் பிள்ளை

## தூது செல்!

இராகம்: தன்யாசி] [தாளம்: ஆ

பல்லவி

மாதேநீ தூது செல்லடி என் காதலர்பால்
மையல்மீ றுதல்சொல்லடி வருவாரடி

அனுபல்லவி

ஏதேதோ இந்தவூரார் தீதே புகன்றூர்நேராய
பேதையென் மனநிலை யாதும் அறிவாரிலை (மாதே)

சரணம்

பாடாள்செந் தமிழிசை—பாலும் பழமும்உண்ணுள்
சூடாள் குழலில்மாலை—தூய உடையும்எண்ணுள்
ஆடாள் நறுநீரினில்—அஞ்சன மும்எழுதாள்
வாடா நின்றுள்ஒருபெண்—மன்னுவந்து பார்என்ன
(மாதே)

நெஞ்சிலும் விழியிலும்
நீயேயெப் போதும்உள்ளாய்
வஞ்சிக் கொடியிடையாள்
மாலை வரவுகண்டு
அஞ்சு முகம்உடையாள்
ஆறு முகம்ஆயினுள்
கஞ்ச நிகருன்கையால்
கண்ணீர் துடைப்பாயென்ன (மாதே)

— மு. அருணுசலம் பிள்ளை

## என்ன புண்ணியம் செய்தேனோ!

இராகம்: தேசிய ரஞ்சனி] [தாளம்: ஆதி

பல்லவி

என்ன புண்ணியம் செய்தேனோ நான்
இந்தநன் னாட்டினில் வந்து பிறந்திடவே.

அனுபல்லவி

மன்னர் மூவரும் வளர்ந்த தீந்தமிழ்
இன்பம் காதினிலே என்றும் சேரவே (என்ன)

சரணம்

அம்புவி யோர்க்கெல்லாம் அமுதென வேவளர்
கம்பநா டன்தரும் காவியம் கேட்கவும்
இன்ப வாழ்க்கையே எய்த மெய்ம்மறை
தந்த வள்ளுவன் தமிழ் படிக்கவும் (என்ன)

— ம. ப. பெரியசாமித் தூரன்

## நலம் பெறுவோம்!

பல்லவி

நாவுக் கரசனை ஞானக் கொழுந்தினை
நாவார வேவாழ்த்தி நலம்பெறு வோம்திரு

அனுபல்லவி

பாவுக் கரசனும் பண்புள்ள தமிழனும்
பாவாணர் போற்றும்திருத் தேவாரந் தனைத்தந்த (நாவு)

சரணம்

தாண்டக வேந்தனித் தண்தமிழ் மீதன்பு
பூண்ட பெருமையைப் புகலவுங் கூடுமோ!
வேண்டும்நல் வாழ்வினை விரும்பியன் றேதரும்
ஆண்ட பெருந்தகையான் ஐயன ருளடைந்த (நாவு)

இந்த வுலகினை இயக்கு மிறைவனை
எந்த வடிவிலும் எங்கணும் கண்டவன்
நந்தமிழ் நாட்டினில் பைந்தமி ழிசையுடன்
செந்தமிழ்ப் பாடலைச் செம்மை யுடன்தந்த (நாவு)

'நாமார்க்குங் குடியல்லோம் நமனையஞ் சோ'மென
நவின்ற திருமறையாம் நல்லோர் வணங்கும்தமிழ்ப்
பாமாலை யேபுனைந்த பாவல னையெந்நாளும்
பரவிப் பணிந்துநோக்கிப் பான்மையு டன்வாழவே (நாவு)

— எம். எம். தண்டபாணி தேசிகர்

### கழுகு மலை நகர் வளம்

தெள்ளுதமி ழுக்குதவு சீலன் துதி
செப்பும்அண்ணு மலைக்கனு கூலன் வளர்
செழிய புகழ்விளைத்த கழுகு மலைவளத்தைத்
தேனே! சொல்லு வேனே ;

வெள்ளிமலை யொத்தபல மேடை முடி
மீதினிலே கட்டுகொடி ஆடை அந்த
வெய்யவன் நடத்திவருந் துய்யவிர தப்பரியும்
விலகும் படி இலகும்.

முத்தமிழ்சேர் வித்வசனக் கூட்டம் கலை
முற்றிலுமு ணர்ந்திடுங்கொண் டாட்டம் நெஞ்சில்
முன்னுகின்ற போதுதொறுந் தென்மலையின் மேவுகுறு
முனிக்கும் அச்சஞ் சனிக்கும்.

எத்திசையும் போற்றமரர் ஊரும் அதில்
இந்திரன் கொலுவிருக்குஞ் சீரும் மெச்சும்
இந்தநக ரந்தனைய டைந்தவர்க் கதுவும் வெறுத்
திருக்கும் அரு வருக்கும்.

### கழுகுமலைக் கோயில் வளம்

சென்னி குளநகர் வாசன் தமிழ்த்
தேறும்அண் ணுமலை தாசன் செப்புஞ்
செகமெச்சிய மதுரக்கவி யதனைப்புய வரையிற்புனை
தீரன் அயில் வீரன்.

வன்ன மயில்முரு கேசன் குற
வள்ளி பதம்பணி நேசன் உறை
வரமேதரு கழுகாசல பதிகோயிலின் வளநான்மற
வாதே சொல்வன் மாதே!

கோபுரத் துத்தங்கத் தூவி தேவர்
கோபுரத் துக்கப்பால் மேவி கண்கள்
கூசப்பிர காசத்தொடு மாசற்றுவி லாசத்தொடு
குலவும் புவி பலவும்

நூபுரத் துத்தொனி வெடிக்கும் பத
நுண்ணிடை மாதர்கள் நடிக்கும் அங்கே
நுழைவாரிடு முழவோசைகள் திசைமாசுணம் இடியோ
நோக்கும் படி தாக்கும். [வென

அருணகி ரிநாவிற் பழக்கம் தரும்
அந்தத் திருப்புகழ் முழக்கம் பல
அடியார்கண மொழிபோதினி லமராபதி இமையோர்செவி
அடைக்கும் அண்ட முடைக்கும்.

கருணை முருகனைப் போற்றித் தங்கக்
காவடி தோளின்மே லேற்றிக் கொழுங்
கனலேறிய மெழுகாய்வரு பவரேதிரு மிகவேகதி
காண்பார் இன்பம் பூண்பார்.

### கழுகுமலை வாவி வளம்

புள்ளிக் கலபமயிற் பாகன் சத்தி
புதல்வ னனகன யோகன் மலை
போலத் தான்திரண்ட கோலப் பன்னிரண்டு
வாகன் நல்வி வேகன்.

வள்ளிக் கிசைந்தமுரு கேசன் அண்ணா
மலைக்கவி ராசன்மகிழ் நேசன் என்றும்
வாழுங் கழுகுமலை வாவி வளஞ்சொல்லுவேன்
மாதே! கேளிப் போதே.

வெள்ளை நாரை கொத்தும் வேளை தப்பி
மேற்கொண் டெழுந்துசின வாளை கதி
மீறிப் பாயுந்தொறுங் கீறிச் சாயுந்தென்னம்
பாளை யுடன் தாழை

தெள்ளும் பிள்ளை யன்னப் பேடும் இளஞ்
சேவ லானதுவும் ஊடும் பின்பு
தேம லர்த்தவிசிற் காம முற்றுவந்து
கூடும் உறவாடும்.

### தலைவி பாங்கியைத் தூது விடுதல்

பூமி மெச்சிடுமண் ணும லைக்கோர்துணை யானவன்
மயில் வானவன்ஒரு கானவன் எனப்
புனத்தைக் காக்கும்வள்ளி மணத்தைப்
பார்க்க மெல்லப் போனவன்

சேம முற்றகழு காச லேசனையே தேடுதே
மனம் வாடுதே கால்தள் ளாடுதே இரு
செங்கை தாங்கி நின்ற சங்கி னங்கள்கழன் றோடுதே.

உள்ள மெல்லக் கந்தவள்ளல் பாதம்நினைந் துருகுதே
தேகங் கருகுதே கண்ணீர் பெருகுதே என்றன்
உச்சிக் கேறி நின்று பித்தங் கிறுகிறென்று வருகுதே.

வள்ள மேவுபசும் பாலுந்தேனுமரு வருக்குதே
கசந்திருக்குதே துன்பம் பெருக்குதே வன்ன
வாருந் தாறு மாருக் கீற வேபுயமும் பருக்குதே.

— அண்ணுமலை ரெட்டியார்

## புத்தர் பெருமான் சிந்து

பல்லவி

புத்தர் பெருமானைப் போற்றிடுவோம்—அவர்
போதித்த வைகளை ஏற்றிடுவோம்.

அனுபல்லவி

சித்தந் தெளிந்துயிர் யாவும் சுகம்பெற
உத்தம வாழ்வை உணர்த்தியவர் (புத்தர்)

சரணங்கள்

எல்லா உயிரையும் நம்முயிர் போலவே
எண்ணிச் செயலுற்று வாழ்ந்திடுவோம் ;
கொல்லா விரதத்தைக் கொண்டிடு வோம்;அவர்
கொள்கைகள் யாவர்க்கும் கூறுவமே. (புத்தர்)

### பிறப்பும் வளர்ப்பும்

கார்கொள் இமயமலைத்தொடர்ப் பக்கம்
கபிலவஸ் துஎனும் நாட்டினிலே
சீர்கொள்சுத் தோதனன் என்ருெரு மன்னன்
சிறப்பொடு நாடர சாண்டுவந்தான்.

மன்னவற் கும்அவன் பட்ட மகிஷியாம்
மாயாதே விஎனும் பெண்மணிக்கும்
பொன்னின் குழவியாய்ச் சித்தார்த் தன்என்ற
புதல்வன் அவதாரம் செய்தனனே.

என்றும் உலகம் குருவெனப் போற்றிட,
எங்கும் உலகம் புகழ்ந்திடவே,
நன்றும் அறங்களும் ஒன்றுசேர்ந் தன்ன
நலத்துடன் வாழ்ந்த குழந்தையினை

‘நாட்டிலுள் ளோர்செய்த நற்றவ மோ!ஜக
நாதன் அருள்வைத்த பெட்டகமோ!
ஈட்டும் திரவியச் சாளிகை யோ!உயர்
இன்பம் வளர்கின்ற மாளிகையோ!’

என்று துதித்தனர்; ஏகமாய்க் கூடிவந்
தெல்லோரும் கண்டு மகிழ்ந்தனரே;
‘நின்று நிலவும் இவன்பெயர்; அன்பு
நிலவெறிக் கும்எங்கும்’ என்றனரே.

மன்னர்கள் யாவரும் ‘நாங்களெல் லாம்செய்த
மாதவம் வந்திங் குதித்த’தென்றே,
உன்னரும் ஆனந்தம் பொங்கித் ததும்ப,
உலக விளக்கினைக் கண்டனரே.

## போதனையும் சாதனையும்

‘அன்பு நிலைகொள்ள வேண்டும்’என் றார்;‘அதி
யாசை யொழித்திட வேண்டும்’ என்றார்;
‘துன்புக்குக் காரணம் ஆசை மிகுந்திடல்;
தூய்மை மனத்தினில் வேண்டும்’என்றார்.

கங்கைத் தடத்தில் இருகரைப் பக்கமும்
கௌதம புத்தர் நடந்துசென்று,
அங்கையில் மண்கல மேந்தி, அறச்சொல்,
அருளுப தேசம் புகன்றனரே.

புத்த சமயம் பிறந்தது; ஞானத்தின்
போதம் உலகத் துதித்ததுவே;
சித்தர்கள், முத்தர்கள், செய்யவொ ணாஅருட்
சித்தல்ல வோஅவர் செய்ததுவே?

எண்பது வயதும் முற்ற இருந்தவர்
இன்னுப தேசங்கள் செய்துவிட்டு,
விண்பதத் தார்கட்கு மேலாய் அருட்பெரு
விண்ணொளி யோடு கலந்தனரே.

— தி. இலக்குமண பிள்ளை

## மேற்கும் கிழக்கும்

சக்தி வளருது மேற்கினிலே—ஆத்ம
சாந்தம் வளரும் கிழக்கினிலே;
சக்தியு டன்ஆத்ம சாந்தமும் கூடினுல்
சண்டைக் கிடமில்லை எண்டிசையும். (சக்)

போகம் வளருது மேற்கினிலே—சுத்த
யோகம் வளரும் கிழக்கினிலே;
யோகமும் போகமும் ஒன்றுபட்டால்—இன்பம்
ஓடிவ ரும்உயிர் நாடியிலே. (சக்)

ஞானம் பொலியும் கிழக்கினிலே—விஞ்
ஞானம் செழிப்பது மேற்கினிலே;
ஞானஒ ளியும்விஞ் ஞானமும்கூடினுல்,
வானம் விளையாடும் வாழ்வினிலே. (சக்)

பொருள்செ ழிப்பது மேற்கினிலே—அருள்
பொங்கித் ததும்பும் கிழக்கினிலே;
அருளும் பொருளும் அளாவிய வாழ்க்கையே
ஆனந்தத் தேனமு தாகிடுமே! (சக்)

குண்டு வெடிப்பது மேற்கினிலே—அன்பு
கூடிக் குழையும் கிழக்கினிலே;
சண்டை நடப்பது மேற்கினிலே—யோக
சாதன மோங்குங் கிழக்கினிலே. (சக்)

உலகறி வோங்கிடும் மேற்கினிலே—நல்ல
உள்ளறி வோங்கும் கிழக்கினிலே;
உலகமும் உள்ளமும் ஒன்றுபட்டால்—உயிர்
ஒற்றுமை யாக நிலாவிடுமே. (சக்)

தேக சுகமுண்டு மேற்கினிலே—ஆத்ம
தியான சுகமாம் கிழக்கினிலே;
தேக சுகமுடன் ஆத்ம சுகமும்
செழித்தநல் வாழ்வு செயம்பெறுமே! (சக்)

—சுத்தானந்த பாரதியார்

## கட்டபொம்மன் பெருமை

கட்டபொம் மன்என்ற பேரைச்சொன் ஞல்இந்தக்
காசினி எங்கும் கெடிகலங்கும்;
அட்ட திசையும் நடுங்கி ஒடுங்கும்
அடங்கி மடங்குவர் யாவருமே.

சிட்டுப் பறக்காத பாஞ்சால நாட்டிலே
சீமைவெள் ளேக்காரர் சேர்ந்துவந்து
மட்டுப்ப டாதநம் கட்டபொம்மு வாளால்
மாண்டுமண் ணுகி மடிந்தொழிந்தார்.

வெள்ளேத் துரைகள் விதவித மாகவே
வேண்டிய பீரங்கி மூண்டுசுட்டார்;
எள்ளத்த ணேமண்ணும் பாஞ்சையின் கோட்டையில்
ஏதும் உதிர்ந்தில தேங்கிநின்ருர்.

தென்ஞட்டுச் சிங்கமென் றெந்நாட்டும் பேர்கொண்டு
கன்ஞட்டி நின்று கடுஞ்சமரை
முன்ஞட்டி மூண்டு பொருது விருதுடன்
முன்னிய கீர்த்தியை மன்னிநின்ருன்.

வீர மரபில் பிறந்துள்ள பாஞ்சையர்
வெற்றி நிலேயை விழைவதல்லால்
வாரமாய்க் கும்பினி யார்க்குப் பணிவரோ
வையகந் தன்னில் வழுவாக?

மானம் அழிந்திந்த மண்ணினில் வாழ்வதை
ஈனமென் றேபெரி யோர்இசைப்பார்;
தானம் தவருமல் நின்று பகைவென்று
மானம் புரந்துநாம் வாழ்ந்திடுவோம்.

வீராதி வீரன் ரணவீரன் கட்ட
பொம்மு படைவீரர் மூண்டெழுந்தால்
யாரே எதிர்நின்று போராட வல்லவர்?
ஆளிகள் நேர்வரும் ஆடுகளே.

## ஊமைத்துரையின் வீரம்

ஊமைத் துரைஎன்னும் பேரைச்சொன் ஞல்அங்கே
சீமைத் துரைகள்எல் லாம்நடுங்கிச்
சேமத்தை நாடியே தென்திசை நோக்காமல்
சித்தம் கலங்குவர் மெத்தவுமே.

செந்தமிழ் நாட்டில் பிறந்தா லும்இவன்
சீர்த்தி உலகம்எல் லாம்பரந்து
அந்தரம் எங்கும் முழங்கி வருதலால்
ஆரிவன் ஆண்மை அளவிடுவார்?

மோழை எருதுகள் போலஇந் நாட்டுள்ள
பாளைய காரர்எல் லாம்பணிந்தே
ஏழைகள் ஆக இழிந்துநின் ருர்;இவன்
ஏறுபோல் சீறி எதிர்எழுந்தான்.

நூறுக் கிருந்தாலும் ஆறுக்குள் மாய்ந்தாலும்
போருக்குள் மாய்வதை யேவிழைந்து
பாருக்குள் பாஞ்சையில் வாஞ்சையாய் வந்தவன்
பேருக் கொருவனுய்ப் பேசநின்ருன்.

தென்னுட்டுச் சிங்கம்என்று எந்நாட்டும் பேர்நாட்டித்
திக்கு விசயங்கள் செய்துவந்தான்
இந்நாட்டுள் வெள்ளையர் ஏறிவா ராமலே
ஏறுபோல் சீறி எதிர்த்துநின்ருன்.

## வீரப்பாட்டு

மூண்ட பகைவரை வென்றுகொண் டால்இங்கே
ஆண்டவ ராகநாம் வாழ்ந்திருப்போம்;
மாண்டவர் கையால் மடிந்துபட் டால்அங்கே
வைகுண்டம் சேர்ந்து மகிழ்ந்திடுவோம்.

இன்றைக் கிருந்தாலும் நாளைக் கிருந்தாலும்
என்றைக்கு மேஒரு நாள்இறப்போம்;
அன்றைக்குச் சாவதை இன்றைக்குப் போரினில்
ஆக்கி யமர்வதே பாக்கியமாம்.

பாயும் படுக்கையு மாய்க்கிடந் துபல
நோயும் பிடுங்க மடிவதிலும்
காயும் பகைவரைக் காய்ந்து பொருதுநாம்
காயம் விடுவதே மேலாகும்.

தொண்டைக் குழியிலே சீவன் கிடந்தாலும்
தோக்கல வார்குலம் அஞ்சாதென்று
பண்டைப் பழமொழி கூறி வருவதைப்
பாரினில் யாரும் அறிந்திருப்பார்.

— நாடோடிப் பாடல்

## மனோன்மணீயம்

### அவையடக்கம்

அடியேன் கடையேன் அறியாச் சிறியேன்
கொடுமலை யாளக் குடியிருப் புடையேன்
ஆயினும் நீயே தாயெனுந் தன்மையின்
மேயபே ராசையென் மீக்கொள ஓர்வழி
உழைத்தலே தகுதியென் றிழைத்தவிந் நாடகம்
வெள்ளிய தெனினும் விளங்குநின் கணைக்காற்கு
ஒள்ளிய சிறுவிர லணியாக்
கொள்மதி யன்பே குறியெனக் குறித்தே.

### கழற்சி விளையாட்டு

மனோன்மணி : (சுழல் விளையாடிப் பாட)
துணையறும் மகளிர்மேற் சுடுகணை தூர்ப்பவன்
அணைகில னரன்முன்னென் றூடாய்கழல்;
அணைந்துநீ றானனென் றூடாய்கழல்.

வாணி : (ஷை)
நீறாயி னாலென்னை நேர்மலர் பட்டபுண்
ஆறா வடுவேயென் றூடாய்கழல்;
அழலாடுந் தேவர்க்கென் றூடாய்கழல்.

மனோ :
இருளில் தனித்துறை ஏழையர் தங்கள்மேற்
பொருதலோ வீரமென் றூடாய்கழல்;
போயெரிந் தான்பண்டென் றூடாய்கழல்.

வாணி :
எரிந்தன னாயிலென் என்றென்றுந் தம்முடல்
கரிந்தது பாதியென் றூடாய்கழல்;
கடுவுண்ட கண்டர்க்கென் றூடாய்கழல்.

மனோ :
தெருவிற் பலிகொண்டு திரிதரும் அம்பலத்
தொருவர்க் குடைந்தானென் றூடாய்கழல்;
உருவங் கரந்தானென் றூடாய்கழல்.

வாணி :
உருவங் கரந்தாலென் ஓர்மல ரம்பினால்
அரையுரு வானாரென் றூடாய்கழல்;
அந்நட ராஜரென் றூடாய்கழல்.

ஜீவகன் : *(முனிவரைத் தொழுது)*

வணங்குது முன்றன் மணங்கமழ் சேவடி;
இருந்தரு ளுதியெம் இறைவ!
பரிந்துநீ வந்ததெம் பாக்கியப் பயனே.

சுந்தர : (மனோன்மணியை நோக்கி)

தீதிலே யாதும்? க்ஷேமமே போலும்!
ஏதோ மனோன்மணி! ஓதாய்
வேறுபா டாய்நீ விளங்கு மாறே.

மனோன்மணி : (வணங்கி)

கருணையே யுருவாய் வருமுனீ சுரரே!
எல்லா மறியும் உம்பாற்
சொல்ல வல்லதொன் றில்லை; சுகமே.

செவிலி : (மனோன்மணியை நோக்கி)

கரும்பே! யாங்கள் விரும்புங் கனியே!
முனிவர் பாலுநீ யொளிப்பையே லினியிங்கு
யார்வயி னுரைப்பாய்! ஐயோ! இதுவென்?

(முனிவரை நோக்கி)

ஆர்வமும் ஞானமும் அணிகல னுக்கொள்
தேசிக வடிவே! செப்புமா றறிகிலம்,
மாசறு மனோன்மணி தன்னுரு மாறி
நேற்றிரா முதலாத் தோற்றுந் தோற்றம்.
மண்ணாள் மேனியும்; உண்ணாள் அமுதும்;
நண்ணாள் ஊசலும்; எண்ணாள் பந்தும்;
முடியாள் குழலும்; படியாள் இசையும்;
தடவாள் யாழும்; நடவாள் பொழிலும்;
அணியாள் பணியும்; பணியாள் ஏவலும்;
மறந்தாள் கிளியும்; துறந்தாள் அனமும்;
தூங்குவள் போன்றே ஏங்குவள்; எளியை
நோக்குவள் போன்றே நோக்குவள் வெளியை;
கேட்டுங் கேட்கிலள்; பார்த்தும் பார்க்கிலள்;
மீட்டுங் கேட்பள்; மீட்டும் பார்ப்பள்;
தனியே யிருப்பள்; தனியே சிரிப்பள்;

விழிநீர் பொழிவள்; மெய்விதிர்த் தழுவள்;
இங்ஙன மிருக்கில் எங்ஙன மாமோ!
வாணியும் யானும் வருந்திக் கேட்டும்
பேணி யிதுவரை ஒருமொழி பேசிலள்.
அரசன் கேட்டும் உரைத்திலள் அன்பாய்.
முனிவ! நீ வினவியும் மொழியா ளாயின்
எவருடன் இனிமேல் இசைப்பள்?
தவவுரு வாய்வரு தனிமுதற் சுடரே!

(ஜீவகனை நோக்கி)

சுந்தர :
குழவிப் பருவம் நழுவுங் காலை
களிமிகு கன்னிய ருளமும் வாக்கும்
புளியம் பழமுந் தோடும் போலாம்.
காலங் கன்னியர்க் குளதெனும் பெற்றி
சாலவும் மறந்தனை போலும்! தழைத்துப்
படர்கொடி பருவம் அணையில், நட்ட
இடமது துறந்துநல் லின்ப மெய்த
அருகுள தருவை யவாவும்; அடையின்
முருகவிழ் முகையுஞ் சுவைதரு கனியும்
அகமகிழ்ந் தளித்து மிகவளர்ந் தோங்கும்.

ஜீவகன் :
எங்குல குருவே! இயம்பிய தொவ்வும்;
எங்குள திக்கொடிக் கிசைந்த
பொங்கெழில் பொலியும் புரையறு தருவே?

சுந்தர :
உலகுள மற்றை யரசெலாம் நலமில்
கள்ளியுங் கருவேற் காடுமா யொழிய,
சகமெலாந் தங்க நிழலது பரப்பித்
தொலைவிலாத் துன்னலர் வரினும் அவர்தலை
இலையெனும் வீரமே இலையாய்த் தழைத்து,
புகழ்மணங் கமழுங் குணம்பல பூத்து,
துனிவரு முயிர்க்குள துன்பந் துடைப்பான்
கனியுங் கருணையே கனியாக் காய்த்து,
தருமநா டென்னும் ஒருநா மங்கொள்
திருவாழ் கோடாஞ் சேரதே சத்துப்
புருடோத் தமனெனும் பொருவிலாப் புருடன்

நீங்கி லில்லை நின்து
பூங்கொடி படரப் பாங்காந் தருவே.

திருமணத் தூது

ஜீவகன் : சொல்லிய தெல்லாஞ் சுந்தர முனிவரே!
புருடோத் தமனெனும் பொறையனே நமக்கு
மருமா னாக மதித்ததும் அவரே;
என்றுங் குழந்தை யன்றே? மன்றல்
விரைவில் ஆற்ற வேண்டும்; நாம்இது
வரையும் மறதியா யிருந்தது தவறே.
யாம்இனித் தாமத மின்றியிம் மணமே
கருமமாய்க் கருதி முடிப்பாம்;
வருமுன் கருதும் மந்திர வமைச்சே!

குடிலன் : இறைவ! இதுகேட் டெனக்குள இன்பம்
அறைவதெப் படியான்? அநேக நாளாப்
பலமுறை நினைந்த துண்டிப் பரிசே;
நலமுறப் புரிசை நன்கு முடியும்
அற்றம் நோக்கி யிருந்தே னன்றிச்
சற்றும் மறந்தே னன்று; தனியே
கட்டளை பிறந்துங் கடிமணந் தன்னை
விட்டுள தோஇனி வேறொரு காரியம்?
புருடோத் தமனெனும் பொருநைத் துறைவன்
காண்டகும் ஆண்டகை யென்றும், ஞானம்
மாண்ட சிந்தைய னென்றும், யாண்டுந்
திரியுந் தவசிகள் உரைசெய யானுங்
கேட்ட துண்டு; மற்றவன் நாட்டிற்கு
இன்றே தூதுவ ரேவின், மங்கையை
மன்றல் செய்வான் மனதோ வன்றோ
என்றியாம் அறியலாம் எளிதில்; அறியார்
பலவும் பழிப்பர்; நமக்கதி லொன்றும்
இலை.இன் றேதூ தேவுவம்
பனந்தார் வேய்ந்தோன் அனந்தைப் பதிக்கே.

ஜீவகன் : பழிப்ப ரென்ற மொழிப்பய னென்னை?

பகருதி வெளிப்படப் பண்பாய்
நிகரிலாச் சூழ்ச்சி நெடுந்தகை யோனே!

குடிலன் : எண்ணுதற் கில்லை இறைவ! அவையெலாம்;
கண்ணகன் ஞாலங் கழறும் பலவிதம்.
மணஞ்செய முதன்முதற் பேசி வருதல்,
இணங்கிய ஆடவ ரில்லுள் ளாரே;
அன்றி யாடவர்த் தேடி மன்றல்
சாற்றுதல் தகாதெனப் போற்றுமிவ் வுலகம்;
முன்னை வழக்கும் அன்னதே; ஆயினும்,
ஆத்திரந் தனக்குச் சாத்திர மென்னை?

ஜீவகன் : கூடா தஃதொரு காலும்; குடில!
கேடாம் நமது கீர்த்திக் கென்றும்;
மாசறு மனோன்மணி தனக்கும் மாசாம்;
என்னே ஆத்திரம்? நமது
கன்னியை விழையும் மன்னருங் குறைவோ?

குடிலன் : உண்டு பலவும் உபாயம்; பண்டே
இதனைக் கருதியே யிருந்தேன்; புதிய
கடிபுரி முடியும் முன்னர்க் கழறல்
தகுதி யன்றெனக் கருதிச்
சாற்ற தொழிந்தேன் மாற்றல ரேறே!

ஜீவகன் : நல்லது! குடில! இல்லை யுனைப்போல்
எங்குஞ் சூழ்ச்சித் துணைவர்!
பங்கமி லுபாயம் என்கொல்? பகரே.

குடிலன் : வஞ்சிநா டதனில் நன்செய் நாடெனச்
செந்தமிழ் வழங்குந் தேயமொன் றுளது;
[அதன்
அந்தமில் பெருவளம் அறியார் யாரே?
அனையவந் நாடெலாம் அரச!மற் றுனக்கே
உரித்தென அங்குள பாடையே உரைக்கும்.
சின்னா ளாகச் சேரனண் டிடினும்
இந்நாள் வரையும் அந்நாட் டுரிமை
கொடுத்தது மில்லை,நாம் விடுத்தது மில்லை.

பண்டைநம் உரிமைபா ராட்டிட வென்றே
கண்டனன் இப்புரி, ஆயினும் அதுஇம்
மணத்திற் குதவியாய் வந்தது நன்றே.
ஆதலின் அவன்பால் தூதரை விடுத்துக்
கிழமையும் பழமையும் எடுத்துக் கிளத்தின்,
நாட்டிய நமது நகர்வலி கருதி
மீட்டும் விடுப்பினும் விடுப்பன்; அன்றி
வாதமே பலவும் ஓதினும் ஒருவிதம்
ஒப்புர வாகா தொழியான். பின்னர்,
அந்நியோந் நியசமா தானச் சின்னம்
ஆகவோர் விவாக மாயின் நன்றெனக்
குறிப்பாற் பொதுவாய்க் கூறிடின்,
மறுத்திடான் உடன்மண முடிக்குதும் நன்றே.

ஜீவகன் : மெத்தவுங் களித்தோம்! உத்தமோ பாயம்
இதுவே! குடில! இதனுல்
வதுவையும் நடந்ததா மதித்தேம் மனத்தே.

### பாண்டியன் வீரப்பேச்சு

ஜீவகன் : வேற்படைத் தலைவரே! நாற்படை யாளரே!
கேட்பீர் ஒருசொல்: கிளர்போர்க் கோலம்
நோக்கியாம் மகிழ்ந்தோம்! நுமதுபாக் கியமே
பாக்கியம்! ஆ!ஆ! யார்க்கிது வாய்க்கும்?
யாக்கையின் அரும்பயன் வாய்த்ததிங் குமக்கே!
தாயினும் சிறந்த தயைபூண் டிருந்தநும்
தேயமாம் தேவிக்குத் தீவினை யிழைக்கத்
துணிந்தவிவ் வஞ்சரை எணுந்தொறும்
[எணுந்தொறும்
அகந்தனில் அடக்கியும் அடங்கா தெழுந்து,
புகழ்ந்துயிர்ப் பெறியப் பொறிகண் பொரிய
நெடுந்திரட் புருவம் கொடுந்தொழில் குறிப்ப
வளங்கெழு மீசையும் கிளர்ந்தெழுந் தாடக்
களங்கமில் நும்முகம் காட்டுமிச் சினத்தீக்
கண்டுஅப் பாண்டியே கொண்டனள் உவகை!

புருடோத்தமன்: வஞ்சியான் வஞ்சியான்! மன்னவ! உன்சொல்
அஞ்சினேன்! சூதுன் அமைச்சன் செய்கை;
சுருங்கையின் தன்மை சொல்லி யென்னையிங்
கொருங்கே அழைத்தான் உன்னகர் கவர.
உன்னர சுரிமையும் உன்னகர் நாடும்
என்னிடம் இரந்தான் இச்சூ திதற்கா!
ஓதிய சுருங்கையின் உண்மைகண் டிவன்தன்
சூதும் துரோகமும் சொலியுனைத் தெருட்ட
எண்ணியான் வந்துழி இவ்வொளி விளக்கும்
பண்ணியல் பாட்டும் பழையபுண் ணியமும்
தூண்டிட ஈண்டுமற் றடையவும், யாண்டும்
எனதுயிர் அவாவிய இவ்வரு மருந்தை
நனவினிற் காணவும் நண்ணவும் பெற்றேன்!
பிரிகிலம் இனிமேல்.

வாழ்த்து

ஜீவகன் : பள்ள உவர்க்கடலிற் பாய்ந்தோடும் வெள்ளமென
உள்ளம் உவந்தோடி ஒன்ருனய்;—விள்ளா
மணியின தொளியும் மலரது மணமும்
அணிபெறு மொழியின் அருத்தமும் போல,
இந்நிசி யாகவெஞ் ஞான்றும்
மன்னிய அன்புடன் வாழ்மதி சிறந்தே!

—பெ. சுந்தரம் பிள்ளை

# தலை பிழைத்தது

நாடக மாந்தர்கள்

புலவர் மோசி கீரனார், தாய், மகன்,
சேர மன்னன், வீரர்கள் முதலானோர்

காட்சி 1

இடம்: அரண்மனையில் ஒரு மண்டபம்.

[புலவர் மோசி கீரனார் பாடிக்கொண்டு வருகிறார்.]

புலவர்:

"நெல்லும் உயிரன்றே, நீரும் உயிரன்றே,
மன்னன் உயிர்த்தே மலர் தலை உலகம்;
அதனால், யான்உயிர் என்ப தறிகை
வேல்மிகு தானை வேந்தற்குக் கடனே."

(தமக்குள்)

தனிமையில் இனிமை தருவதிம் மாளிகை!
ஆசையால் என்னுடன் பேசிடு வனபோல்
மாசிலா ஓவிய வண்ணமும் சிற்பமும்
கண்டேன்; கண்களைக் கவர்ந்திடும் இந்த
மண்டப அழகெனை மயக்கிடு கின்றதே!
சேரமான் வீரன் செந்தமிழ்க் கலைஞன்
அல்லவா? அவன்திறம் சொல்லவா வேண்டும்?
அதோஒரு புதுமை! அதுதான் என்ன?
கட்டிலா? ஆமாம்! கிட்டச் செல்வோம்!
பட்டு மெத்தை பகட்டா னதுதான்!
பொங்கிடும் பாலில் பூத்திடும் நுரைபோல்
எங்கும் வெண்மை இலங்கிடப் பிச்சிப்
பூவினைத் தூவிப் பொலிவும் மென்மையும்
மேவிடச் செய்தது மிகமிக அருமை!
கொஞ்ச நேரமிப் பஞ்சணை மீதில்
அமர்ந்து பார்ப்போம்! ஆ ஆ! அருமை!
இமைகளை இறுக்கி என்னை மயக்கித்
தூக்கம் பொங்கிச் சொக்கிடச் செய்வதேன்?

['ஆ'வென்று கொட்டாவி விட்டுக்கொண்டு]

கண்ணயர்ந் திருப்போம், கவலையை மறப்போம்!

[புலவர் உறக்கத்தில் ஆழ்ந்துவிடுகிறார்.]

## காட்சி 2

இடம்: ராஜ வீதி.

[ஒரு வீட்டுத் திண்ணையில் தாயும் மகனும் அமர்ந்து வேடிக்கை பார்க்கின்றனர். வீர முரசு ஒன்றை மண்டபத்திற்குக் கொண்டு செல்லும் ஆரவாரம் கேட்கிறது.]

தாய் :

வீரர் குலமணி விளக்கே! அங்கே
பாராய் சேரரின் வீர முரசம்!

மகன் :

எத்துணைப் பெரியது இம்முர சம்மா!
இத்தனை வீரரும் எங்கே இதனைச்
சுமந்து செல்கிறார்? சொல்வா யம்மா!

தாய் :

கண்மணி! அந்தக் கடும்போர் முரசம்
திண்மை வாய்ந்தது; சிறப்பு நிறைந்தது.
போர்ஒலி முரசில் பொங்கி முழங்கினால்
வீரரின் தோள்கள் விம்மிப் புடைக்கும்;
கணக்கிலாப் போர்களைக் கண்டு வெற்றியை
முழக்கிய பெருமைஅம் முரசிற் குரியதே!
அரசரின் பெருமை அனைத்தும் அந்த
முரசிலே அடங்கிய தென்றும் மொழியலாம்.

மகன் :

அப்படி யானால் இப்பொழு தந்த
வீரர்கள் சேரரின் விழுமிய முரசுடன்
போர்க்களத் திற்கா போய்வரு கின்றனர்?

தாய் :

இல்லை! மகனே, இகல்எதும் இல்லை!
அல்லிக் குளத்தில் அருமை முரசினைக்
கழுவிநீ ராட்டித் தொழுது களிப்புடன்
மண்டபத் திற்குக் கொண்டுசெல் கின்றனர்.

மகன் : சரிதான்,
அரண்மனை அணுகி முரசறை வார்களோ?

தாய் :

முரசடிப் பதற்கும் முறைபல உண்டு;
வீர முரசொரு விளையாட்டுப் பொருளோ?
போரிலை யென்றால் பேரிகை உறங்கும்;

மணிமண் டபத்தில் அணிபெற அமைந்ததோர்
கட்டிலில் முரசினைக் கட்டழ குடனே
கட்டிக் காப்பது காவலர் கடனே;
அரசுக் கட்டிலுக்கு அமைந்த மதிப்பு
முரசுக் கட்டிலின் முகப்பிலும் உண்டாம்;
எவரும் அதனை எளிதில் அணுகார்;
தவறிச் சென்றால் தலைதப் பாது!

மகன் :

அத்துணை மதிப்பா?....அதோபார் அம்மா!
வீரன் ஒருவன் வியர்க்க வியர்க்க
ஆரையோ தேடி ஆவலாய் வருகிறான்!

தாய் :

ஆமாம்! ஏதோ அவசரம் போலும்!
எங்கே வருகிறான்? இருந்து பார்ப்போம்!

மகன் :

பார், பார்! வீரனின் பரபரப் பதனை!
போர்முர சருகே போகிறான் அம்மா!

காட்சி 2அ

[ஓடிவந்த வீரன் முரசு வீரரை அணுகி]

வீரன் :

மாளிகை வீரர்காள்! வந்தது கேடு!

முரசு வீரன் :

சூழ்வினை என்ன? சுருங்கச் சொல்வாய்!

வீரன் :

முரசுக் கட்டிலில் முன்பின் தெரியா
ஒருவர் நன்றாய் உறங்கிடு கின்றார்!

மு. வீரன் :

என்ன நீ சொன்னாய்? இதுவும் உண்மையா?

வீரன் :

உண்மை! கண்டதும் ஓட்டமாய் வந்தேன்.

வீரர் தலைவன் :

தூங்கியோன் தலையைத் துண்டித் திடாமல்
ஈங்கேன் வந்தாய்? இளித்த வாயனே!

வீரன் :

இதுவரை எவரும் இயற்றிடத் துணியாப்
புதுமை யாதலின் பொங்கிய கோபம்
தன்னையும் அடக்கித் தத்தளிப் புடனே
நண்ணினேன் உங்களை! மன்னிக்க வேண்டும்!

தலைவன் :

அதுவும் சரிதான்! ஆத்திரம் வேண்டா!
வாருங்கள், போவோம்; மன்ன ரிடத்தில்
கூறுவோம்; அவரையும் கூட்டிச் சென்று
கட்டளைப் படியே கள்வனை ஒறுப்போம்!

[அனைவரும் ஆரவாரத்துடன் செல்கின்றனர்.]

காட்சி 3

இடம் : சேர மன்னனின் அந்தப்புரம்.

[வீரர் தலைவன் பரபரப்புடன் ஓடி வருகிறான்.]

தலைவன் :

மன்னர் மன்னரே! வம்பு விளைந்தது!

மன்னன் :

என்ன நடந்தது? ஏனிப் பதற்றம்?

தலைவன் :

எதிர்பா ராத புதுமை! இறைவீர்!
முதியவர் ஒருவர் முரசுக் கட்டிலில்
தூங்கிடும் துணிவைச் சொல்லவே வந்தோம்!

மன்னன் :

கட்டிலில் தூங்கிய கள்வனைச் சும்மா
விட்டுவந் தீர்களோ? விந்தையில் விந்தை!

தலைவன் :

கொற்றவீர்! இந்தக் குற்றம் செய்தவர்
ஒற்றரோ, உங்களுக் குற்ற நண்பரோ,

விருந்தின ரோஎன விளங்கா ததனுல்
பெருந்துணுக் குற்றுப் பெரியீர்! துணிவுடன்!
முறையிட வந்தோம்! குறைபொறுத் தருள்வீர்

மன்னன் :

(வெளிப்படச் சிரித்து)
ஓகோ!
சிங்கக் குகையில் சிறுநரி உறங்கவா!
மங்காப் புகழை வளர்க்கும் முரசு
விளங்கிடும் கட்டிலே வீணன் ஒருவன்
களங்கப் படுத்தவா! கயமையை ஒழிப்பேன்!
சேரர் பரம்பரை சிந்தித் தறியா
ஓர்பிழை செய்தோன் உயிர்பிழைத் திடுவதா?
பஞ்சணை மீதில் துஞ்சிடத் துணிந்தோன்
நெஞ்சின் அழுத்தம் நிலைக்க விடுவதா?

தலைவன் :

ஆணை கொடுங்கள்! அரசரே! அவனை
வானுல கிற்கு வழியனுப் பிடுவோம்!

முதலமைச்சர்:

இருநிலம் வியக்கும் இரும்பொறை அரசரே!
திருவிளக் கொளியில் சிந்தை மயங்கித்
தொட்டுச் சுருளும் விட்டிலைப் போலக்
கட்டிலின் பகட்டில் கருத்தை இழந்து
விளைவுநோக் காமல் வெள்ளை மனத்தன்
விளையாட் டாக வினைதே டினனே?
எனினும் அவன்மிகத் துணிவுடை யவனே!
எதற்கும்
மண்டபம் செல்வோம்; வம்பனைக் கண்டு
தண்டனை தருவோம், தமிழ்ப்பெரு வேந்தரே!

மன்னன் :

ஆமாம்! அமைச்சரே! அறிவலி அவனைக்
கண்ட பின்னரே தண்டனை தருவோம்;
மண்டபத் திற்கு வாரீர், போவோம்!

[பரபரப்புடன் அரசனும் ஏனையோரும் முரசு மண்டபத்
திற்கு விரைகின்றனர்.]

## காட்சி—4

இடம்: முரசு மண்டபம்.

[முரசுக் கட்டிலில் புலவர் மோசி கீரனார் உறங்கிக் கொண்டிருப்பதைக் கவனிக்கிறான்.]

**மன்னன் :** (வியப்புடன்)

வருபொருள் உரைக்கும் மந்திரி யாரே!
அருகிலே வாரீர்! அமைதியாய்ப் பாரீர்!
கண்ணயர்ந் திருப்பவர் நுண்ணறி வாளர்;
வண்ணத் தமிழே வடிவாய் விளங்கும்
மாசிலாப் புலவர் மோசி கீரனார்.

**அமைச்சர் :**

அருந்தமிழ்ப் புலவர்! ஆமாம், அரசரே!
பெருந்தவ றிதனைப் புரிந்துவிட் டாரே!
கட்டாந் தரையும் கட்டில் மெத்தையும்
சமமாக் கருதும் தகைமையால் விளைந்த
தவறிது வன்றித் தருக்கெதும் இல்லை!
கவலைக் குரிய கட்டம் இதுதான்!

**மன்னன் :**

விலகிப் போங்கள், வீரர்காள்; சற்றும்
சலனம் இன்றி நிலவுக சாந்தம்!
தண்டனை! ஆமாம்! தண்டனை தருவேன்:
உடனே
மயிற்கண் விசிறி வரவழைத் திடுக!
துயில்பவர் சற்றும் சோர்வடை யாமல்
விசிற வேண்டும்!

**வீரன் ஒருவன் :** (இரகசியமாக)

விந்தையில் விந்தை!
திசையெலாம் புகழும் சேரர் முகத்தில்
கனலெனச் சீறிய கோபம் கடிதில்
புனலெனக் குளிர்ந்தது புதுமை! புதுமை!

**மற்றொருவன் :** (பதற்றத்துடன்)

நாவை அடக்கு! நற்றமிழ்ப் புலவரை
ஆவிபோல் மதிப்பவர் அரசர்! தெரியுமா?

செந்தமிழ் என்ருல் சினமுந் தணியும் ;
விந்தை யன்று! வேந்தரின் பண்பிது!

**அமைச்சர் :**

வெண்சா மரப்பணி வினைஞர்கள் எங்கே?

**வீரன் :**

வந்துவிட் டனரிதோ! மந்திரி யாரே!

**அமைச்சர் :**

செந்தமிழ்ப் புலவரின் சிந்தை குளிர
வீசுக, வீசுக, வேந்தரின் ஆணை!

**மன்னன் :**

வேண்டா! யானே வீசப் போகிறேன் ;
விசிறியைக் கொடுங்கள்! விலகிப் போங்கள்!
அமைச்சரே!
வெற்றித் தெய்வம் விரும்பும் கட்டிலில்
நற்றமிழ்த் தெய்வம் போன்றநம் நாவலர்
கண்ணயர்ந் திருக்கும் காட்சியைக் காணீர்!
நல்ல காலம், நாமே வந்தோம்!
இல்லை யானல் இவரது தலையைத்
துண்டித் திருப்பர் மண்டப வீரர்கள்!
தமிழ்த்தாய் அருளால் தவறு தவிர்த்தோம்!

**வீரன் ஒருவன் :**

கண்டறி யாதன கண்டோம்! சேர
மண்ட லாதிபர் மாற்றலர் நடுங்க
வீரவாள் ஏந்தும் வெற்றிக் கையால்
ஆர்வமும் அன்பும் அமைதியும் கொண்டு
வெண்சா மரத்தால் வீசுகின் ருரே!
அதுவும்,
முறைமை தவறி முரசுக் கட்டிலில்
உறங்கிடும் ஒருவரை உபசரிக் கின்ருர்!
நித்திரை செய்யும் முத்தமிழ்ப் புலவரின்
பெருமையே பெருமை! பொய், பொய்! அவரது
தலைபிழைத் ததுவே தமிழின் பெருமைதான்!

வீரனொருவன் : (மற்றவனிடம்)
அதோபார்.
புலவர்கண் விழித்துப் புரண்டு படுக்கிறார்!
திடுக்கிட் டெழுகிறார்! திகைப்பும் உறுகிறார் !
நடுக்கல் கொண்டு நாநா பக்கமும்
பார்வையைச் செலுத்திப் பரபரப் படைந்து
வேந்தர்கை யேந்திய விசிறியைக் காண்கிறார்!
கட்டிலி லிருந்து சட்டென இறங்கி
அரசரை வணங்கும் அதிர்ச்சியைப் பார்பார்!

புலவர் : (நடுக்கங் கலந்த குரலில்)
அரசர்! அமைச்சர்! அருகிலே முரசம்!
சரிசரி! ஏதோ தவறிழைத் தேனே !
என்னையும் அறியாது இடர்விளைத் தேனே!
மன்னித் தருள்வாய், மன்னர் மன்னா!

மன்னன் : (குறுநகை புரிந்து)
கன்னற் கவிஞரே! மன்னிப் பதுயார் ?
என்ன கலக்கம்? இன்துயில் கலைந்துநீர்
கண்விழித் திடநான் காரண மானேன்!
மன்னித் திடுவீர், மாசிலா மனத்தீர்!

புலவர் : (புளகாங்கித உணர்வுடன்)
மிகவும் புதுமைதான், வேந்தர் வேந்தே!
தகடூர் வென்ற புகழுடை மன்னா!
இரும்பொறை என்னும் என்னுயிர் நண்பா!
பெரும்பிழை செய்தேன்! பிழைபொறுத் ததுவே!
போதும் நின்தமிழ்க் காதலை உணர்த்த.
அத்துடன் விடாமல் முத்தமிழ் வள்ளலால்!
பித்தன் எனது நித்திரை பேணச்
செங்கோல் ஏந்தும் நின்கை யாலே
விசிறி எடுத்து வீசவும் முனைந்தாய்!
தனிப்பெருங் கருணைத் தமிழ்ப்பெரு வேந்தே!
இனியஇவ் வாய்ப்பினைக் கனவிலுங் கருதிலேன்.
பிறவி எடுத்த பெருமையை இன்றே
அறிந்தேன்! நின்புகழ் அமுதத் தமிழ்த்தாய்
மாண்புடன் சேர்ந்து வாழ்க! வளர்க!
தலையைக் காத்த தமிழின் பெருமை
உலகம்உள் ளளவும் ஓங்குக நன்றே! (பாடுகிறார்.)

"நெல்லும் உயிரன்றே, நீரும் உயிரன்றே,
மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம்."

— புத்தனேரி ரா. சுப்பிரமணியன்

## தாலாட்டு

ஆராரோ! ஆராரோ!
ஆரிவரோ! ஆராரோ!
முல்லை நறுமலரோ?
முருகவிழ்க்கும் தாமரையோ?
மல்லிகைப் பூவோ?
மருக்கொழுந்தோ? சண்பகமோ?

கல்லைப் பிசைந்து
கனியாக்கும் செந்தமிழின்
சொல்லை மணியாகத்
தொடுத்தவனும் நீதானோ?

பூவில் அயனும்இந்தப்
பூமீது வள்ளுவர்தம்
பாவின் நயம்உணரப்
பாலகனாய் வந்தானோ?

தேவாரப் பாகும்
திருவா சகத்தேனும்
நாவார உண்ணஎம்மான்
நன்மகவாய் வந்தானோ?

புள்ளி மயிலோடு
புனம்காத்து நிற்கும்அந்த
வள்ளி மணவாளன்
மதலையாய் வந்தானோ?

ஆயர் பதியில்
அற்புதங்கள் செய்துநின்ற
மாயவனே இங்கு எமக்கு
மகவாகி வந்தானோ?

பாலை விரும்பினையோ?
பணிகாரம் வேண்டினையோ?
சோலைப் பசுங்கிளியே!
சுந்தரமே! சொல்லிஅழு!

தித்திக்கும் தேனும்,
தினைமாவும் கொண்டுஉன்றன்
அத்தை வருவாள்;
அழவேண்டா கண்மணியே!

கண்ணுறங்கு! கண்ணுறங்கு!
கண்மணியே, கண்ணுறங்கு!
ஆராரோ! ஆராரோ!
ஆரிவரோ! ஆராரோ!

— தேசிக விநாயகம் பிள்ளை

## பசுவும் கன்றும்

தோட்டத்தில் மேயுது
வெள்ளைப்பசு—அங்கே
துள்ளிக் குதிக்குது
கன்றுக்குட்டி.

அம்மா என்குது
வெள்ளைப்பசு—உடன்
அண்டையில் ஓடுது
கன்றுக்குட்டி.

நாவால் நக்குது
வெள்ளைப்பசு—பாலை
நன்ருய்க் குடிக்குது
கன்றுக்குட்டி.

முத்தம் கொடுக்குது
வெள்ளைப்பசு—மடி
முட்டிக் குடிக்குது
கன்றுக்குட்டி.

— தேசிக விநாயகம் பிள்ளை

## பாடும் பலனும்

தோலை உரித்த பிறகுதான்
சுளையைத் தின்று பார்க்கலாம்.
ஓட்டை உடைத்த பிறகுதான்
உள்ளே பருப்பைக் காணலாம்.
உலையில் அரிசி வெந்துதான்
உண்டு பசியைப் போக்கலாம்.
துணியைத் தைத்த பிறகுதான்
சொக்காய் போட்டு மகிழலாம்.
எழுத்தைக் கற்ற பிறகுதான்
ஏட்டைப் படித்து அறியலாம்.
பாடு பட்ட பிறகுதான்
பலனைக் கண்டு மகிழலாம்.

— அழ. வள்ளியப்பா

## நாமும் பயிலுவோம்

தேனி ருக்கும் இடத்தினைத்
தேடி மொய்க்கும் வண்டுபோல்,
சீனி யுள்ள இடத்தினைத்
தேடி ஊரும் எறும்புபோல்,
பழம்நி றைந்த சோலையைப்
பார்த்துச் செல்லும் கிளியேபோல்,
வளம்நி றைந்த நாட்டிலே
வந்து சேரும் மக்கள்போல்,
பள்ள மான இடத்தினைப்
பார்த்துப் பாயும் வெள்ளம்போல்,
நல்ல நல்ல நூல்களை
நாடி நாமும் பயிலுவோம்.

— அழ. வள்ளியப்பா

## மலர்

இன்முகம் காட்டிடுமே—அதனால்
இன்பமும் ஊட்டிடுமே;
நன்மணம் வீசிடுமே—சுற்றி
நான்கு திசைகளுமே.

வண்டுகள் தேன்விரும்பி—நாடி
வந்திடும் மொய்த்திடவே ;
கண்டவர் யாவரையும்—இதனது
காட்சி மயக்கிடுமே.

ஈசன் திருவடியில்—இதுவே
என்றென்றும் நின்றிடுமே ;
பாசமாய் மக்களுமே—இதனைப்
பறித்துச் சூடுவரே.

மணம்ந டக்கையிலே—அங்கே
மணத்தை வீசிடுமே ;
குணம்பெ ரிதாகும் ;—ஆனல்
குற்றம் எதுவுமில்லை.

மலர்எ னஉள்ளம்—நமக்கு
மலர வேண்டுமடி!
பலரும் போற்றிடவே—உலகில்
பண்புடன் வாழ்வோமடி!

— அழ. வள்ளியப்பா

## என் தெய்வம்

அம்மா! அம்மா! வருவாயே
அன்பாய் முத்தம் தருவாயே.
அம்மா! உன்னைக் கண்டாலே,
அழுகை ஓடிப் போய்விடுமே.

பத்து மாதம் சுமந்தாயே,
பாரில் என்னைப் பெற்றுயே,
பத்தி யங்கள் காத்தாயே,
பாடு பட்டு வளர்த்தாயே.

அழகு மிக்க சந்திரனை
ஆகா யத்தில் காண்பித்தே
பழமும் பாலும் ஊட்டிடுவாய்
பாட்டும் கதையும் சொல்லிடுவாய்.

தமிழைக் கற்றுத் தந்திடுவாய ;
'தத்துப் பித்'தெனப் பேசிடினும்
'அமுதம்! அமுதம்!' என்றிடுவாய் ;
அணைத்து முத்தம் தந்திடுவாய்.

எனக்குச் சிறுநோய் வந்தாலும்
ஏனோ மிகவும் வருந்துகிறாய்!
உணவும் இன்றி உறங்காமல்
உயிர்போல் என்னைக் காக்கின்றாய்.

உன்னைப் போல வளர்த்திடுவோர்
உலகில் உண்டோ வேறொருவர்?
என்னைக் காக்கும் அம்மாவே !
எனக்குத் தெய்வம் நீதானே.

— அழ. வள்ளியப்பா

## பெண்களின் உரிமைகள்

மங்கைய ராகப் பிறப்பதற்கே — நல்ல
மா தவம் செய்திட வேண்டும்அம்மா!
பங்கயக் கை நலம் பார்த்தலவோ—இந்தப்
பாரில் அறங்கள் வளரும்அம்மா!

சிந்திய கண்ணீர் துடைப்பவர்ஆர்?—பயம்
சிந்தை அகன்றிடச் செய்பவர்ஆர்?
முந்து கவலை பறந்திடவே—ஒரு
முத்தம் அளிக்க வருபவர்ஆர்?

உள்ளம் தளர்வுறும் நேரத்திலே—உயிர்
ஊட்டும் உரைகள் உரைப்பவர்ஆர்?
அள்ளி எடுத்து மடியிருத்தி—மக்கள்
அன்பைப் பெருக்கி வளர்ப்பவர்ஆர்?

அன்பினுக் காகவே வாழ்பவர்ஆர்?—அன்பில்
ஆவியும் போக்கத் துணிபவர்ஆர்?
இன்ப உரைகள் தருபவர்ஆர்?—வீட்டை
இன்னகை யால்ஒளி செய்பவர்ஆர்?

மங்கைய ராகப் பிறந்ததனுல்—மனம்
வாடித் தளர்ந்து வருந்துவதேன்?
தங்கு புவியில் வளர்ந்திடும்—கற்பகத்
தருவாய் நிற்பதும் நீரலவோ?

— தேசிக விநாயகம் பிள்ளை

## பாட்டுக்கொரு புலவன்

பாட்டுக் கொருபுலவன் பாரதியடா !—அவன்
பாட்டைப்பண் ணேடுஒருவன் பாடினனடா!
கேட்டுக் கிறுகிறுத்துப் போனேனேயடா !—அந்தக்
கிறுக்கில் உளறுமொழி பொறுப்பாயடா !

குயிலும் கிளியும்பாட்டில் கூவுமேயடா!-மயில்
குதித்துக் குதித்துநடம் ஆடுமேயடா!
வெயிலும் மழையும்அதில் தோன்றுமேயடா!-மலர்
விரிந்து விரிந்துமணம் வீசுமேயடா!

உள்ளம் தெளியும்ஒரு பாட்டிலேயடா!-மிக்க
ஊக்கம் பிறக்கும்ஒரு பாட்டிலேயடா!
கள்ளின் வெறிகொளும்ஓர் பாட்டிலேயடா!
-ஊற்றுய்க்
கண்ணீர் சொரிந்திடும்ஓர் பாட்டிலேயடா!

— தேசிக விநாயகம் பிள்ளை

## வாழ்க்கை இன்பம்

வெய்யிற் கேற்ற நிழல்உண்டு!
வீசும் தென்றல் காற்றுண்டு!
கையில் கம்பன் கவியுண்டு!
கலசம் நிறைய மதுவுண்டு!
தெய்வ கீதம் பலவுண்டு!
தெரிந்து பாட நீயுண்டு!
வையம் தரும்இவ் வனம்அன்றி
வாழும் சொர்க்கம் வேறுண்டோ?

— தேசிக விநாயகம் பிள்ளை

## விண்ணப்பம்

பாலைவனம் சோலைவன மாக வேண்டும்;
பசுங்கிளிகள் அங்கிருந்து பாட வேண்டும்;
சாலைகளிற் பலதொழிலும் பெருக வேண்டும்;
சபைகளிலே தமிழெழுந்து முழங்க வேண்டும்;
சீலைஉடை கதருடையாய்த் திகழவேண்டும்;
தேசபக்தி செழித்தோங்கி வளர வேண்டும்;
வேலையில்லாத் திண்டாட்டம் ஒழிய வேண்டும்;
வெற்றியின்மேல் வெற்றிஎமக் கெய்த
வேண்டும்.

— தேசிக விநாயகம் பிள்ளை

## கத்தியின்றி ரத்தமின்றி

கத்தி யின்றி ரத்த மின்றி
யுத்த மொன்று வருகுது!
சத்தி யத்தின் நித்தி யத்தை
நம்பும் யாரும் சேருவீர். (கத்)

கண்ட தில்லை கேட்ட தில்லை
சண்டை யிந்த மாதிரி
பண்டை செய்த புண்ணியம்
பலித்த தேநாம் பார்த்திட! (கத்)

காந்தி யென்ற சாந்த மூர்த்தி
தேர்ந்து காட்டும் செந்நெறி
மாந்த ருக்குள் தீமை குன்ற
வாய்ந்த தெய்வ மார்க்கமே. (கத்)

— நாமக்கல் இராமலிங்கம் பிள்ளை

## தமிழன் இதயம்

தமிழன் என்றொரு இனமுண்டு;
தனியே அவற்கொரு குணமுண்டு;
அமிழ்தம் அவனுடை மொழியாகும்;
அன்பே அவனுடை வழியாகும்.

அறிவின் கடலைக் கடைந்தவனும்;
அமிர்தம் திருக்குறள் அடைந்தவனும்;
பொறியின் ஆசையைக் குறைத்திடவே
பொருந்திய நூல்கள் உரைத்திடுவான்.

மானம் பெரிதென உயிர்விடுவான்;
மற்றவர்க் காகத் துயர்படுவான்;
தானம் வாங்கிடக் கூசிடுவான்;
'தருவது மேல்'எனப் பேசிடுவான்.

— நாமக்கல் இராமலிங்கம் பிள்ளை

## பொதிகை மலை

சந்தனத் தென்றல் வீசும் பொதிகை
சாரல் வந்து சாயும் பொதிகை
அந்தரத் தெழுமுகில் ஆயிரங் கூடி
அடைமழை சொரியும் அழகிய பொதிகை.
(சந்தனத் தென்றல் வீசும் பொதிகை)

தமிழ்முனி அகத்தியன் தவம்செய் பொதிகை
தமிழ்மகள் பிறந்து தவழ்ந்த பொதிகை
தமிழ் தமிழ் எனஎதி ரொலிசெயும் பொதிகை
தமிழ்மணம் எங்கணும் கமழ்ந்திடும் பொதிகை.
(சந்தனத் தென்றல் வீசும் பொதிகை)

இலக்கியம் பிறந்துநின் றெழுந்தது மாங்கே
இலக்கணம் வளர்ந்துபின் இணைந்தது மாங்கே
துலக்கமாய்ப் பல்கலை தோன்றிட ஞானமும்
தூயபண் பாடும் துளிர்த்தது மாங்கே.
(சந்தனத் தென்றல் வீசும் பொதிகை)

— மீ. ப. சோமசுந்தரம்

## கவிதைப் பெண்

கவிதை எனுமோர் பெண்தெய்வம்—அவள்
கவிஞர் பரவும் அருந்தெய்வம்
புவியை இயக்கும் புகழ்த்தெய்வம்—அவள்
புலவர் தமக்குக் குலதெய்வம்.

கையில் வளைகள் ஆடிடுமே—அவள்
காலிற் சிலம்பு பாடிடுமே
மெய்யில் மின்னல் வீசிடுமே—அந்த
மேனி கவிதை பேசிடுமே.

மண்ணை மிதித்துச் செல்கையிலே—பூமி
மங்கை யுள்ளம் மகிழ்ந்திடுமாம்
விண்ணைக் கிழித்துச் சாடையிலோ—வானம்
விம்மி நிமிர்ந்து விரிந்திடுமாம்.

பூவில் நின்று சிரித்திடுவாள்—அவள்
பூங்கொடி தன்னில் ஆடிடுவாள்
காவில் வீசும் காற்றினிலே—இன்பக்
கண்ணிகள் பாடி உலவிடுவாள்.

தாமரைப் பூவில் வீற்றிருப்பாள்—வானத்
தாரகை தன்னுள் மினுமினுப்பாள்
சாமமை யிருளிற் காட்டினிலே—ஒரு
சம்பகப் பூவிற் கமழ்ந்திடுவாள்.

கோலமா மயிலின் தோகையிலே—பசுங்
கொண்டலின் விளைந்த வில்லினிலே
மாலையின் செவ்விய வானகத்தே—நின்று
மந்திரிப் பாளவள் அந்தரத்தே.

ஆடிடு வாள்கடல் அலைகளிலே—எழுந்து
ஆர்த்திடு வாள்புயற் காற்றினிலே
ஓடிடு வாள்நதி ஓட்டத்திலே—அவள்
உதித்திடு வாள்கதிர் வட்டத்திலே.

கவிதை எனுமோர் பெண்தெய்வம்—அவள்
கவிஞர்க் கெல்லாம் குலதெய்வம்
புவியை இயக்கும் புகழ்த்தெய்வம்—அவள்
புலவர்க் கெல்லாம் குலதெய்வம்.

— மீ. ப. சோமசுந்தரம்

## இளவேனில்

கானம் சிரித்தது, வையம் சிலிர்த்தது,
வந்தது இளவேனில்; வந்தது இளவேனில்!
கானம் ஒலித்தது, கான்மலர் நகைத்தது,
காயுது இளவேனில்; காயுது இளவேனில்!

பொதிகை உரைத்தது புத்துணர் வென்று,
புவியெலாம் அங்ஙனே புத்துணர் வுற்றது!
பொதிகை சிரித்தது, பொருநை சிரித்தனள்,
பூங்கொடி யாவும் புன்னகை செய்தன!

மரங்கள் தழைத்தன; மட்டை துளிர்த்தன;
மாருதம் வீசிட மாங்கொழுந் தவிழ்ந்தன;
கரங்கள் கொட்டின கானகச் செடியெலாம்
களிவண் டினங்கள் கவிபா டினவே!

— மீ. ப. சோமசுந்தரம்

## தமிழ் இனிமை

கனியிடை ஏறிய சுளையும்,—முற்றல்
கழையிடை ஏறிய சாறும்,
பனிமலர் ஏறிய தேனும்,—காய்ச்சு
பாகிடை ஏறிய சுவையும்,
நனிபசு பொழியும் பாலும்,—தென்னை
நல்கிய குளிரிள நீரும்
இனியன என்பேன் எனினும்,—தமிழை
என்னுயிர் என்பேன் கண்டீர்!

தமிழ்எங்கள் இளமைக்குப் பால்!—இன்பத்
தமிழ்நல்ல புகழ்மிக்க புலவர்க்கு வேல்!
தமிழ்எங்கள் உயர்வுக்கு வான்!—இன்பத்
தமிழ்எங்கள் அசதிக்குச் சுடர்தந்த தேன்!
தமிழ்எங்கள் அறிவுக்குத் தோள்!—இன்பத்
தமிழ்எங்கள் கவிதைக்கு வயிரத்தின் வாள்!
தமிழ்எங்கள் பிறவிக்குத் தாய்!—இன்பத்
தமிழ்எங்கள் வலமிக்க உளமுற்ற தீ!

— பாரதிதாசன்

## தமிழர்

'வெள்ளம்போல் தமிழர் கூட்டம்
வீரம்கொள் கூட்டம்; அன்னார்
உள்ளத்தால் ஒருவ ரே;மற்று
உடலினால் பலராய்க் காண்பார்;
கள்ளத்தால் நெருங்கொ ணாதே!'
எனவையம் கலங்கக் கண்டு
துள்ளும்நாள் எந்நாள்? உள்ளம்
சொக்கும்நாள் எந்த நாளோ?

— பாரதிதாசன்

## அழகு

காலையிளம் பரிதியிலே அவளைக் கண்டேன் ;
கடற்பரப்பில், ஒளிப்புனலில் கண்டேன் ; அந்தச்
சோலையிலே, மலர்களிலே, தளிர்கள் தம்மில்,
தொட்டஇடம் எலாம்கண்ணில் தட்டுப் பட்டாள்!
மாலையிலே மேற்றிசையில் இலகு கின்ற
மாணிக்கச் சுடரிலவள் இருந்தாள் ; ஆலஞ்
சாலையிலே கிளைதோறும் கிளியின் கூட்டந்
தனில்அந்த 'அழகெ'ன்பாள் கவிதை தந்தாள் !

— பாரதிதாசன்

## தமிழ்

வெண்ணிலாவும் வானும் போலே
வீரனும்கூர் வாளும் போலே
(வெண்ணிலாவும் வானும் போலே)

வண்ணப்பூவும் மணமும் போலே
மகரயாழும் இசையும் போலே
கண்ணும்ஒளியும் போலே எனது
கன்னல்தமிழும் நானும் அல்லவோ?
(வெண்ணிலாவும் வானும் போலே)

வையகமே உய்யு மாறு
வாய்த்த தமிழ்என் அரும்பேறு
துய்யதான சங்க மென்னும்
தொட்டிலில் வளர்ந்த பிள்ளை
(தம்) கையிலே வேலேந்தி—இந்தக்
கடல் உலகாள்மூ வேந்தர்
கருத்தேந்திக் காத்தார்அந்தக்
கன்னல் தமிழும் நானும் நல்ல
(வெண்ணிலாவும் வானும் போலே)

— பாரதிதாசன்

## வாடிய மலர்

சோலையில் பூத்தாய்! கண்டு
சொக்கினர் வளர்த்தா ரெல்லாம்!
வேலிக்குள் இருந்த போதும்
விழிக்குநீ விருந்தே யானாய்!
கோலஞ்செய் மலரே! உள்ளக்
குளிர்மையே! உனது வாழ்வு
மாலையின் அளவே! வாழும்
மக்களேன் நினைப்ப தில்லை?

தேடிவந் தணைந்த புள்ளிச்
சிறுவண்டின் எழிலைக் கண்டோ,
பாடிய பாட்டைக் கேட்டோ
உன்னைநீ கொடுத்தாய் கொள்ளை?
ஆடினாய் காற்றில்; இன்ப
அசைவினில் திளைத்தாய்; சோர்ந்தாய்;
வாடிநீ உதிர்ந்தாய்! உன்னை
மக்களேன் நினைப்ப தில்லை?

கசங்கிய மலரே! உன்னைக்
கண்டதும் இந்த நாட்டில்
கசங்கிய மலர்கள் சிந்தும்
கண்ணீரென் கண்முன் தோன்றும்!
கசங்கிய தெதனால் என்று
கருத்தூன்றிப் பாரா மக்கள்
கசங்கியே வாழ்த லன்றிக்
களிப்போடு வாழ்த லுண்டோ?

— வாணி தாசன்

## விளங்காப் புதுமை

காலையில் மேட்டுக் கிளைஅமர்ந் தேஒரு
காகம் கரைந்திடக் கேட்டதுண்டு!
சோலைப் பறவைகள் சோர்வகற் றிவெளிச்
சோதியில் நீந்திடச் சென்றதுண்டு!

எட்டுத் திசைவெளி எங்கும்ப றந்துஉணவு
எப்படி யோதேடி எஞ்சியதைக்
கட்டி அணைத்துஅல கால்சிற கால்இரு
கால்விர லாலும் எடுத்துவந்து

பட்டுடல் மேனி படபடக் கும்சிறு
பார்ப்புப் பசியாறப் பக்குவமாய்க்
கொட்டி நிறைக்கின்ற கூரல காலுடல்
கோதி மகிழ்கின்ற கொள்கையினை

கண்டு வியக்கின்ற காட்சியுண் டு!பல
கற்பனை வல்லமை கற்றதுண்டு!
உண்டறி வென்னும் உபாயமுண் டு!கிளர்
உள்ளத் துணர்ச்சியின் ஊற்றுமுண்டு!

செப்படி வித்தைகள் செய்தபின் னும்கோடி
சென்மம் எடுத்துச் சிறந்தபின்னும்
எப்படி வாழ்வதிங்கு என்பதே மானிடர்க்கு
இன்னும் விளங்கா அதிசயமே!

— திருலோக சீதாராம்

# காசில்லாக் கனகரத்தினம்

## 1

வெய்யில் படபடக்கும்,
வெப்பம் கொழுந்துவிடும்,
நெய்யில் நெருப்புருக்கும்,
தார்போட்ட நெடுவீதி!

இருபுறமும் மச்சுமச்சாய்க்
கட்டடங்கள் எத்தனையோ!
ஒருமனிதன் தங்குதற்கோர்
ஒதுக்குப் புறமில்லை!

காரோடும்; டிராமோடும்;
கானல் அலையோடும்!
நீரோடும் பைப்பில்லை
நிழலோடாச் சென்னையிலே!

## 2

என்றைக்கோ நன்றாய்
இருந்தாலும்; ஆனாலும்,
இன்றைக்கோ இவனைப்போல்
இடுக்குடையார் யாருமில்லை!

கையில் குடையுமில்லை;
காலுக்கும் செருப்பில்லை;
பையில் பணமில்லை;
பசிக்குப் பருக்கையில்லை!

மேலோடும் வியர்வையினில்
மிதந்தோடும் மேல்சட்டை;
காலா வதியான
கந்தலிலே பஞ்சகச்சம்;

பஞ்சடைந்து பாசடைந்த
பாழ்ங்கிணறு போல்குழிக்கண்;
புஞ்சிரிப்புக் காணுத
பொக்கைவாய்; புழைக்கன்னம்;

கீற்றுவிட்ட நெற்றி;
கிறுக்கிவிட்ட கோணல்முகம்;
நாற்றிசைக்கும் பொடிநாற்றம்
நாறுபுனல் மூக்கோட்டை;

தோலிருக்கச் சுளேவிழுங்கும்
சூரன்போல் வறுமைப்பேய்
தோலிருத்தித் தசைவிழுங்கச்
சுக்காகிப் போனஉடல்;

முட்டியிடும் கால்கள்
முறுக்குவிடும் முட்டியெலாம்;
பட்டினியாம் பாழ்வயிறு
பாதாளம் பார்த்துவரும்!

## 3

வீட்டில் மனேவிகர்ப்பம்;
விளேயாட்டுக் கைக்குழந்தை
நீட்டிப் படுத்துவிட்டான்;
நெஞ்சுக்குள் ஆபத்தாம்!

மொட்டைச்சி மார்நால்வர்;
மூளிப்பெண் மூவருக்குக்
கட்டத் துணியில்லே;
கண்ணுலம் காத்திருப்பார்!

மூத்தபெண் வீட்டோடே :
மோகனத்துக்கு அவள்கணவன்
வார்த்தைக்குத் தக்கபடி
வரிசையெடுக் காமையினுல்!

அன்ருடம் நாலுபணம்
அகப்பட்டால் சோறுண்டு!
என்ருகிலும்கிடைக்கும்
இலேபோட்ட சாப்பாடு!

பாவிமகன் பிள்ளேகட்குப்
பாடம்சொல்லி வாராணும்!
மூவிரண்டு ரூபாய்க்கு
மோசமில்லே மாசத்தில்!

என்செய்வான் ஏழை!
இருகாலும் தள்ளாடப்
பன்முறை ஆபீஸ்கள்
பலபலவும் போய்வந்தான்!

இரவல்பேப் பரில்'தேவை'
என்னென்ன வோகண்டான்!
இரவல்கா கிதம்வாங்கி
எவ்வளவோ விண்ணப்பம்

எழுதினுன்; என்ருலும்
எழுதியது தான்மிச்சம்!
தொழுதான்; பல்லிளித்தான்;
தோத்திரித்தான்: பணக்காரர்

நெஞ்சம் இளகவில்லே!
'நீட்டுகம்பி' என்றுரைத்தார்;
'பஞ்சைஇவன் பூமிக்குப்
பாரம்!'எனச் சொல்லிவிட்டார்!

காலியில்லே வேலே!
காலியிருந் தால்லஞ்சக்
கூலிக்குக் காசில்லே;
கொடுக்கச் சிநேகரில்லே!

பகல்பகதூர் ராப்பகதூர்
பட்சமிவன் பாலில்லே!
அகிலஉல கத்துஇவனே
ஆதரிப்பார் யாருமில்லே!

பேர்பெத்தப் பேர்தான்!
கனகரத்னப் பெரும்பேராம்!
ஊர்சுற்றும் நாய்க்கேனும்
எச்சில் உணவுண்டு!

பஞ்சைப்பார்ப் பான்ஏழைப்
பரதேசிக்கு அதுவுமில்லே!
நெஞ்சம் கொதிப்பேற,
நினேவெல்லாம் தற்கொலேயின்

மீதேறச் சென்னே நகர்
வீதியெல்லாம் சுற்றுகிருன்!

— ச. து. சு. யோகி

## காந்தி மகான்

பாரத நாட்டிற்குத் தந்தையவன்
பாவத்தை வென்றிடும் சிந்தையவன்
மாரத வீரரை வாசகத்தால்
மாநிலத் தில்தோன்றச் செய்ததவன்.

சூரர்கள் கோடி படைத்துவிட்டான்;
சுத்தசு யாட்சியை வாங்கித்தந்தான்;
ஆரமு தாகிய சத்தியமும்
அன்பும் அகிம்சா தத்துவமும்

கொள்கை நமக்குக் கொடுத்துள்ளான்;
கொண்டு செலுத்தி நடத்திவந்தால்
கோடாநு கோடி தலேமுறைக்கே
வாடாமல் இந்தியர் வாழ்ந்திடலாம்.

வழியை அமைத்துக் கொடுத்தமகான்
வந்த கடமை முடிந்ததென்றே
அழியும்உடம்பை அழித்துவிட்டே.
ஆதிப் பரம்பொருள் ஆகிவிட்டான்.

ஏசுவைக் காட்டிக் கொடுத்தவனும்
ஏப்ரஹாம் லிங்கனைக் கொன்றவனும்
ஏந்திழை ஜோன்என்னும் ஞானியையும்
எங்களின் காந்தி மகான்தனையும்

கூடப் பிறந்த குலத்தவரே
கொன்று குவித்தவ ராவரய்யா!
கூடப் பிறந்த வியாதியதே
கொன்றிடு மென்பது பொய்யாமோ?

... ... ... ...

ஈசன் திருவிளை யாடலிலே
என்னென்ன அற்புதம் உண்டென்றுநாம்
யோசனை செய்ய முடியாது;
உட்பட்டுத் தானே ஆகவேண்டும்?

காலம் படைத்த கடவுளையும்
காந்தியைத் தந்த கடவுளையும்
சீலந் தவருது கைதொழுவோம்;
சேவையை எந்நாளும் நாம்மறவோம்;

சத்திய மன்பு வழிச்செல்லுவோம்;
சாந்த அகிம்சையைக் கைக்கொள்ளுவோம்
நித்திய மானதோர் காந்திமகான்
நெறிபி டித்து நடத்திடுவோம்.

நல்லவரென்று பெயரெடுப்போம்;
நாட்டுக்கு நல்லதைச் செய்திடுவோம்;
கொல்ல வரும்புலி தன்னையுமே
கொல்லா விரதமும் கைக்கொள்ளுவோம்;

வாழிய வாழிய காந்திமகான்
வள்ளல் வகுத்த நெறிவாழி !
ஊழி உலகை யழித்தாலும்
உண்மை எந்நாளும் வாழியவே !

— கொத்தமங்கலம் சுப்பு

## இயற்கைத் தாய்

தென்றலெனும் தொட்டிலிலே எனைக்கிடத்தித்
தேன்நுகர மலர்கள் தோறும்
சென்றிருந்து தமிழ்பாடும் வண்டொலியால்
செவிகுளிரத் 'தாலே தாலோ!'
என்றினிய தாலாட்டித் துயிற்றிடுவாள் ;
எழுந்தழுதால் ஆறு காட்டிக்
குன்றிருந்து வீழருவி கடல்காட்டிக்
கொஞ்சிடுவாள் மலர்கள் காட்டி.

— முடியரசன்

## வெண்ணிலா

பொதுவுடைமை ஆட்சியினை இரவுப் போதில்
புரிகின்ற முழுமதியே ! உன்னைக் கண்டு
மதுவுண்ட வண்டானேன்; இன்பப் பாடல்
வாய்குளிர மனங்குளிரப் பாடி நின்றேன் ;
புதுவுலகம் விரைவினில்நாம் காண வேண்டின்
பொலிவுபெறும் முழுமதியர் ஆட்சி வேண்டும்;
இதுஉண்மை என நினைந்தேன்; களங்கம் உன்பால்
இருக்கின்ற தெனஒருவன் இயம்பி னனே !

— முடியரசன்

## இளந்தென்றல்

இதழ்விரித்து நகைகாட்டல் எனத்தென்றல்
இனிதாகச் செடிகள் மீது
மெதுவாகத் தடவஇதழ் விரித்தரும்பு
பல்காட்டும்; மேலும் வண்டு
பதம்பாடச் செடிகொடிகள் நடமாடப்
பரிந்தவற்றை மணக்கும் தென்றல் ;
இதுபிறந்த மலைஎங்கள் தமிழகமே
எனும்போது சிலிர்க்கும் உள்ளம்.

— முடியரசன்

## ஆறு

ஊர்மக்கள் வெறுத்தொதுக்கும் கழிநீர் எல்லாம்
ஓடிவந்து கலந்தாலும் மாசு நீங்கி
ஊர்விட்டு நீங்குகையில் தூய்மை யாகி
ஊர்ந்துசெலும் ஆறுகண்டு தமிழைக் காண்பாய்!
சார்பற்றுத் தனித்தியங்க வல்ல என்றன்
தமிழ்மொழியில் பிறமொழிகள் கலந்த போதும்
நேர்வுற்று மாசின்றி இயங்கும் பண்பை
நினைப்பூட்டும் ஆற்றுக்கு வாழ்த்துக் கூறு!

— முடியரசன்

## கடல்

விளங்காத மொழிபேசும் என்மகவு
விளையாடும் பொழுது மண்ணில்
மழுங்காத சிறுவிரலால் கீறிவிடும்
வளைவுகள்போல் கரையில் நண்டு
ஒழுங்காக அமையாமல் ஓடியோடிக்
கோலமிடும் ; ஆளைக் காணின்
இளங்காளை முன்வந்தால் நாணமுறும்
இளையவள்போல் மறையும் ஓடி.

— முடியரசன்

## தாயும் சேயும்

மழைகூட ஒருநாளில் தேனாகலாம் ;
மணல்கூடச் சிலநாளில் பொன்னாகலாம் ;

ஆனாலும் அவையாவும் நீயாகுமா?
அம்மாவென் றழைக்கின்ற சேயாகுமா?

ஆராரோ ஆராரோ ஆரீரரோ !
ஆராரோ ஆராரோ ஆரீரரோ !

விண்மீனும் கண்ணேஉன் கண்ணுகுமா?
விளையாடும் கிளிஉன்றன் மொழிபேசுமா?
கண்ணுடி உனைப்போலக் கதைகூறுமா?—இரு
கைவீசி உலகாளும் மகளுகுமா?
ஆனுலும் அவையாவும் நீயாகுமா?
அம்மாவென் றழைக்கின்ற சேயாகுமா?

மணமாலை தனைச்சூடி உறவாடுவார் ;—மனம்
மாருமல் பலகாலம் விளையாடுவார் ;
ஒருகாலத் தமிழ்நாடு இதுதானடா ;—இதை
உன்காலத் தமிழ்நாடு அறியாதடா!

ஆராரோ ஆராரோ ஆரீரரோ !
ஆராரோ ஆராரோ ஆரீரரோ !

— கண்ணதாசன்

## தமிழ்க் கூடல்

கதிர்வெடித்துப் பிழம்புவிழக்
கடல்குதித்துச் சூடாற்ற
முதுமைமிகு நிலப்பரப்பின்
முதற்பிறப்புத் தோன்றிவிட
நதிவருமுன் மணல்தருமுன்
நலம்வளர்த்த தமிழணங்கே!
பதிமதுரைப் பெருவெளியில்
பாண்டியர்கை பார்த்தவளே !

.... .... .... ....

கூடல் எனமுன்னேர்
குறிப்பிட்ட நன்னகரில்
கூடியுள்ளோம் இன்றுநாம்;
கூடலுக்கும் பொருள்தந்தோம் ;
வாடும் புலவோர்கள்
மன்னர்மணி மண்டபத்தே
கூடலால் இந்நகரைக்
கூடலெனச் சொன்னுரோ?

வாடல் துளியின்றி
மலர்க்காட்டில் காதல்செய்தே
ஊடல் புரிந்தே
உளம்மகிழ்ந்து நற்பொழுதில்
கூடும் குலமாதர்
குணமறிந்து வைத்தாரோ?
பாடும் தமிழைப்
பயில்கின்ற வைகைநதி
கூடிக் குளிக்கவரும்
கோதையர்கள் மேனியினைக்
கூடலால் சொன்னாரோ?
கொற்றவர்கள் வீதியிலே
சீனத்துப் பட்டும்
சிங்களத்துத் தேக்குகளும்
கானக் கருவிகளும்
கடல்வயிற்று மாமணியும்
தஞ்சைப் பயிர்வகையின்
தானியமும், ரோமர்களின்
குத்தீட்டி கத்திகளும்
கொல்லத்துச் சர்க்கரையும்
அரபுக் குதிரைகளும்
யானைகளும் விற்பனைக்குக்
கூடியதால் இந்நகரே
கூடல்என் றூர்த்தாரோ?

— *கண்ணதாசன்*

## இன்பம்

நட்டு வளர்த்திட்ட சோளப்பயிர் தட்டை
முற்றிக் கதிர்பற்றி நிற்கையிலே
சிட்டுகள் வந்ததைக் கொத்தித்தின் றுமலே
சிங்காரப் பெண்பரண் மீதுநின்று
கட்டுடல் நோவக் கவண்கொண்டு வீசியே
கையால் பறைகொட்டி வாய்திறந்து
சிட்டுக ளச்சோஅச் சோவெனக் கூவிடும்
தேன்மொழி கேட்பவர்க் கின்பமடா!

காற்றிலே முல்லைப்பூ வாசம் வரஉடன்
கன்னி யொருத்தி நடந்துவர,
சோற்றுக் கலயம் தலையினி லேவேடு
சுற்றிய தன்மையில் ஏறிவர,
ஏற்றம் இறைத்துக் களைத்திட்ட வாலிபன்
ஏற்றத்தை விட்டவள் பின்புவர,
ஊற்றுக் கரையில் மரநிழ லில்அவர்
உட்காரும் காட்சியோ ரின்பமடா!

— கா. மு. ஷெரீப்பு

## நான்

சிந்தனை யென்ற கலப்பைகொண்டு
செய்ய தமிழாம் நிலமதனை
வந்தனை செய்தே உழுதுழுது,
வார்த்தைக ளென்ற எருவுமிட்டு,
நிந்தனை யென்ற வெதுகைமோனை
நீண்ட வரப்பும் எடுத்துக்கட்டி,
அந்தம் மிகுந்த கவிதைப்பயிர்
ஆக்கும் ஏழைப் பாட்டாளிநான்!

— கா. மு. ஷெரீப்பு

## தமிழ் அலங்காரம்

ஆணவம் ஆதி மலமூன்றும் தீர்க்கும் அருட்பெருமான்
மாணவிர் வீணை இசைகேட்டு உருகி மதுரைநகர்
காண விறகும் சுமந்தான் எனவும் கழறப்பெற்ற
பாணன் கலியறச் செய்ததும் செந்தமிழ்ப் பாசுரமே.

மாமாலை வீழிக் கனியிதழ் வாய்கொண்டு வண்டமிழ்ச்சொற்
பாமாலை யான்மிகப் பாடிய மங்கைப் பருவமுள்ளாள்
பூமாலை சூடிக் கொடுத்தும் அளவில் புகழ்புனைந்தாள்
காமாலைக் கண்ணிகர் நெஞ்சுடை யாரது காண்பரிதே.

எல்லாக் கலைகட்கும் தாயாய்வெண் டாமரை யிற்குலவு
நல்லாள் ஒருபொற் பலகைய தாகி நறுந்தமிழை
அல்லாது மற்றென்றைத் தாங்கின ளோ?அத னாலல்லவோ
கொல்லாத வேதமும் தோன்றியது இந்தக் குவலயத்தே!

தேவாதி தேவன் திருநடம் ஆடிய தில்லைமன்றுள்
மூவா யிரவரும் கண்டுவப் பெய்திட முள்ளெயிற்றுத்
தீவாய் அரவக் கடியால் இறந்துள்ள சேய்தமிழ்ச்சொற்
பாவாற் பிழைத்த விதமறி வாள்மலர்ப் பாரதியே.

கருமுகில் வண்ணன் அரங்கத்துக் கோயிலிற் காத்திருந்து
பெருமடைப் பள்ளிப் பணிசெய்கு வானைப் பிறங்குதமிழ்
அருமைய வாய விளையாட் டனந்த மளித்துவென்றித்
திருமலை ராயன்தன் சிங்கா தனத்துறச் செய்ததுவே.

— தண்டபாணி சுவாமிகள்

## தமிழ்த் தாய்

மூவேந்தர் தாலாட்ட முச்சங்கத் தேகிடந்து
பாவேந்தர் செந்நாவில் நடைபழகி மொழிபயின்று
மங்குலுறை வேங்கடமும் வான்குமரிப் பேராறும்
தங்குமிடைத் தமிழுலகும் அரசுபுரி தமிழ்த்தாயே!

ஆடினர் பாடினர் ஆர்த்தனர் செறிந்தார்
அம்மையுன் வாய்மொழி யருமையை அறிந்தார்;
தேடினர் ஓடினர் சிறுமையை அறிந்தார்;
தெருவெங்கும் செந்தமிழ்த் தோத்திரம் எடுத்தார்;
வாடினர் உன்திருக் கோலத்தைக் காண
வந்தனர் செந்துவர் வாய்ப்பெரு மாட்டி!
ஏடியல் வெண்மலர் முத்தமிழ்க் கடலே!
இன்னமு தே!பள்ளி எழுந்தரு ளாயே!

மாவாழ் பொதிய மலையிற் பிறந்து வரமுனிவன்
பூவாழ் கரமெனும் பொற்றொட்டி லாடிப் புலவர்சங்கப்
பாவாழ் பலகைஇருந்துஏட்டி லேதவழ் பாறையென்றன்
நாவாழ்வு உகந்தமை நான்முன்பு செய்திட்ட நற்றவமே!

தவந்தரு மேலாந் தனந்தரும் இன்பந் தருந்தணியா
நவந்தரு சீர்தரும் நட்புத் தரும்நல்ல வாழ்வுதரும்
பவந்தரு தீவினை வேரும் மரமும் பறித்தழியாச்
சிவந்தருஞ் செந்தமிழ்ச் செல்வியின் ஞானத் திருவடியே.

செந்தமிழ்ச் செல்வியைத் தாமரை
யாட்டியைத் தென்பொதியச்
சந்தனச் சோலையில் ஏழிசை
கூவுந் தனிக்குயிலைச்
சிந்தையிற் பூத்துச்செந் நாவிற்
பழுத்துச் செவியினிலே
வந்து கனியும் பனுவற்
பிராட்டியை வாழ்த்துதுமே!

— நவாலியூர் க. சோமசுந்தரப் புலவர்

## வாழ்த்து

வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ்மொழி
வாழிய வாழியவே!

வான மளந்த தனைத்தும் அளந்திடும்
வண்மொழி வாழியவே!

எங்கள் தமிழ்மொழி எங்கள் தமிழ்மொழி
என்னென்றும் வாழியவே!

— பாரதியார்

| | |
|---|---|
| இனியேது | 35 |
| இன்பக்கஞ | 263 |
| இன்பத்துள் | 28 |
| இன்பமெல்லாம் | 268 |
| இன்பாகப் | 183 |
| இன்முகம் | 295 |
| இன்னமிழ்த | 187 |
| இன்னம் இந்த | 258 |
| இன்னம் ஈண்டொரு | 89 |
| இன்னம் தயவு | 242 |
| இன்ஞ செய்தார்க்கும் | 29 |
| இன்ஞ செய்தாரை | 25 |
| இன்னுயிர் | 220 |
| ஈசனே | 114 |
| ஈயாடுவதோ | 205 |
| ஈயாத புல்லர் | 159 |
| ஈவாரும் | 161 |
| ஈன்ருள் | 27 |
| உச்சிக் | 22 |
| உடுக்கை | 28 |
| உடையாளே | 167 |
| உண்டால் | 19 |
| உண்டு | 282 |
| உண்ஞதே | 115 |
| உண்ஞன் | 32 |
| உண்ணெகிழ் | 137 |
| உத்தர | 143 |
| உந்தைஎன் | 94 |
| உயர்வற | 49 |
| உருமை | 78 |
| உருவா | 168 |
| உரைமுடிவு | 33 |
| உரையில | 156 |
| உலகம் புகழ்ந்த | 22 |
| உலகம் ஏழினே | 78 |
| உலகம் மகிழ்ந் | 157 |
| உலகினுக் | 159 |
| உலகுபுரந் | 208 |
| உலகுள | 280 |
| உலேக்குரிய | 193 |
| உழவரோதை | 207 |
| உழுத | 145 |
| உழுதுண்டு | 30 |
| உழைக்கும் | 105 |
| உள்ளத்தார் | 31 |
| உள்ளத்தில் | 219 |
| உள்ளும் | 205 |
| உறக்கும் | 32 |
| உறுபசியும் | 28 |
| உன்பெருந் | 90 |
| ஊடலின் | 31 |
| ஊணிலா | 102 |
| ஊமைத்துரை | 274 |
| ஊரவை | 30 |
| ஊருணி | 24 |
| ஊர்மக்கள் | 313 |
| ஊறுபடை | 91 |
| ஊனவில் | 91 |
| ஊனும் | 131 |
| எக்காலத்திலு | 264 |
| எங்கள் | 153 |
| எங்குல | 290 |
| எண்ணரு | 64 |
| எண்ஞத | 130 |
| எண்ஞ மயலோ | 107 |
| எண்ணில் | 117 |
| எண்ணுதற் | 282 |
| எத்திசையு | 150 |
| எந்தையும் | 230 |
| எந்தையே | 102 |
| எந்நன்றி | 23 |
| எப்பொருள் | 25 |
| எய்தின | 87 |
| எய்யென | 71 |
| எரிஅமைக்கும் | 117 |
| எரியால் | 29 |
| எல்லாக் | 317 |
| எல்லாரும் | 161 |
| எல்லார்க்கும் | 27 |
| எல்லா விளக்கும் | 25 |
| எல்லேநீர் | 189 |
| எல்லோரையும் | 263 |
| எவ்விடத்தும் | 140 |
| எழுதி | 109 |
| எழுதுங்கால் | 31 |
| எளிதென | 24 |
| எறித்தபோர் | 97 |
| எனநினேத்து | 86 |
| எனேத்தானும் | 25 |
| என்உயிர்க்கு | 80 |
| என்கருத்திதுவே | 257 |
| என்தாரம் | 57 |

| | |
|---|---|
| என்பில் | 23 |
| என்றலுமே | 69 |
| என்றவன் | 99 |
| என்று அழைத்தனள் | 116 |
| என்றைக்கோ | 307 |
| என்னதாகும் | 117 |
| என்னத்துக்குப் | 253 |
| என்ன புண்ணியம் | 270 |
| என்னனைய | 62 |
| என்னுயிர்க் | 176 |
| என்னையறி | 129 |
| என்னையே | 174 |
| என்னொடு போந்த | 37 |
| என்னொடு போந்து | 37 |
| ஏச்சுக்குப் | 145 |
| ஏதமில் | 169 |
| ஏதிலார் | 24 |
| ஏந்தினன் | 74 |
| ஏமஞ் | 95 |
| ஏரி | 206 |
| ஏழை | 116 |
| ஏழ்புணர் | 20 |
| ஏற | 148 |
| ஏற்றம் | 97 |
| ஏனல் | 21 |
| ஏனின்ன | 258 |
| ஐந்துபேரறிவும் | 59 |
| ஐயனளந்த | 167 |
| ஐயனே | 123 |
| ஐயன் | 118 |
| ஒண்டியாய் | 184 |
| ஒப்பரிய | 216 |
| ஒருக்கால் | 262 |
| ஒரு முனிவன் | 202 |
| ஒரு மொழியே | 273 |
| ஒருமையுடன் | 135 |
| ஒளிமுடி | 180 |
| ஒறுத்தார்க்கு | 24 |
| ஒற்றென | 169 |
| ஒன்று உலகத்து | 24 |
| ஒன்றாக நல்லது | 25 |
| ஒன்றாகி | 140 |
| ஒன்றே | 32 |
| ஓங்குதமிழ்ப் | 160 |
| ஓடி வந்து | 52 |
| ஓடி விளையாடு | 230 |
| ஓதிமம் | 71 |
| ஓதியுணர்ந்தும் | 28 |
| ஓமென் | 239 |
| ஓர்தட்டிலே | 191 |
| ஓவியர்நீள் | 181 |
| கங்கைஇரு | 68 |
| கங்கையிற் | 205 |
| கசங்கிய | 305 |
| கச்சினன் | 22 |
| கடலன்ன | 30 |
| கடற்கலிங்கம் | 56 |
| கடிக்கும் | 146 |
| கடிதோச்சி | 26 |
| கடிப்பிடு | 32 |
| கடுகைத் | 32 |
| கட்டபொம்மன் | 276 |
| கட்டப்பாரை | 245 |
| கண்காள் | 42 |
| கண்டகங்காள் | 52 |
| கண்டவர்கள் | 133 |
| கண்டனன் அனுமனும் | 85 |
| கண்டனன் கற்பினுக்கு | 89 |
| கண்டாள் | 107 |
| கண்டார் | 156 |
| கண்டுகேட்டு | 30 |
| கண்டேன் | 254 |
| கண்ணார் | 138 |
| கண்ணிகொண்டு | 141 |
| கண்ணிற்கு | 26 |
| கண்ணுதலே | 154 |
| கண்ணுதற்பெரு | 211 |
| கண்ணொடு | 30 |
| கண்போல் | 21 |
| கதிர்வெடித்துக் | 314 |
| கத்தியின்றி | 300 |
| கத்துகடல் | 177 |
| கத்தும் தரங்கம் | 137 |
| கம்பமதத்துக் | 112 |
| கம்பனென்றொரு | 232 |
| கரத்தலும் | 30 |
| கரமிலான் | 181 |
| கரனையும் | 73 |
| கருணையே | 279 |
| கருத்திலா | 99 |
| கருமுகில் | 317 |

| | |
|---|---|
| கரும்புச் சிலையானே | 159 |
| கரும்புத் தோட்டத்திலே | 224 |
| கரும்பே | 279 |
| கருவரை | 93 |
| கருவாய் | 129 |
| கரையாய் | 49 |
| கலக்கம் | 38 |
| கலையினல் | 113 |
| கல்லாதவொருவனை | 178 |
| கல்லாமழலைக் | 192 |
| கல்லார்க்கும் | 136 |
| கல்லாலின் | 166 |
| கல்லைத்தான் | 178 |
| கல்வியை | 243 |
| கவிதை எனுமோர் | 301 |
| களவினல் | 24 |
| களிக்கும் | 81 |
| கள்ளமுறுங் | 158 |
| கறங்கு | 83 |
| கறுத்தவிடம் | 195 |
| கற்க கசடற | 25 |
| கற்றதூஉம் | 33 |
| கற்றறிந்த நாவினர் | 33 |
| கற்றறிந்தார் கண்ட | 34 |
| கற்றறிந்தார் கல்வி | 27 |
| கற்றைக்குழல் | 126 |
| கற்றைச் சடை | 194 |
| கனவினும் | 28 |
| கனவோ | 250 |
| கனியிடை | 303 |
| கன்று | 172 |
| கன்னல் எனும் | 192 |
| காக்கைகரவா | 26 |
| காக்கைச் சிறகினிலே | 226 |
| காணவேணும் | 253 |
| காணிற்குவளை | 30 |
| காணுமல் இருக்கலா | 250 |
| காணுமல் வேணதெல்லாம் | 180 |
| காதம் இருபத்து | 190 |
| காதார் குழையாட | 54 |
| காந்தையருக்கு | 116 |
| காமரர் | 127 |
| காயிலை | 170 |
| காய் எரி | 77 |
| காய்சின் | 182 |
| காராளர் | 189 |
| காரென்று | 177 |
| காலை அரும்பி | 31 |
| காலையிலொன் | 179 |
| காலையில் | 306 |
| காலையிளம் | 304 |
| காலைத்தூக்கி | 261 |
| காற்றிலே | 316 |
| கானகம் | 124 |
| கானக்கரிசலிலே | 163 |
| கானருகும் | 51 |
| கானம் | 302 |
| காஞள நிலமகளைக் | 117 |
| கான்ஆள உனைவிடுத்த | 122 |
| குகஞெடும் | 92 |
| குடதிசை | 48 |
| குடிசெய்வல் | 29 |
| குடியென்னும் | 27 |
| குட்டிகளும் | 144 |
| குணம்நாடி | 26 |
| குமுதன் | 93 |
| கும்மியடி | 232 |
| குயிலினம் | 60 |
| குரவரையும் | 120 |
| குலகிரியின் | 204 |
| குழல் இனிது | 23 |
| குழவிப் | 280 |
| குழைக்கின்ற | 66 |
| கூடாதகஃதொரு | 282 |
| கூவி இன்று | 95 |
| கூற்று உடன்று | 28 |
| கூனி வந்தாளே | 252 |
| கெடுங்காலைங் | 28 |
| கெட்டாய் | 74 |
| கெட்டார்க்கு | 31 |
| கேடும் | 57 |
| கேட்டவர | 182 |
| கேட்டார்ப் | 27 |
| கைகளை | 102 |
| கையயர்ந்து | 156 |
| கையொன்று | 129 |
| கைவிளக்குக் | 133 |
| கொக்கொக்க | 26 |
| கொடியணி | 193 |

| | |
|---|---|
| கொட்டாய் | 49 |
| கொண்டாளே | 254 |
| கொத்தார் | 152 |
| கொம்பின் | 183 |
| கொல்லாவிரதம் | 130 |
| கொல்லான் | 24 |
| கொல்லெனக் | 103 |
| கொழுங்கொடி | 139 |
| கோதற்ற | 159 |
| கோதாவிரியே | 74 |
| கோதிலான் | 121 |
| கோதைபிறந்த | 204 |
| கோயிலாய் | 176 |
| கோரத்துக் | 202 |
| கோலநெடுங் | 40 |
| கோலமா | 168 |
| கோலமுறும் | 155 |
| கோவியல் | 79 |
| கோனகர் | 91 |
| கோன்நிலை | 38 |
| சக்தி | 275 |
| சங்கையறப் | 196 |
| சந்தப்பா | 192 |
| சந்தனத் | 301 |
| சந்தனப் | 203 |
| சந்தையிலே | 163 |
| சமயக் | 213 |
| சமன் செய்து | 23 |
| சரிகம | 243 |
| சாதிப்பது | 147 |
| சாயலும் | 31 |
| சாலக் | 125 |
| சிதம்பரம் | 248 |
| சித்திரத்தில் | 161 |
| சிந்தனை உனக்குத் | 166 |
| சிந்தனை யென்ற | 316 |
| சிந்தித்த | 124 |
| சிரிப்பார் | 44 |
| சிருங்கிபேரம் | 67 |
| சிவபாத | 155 |
| சிவலோக | 247 |
| சிவனே | 114 |
| சிவன்வரு | 264 |
| சிறியரே | 198 |
| சிறிய வாரம் | 196 |
| சிறுமை | 92 |
| சிறையாரு | 41 |
| சிறைவான் | 211 |
| சிற்றஞ் | 55 |
| சின்னஞ்சிறு | 233 |
| சீதமதிக் | 127 |
| சீதமதிய | 132 |
| சீரார் | 214 |
| சீரை | 67 |
| சீர்கெழு | 20 |
| சீறுவாய் | 82 |
| சுடருங் | 167 |
| சுடுமயானத் | 70 |
| சுட்டது | 91 |
| சுற்றத்தார் | 69 |
| சுற்றிக் | 148 |
| சூடகமுன் | 201 |
| சூடையின் | 89 |
| சூழுதல் | 169 |
| செக்கச் சிவந்த கழு | 56 |
| செக்கச் சிவந்திருப்பாள் | 163 |
| செங்கரங்க | 152 |
| செஞ்சிக்கும் | 143 |
| செந்தமிழும் | 203 |
| செந்தமிழ்ச் செல்வி | 318 |
| செந்தமிழ் நாடெனும் | 218 |
| செந்தழலின் | 21 |
| செந்நெல்லால் | 33 |
| செம்பிட்டுச் | 99 |
| செம்மான் | 168 |
| செயற்கரிய | 23 |
| செய்வரால் | 119 |
| செல்லாமை | 30 |
| செல்லார் | 194 |
| செல்வநெடு | 41 |
| செல்வம்வந் | 199 |
| செவ்வேளை | 197 |
| சென்னிகுள | 271 |
| சென்னிமுக | 152 |
| சென்னிவெண் | 204 |
| சேரன் தம்பி | 233 |
| சேலேறிய | 153 |

| | |
|---|---|
| சொல் என்னும் | 22 |
| சொல் ஒக்கும் | 62 |
| சொல்லப் | 30 |
| சொல்லவல் | 226 |
| சொல்லாத | 104 |
| சொல்லாம | 180 |
| சொல்லாய் | 48 |
| சொல்லிய | 281 |
| சொல்லுக | 24 |
| சொல்லுதல் | 27 |
| சொல்லும் | 140 |
| சொல்விளங்கு | 206 |
| சொற்கோவும் | 46 |
| சொற்றது | 105 |
| சொன்ன | 149 |
| | |
| சோகத்தாளாய | 90 |
| சோலையில் | 305 |
| | |
| ஞாயந்தான | 248 |
| ஞானத்தின் | 58 |
| | |
| தடித்தவோர் | 135 |
| தடுத்திமை | 64 |
| தணந்தமை | 31 |
| தண்டலை | 60 |
| தண்டா | 168 |
| தண்டு | 126 |
| தந்ததுஉன் | 45 |
| தந்தைதா | 251 |
| தமிழன் | 300 |
| தமிழுலகப் | 160 |
| தமிழ்எங்கள் | 303 |
| தம்பியென | 100 |
| தரிசனம் | 247 |
| தருமமும் | 92 |
| தருமனுக்கும் | 125 |
| தருவனத்துள் | 62 |
| தலையின் இழிந்த | 29 |
| தலையின்மேல் | 113 |
| தவந்தரு | 318 |
| தனித்தனி | 136 |
| தன்னடி | 81 |
| தன்னரிய | 157 |
| தன்னளவிற் | 173 |
| தன்னைத்தான் | 25 |
| | |
| தாதுகு | 60 |
| தாதையைக் | 95 |
| தாமரை பூத்த | 267 |
| தாமரை வதனம் | 81 |
| தாயருக்கு | 118 |
| தாய்சொல் | 118 |
| தாய்தன் | 39 |
| தாரம் | 134 |
| தாவில் | 22 |
| தாழ்ந்த | 38 |
| தாளரிச் | 113 |
| தான்பசுப் | 147 |
| | |
| திங்கள் தங்கு | 43 |
| திங்கள்முடி | 210 |
| திருக்கண்டேன் | 46 |
| திருநடனஞ் | 265 |
| திருவாக்கும் | 171 |
| துருவினும் | 176 |
| திரைவிரி | 21 |
| தில்லையிற் | 193 |
| | |
| தீண்டாத | 123 |
| தீதிலை | 279 |
| தீம்பாற் | 40 |
| தீயவை செய்வ | 98 |
| தீயவை தீய | 24 |
| தீராத | 234 |
| | |
| துங்கர் | 154 |
| துச்சாதனன் | 236 |
| துஞ்சினர் | 29 |
| துணையரும் | 278 |
| துணையில் | 200 |
| துனியும் | 31 |
| துன்னி | 200 |
| | |
| தூதுவன் | 93 |
| தூயவெண் | 57 |
| | |
| தெண்டனிட்டேன் | 240 |
| தெய்வம் தொழாஅள்...மழை | 23 |
| தெய்வம் தொழாஅள்... மழை என்ற | 39 |
| தெய்வ மானத் | 106 |
| தெரிந்துணரா | 30 |
| தெள்ளுசிவ | 155 |
| தெள்ளுதமி | 271 |
| தென்தமிழ் | 209 |

| | | | |
|---|---|---|---|
| தென்றலெனும் | 312 | நல்ல திலகவதி | 197 |
| | | நல்ல மருந்து | 240 |
| தேங்குழலே | 183 | நல்லம்பர் | 203 |
| தேடிவந் | 305 | நல்லார் | 33 |
| தேருளைப்புரவி | 185 | நல்லாறு | 24 |
| தேர்மேற் | 256 | நளிஇரு | 20 |
| தேவர்கள் | 237 | நறுந்தாது | 39 |
| தேவர்குறளும் | 213 | நற்பொருள் | 30 |
| தேவாதி | 317 | நற்றிறம் | 206 |
| தேவார | 166 | நனவென | 31 |
| தேவினை | 213 | நன்மை | 206 |
| தேவி திரௌபதி | 239 | நன்றிக்கு | 23 |
| தேனிருக்கும் | 295 | நன்னெறி | 157 |
| தேனொங்கு | 170 | | |
| தேன்அடைந்த | 70 | நாங்காதல் | 31 |
| தேன்பொழிந்த | 182 | நாடறியப் | 34 |
| | | நாட்டுக்குள் | 148 |
| தொடையைப் | 238 | நாமெலாம் | 108 |
| தொண்டர் நாதனைத் | 211 | நாதர்முடி | 133 |
| தொண்டையைக் | 181 | நாப்பிளக்க | 187 |
| தொல்ஆண்மைத் | 126 | நாராய் | 43 |
| தொல்லை வினையால் | 38 | நாவுக்கரசனை | 270 |
| தொழுதகை யுள்ளும் | 28 | நாவுண்டு | 170 |
| தொழுஉயர் | 70 | நாளை வதுவை | 47 |
| தொழுதுவாங் | 89 | நாள்என் | 168 |
| தொழுது விடை | 144 | நாற்குணமும் | 127 |
| | | நானில | 175 |
| தோடார் | 174 | | |
| தோட்டத்தில் | 294 | நிலத்தியல்பான் | 26 |
| தோலை உரித்த | 295 | நிலம்செய்து | 110 |
| தோளையே | 72 | நினைப்பவர் | 31 |
| தோள்கண்டார் | 65 | | |
| தோற்பித்தீர் | 100 | நீண்டு | 87 |
| தோன்றலும் | 81 | நீதியால் | 100 |
| | | நீதூது | 121 |
| நகுலனிவை | 124 | நீபாரத | 125 |
| நடையாலே | 72 | நீபோ | 246 |
| நச்சப் | 29 | நீயும் | 103 |
| நட்டுவளர் | 315 | நீராரும் | 212 |
| நண்ணின | 92 | நீர்க்கோல | 98 |
| நந்தா | 70 | நீர்மேற் | 134 |
| நந்திக் கலம்பகத்தால் | 197 | நீலத் | 40 |
| நந்தியம்பதி | 71 | நீலவெடுங் | 171 |
| நம்பியும் | 68 | நீலமா மணிநிறத்தரக்கனை | 42 |
| நம்பியைக் | 64 | நீலமா மணிநிற நிருதர் | 71 |
| நல்இயல் | 97 | நீளத் | 188 |
| நல்ல சமயமடா | 268 | | |
| நல்லது | 282 | நூலறிவு | 165 |

நூலெனிலோ 180

நெஞ்சத்தார் 30
நெஞ்சேநீ 42
நெடும்புனலுள் 26
நெருநல் 25
நெல்லறுக்க 181
நெல்லும் 285
நெறிநில 175

நேமியும் 112

நைவீர் 69

நோக்கின் 117
நோய்நாடி 29

பகையகத்துப் 27
பங்கமார்ந்த 155
பச்சைமா 48
பஞ்சரத்துப் 154
பஞ்சியொளிர் 72
பஞ்சின்மெல் 80
பஞ்சுளரி 114
பஞ்சுமெத்தை 164
பஞ்செனச் 92
படமாடக் 50
படர்எலாம் 70
படைப்புப் 19
படைமயக் 193
பணந்தானே 195
பண்ணிடைத் 44
பண்பெற்றுரோடு 103
பத்தராய்ப் 44
பரங்குன்று 173
பரசிருக்கும் 140
பருகிய 64
பலவுறு 20
பல்கதிர் 199
பல்லுயிரும் 212
பல்லெலாம் 199
பழிஇது 101
பழிப்பரென்ற 281
பளிக்கு 83
பள்ள உவர்க் 284
பள்ளன் 145
பறக்கும் 52
பற்றிலர் 153
பற்றுக 25
பனிமலர்த் 109
பன்மாயக் 31

பாக்கியத்தால் 75
பாடல்சால் 208
பாட்டுக்கொரு 298
பாதியா 170
பாதிரியே 183
பாயுமொளி 235
பாரகம் 38
பாரதநாட் 310
பாரறிய 196
பாரறியு 211
பாராயோ 130
பாரிபாரி 19
பாருக்குள்ளே 221
பார்த்த 239
பார்ப்பான் 50
பார்மிசை 94
பாலமை 80
பாலர்களை 263
பாலாறு 209
பாலெல்லா 213
பாலைவனம் 299
பால் நாறு 51
பாழிய 88
பாளையாம் 193
பானுவின் 175

பிரமன் 129
பிரான்சென்னும் 151
பிள்ளைதைவரப் 210
பிள்ளைபோல் 73
பிறநாட்டு 219
பிறந்து 165
பிறந்தோர் 39
பிறப்பு ஒக்கும் 29
பிறப்பென்னும் 25
பிறர்பழியும் 29
பின்னு முன்னும் 200

புண்ணியமோர் 154
புத்தர் 273
புலப்பேன் 31
புலனைந்தும் 41
புவிக்கினிய 160
புவியனைத்தும் 151

| | |
|---|---|
| புவியினுக் | 71 |
| புழுவாய்ப் | 42 |
| புள்ளிக் | 272 |
| புள்ளியல் | 21 |
| புற்றுமாய் | 45 |
| புனப்பண்ணை | 209 |
| பூட்டைத் | 134 |
| பூதநாயகன் | 94 |
| பூந்தண் | 153 |
| பூமாதிருந் | 159 |
| பூமி மெச்சிடு | 272 |
| பூவாது | 160 |
| பூவார் | 207 |
| பூவிரி | 56 |
| பூவிலோன் | 72 |
| பூவின்மேல் | 103 |
| பெண்ணெலாம் | 101 |
| பெண்ணொளி | 237 |
| பெண் நீர்மை | 126 |
| பெண்வேஷம் | 244 |
| பெரியவிட | 152 |
| பெருங்கடல் | 33 |
| பெருந்தடங் | 60 |
| பெருமகன் | 65 |
| பெருமாள் | 149 |
| பேடைக் | 141 |
| பேணநோற் | 85 |
| பேணும் | 56 |
| பேதாய் | 74 |
| பேதைமை | 111 |
| பேயாண்டி | 251 |
| பேராண்மை | 28 |
| பேருலகில் | 206 |
| பேர்படைத்த | 119 |
| பைந்தொடியாள் | 154 |
| பொங்குகனங் | 201 |
| பொங்கு சாமரை | 172 |
| பொச்சாப்புக் | 26 |
| பொதுவுடைமை | 312 |
| பொய்இலாதவன் | 78 |
| பொய்கையிலே | 184 |
| பொய்த்திருக்கும் | 158 |
| பொய்யைப் | 157 |
| பொருவறு | 198 |
| பொல்லாத | 34 |
| பொறுமையுடன் | 195 |
| பொறையிருந்து | 85 |
| பொற்ருெடி | 139 |
| பொன்ஆரும் | 123 |
| பொன்கொண் | 82 |
| பொன்மலேயின் | 197 |
| பொன்னிட்ட | 142 |
| பொன்னிலங்கு | 200 |
| பொன்னின் | 63 |
| பொன்னும் | 20 |
| போதிலார் | 36 |
| போர்மகளேக் | 115 |
| போர்முடித்தான் | 122 |
| போற்றினும் | 188 |
| மக்கள் | 39 |
| மங்கல | 185 |
| மங்கை அழலும் | 107 |
| மங்கை சுயம்வர | 127 |
| மங்கையராகப் | 298 |
| மங்கைய ராயவர் | 221 |
| மங்கையர்க்கரசி | 41 |
| மங்கையர்க்குத் | 59 |
| மஞ்சள் இஞ்சி | 154 |
| மஞ்சள் புடைவை | 163 |
| மஞ்சினில் | 93 |
| மஞ்செனத் | 77 |
| மடங்கல்போல் | 61 |
| மட்டாரும் | 217 |
| மணிநீரும் | 28 |
| மண்சுழன்றது | 75 |
| மண்ணிணும் | 65 |
| மண்திணி | 38 |
| மண்தேய்த்த | 36 |
| மதயானே | 52 |
| மதலேயைப் | 192 |
| மத்தளம் | 47 |
| மந்திரமும் | 147 |
| மயக்கும் | 39 |
| மயிலுடைச் | 73 |
| மரம் அடங்கலும் | 83 |
| மரத்தை | 50 |
| மருங்கு | 208 |
| மருந்தே | 104 |
| மருமலி | 156 |

மருள்தரு 156
மலரின்மேல் 99
மலர்ச்சூழல் 210
மலை கண்டது 123
மலையத்து 210
மலையே 74
மழித்தலும் 24
மழைகூட 313
மறந்தருதீ 205
மறந்தா 191
மறமே 173
மறுமனத்தன் 34
மறைகளே 111
மற்கொண்ட 190
மற்றவன் சொன்ன 66
மற்றவன் மின்னேன் 86
மற்றறிவாம் 32
மற்றுநீ 58
மற்றையோர் 105
மன்றலின் 65
மன்றில் 126
மன்னர் குலமும் 128
மன்னர் விழித் 128
மன்னவ பாண் 162
மன்னவனு 190
மன்னவனே 150
மன்னனவன் 66
மன்னி நீடிய 205
மன்னிய 165
மன்னுபுகழ்க் 47
மன்னுவெள்ளி 194

மாங்காய்ப்பா 134
மாசறு 36
மாசிலாத 87
மாண்டேன் 88
மாதா 129
மாதிரம் 96
மாதுலன் 119
மாதேநீ 269
மாதொருத்திக்கு 147
மாநிலம் 57
மாந்தையிலே 187
மாமயி 242
மாமாலை 316
மாயான் 108
மாயனை 54
மாய்வதன் 35
மாரனை 174
மாருதி 93
மார்கழி 249
மாவாழ் 317
மாவீற் 207
மாறுமல் 140
மாறுபடு 189
மானே 164

மிடுக்கி 43
மின்ஒப் 40
மின்ஒளிர் 100
மின்மினி 92

மீட்டும் 87

முகைமொக்குள் 31
முக்கோடி 114
முச்சக்கரமும் 22
முடிச்சோதி 49
முடிவும் 27
முட்டின் 34
முத்தம் 200
முத்தலை 189
முந்துஊர் 121
முந்தைநாள் 109
முப்பாழும் 129
மும்மலையும் 213
மும்மைசால் 78
மும்மையாம் 88
முயற்சி 27
முருகு அவிழ்க்கும் 125
முல்லைக்குத் 34
முளைக்குத் 145
முறைதவிர 198
முன்னம் 43
முன்னே 177
முன்னைப் 54
முன்னையோர் 111

மூக்கிலா 100
மூடர் 182
மூண்ட 277
மூத்தோன் 122
மூவா 171
மூவினைக்கு 158
மூவேந்தர் 317
மூன்றுவய 155

மெத்தவும் 283
மெய்த்ததிரு 197
மெய்த்திருப் 84

மேதாய் 107
மேலே 155
மேவிக் 107
மேழி 190
மேனி 152

மைக்கால 123
மைந்த 131
மையறு 63

மொய்தார் 168

மோட்டெருமை 177
மோப்பக் 23

யாகாவார் 23
யாமறிந்த புலவரிலே 219
யாமறிந்த மொழிகளிலே 219
யான்எனது 25

வஞ்சகர்பால் 178
வஞ்சனை மானின் 85
வஞ்சனையால் 76
வஞ்சிநா 282
வஞ்சியான் 284
வஞ்சியே 188
வஞ்சியை 75
வடவைக் 186
வடுக்கண்வார் 76
வட்டக் கலசத்திலே 164
வட்ட வட்டப் 163
வணங்குது 279
வண்டரங்கப் 51
வண்ணவில் 81
வண்மை 61
வந்ததோ 255
வந்தனமே 183
வந்தான் 256
வந்துஎனைக் 89
வம்மின் 49
வயிரம்எனும் 120
வரிசிலை 104
வருவார் 56
வலிய 148
வல்மருங்குல் 83
வல்லியம் 101
வழக்கிட்டு 146
வழங்கலும் 34
வழுத்தினுள் 31
வளநிதி 199
வள்ளல் குருராயன் 156
வள்ளல் மணத்தை 64
வள்ளிகொண் 188
வள்ளைக் கொடியிலே 142
வற்கலையின் 68
வற்றுத 194
வன்கரை 217
வன்னக் குமிழிவே 142

வாசம் 106
வாசிக்கு 133
வாணன் புகழ்க்கு 191
வாதக் காலாந் 177
வாதவர்கோன் 179
வாயிலொன்று 186
வாயிலோயே 37
வாய்மையும் 79
வாய்வரத் 95
வாரணம் ஆயிரம் 46
வாழிய செந்தமிழ் 220
வாழி யவன்தன் 208
வாழ்க நிரந்தரம் 318
வாளால் அறுத்துச் 47
வாள்போல் 29
வானகும் 96
வானத்தா 165
வானமழை 235
வானம் துளங்கி 42
வானரங்கள் 140
வானவர்கோன் 140
வானுகி 170
வான்கலந்த 215
வான்தலை 112
வான்நோக்கி 26

விடுதலை 222
விட்டனன் 104
விண்இன்று 23
விண்ணரசர் 128
விண்ணுளும் 45
விண்ணிடை 74
விதியினுல் 53

வியப்பு 151
வியவற்க 26
விரகர் 180
விரிகுழல் 122
விரிமழைக் 85
விலங்கொடு 25
வில்லுக்கும் 73
வில்லாளர் 112
வில்லினை 105
வில்லேர் 28
விழுதல் 84
விளங்காத 313
விற்பெருந் 90
வினவலியும் 26

வீட்டில் 308
வீணையடி 235
வீமனெழுந் 238
வீரனை 92
வீருன 144

வெங்கண் 106
வெண்ணிலவு நீ 236
வெண்ணிலாவும் 304
வெண்பாவிற் 217
வெண்மை 28
வெயர்த்த 116
வெய்தாய் 179
வெய்யில் படபடக்கும் 307
வெய்யிற்கேற்ற 299
வெய்யோன் 67
வெள்எருக்கஞ் 115
வெள்ளம்போல் 313
வெள்ளைத் 227
வெற்றி எட்டுத் 231
வென்றிலன் 111
வென்றிவாள் 62
வென்றுஇவண் 98

வேண்டிய 24
வேண்டுங்கால் 25
வேதியர் 118
வேலையுள் 90
வேழ 202
வேற்படைத் 283

வைத்ததனை 35
வைத்தபந் 210
வையகம் 237


---

## ஆசிரியர் பெயர் அகராதி


அண்ணுமலை ரெட்டியார் 273
அந்தகக்கவி வீரராகவ முதலியார் 186
அபிராமி பட்டர் 167
அப்துல் காதிறு ராவுத்தர், எம். கே. எம். 162
அரங்கசாமி ஐயங்கார் 160
அருணகிரிநாதர் 132, 168
அருணுசலக் கவிராயர், மு. ரா. 150, 161, 257.
அருணுசலம் பிள்ளை, மு. 269
அழகிய சொக்கநாத பிள்ளை 152, 184

ஆண்டாள் 47, 55
ஆதிசேஷன், சி. என். 268

இடைக்காடனார் 32
இடைக்காட்டுச் சித்தர் 133
இரட்டையர் 182
இராகவையங்கார், மு. 160, 191
இராகவையங்கார், ரா. 213
இராமசந்திரக் கவிராயர் 178
இராமலிங்கம் பிள்ளை, நாமக்கல். வெ. 268, 300
இராமலிங்கர் 136, 214, 215, 242
இலக்குமண பிள்ளை, தி. 274
இளங்கோவடிகள் 38, 208, 210

ஒட்டக்கூத்தர் 202
ஔவையார் 180, 202, 213

கச்சியப்பர் 169
கடலுள் மாய்ந்த இளம்பெருவழுதி 19
கடுவெளிச் சித்தர் 134
கண்ணகனார் 20
கண்ணதாசன் 315
கபிலதேவர் 171
கபிலர் 19
கம்பர் 118, 171, 202, 209
கம்பர்? 190
கலியாணசுந்தர முதலியார், திரு. வி. 212
கல்லாடர் 32
கவி குஞ்சர பாரதி 263

காசிக் கலியன் 153
காரைக்காலம்மையார் 165
கார்மேகக் கோனார், ஆ. 162
காளமேகப் புலவர் 152, 171, 177

கிருஷ்ணமூர்த்தி, கு. சா. 261

குதம்பைச் சித்தர் 134
குமணன்? 191
குமர குருபரர் 137, 210
குலசேகர பாண்டியன் 159
குலசேகராழ்வார் 47

கொத்தமங்கலம் சுப்பு 312

கோபாலகிருஷ்ண பாரதி 251

சங்கரதாஸ் சுவாமிகள் 246
சதாசிவம் பிள்ளை, ஜீ. 161
சமணப் புலவர்கள் 33
சர்க்கரை இராமசாமிப்புலவர் 161

சாந்தலிங்கக் கவிராயர் 196

சிவஞான முனிவர் 197
சிவப்பிரகாசர் 215
சிவவாக்கியர் 133

சீத்தலைச் சாத்தனார் 39
சுத்தானந்த பாரதியார் 267, 275

சுப்பிரமணியன், புத்தனேரி. ரா. 292
சுந்தரம் பிள்ளை, பெ. 212, 284
சுந்தரர் 44

செயங்கொண்டார் 56
செ(ஷ)ரீப்பு, கா. மு. 316

சேக்கிழார் 59, 204, 206, 207, 209, 210

சையிது முகிய்யித்தீன் 138

சோமசுந்தரப் புலவர், நவாலியூர். க. 318
சோமசுந்தரம், மீ.ப. 303

தண்டபாணி சுவாமிகள் 317
தண்டபாணி தேசிகர், எம். எம். 270

தாயுமானவர் 129
தாயுமானவரின் மாணுக்கர் அருளையர் 159

தியாகராசச் செட்டியார், சாமிநாதையர் 193
திருச்சி தியாகராசன் 267
திருஞான சம்பந்தர் 42
திருத்தக்க தேவர் 40
திருநாவுக்கரசர் 43
திருப்பாணாழ்வார் 48
திருமங்கையாழ்வார் 49
திருமூலர் 50
திருலோக சீதாராம் 306
திருவள்ளுவர் 31

தேசிக விநாயகம் பிள்ளை, 294, 299
தேவராசப் பிள்ளை 299

தொண்டரடிப்பொடியாழ்வார் 48, 205

நமச்சிவாயப் புலவர் 159
நம்மாழ்வார் 49

நீலகண்ட சிவன் 264

பகழிக்கூத்தர் 137
படிக்காசுப் புலவர் 159, 191
பட்டினத்தார் 129
பரஞ்சோதியார் 211
பலபட்டடைச் சொக்கநாதப் புலவர் 203, 217

பாண்டியன் அறிவுடைநம்பி 19
பாம்பாட்டிச் சித்தர் 133
பாரதம் பாடிய பெருந்தேவனுர், 170
பாரதிதாசன் 304
பாரதியார் 151, 239, 318

பிள்ளைப்பெருமாளையங்கார் 170

புகழேந்தியார் 128, 187, 202

பூதத்தாழ்வார் 46
பூதனுர் 32

பெரியசாமித் தூரன், ம.ப. 270
பெரியாழ்வார் 46
பெருஞ்சித்திரனுர் 206

பேயாழ்வார் 46

பொய்யாமொழிப் புலவர் 213

மதுரகவிராயர் 188
மதுரை வாலேசாமி 139

மாணிக்கவாசகர் 45, 54
மாரிமுத்தா பிள்ளை 263

மீனுட்சிசுந்தரம்பிள்ளை 203, 216

முடியரசன் 313
முத்துத்தாண்டவர் 261
முன்றுரையரையர் 35

யோகி, ச.து.சு. 310

வள்ளியப்பா, அழ. 297

வாணிதாசன் 305

விபுலானந்தர் 176
வில்லிபுத்தூரார் 126

வெண்ணிக்குயத்தியார் 20

வேங்கடசாமி நாட்டார், ந.மு. 162
வேதநாயகம் பிள்ளை 181

வையை இராமஸ்வாமி ஐயர் 265

# குறிப்புரை

## புறப்பாட்டு [பக்கம் 19 - 20]

புறப்பாட்டு: வீரம், கொடை பற்றிய செய்திகளைக் கூறும் பாட்டு, புறப்பாட்டு ஆகும். இதில் அறனும் பொருளும் அடங்கும். புறநானூறு சங்க காலத்தது; எட்டுத் தொகை நூல்களுள் ஒன்று; நானூறு பாடல்களை உடையது; பல்வேறு பொருள் பற்றி, பல்வேறு சூழ்நிலைகளில், பல்வேறு புலவர்களால் பாடப்பெற்ற பாக்களின் தொகுதி.

கபிலர்: சங்க காலத்துப் புலவர்; அந்தணர்; வேள் பாரியின் நண்பர்; குறிஞ்சித் திணை பாடுவதில் வல்லவர். இவரால் பாடப் பெற்றனவாகப் புறநானூற்றில் முப்பது பாடல்கள் உள்ளன.

**பாண்டியன் அறிவுடை நம்பி**: சங்க காலத்துப் பாண்டிய மன்னன்; புலவர்களின் குறை நீக்கிய புரவலன். இவன் இயற்றியன வாகக் காணப்பெறும் பாடல்கள் நான்கு: அகநானூற்றில் ஒன்று; புறநானூற்றில் ஒன்று; நற்றிணையில் ஒன்று; குறுந்தொகையில் ஒன்று.

**கடலுள் மாய்ந்த இளம்பெருவழுதி**: சங்க காலத்தவன்; பாண்டிய அரசன்.

**கண்ணகனார்**: சங்க காலத்துப் புலவர். இவரால் பாடப் பெற்றவர் பிசிராந்தையார்.

**வெண்ணிக் குயத்தியார்**: பெண்பாற்புலவர்; சங்க காலத் தவர்; வெண்ணி என்னும் ஊரிற்பிறந்தவர். அவ்வூர் இப்பொழுது 'கோவில் வெண்ணி' என வழங்கப்பெறுகின்றது. இவர் குயவர் வகுப்பைச் சேர்ந்தவர் போலும்!

## அகப்பாட்டு [பக்கம் 20 - 21]

**அகப்பாட்டு**: காதல் பற்றிய செய்திகளைக் கூறுவது அகப்பாட்டு ஆகும்.

**கலித்தொகை**: இது எட்டுத் தொகை நூல்களுள் ஒன்று; சங்க காலத்தது; 'கற்றறிந்தோர் ஏத்தும் கலி' எனப் புகழப் பெறுவது; அகப்பொருள் பற்றிய சுவை மிக்க செய்திகளைப் பாலை, குறிஞ்சி, மருதம், முல்லை, நெய்தல் ஆகிய ஐந்திணைகளில் அமைத்துக் கூறுவது. இவற்றைப் பாடியவர் முறையே பெருங்கடுங்கோ, கபிலர், இளநாகன், சோழன் நல்லுருத்திரன், நல்லந்துவனார் ஆவர். நச்சினார்க்கினியர் உரை இதற்கு உண்டு.

**சிலப்பதிகாரம்**: ஐம்பெருங்காப்பியங்களுள் ஒன்று; இளங் கோவடிகளால் ஆக்கப்பெற்றது; கோவலன் - கண்ணகி வரலாற் றைக் கூறுவது; புகார்க் காண்டம், மதுரைக் காண்டம், வஞ்சிக் காண்டம் என்னும் முப்பிரிவுகளை உடையது; முத்தமிழும் விரவிய முழு நூல். பழைய குறிப்புரையும் அடியார்க்கு நல்லார் உரையும் இதற்கு உண்டு.

**தொல்காப்பியம்**: பழந்தமிழ் இலக்கண நூல். எழுத்து, சொல், பொருள் ஆகிய மூன்று பகுதிகளையும் விரிவாக விளக்குவது. இயற்றியவர்: தொல்காப்பியர். இளம்பூரணர், பேராசிரியர், நச்சினார்க்கினியர், சேனாவரையர், தெய்வச் சிலையார் என்பவர்கள் இதற்கு உரை எழுதியுள்ளார்கள். 'ஏனல் காவல்' என்று தொடங் கும் பாடல் நச்சினார்க்கினியரால் எடுத்தாளப் பெற்ற மேற்கோள் ஆகும்.

**நந்திக் கலம்பகம்**: கலம்பகம், தொண்ணூற்ருறு வகைப் பிரபந்தங்களுள் ஒன்று; நந்திவர்மன் என்னும் பல்லவ மன்னன்மீது பாடப்பெற்றது நந்திக் கலம்பகம். பாடியவர் இன்னார் என்பது தெரியவில்லை. 'நந்திக் கலம்பகத்தால் மாண்ட கதை நாடறியும்' என்று பாடினார் சிவஞான முனிவர்.

## பத்துப் பாட்டு [பக்கம் 21 - 22]

**பத்துப் பாட்டு :** சங்க காலத்தது; எட்டுத்தொகை நூல்களுள் ஒன்று; திருமுருகாற்றுப்படை, பொருநராற்றுப்படை, சிறு பாணாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை, முல்லைப்பாட்டு, மதுரைக்காஞ்சி, நெடுநல்வாடை, குறிஞ்சிப்பாட்டு; பட்டினப் பாலை, மலைபடுகடாம் என்னும் பத்துப் பாட்டுக்களை உடையது.

**திருமுருகாற்றுப்படை :** பத்துப் பாட்டுள் முதற்கண் அமைந்த பாட்டு. பாடியவர் : நக்கீரர். வீடு பேறு அடைந்த ஒருவன், வீடு பேறு அடைய விரும்பிய ஒருவனை, முருகனிடம் வழிப்படுத்தும் தன்மையில் அமைந்தது இந்நூல்; முருகனுடைய ஆறு பெரும்படை வீடுகளையும் அழகுற விளக்குவது.

**பொருநராற்றுப்படை :** பத்துப் பாட்டுள் இரண்டாவது பாட்டு. போர்க்களம் பாடும் பொருநனை ஆற்றுப்படுத்தும் தன்மையில் அமைந்தது. பாடப்பட்டவன் : சோழன் கரிகாற்பெருவளத்தான். பாடியவர் : முடத்தாமக்கண்ணியார்.

**மதுரைக்காஞ்சி :** பத்துப்பாட்டுள் ஆறுவது பாட்டு. தலையாலங் கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியனுக்கு வீடு பேறு நிமித்தம் நிலையாமையைச் செவியறிவுறுத்தப் பாடப் பெற்றது. பாடியவர் : மாங்குடி மருதனார்.

## நீதிப்பாட்டு [பக்கம் 23 - 35]

**திருக்குறள் :** தமிழில் உள்ள ஒப்புயர்வற்ற நீதி நூல்; திருவள்ளுவரால் இயற்றப்பெற்றது; 1330 குறள்களை உடையது; பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்று; அறம், பொருள், இன்பம் ஆகிய முப்பால்களைச் சுருங்கச் சொல்லி விளங்க வைப்பது; உலக மொழிகள் பலவற்றில் மொழிபெயர்க்கப்பட்ட பெருமையுடையது. பத்துப் புலவர் இதற்கு உரை எழுதியுள்ளனர்.

**திருவள்ளுவ மாலை :** திருக்குறளின் சிறப்பையும், திருவள்ளுவரின் சீர்மையையும் குறித்துப் பல புலவர்களால் பாடப்பெற்ற பாமாலை.

**நாலடியார் :** திருக்குறளோடு ஒருங்கு வைத்து எண்ணப்படும் ஒரு நீதி நூல்; நான்கு அடிகளைக் கொண்ட நானூறு பாடல்களை உடையது; சமணப் புலவர் பலரால் பாடப்பெற்றது. 'நாலும் இரண்டும் சொல்லுக் குறுதி' என்பது ஒரு பழமொழி. தொகுத்தவர் : பதுமனார்.

**பழமொழி :** பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்று; முன்றுறையரையனாரால் பாடப்பெற்றது; நானூறு வெண்பாக்களை உடையது. இதன் ஒவ்வொரு பாட்டிலும் ஈற்றடியில் ஒரு பழமொழி உண்டு.

## காவியக் கவிதை [பக்கம் 36 - 40]

காவியக் கவிதை: சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவக சிந்தாமணி, குண்டலகேசி, வளையாபதி ஆகிய ஐந்தும் பழந்தமிழ்ப் பெருங்காப்பியங்கள் ஆகும். சிலப்பதிகாரம் பற்றி **318**-ஆம் பக்கத்திற் காண்க.

மணிமேகலை: ஐம்பெருங்காப்பியங்களுள் ஒன்று; சீத்தலைச் சாத்தனாரால் பாடப்பெற்றது; கோவலன்-மாதவி ஆகிய இருவர்க்கும் பிறந்த மணிமேகலையின் வரலாற்றைக் கூறுவது. 'மணிமேகலை துறவு' என்ற பெயரும் இதற்கு உண்டு. புத்தமதக் கருத்துக்கள் பலவற்றை ஆங்காங்கு இந்நூலிற் காணலாம்.

சிந்தாமணி: ஐம்பெருங்காப்பியங்களுள் ஒன்று; விருத்தப் பாவால் ஆக்கப்பெற்றது; சீவகனுடைய வரலாற்றைக் கூறுவது. 'மண நூல்' என்ற பெயரும் இதற்கு உண்டு. பாடியவர்: சமண முனிவராகிய திருத்தக்க தேவர்.

## திருநெறித் தமிழ் மாலை [பக்கம் 41 - 50]

தேவாரம்: சைவ சமய குரவர்களான திருஞான சம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரமூர்த்தி ஆகிய மூவராலும், பாடப்பெற்ற பாடல்களின் தொகுதி; தோத்திர நூல்.

திருஞான சம்பந்தர்: சைவ சமய நாயன்மார்களுள் ஒருவர்; அந்தணர்; சீர்காழியில் பிறந்தவர்; மூன்றும் ஆண்டிலேயே ஞானப் பால் குடித்துப் பாடியவர்; இறைவன் அருளால் அற்புதங்கள் பலவற்றை இயற்றியவர். சைவத் திருமுறைகள் பன்னிரண்டனுள் இவர் பாடிய பாடல்கள் முதல் மூன்று திருமுறைகள் ஆகும்.

திருநாவுக்கரசர்: திருமுனைப்பாடி நாட்டுத் திருவாமூரில் பிறந்தவர்; வேளாளர்; அப்பர் என்ற அருமைத் திருப்பெயரினர்; அற்புதங்கள் பல இயற்றியவர். இவர் இயற்றிய தேவாரப் பாடல்கள் நான்கு முதல் ஆறு வரையுள்ள திருமுறைகள் ஆகும்.

சுந்தரர்: திருமுனைப்பாடி நாட்டுத் திருநாவலூரில் பிறந்தவர்; அந்தணர்: சைவ சமய குரவருள் ஒருவர்; அற்புதங்கள் நிகழ்த்தியவர்; பாவை, சங்கிலி என்னும் இரு மங்கையரை வாழ்க்கைத் துணைவியராகக் கொண்டவர்; 'தம்பிரான் தோழர்' என்ற சிறப்புப் பெயரைப் பெற்றவர். இவர் பாடல்களைக் கொண்டது ஏழாந் திருமுறை.

திருவாசகம்: எட்டாவது சைவத் திருமுறையாய் விளங்குவது. இயற்றியவர்: மாணிக்கவாசகர். 'திருவாசகத்திற்கு உருகாதார் ஒரு வாசகத்திற்கும் உருகார்,' என்னும் புகழுரையால் இதன் பெருமை விளங்கும்.

மாணிக்கவாசகர்: திருவாதவூரில் பிறந்தவர்; சைவ சமய குரவர்களுள் ஒருவர்; அரிமர்த்தன பாண்டியன் என்னும் அரசனிடம் தலைமை அமைச்சராய் இருந்தவர்; திருப்பெருந்துறையில் ஓர் ஆலயம் எடுத்தவர்; அரிய பல அற்புதங்களை நிகழ்த்தியவர். திருவாசகமும், திருக்கோவையாரும் இவர் இயற்றியவை.

தனிப் பாடல் : இப்பகுதியில் நால்வர் புகழும் நன்கு கூறப்பெற்றுள்ளது. இயற்றிஞர் பெயர் தெரிந்திலது.

நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம் : வைணவ நூல்; பல்வேறு காலத்தில் வாழ்ந்த பன்னிரு ஆழ்வார்களால் பாடப்பெற்ற நாலாயிரம் பாடல்களைக் கொண்டது.

பேயாழ்வார் : பன்னிரு ஆழ்வார்களுள் ஒருவர்; திருமயிலையில் பிறந்தவர். மூன்றும் திருவந்தாதி இவரால் பாடப்பெற்றதாகும்.

பூதத்தாழ்வார் : இவர் முதல் ஆழ்வார் மூவருள் ஒருவர்; கடல் மல்லையில் (மகாபலிபுரம்) பிறந்தவர்; இரண்டாம் திருவந்தாதியை இயற்றியவர்.

பெரியாழ்வார் : ஸ்ரீவில்லிபுத்தூரில் தோன்றியவர்; 'பட்டர் பிரான்' என்று போற்றப் பெறுபவர்; பன்னிரு ஆழ்வார்களுள் ஒருவர். ஆண்டாளைத் திருமகளாகப் பெற்றவர். திருமொழி, பல்லாண்டு என்பன இவரியற்றிய நூல்கள்.

ஆண்டாள் : பெரியாழ்வாரின் திருமகளார்; ஸ்ரீவில்லிபுத்தூரில் வாழ்ந்தவர்; 'சூடிக் கொடுத்த நாச்சியார்' என்ற பெயரையும் உடையவர். திருப்பாவையும் நாச்சியார் திருமொழியும் இவர் பாடியவை.

குலசேகர ஆழ்வார் : சேர மன்னர் மரபினர்; திருவஞ்சைக் களத்தில் பிறந்தவர். பெருமாள் திருமொழி இவர் பாடியது.

தொண்டரடிப் பொடியாழ்வார் : திருமண்டங்குடியில் பிறந்தவர்; திருமாலை, திருப்பள்ளியெழுச்சி என்னும் நூல்களை இயற்றியவர்.

திருப்பாணாழ்வார் : உறையூரிற் பிறந்தவர்; பாணர் மரபினர்.

திருமங்கையாழ்வார் : திருக்குறையலூர் என்னும் ஊரினர்; கள்ளர் மரபினர்; சோழ மன்னரிடம் படைத்தலைவராய் இருந்து, இருமங்கை என்னும் நாட்டின் மன்னரானவர்; நால்வகைக் கவிகளும் நயமுறப்பாட வல்லவர்.

நம்மாழ்வார் : பொருநையாற்றின் கரையில் உள்ள திருக்குருகூரில் பிறந்தவர்; பன்னிரு வைணவ சமயப் பெரியார்களுள் தலையாயவர்; வேளாளர் குலத்திலே பிறந்தவர்; திருவாய்மொழி, திருவிருத்தங்கள் பாடியவர். சடகோபன், மாறன் என்ற வேறு பெயர்களும் இவருக்கு உண்டு. இவர் பிறந்தருளும் பேறு பேற்றமையால், திருக்குருகூர் 'ஆழ்வார் திருநகரி' என்று வழங்கப் படுகின்றது.

திருமந்திரம் : திருமூலரால் இயற்றப் பெற்றது; மூவாயிரம் பாடல்களை உடையது; பத்தாம் திருமுறையாய் விளங்குவது; சித்தாந்த நுண்பொருள்கள், ஆகமக் கருத்துக்கள், நீதிகள் ஆகிய யாவற்றையும் ஒருங்கே கொண்டது.

## தூதுப் பாட்டு [பக்கம் 51 - 53]

தூதுப் பாட்டு : அன்னத்தை, அளியை, குயிலை, முகிலை, நாரையை, பூவையை, இன்ன பிறவற்றைத் தூதாக விடுதல்

பண்டைத் தமிழ் இலக்கிய மரபு. அத்தகைய மரபில் அமைந்த தூதுப் பாடல்கள் சிலவற்றை இத்தலைப்பின் கீழ்க் காணலாம்.

தனிப் பாடல்: இப்பாட்டைச் சத்தி முற்றப் புலவர் இயற்றினார் என்பர். சத்தி முற்றம் என்பது இவ்வாசிரியர் பிறந்த ஊரின் பெயராகும். இது கும்பகோணத்தருகில் உள்ளது.

## பாவைப் பாட்டு [பக்கம் 54 - 55]

பாவைப் பாட்டு: பாவை நோன்பு நோற்கும் மகளிர் மார்கழி மாதத்தில் பாடி வழிபடும் பான்மையில் அமைந்த பாடல்கள்.

திருவெம்பாவை: மாணிக்கவாசகரால் பாடப்பெற்றது; திருவாசகத்துள் உள்ளது.

திருப்பாவை: ஆண்டாளால் பாடப்பட்டது; முப்பது பாடல்களைக் கொண்டது.

## பரணிப் பாட்டு [பக்கம் 56]

கலிங்கத்துப் பரணி: ஆயிரம் யானைகளைப் போரில் வென்ற பெருவீரன்மீது பாடப்படுவது பரணி. குலோத்துங்க சோழன் கலிங்க நாட்டின்மீது படையெடுத்துச் சென்று வெற்றி பெற்று மீண்டதைப் புனைந்து கூறுகின்றது இப்பரணி. இதனை இயற்றியவர் கவிச் சக்கரவர்த்தி செயங்கொண்டார். தமிழில் முதற்பரணியும், பரணிக்குள் தலையாயதும் கலிங்கத்துப் பரணியே ஆகும். இது சொற்சுவையும் பொருட்சுவையும் கொண்டது; தாழிசையால் பாடப்பெற்றது.

## திருத்தொண்டர் புராணம் [பக்கம் 57 - 59]

திருத்தொண்டர் புராணம்: சைவ சமயத்தைச் சேர்ந்த 63 நாயன்மார்களுடைய வரலாற்றைக் கூறுவது; பன்னிரண்டாவது திருமுறையாய்த் திகழ்வது. இயற்றியவர்: சேக்கிழார். பெரிய புராணம் என்னும் மறு பெயரும் இதற்கு உண்டு.

சேக்கிழார்: பெரிய புராணம் என்னும் திருத்தொண்டர் புராணத்தை இயற்றியவர்; அனபாய சோழனிடம் அமைச்சராய் இருந்தவர்; குன்றத்தூரில் பிறந்தவர்; தமிழ்நாடு முழுவதும் நன்கு கண்டறிந்தவர்; வேளாளர். அருள் மொழித் தேவர், தொண்டர் சீர் பரவுவார் என்ற வேறு பெயர்களும் உண்டு.

## கம்ப ராமாயணம் [பக்கம் 60 - 118]

கம்ப ராமாயணம்: கம்பரால் பாடப் பெற்றது; இராமனது வரலாற்றைக் கூறுவது; வடமொழியில் உள்ள வால்மீகி இராமாயணத்தைப் பின்பற்றித் தமிழில் தமிழ் மரபு, பண்பாடு ஆகியவற்றுக்கு ஏற்ப எழுதப்பட்டது. பால காண்டம், அயோத்தியா காண்டம், ஆரணிய காண்டம், கிட்கிந்தா காண்டம், சுந்தர காண்டம், யுத்த காண்டம் என்னும் ஆறு காண்டங்களை உடையது;

பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட கவிதைகளை உடையது. இஃது இதிகாச நூல்.

கம்பர்: தமிழில் இராமாயணத்தை இயற்றியவர்; திருவழுந்தூரில் பிறந்தவர்; திருவெண்ணெய் நல்லூர்ச் சடையப்ப வள்ளலால் ஆதரிக்கப் பெற்றவர்; 'கல்வியிற் பெரியவர் கம்பர்' என்னும் புகழ் பெற்றவர். ஏர் எழுபது, சரசுவதி அந்தாதி முதலியன இவர் இயற்றிய பிற நூல்கள்.

## வில்லி பாரதம் [பக்கம் 119 - 126]

வில்லி பாரதம்: வில்லிபுத்தூராரால் பாடப்பெற்றது; பரத வமிசத்தவர்களான கௌரவ - பாண்டவர்களின் வரலாற்றைக் கூறுவது; வக்கபாகையில் ஆட்சி புரிந்த வரபதி ஆட்கொண்டானுடைய வேண்டுகோளுக்கிணங்கி, இயற்றப்பெற்றது. இஃது ஓர் இதிகாச நூல்.

வில்லிப் புத்தூரார்: பாரதத்தைத் தமிழில் இயற்றியவர்; வக்கபாகை வரபதியாட்கொண்டானால் ஆதரிக்கப் பெற்றவர்; திருமுனைப் பாடி நாட்டினர்; சனியூரினர்; அந்தணர்.

## நள வெண்பா [பக்கம் 127 - 128]

நள வெண்பா: நிடத நாட்டு அரசனான நளனது வரலாற்றைக் கூறுவது; புகழேந்திப் புலவரால் பாடப் பெற்றது.

புகழேந்திப் புலவர்: வெண்பாப் பாடுவதில் வல்லவர்; தொண்டை நாட்டுப் பொன்விளைந்த களத்தூரைச் சேர்ந்தவர்.

ஆன்றோர் கவிதை *129-132*: பட்டினத்தார், தாயுமானவர், அருணகிரிநாதர் முதலிய ஆன்றோர்களால் பாடப்பெற்ற பாடல்கள்.

பட்டினத்தார் பாடல்: சைவத் திருமுறைகள் பன்னிரண்டனுள் பதினொன்றாவதாய்த் திகழ்வது.

பட்டினத்தார்: முற்றத் துறந்த அடிகளார்; பதினோராந் திருமுறையை இயற்றியவர்; திருவெண்காடர் என்ற பெயரையும் உடையவர்; காவிரிப்பூம்பட்டினத்தில் பிறந்தவர், வணிகர், திருவொற்றியூரில் சமாதியடைந்தவர். பத்திரகிரியார் இவர் மாணவர்.

தாயுமானவர் பாடல்: வேதாந்த சித்தாந்தக் கருத்துக்கள் கொண்ட நூல். பூவை கலியாணசுந்தர முதலியாருடைய உரை இதற்கு உண்டு.

தாயுமானவர்: வட, தென் மொழிகளை நன்கு கற்றவர்; சைவ வேளாளர்; திருமறைக்காட்டுக் கேடிலியப்ப பிள்ளையின் திருமகனார்; திருச்சிராப்பள்ளியில் விசய ரகுநாத சொக்கலிங்க நாயக்க மன்னரிடம், அரசியற்பணி புரிந்தவர். மணம் முடித்து, அறம் நடத்தி, ஒரு மகவு பெற்றதும் துறவுக் கோலம் பூண்டவர். இவருடைய பாடல்களில் சைவ சமயக் கருத்துக்களும், தத்துவங்களும் விளங்கக் காணலாம்.

திருப்புகழ்! அருணகிரிநாதரால் முருகன் எழுந்தருளியுள்ள திருத்தலங்களின்மீது பாடப்பெற்ற பாடல்கள் கொண்ட தொகுதி. 1,200 திருப்புகழ்கள் கிடைத்துள்ளன.

அருணகிரி நாதர்: திருப்புகழை இயற்றியவர்; திருவண்ணமலையில் பிறந்தவர்; முருக பக்தி மிகுந்தவர். கந்தர் அலங்காரம், கந்தர் அனுபூதி, மயில் விருத்தம் என்பன இவரியற்றிய பிற நூல்கள்.

சித்தர் பாட்டு (133-134): பதினெட்டுச் சித்தர்களால் பாடப் பெற்ற பாடல்கள்.

சிவவாக்கியர்! தாயுமானவரால் குறிப்பிடப் பெற்ற பெருமை உடையவர்.

இடைக்காட்டுச் சித்தர்: கொங்கணச் சித்தரின் மாணவர். பாம் பாட்டிச் சித்தர், குதம்பைச் சித்தர், கடுவெளிச் சித்தர், மதுரை வாலசாமி ஆகிய அனைவரும் பதினெட்டுச் சித்தர் கூட்டத்தைச் சேர்ந்தவர்களே.

திருவருட்பா (135-136): இராமலிங்க அடிகளால் இயற்றப் பெற்றது இனிய எளிய நடையில் அமைந்தது.

இராமலிங்க அடிகள்: மருதூரில் பிறந்தவர்; திருவாசகத்தை ஓதி உருகியவர்; சிறந்த உரைநடை நூல்களையும் எழுதியுள்ளார். மனுமுறை கண்ட வாசகமும் சீவகாருணிய ஒழுக்கமும் குறிப்பிடத் தக்கவை. தென்மொழி, வடமொழி, வேதாந்தம், சித்தாந்தம் யாவற்றிலும் கற்றுத் துறை போயவர்; சித்துப் பல செய்தவர்.

பிள்ளைத் தமிழ் (137-138): கடவுளையோ, மக்களுள் மிக்க வரையோ பிள்ளையாகக் கருதிப் பாடப்படும் ஒருவகைப் பிரபந்தம் பிள்ளைத் தமிழ் ஆகும்.

குமரகுருபரர்: தென்பாண்டி நாட்டவர்; ஸ்ரீவைகுந்தத்தைச் சேர்ந்த கைலாயபுரம் என்னும் ஊரினர்; சண்முக சிகாமணிக் கவிராயருக்கும் சிவகாமி அம்மையாருக்கும் பிள்ளையாய்ப் பிறந் தவர். வேளாளர்; ஐந்து வயது வரை ஊமையாய் இருந்து, திருச் செந்தூர் முருகன் அருளால் பேசும் ஆற்றல் பெற்றவர்; வாரணசி யில் கங்கைக் கரையில் ஒரு திருமடம் நிறுவியவர்; வடக்கே சென்று தமிழ் பரப்பியவர். இப்பாடல் முத்துக்குமாரசாமி பிள்ளைத் தமிழில் உள்ளது.

பகழிக்கூத்தர்: இராமநாதபுரத்தில் உள்ள சன்னசி என்னும் ஊரினர்; திருமாலடியார் குடியிற்பிறந்தவர். இவருடைய தீராத வயிற்றுவலி திருச்செந்தூர் முருகர் திருவருளால் தீர்ந்தமையால் அவர்மீது ஒரு பிள்ளைத் தமிழ் பாடியவர். இப்பாடல் இவர் பாடிய திருச்செந்தூர் முருகன் பிள்ளைத் தமிழில் உள்ளது.

திருவைகுந்தநாதன் பிள்ளைத் தமிழ்: இது ஆழ்வார் திருநகரி, பெரியன் சீனிவாசய்யங்கார் அவர்கள் பதிப்பித்தது.

மீனாட்சியம்மை குறம்: இது மதுரை மீனாட்சியம்மை மீது குறத்தி குறிசொல்லும் முறையில் பாடப்பெற்றதாகும். குறத்தியர் வாழ்க்கை, பொதியமலை வளம் முதலியன இதிற் சிறப்பித்துக் கூறப்பட்டுள்ளன. இயற்றியவர்: குமரகுருபரர்.

குற்றாலக் குறவஞ்சி: திருக்குற்றாலமலைக் குறத்தி குறி சொல்லும் முறையில் அமைந்தது. நீர் வளம், மலைவளம், குறவர் வாழ்க்கை முதலியன அழகுறப் பாடப்பட்டுள்ளன. பாடியவர், திரிகூட ராசப்பக் கவிராயர். இவர் தென்காசியை அடுத்துள்ள மேலகரம் என்னும் ஊரினர்.

பள்ளு *(143-149)*: இது தொண்ணூற்றாறு வகைப் பிரபந்தங்களுள் ஒன்று. பள்ளு நூல்களுக்குள்ளேயே தலையாயது முக்கூடற் பள்ளு. உழத்தியர் பாட்டு என்றும் இதற்குப் பெயர் உண்டு. பள்ளர் இயல்பு, உழவுத் தொழிற் சிறப்பு, மழைக்குறி, பள்ளியர் ஏசல் முதலியன மிகவும் சுவைபடப் பாடப் பெற்றுள்ளன. என்னயினாப் புலவர் என்பவர் இதனை இயற்றியவர் என்று கூறுவர்.

சீட்டுக் கவிதை *(150-151)*: ஒரு புலவன் தனக்குத் தேவையான பொருள்களை ஓலைச் சீட்டிலே குறித்து, கொடைவள்ளல்களுக்கு விடுக்கும் ஓலைப் பாசுரம். இதனைத் தீட்டுக் கவி என்றும் சொல்வதுண்டு.

அருணாசலக் கவிராயர்: இவர் இராமநாடகம் செய்தவர்; தரங்கம்பாடி வேளாள மரபினர்; சீகாழியிற் பிறந்தவர்; இசைத் தமிழுக்குப் புத்துயிர் அளித்த புலவர்களுள் ஒருவர்.

பாரதியார்: இவர் தேசியக் கவிஞர்; எட்டயபுரத்திற் பிறந்தவர்; இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற கவிஞர்.

சிலேடைப் பாட்டு *(152)*: ஒரு தொடர் இரு பொருள்பட அமையப் பாடும் பாட்டு.

பெருந்தொகை: இது பல தனிப் பாடல்களைத் தொகுத்து ஆக்கிய ஒரு பெருநூலாகும். இதனைத் தொகுத்தவர் திரு. மு. இராகவையங்கார்.

அழகிய சொக்கநாத பிள்ளை: இவர் திருநெல்வேலிக்கு அருகேயுள்ள தச்சநல்லூரில் பிறந்தவர்; நெல்லைக் காந்திமதியம்மைமீது பிள்ளைத் தமிழ், அந்தாதி முதலியனவும், தம்மைப் புரந்து வந்த முத்துச்சாமிபிள்ளைமீது ஒரு 'காதல்' நூலும் பாடியுள்ளார்.

காளமேகப் புலவர்: இவர் குடந்தை (கும்பகோணம்) வைணவ அந்தணர்; சீரங்கம் கோயிற் பரிசாரகர்; ஆசுகவி பாடுவதில் வல்லவர்; இவரது இயற்பெயர், வரதர். இவர் சிலேடையும் நகைச்சுவையும் அமையப் பாடுவதில் சிறந்தவர்.

குடுமியாமலைக் கல்வெட்டு: குடுமியாமலை திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் உள்ளது; வரலாற்றுப் புகழ்பெற்ற இடம்.

தென்காசிக் கல்வெட்டு : தென்காசி திருநெல்வேலி மாவட்டத்தி லுள்ளது. அங்குள்ள திருக்கோயிலிற் கண்ட கல்வெட்டுப் பாடடு இது.

சிந்து : இது நல்ல இசையோடு கூடிய பாட்டு. இச்சிந்து சைவ சமய குரவருள் ஒருவரான திருஞான சம்பந்தர்மீது பாடப் பட்டதாகும். பாடினர் வரலாறு தெரிந்திலது.

கிறிஸ்தவ இலக்கியம் (156-158) : மேலை நாட்டு நல்லறிஞர் சிலரும் இந்திய நாட்டுக் கிறிஸ்தவர் பலரும் தமிழ்மொழிக்குச் சிறந்த சேவை செய்துள்ளனர். அவர்கள் செய்த இலக்கியம் தேம்பாவணி, இரட்சணிய யாத்திரிகம் முதலியன.

தேம்பாவணி : இது ஏசுநாதரைக் கைத்தாதையாயிருந்து வளர்த்த சூசையப்பர் வரலாற்றைத் தமிழில் எடுத்தியம்பும் முதல் நூலாகும். இத்தாலிய நாட்டிற் பிறந்து தமிழ் நாடு போந்து கிறிஸ்தவ மதத் தொண்டு செய்த பெஸ்கி என்னும் வீரமா முனிவ ரால் இக்காவியம் இயற்றப் பெற்றதாகும்.

இரட்சணிய யாத்திரிகம் : ஆங்கிலத்திலுள்ள 'Pilgrim's Progress' என்ற நூலைத் தழுவி இக்காவியம் இயற்றப்பெற்றது. இது கிறிஸ்தவ சமய நூல். இதனை இயற்றியவர் எச். ஏ. கிருஷ்ணப் பிள்ளை. இவர் திருநெல்வேலியைச் சார்ந்த பாளையங் கோட்டை யில் வாழ்ந்தவர்.

கையறுநிலை (159-162) : ஒருவர் இறந்துபட்டபோது அல்லது பிரிந்தபோது அவரிடம் பேரன்புடையார் துன்புற்று வருந்திச் செய லற்று இருக்கும் நிலையைக் கூறுவது, கையறு நிலையாகும்.

குலசேகர பாண்டியன் : பாண்டிய அரசன். பராக்கிரம பாண்டியன் இறந்தபோது இவனால் இப்பாடல் பாடப்பட்டதாகும்.

நமச்சிவாயப் புலவர் : இவர் தொண்டை நாட்டினர்; புதுச்சேரி யில் சிறப்புற்று வாழ்ந்த பிரம்பூர் ஆனந்தரங்கப்பிள்ளையைப் புகழ்ந்து பல பாடல்கள் பாடியுள்ளார். இப்பாடல் சீதக்காதி என்னும் முகம்மதிய வள்ளல் இறந்தபோது பாடப்பட்டதாகும்.

படிக்காசுப் புலவர் : இவர் தொண்டை நாட்டுத் தென்களந்தை ஊரினர்; செங்குந்த மரபினர்; வைத்தியநாத தேசிகரின் மாணவர்; தொண்டை மண்டல சதகத்தை இயற்றியவர்; சந்தப் பாட்டில் வல்லவர். இப்பாட்டு, சீதக்காதி இறந்தபின் பாடப்பட்டதாகும்.

மு. இராகவையங்கார் : இவர் இராமநாதபுரத்தில் வாழ்பவர்; சிறந்த ஆராய்ச்சியாளர்; 'பெருந்தொகை' என்னும் நூலைத் தொகுத்து வெளியிட்டவர். இப்பாட்டு மதுரைத் தமிழ்ச் சங்கத் தலைவர் பாண்டித்துரைத் தேவர் இறந்தபோது பாடியதாகும்.

கரந்தைத் தமிழ்ச் சங்கம் : இது தஞ்சையில் உள்ளது. இச்சங்கம் தமிழ்க் கல்லூரியையும், 'தமிழ்ப் பொழில்' என்ற திங்கள் வெளியீட் டினையும் நடத்தி வருகிறது; தமிழ் வளர்த்த பெருந்தகையார்

பாண்டித்துரைத்தேவர் இறந்தபோது தனது துயரத்தை இக்கவிதை மூலம் தெரிவித்துள்ளது.

மு. ரா. அருணுசலக் கவிராயர்: சேற்றூர் சமீனைச் சேர்ந்த இராமசாமிக் கவிராயரின் மைந்தர்; ஆறுமுக நாவலரின் வரலாற்றைப் பாட்டில் அமைத்தவர்; சிவகாசிப் புராணம் இயற்றியவர்; பல பிரபந்தங்கள் பாடியுள்ளார்.

சர்க்கரை இராமசாமிப் புலவர்: இவர் சர்க்கரைப் புலவர் பரம்பரையில் உதித்தவர்; அண்ணுமலைப் பல்கலைக் கழகத்தில் தமிழாசிரியராய்த் திகழ்ந்தவர்.

ஜி. சதாசிவம் பிள்ளை: இவர் நாகப்பட்டினத்தில் இருபதாம் நூற்றுண்டில் வாழ்ந்த ஒரு தமிழ்ப் புலவர்.

ந. மு. வேங்கடசாமி நாட்டார்: இவர் நடுக்காவேரியில் பிறந்தவர்; திருச்சி பிஷப்பு ஹீபர் கல்லூரி, அண்ணுமலைப் பல்கலைக் கழகம் ஆகியவற்றில் தமிழ்ப் பேராசிரியராய்ப் பணி செய்தவர்; நாவலர், பண்டிதர் முதலிய பட்டங்கள் பெற்றவர்.

ஆ. கார்மேகக் கோனுர்: இவர் மதுரை அமெரிக்கன் கல்லூரியில் நெடுங்காலம் பேராசிரியராய் இருந்தவர்.

நாடோடிப் பாடல்கள் (*163-164*): மக்கள் தாமாகவே வேலையின் அலுப்புத்தீர அவ்வப்போது பாடிய பாடல்கள் நாடோடிப் பாடல்கள் ஆகும்; வழிவழியாக ஒருவரிடமிருந்து ஒருவர் கேட்டு மனப்பாடம் செய்து பாடப்படுபவை.

தெம்மாங்கு: இது ஒரு நாட்டுப் பாடல் வகை. தெம்மாங்கு எனவும் பெயர் பெறும். தென்பாங்கு என்னும் சொல் தெம்மாங்கு என்றுயிற்று என்பர்.

தாலாட்டு: குழந்தையை உறங்கச் செய்வதற்காகத் தாய் பாடும் பாட்டு. தால்=நாக்கு.

தெய்வம் மணக்கும் பாமாலை (*165-176*): ஆண்டவனைப்பற்றிப் பத்திச் சுவை சொட்டப் பாடப்பெற்ற பாக்களைக் கொண்டது இப் பகுதி.

காரைக்கால் அம்மையார்: இவரது இயற்பெயர் புனிதவதி; இவர் நிதிபதியின் திருமகளார்; நாகபட்டினப் பரமதத்தனுக்கு வாழ்க்கைப் பட்டவர்; திருத்தொண்டர் புராணத்திற் போற்றப்படும் அறுபத்துமூன்று சிவனடியார்களுள் ஒருவர். இவர் திருவாலங் காட்டில் முத்தியடைந்தார். பதினேராம் திருமுறையில் இவர்தம் பாடல்கள் சேர்க்கப்பெற்றுள்ளன. சிவபெருமான் மீது பாடப்பட்ட அற்புதத் திருவந்தாதி என்னும் நூலினின்றும் இப்பாடல்கள் எடுக்கப்பெற்றுள்ளன.

முத்தொள்ளாயிரம்: இது சேரர், சோழர், பாண்டியர் ஆகிய மூவருக்கும் தனித்தனியே 900 பாடல்கள் வீதம் 2700 பாடல்கள் கொண்டது என்பர். ஆயினும், இப்போது கிடைத்திருப்பவை

சுமார் 108 பாக்களேயாகும். அகப் பொருட்சுவை நிரம்பிய இந் நூலில் தெய்வம் மணக்கும் பாடல்களும் உண்டு என்பதற்கு இப் பாட்டு ஒரு சான்றாகும்.

சிவபோக சாரம்: இது ஒரு தத்துவ நூல். இதனை இயற்றியவர் ஞானசம்பந்த தேசிகர். இவர் தருமபுர ஆதீனத்தை நிறுவியவர்; ஸ்ரீ வில்லிபுத்தூரில் தோன்றியவர்; வேளாளர்; ஞானப்பிரகாசரின் முதல் மாணுக்கர்.

கருவையந்தாதி: இதன் முழுப் பெயர் திருக்கருவைப் பதிற்றுப் பத்தந்தாதி என்பதாகும். இதற்குக் குட்டித் திருவாசகம் என்ற பெயரும் உண்டு. இது கரிவலம் வந்த நல்லூரில் உள்ள சிவபெருமான் மீது பாடப்பெற்றதாகும். இதனை இயற்றியவர்; அதிவீரராம பாண்டியர்.

திருவிளையாடற்புராணம்: மதுரையில் நிகழ்ந்த ஈசன் திருவிளையாடல்களை இன்சுவைபடப் பாடப்பெற்றதொரு நூலாகும். இதனைப் பாடியவர் பரஞ்சோதி முனிவர்; திருமறைக் காட்டில் சைவ வேளாளர் மரபில் உதித்தவர்.

கச்சிக் கலம்பகம்: இது காஞ்சி ஏகாம்பரநாதர்மீது பாடப் பெற்ற பிரபந்தம். இதனை இயற்றியவர் அரங்கநாத முதலியார். பூண்டி என்னும் ஊரினர்; இராவ் பகதூர், எம்.ஏ. பட்டங்கள் பெற்றவர். கணித நூற்புலமையுடையவர்; சென்னை மாநிலக் கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியராய் இருந்தவர்.

அபிராமி அந்தாதி: இது திருக்கடவூரில் உள்ள அபிராமி அம்மைமீது பாடப்பெற்ற ஒரு பிரபந்தம். இது 202 செய்யுட்களையுடையது. அபிராமி பட்டர் என்னும் அந்தணரால் இது இயற்றப் பெற்றதாகும்.

அருணகிரி நாதர்: இவர் திருவண்ணுமலையில் பிறந்தவர்; முருக பக்தியுள்ளவர். கந்தர் அலங்காரம், கந்தர் அநுபூதி, திருப்புகழ் முதலியவை இவரால் இயற்றப் பெற்றவையாகும்.

கந்த புராணம்: இது கந்தவேளின் பெருமை கூறும் காவியம்; 6 காண்டங்களையும், 10346 செய்யுட்களையும் உடையது. இதனை இயற்றியவர் கச்சியப்பர்.

பிள்ளைப் பெருமாளையங்கார்: இவர் வைணவப் பிராமணர்; அழகிய மணவாள தாசர் என்ற பெயரையும் உடையவர்; சீரங்க நாதனிடம் நிறைந்த பற்றுடையவர்; திருமலை நாயக்கர் காலத்தில் வாழ்ந்தவர். அஷ்டப் பிரபந்தம் என்பது இவர் பாடிய பிரபந்தங்களின் தொகுப்பு நூலாகும்.

பாரதம் பாடிய பெருந்தேவனுர்: இவர் சங்க நூற்களில் பெரும் பாலானவற்றுக்குக் கடவுள் வாழ்த்து இயற்றியவர்.

நீலகேசி: இது ஒரு சமண காவியம். புத்த நூலாகிய குண்டல கேசிக்கு எதிரிடையாக எழுந்த ஒரு நூலாகும். ஐஞ்சிறு காப்பியங்களுள் இதுவும் ஒன்று.

மேருமந்தர புராணம்: மேருமந்தரர் என்னும் கணதரர்களுடைய வரலாற்றைக் கூறுவது; வாமனாசாரியார் என்னும் சமண முனிவரால் பாடப்பெற்றது. சமணர் செய்த தமிழ் நூல்களிலே புராணம் என்ற பெயரால் நிலவுவனவற்றுள் இதுவே முதலாவது புராணமாகும். இதன் ஆசிரியர் இதனைத் திருப்பருத்திக் குன்றம் என்ற ஊரில் தங்கி இயற்றினர் என்பர்.

திருநூற்றந்தாதி: இது அருகக் கடவுள் மீது பாடப்பெற்ற நூலாகும்; அவிரோத நாதர் என்ற சமண முனிவரால் இயற்றப் பெற்றது;

வீரசோழியம்: இஃது ஓர் இலக்கண நூல்; புத்தமித்திரரால் எழுதப்பட்டது. புத்தமித்திரர் தஞ்சை மாவட்டத்து மிழலைக் கூற்றத்தைச் சார்ந்த பொன்பற்றி என்னும் ஊரினர்.

சீருப்புராணம்: இது முகம்மது நபிநாயகத்தின் வரலாற்றைக் கூறுவது. இதனை இயற்றியவர் உமறுப் புலவர் ஆவர்; இராமநாதபுரமாவட்டத்தைச் சேர்ந்த கீழைக்கரை என்னும் ஊரில்பிறந்தவர்.

விபுலானந்தர்: இவரது இயற்பெயர் மயில்வாகனர். இவர் ஈழ நாட்டவர்; அண்ணாமலைப் பல்கலைக் கழகம், இலங்கைப் பல்கலைக் கழகம் ஆகியவற்றில் தமிழ்ப் பேராசிரியராய் இருந்தவர்; இராம கிருஷ்ணமடத்தைச் சேர்ந்தவர். யாழ் நூல் என்பது இவர் இயற்றிய ஆராய்ச்சி நூலாகும். இக்கவிதை தாகூருடைய கீதாஞ்சலிப் பாடல் ஒன்றின் மொழிபெயர்ப்பாகும்.

## தனிப்பாடல் [பக்கம் 177 - 193]

தனிப்பாடல்: தனித்தனிப் புலவர்களால் அவ்வப்போது இயற்றப்பட்ட பாடல்கள் தனிப்பாடல் எனப்படும். இப்பகுதியில் தனிப்பாடல் திரட்டு, பெருந்தொகை முதலிய நூல்களினின்றும் பாடல்கள் எடுத்தாளப்பட்டுள்ளன.

இராமசந்திரக் கவிராயர்: இவர் தொண்டை நாட்டு இராசுநல்லூர் என்னும் ஊரில் பிறந்து, சென்னையில் வாழ்ந்தவர்; பல நாடக நூல்களை இயற்றியவர்; எல்லீசு துரைக்குத் தமிழ் கற்பித்து, அவரால் புகழ்ந்து பாடப்பட்டவர்; நகைச்சுவைபடப் பாடுவதில் வல்லவர்.

வேதநாயகம் பிள்ளை: இவர் கத்தோலிக்க கிறித்தவர்; தமிழில் முதல் புதினம் (நாவல்) இயற்றியவர்; திரிசிரபுரத்தில் பிறந்து மாயூரத்தில் நீதிபதியாய் இருந்தவர். சர்வ சமய சமரசக் கீர்த்தனை, நீதி நூல் என்ற பாடல் நூல்களும், பிரதாப முதலியார் சரித்திரம் என்ற புதின நூலும் இவர் இயற்றியவற்றுள் குறிப்பிடத் தக்கவை.

இரட்டையர்: இரு புலவர். இவருள் ஒருவர் பெயர் இளஞ்சூரியர்; மற்றொருவர் பெயர் முது சூரியர். ஒருவர் குருடர்; மற்றொருவர் முடவர். ஆலந்துறை என்னும் ஊரினர்; செங்குந்த மரபினர்.

மதுரகவிராயர்: தொண்டை நாட்டு அகரம்பேட்டில் பிறந்தவர்; பிரம்பூர் ஆனந்தரங்கப் பிள்ளைமீது பல தனிப்பாடல்களும், திருக்கச்சூர் நொண்டி நாடகமும் இயற்றியுள்ளார்.

சேக்கிழார் புராணம்: இது பெரிய புராணம் இயற்றிய சேக்கிழாரது வரலாற்றைக் கூறுவது. இதனை இயற்றியவர் கொற்றங்குடி உமாபதி சிவாசாரியார் என்பவர்.

குமணன்: தமிழ் நாட்டு வள்ளல்களுள் ஒருவன். பெருஞ் சித்தனர் என்ற புலவரை ஆதரித்தவன். இப்பாட்டு இவன் பாடியதுதானு என்பது ஆராய்தற்குரியது.

குண்டலகேசி: குண்டலகேசி என்ற பெயருடைய புத்தமதப் பற்றுடையவளது வரலாற்றைக் கூறுவது; ஐம்பெருங் காப்பியத்துள் ஒன்று. நூல் முழுவதும் கிடைத்திலது; ஆசிரியர் வரலாறும் தெரியக்கூடவில்லை.

தியாகராசச் செட்டியார்: இவர் மகாவித்துவான் மீனுட்சி சுந்தரம் பிள்ளை அவர்களின் மாணுக்கர்; தமிழ் ஆசிரியர்; டாக்டர் சாமிநாதையரிடம் மிக்க அன்பு பூண்டவர்.

சாமிநாதையர்: திரிசிரபுரம் மகாவித்துவான் மீனுட்சி சுந்தரம் பிள்ளை மாணவர்; பல சங்க நூல்களைப் பதிப்பித்தவர்; டாக்டர், மகாமகோபாத்தியாய என்னும் பட்டங்களைப் பெற்றவர்; சென்னை மாநிலக் கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியராய் இருந்தவர். இப்பாட்டு இவரும் தியாகராசச் செட்டியாரும் சேர்ந்து பாடிய ஒரு வேடிக்கைப்பாட்டாகும்.

சூடாமணி நிகண்டு: இது சொற்பொருள் விளக்க நூல். மண்டல புருடரால் இயற்றப் பெற்றது.

தனிச்செய்யுள் சிந்தாமணி *(194)*: இது தனித்தனியே சிதறிக் கிடந்த பாடல்களடங்கிய ஒரு தொகுப்பு நூல். மதுரைத் தமிழ்ச் சங்கத்தே தமிழ் நூல் ஆய்வாளாராயிருந்த கந்தசாமிக் கவிராயரால் இது தொகுக்கப் பெற்றது.

பழமொழி விளக்கம் *(195-196)*: இது தண்டலையார் சதகம் என்பதன் மறுபெயராகும். ஒவ்வொரு பாட்டிலும் ஒவ்வொரு பழமொழி அமைந்திருப்பதால் இது பழமொழி விளக்கம் எனப் பெயர் பெற்றது.

சாந்தலிங்கக் கவிராயர்: இவர் பழமொழி விளக்கத்தை இயற்றியவர்; சோழ நாட்டுத் தண்டலை என்னும் ஊரினர்.

சோமேசர் முதுமொழி வெண்பா *(197)*: இஃது ஈற்றிரண்டடிகளில் ஒரு திருக்குறளையும், முன்னிரண்டடிகளில் அக்குறளுக்கேற்ற ஒரு கதைக் குறிப்பையும் கொண்டு வெண்பாவால் இயற்றப் பெற்ற ஒரு நூலாகும். இதனை இயற்றியவர் சிவஞான முனிவர்.

சிவஞான முனிவர்: இவர் விக்கிரமபுரத்துச் சைவ வேளாளர். இவர் இயற்பெயர் முக்களாலிங்கர். இவர் திருவாவடுதுறை ஆதீனத்தைச் சேர்ந்தவர். இவர் வடநூற்கடலும் தென்னூற் கடலும் நிலை கண்டுணர்ந்தவர் என்பர்.

குசேலோபாக்கியானம் *(198-199)*: இது வல்லூர் தேவராசப் பிள்ளையால் இயற்றப் பெற்றது. குசேலரது வாழ்க்கை வரலாற்றைக் கூறுவது.

பந்தாட்டப் பாட்டு: *(200-201)*: மகளிர் பந்தாடும்போது பாடி ஆடும் பாட்டு பந்தாட்டப் பாட்டு எனப் பெயர் பெறும். இதன்கண் சிலப்பதிகாரம், சிந்தாமணி, குற்றாலக் குறவஞ்சி முதலிய நூல்களி னின்றும் பல பாடல்கள் திரட்டிச் சேர்க்கப்பட்டுள்ளன.

## செந்தமிழ் மாலை [பக்கம் 202 - 213]

இப்பகுதியில் தமிழ், தமிழர், தமிழ் நாடு, நகரம், கொடி, ஊர் ஆறு, காற்று முதலியவற்றின் வளங்கள் கூறப்பட்டுள்ள பாடல்கள் தொகுத்துத் தரப்பட்டுள்ளன.

மீனாட்சி சுந்தரம் பிள்ளை: இவர் திரிசிரபுரத்தவர்; மகாவித்துவான்; சைவர்; பல்லாயிரக் கணக்கான கவிகளை இயற்றியவர்; திருவாவடுதுறை ஆதீனப் புலவராய் இருந்தவர்: வித்துவான் தியாகராசச் செட்டியார், டாக்டர் சாமிநாதையர் ஆகியோர் இவர்தம் மாணவராவர்.

பலபட்டடைச் சொக்கநாதப் புலவர்: இவர் தொண்டை நாட்டவர்; அழகர் கிள்ளைவிடு தூது இயற்றியவர்.

தொண்டரடிப்பொடி ஆழ்வார்: இவர் திருமண்டங்குடி என்னும் ஊரில் பிறந்தவர்; விப்பிர நாராயணர் என்ற மறுபெயரை உடையவர்; திருமாலை, திருப்பள்ளி எழுச்சி என்னும் நூல்களை இயற்றியவர்.

நந்திக் கலம்பகம்: தெள்ளாற்றில் வரகுண பாண்டியனைத் தோற்கடித்தவன் நந்திவர்ம பல்லவன். அவன் மீது பாடப்பட்டது இப்பிரபந்தம்.

திருக்கோவையார்: இது சைவத் திருமுறைகளுள் எட்டாவதாகத் திகழ்வது; அகப்பொருள் இலக்கணம் அமையப் பாடப்பட்டதாயினும், பேரின்பப் பொருளை மிகுதியாகக் கொண்டது. இதனை இயற்றியவர் சைவ சமய குரவர் நால்வருள் ஒருவரான மாணிக்க வாசகர். இந் நூலுக்குப் பேராசிரியர் உரை உளது.

சுந்தரம் பிள்ளை: இவர் 'மனோன்மணீயம்' என்னும் தலைசிறந்த தமிழ் நாடகத்தை இயற்றியவர்; தத்துவ நூற்பேராசிரியர்,

திரு. வி. கலியாணசுந்தர முதலியார்: இவர் திருவாரூரில் பிறந்து சென்னை வெஸ்லி கல்லூரியில் படித்து உயர்ந்தவர்; சிறந்த நாவலர்; உரை நடை வல்லார்.

ரா. இராகவையங்கார்: இவர் சேது சமஸ்தான அரசவைப் புலவர்; மகாவித்துவான்; பாரி காதை இயற்றியவர்.

## புலவர் புகழ் மாலை [பக்கம் 213—217]

புலவர் பலரைப்பற்றிப் புலவர் பலர் புகழ்ந்துள்ள பாடல்கள் இப்பகுதியில் அடங்கியுள்ளன.

திருவள்ளுவமாலை: இது திருவள்ளுவரையும் திருக்குறளையும் பற்றிப் பல புலவர்களால் இயற்றப் பெற்ற பாடல்களை ஒருங்கு திரட்டி ஆக்கப்பெற்ற ஒரு நூல்.

கல்லாடம்: இது கல்லாடரால் இயற்றப் பெற்றது; நூறு அகவற்பாக்களையுடையது. திருக்கோவையாருக்கு இது ஒரு விளக்க நூல் என்பர்.

பொய்யாமொழிப் புலவர்: இவர் துறையூரில் பிறந்தவர்; தஞ்சை வாணன் கோவை பாடியவர்.

காஞ்சிப் புராணம்: தொண்டை நாடு, கஞ்சிபுரம் ஆகியவற்றின் சிறப்புக்களை அறிய இந்நூல் பேருதவியாகும். இதன் முதற்பகுதியைச் சிவஞான முனிவரும், பிற்பகுதியைக் கச்சியப்ப முனிவரும் பாடியுள்ளனர்.

சிவப்பிரகாசர்: இவர் வீர சைவர்; 'கற்பனைக் களஞ்சியம்' எனப் புகழப்பட்டவர்; துறைமங்கலம் என்னும் ஊரினர். இவர் 'பிரபுலிங்க லீலை' இயற்றியுள்ளார்.

## இசைத் தமிழ் மாலை [பக்கம் 240 - 277]

சங்கரதாச சுவாமிகள்: இவர் தூத்துக்குடியில் பிறந்தவர்; பல நாடக நூல்களை இயற்றியவர்; தண்டபணி சுவாதுகளிடம் தமிழ்ப் பயிற்சி பெற்றவர்; இன்றைய நடிகர் பலர்க்கும் ஆசிரியராய்த் திகழ்ந்தவர்.

நந்தனர் சரித்திரக் கீர்த்தனை: இது அறுபத்து மூன்று நாயன்மார்களுள் ஒருவராய திருநாளைப் போவார் என்னும் நந்தனரது வரலாற்றை இசைத் தமிழால் எடுத்துரைப்பது. இதனை இயற்றியவர் கோபாலகிருஷ்ண பாரதியாராவர்.

இராம நாடகக் கீர்த்தனை: இது, இராம காதையைக் கீர்த்தனை வடிவில் தெரிவிப்பது; சீர்காழி அருணசலக் கவிராயரால் பாடப் பெற்றது.

மகாபாரதக் கீர்த்தனை: இதனை இயற்றியவர் வேலூர் சுப்பயாய முதலியாரும் முத்துராமக் கவிராயரும் ஆவர். இது பாரதக் கதையை வர்ணமெட்டுக்களும், விருத்தங்களும் அமையப் பாடப் பெற்ற நூலாகும்.

முத்துத்தாண்டவர்: இவர் சீர்காழி ஊரினர்; வேளாளர். இவர் இயற்றிய பாக்கள் 'முத்துத்தாண்டவர் பதம்' என்று வழங்குகின்றன.

மாரிமுத்தா பிள்ளை: இவர் சிதம்பரத்துக்கு அருகிலுள்ள தில்லை விடங்கன் என்னும் ஊரில் வேளாண் மரபில் பிறந்தவர்; இவர்

இயற்றிய நூல்கள் சிதம்பரேசர் விறலி விடு தூது, புலியூர் வெண்பா, வருணபுரிக் குறவஞ்சி என்பவை.

கவிகுஞ்சர பாரதி : இவர் பெருங்கரை என்னும் ஊரினர்; மதுரகவி பாரதியாரின் மாணவர்; தமிழ், வடமொழி ஆகிய இரு மொழிப் புலமையும் உடையவர்; கந்தபுராணக் கீர்த்தனை. அழகர் குறவஞ்சி, வெங்கைக் கும்மி என்னும் நூல்களை இயற்றியவர்.

நீலகண்ட சிவன் : இவரது இயற்பெயர் சுப்பிரமணியம் 'நீலகண்டம்' என்னும் முத்திரை அமையக் கீர்த்தனைகள் இயற்றியமையால், இவருக்கு நீலகண்ட சிவன் என்னும் பெயர் வழங்கலாயிற்று. இவர் திருவாங்கூரைச் சேர்ந்த பத்மநாபபுரம் என்னும் ஊரில் பிறந்தவர். திருவாங்கூர்ச் சமஸ்தானக் காவல் துறையில் (போலீஸ் இலாகா) அலுவல் பார்த்து ஓய்வு பெற்றவர். இவர் மனோன்மணிக் கும்மி, திருநீலகண்ட போதம், பஜனைக் கீர்த்தனை என்னும் நூல்களை இயற்றியுள்ளார்.

வையை இராமஸ்வாமி ஐயர் : இவர் தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்த வையைச்சேரி என்னும் ஊரில் பிறந்து, திருவையாற்றில் வாழ்ந்தவர். இவர் தம்பியார் மகா வைத்தியநாதையர். இருவரும் தமிழிலும் இசையிலும் சிறந்த புலமை பெற்றவர். வையை இராமஸ்வாமி ஐயருக்கு, 'இராமசுவாமி சிவன்' என்ற வேறு பெயரும் உண்டு. 'சாகித்தியப் புலி', 'மோனைச் சிங்கம்' என்னும் பட்டங்களை இவருக்கு இராமநாதபுரம் பாஸ்கர சேதுபதி வழங்கியுள்ளார், இவர் அறுபத்து மூன்று நாயன்மார்களின் சரித்திரத்தைக் கீர்த்தனை மூலமாக விளக்கியுள்ளார். அந் நூலுக்குப் 'பெரிய புராணக் கீர்த்தனை' என்பது பெயர்.

கு. சா. கிருஷ்ணமூர்த்தி : இவர் புதுக்கோட்டையில் பிறந்தவர்; பல தமிழ்க் கீர்த்தனைகள் இயற்றியுள்ளார்; இப்போது திரைப் படங்களுக்குப் பாடல்களை எழுதி வருகிறார்.

திருச்சி தியாகராசன் : இவர் திருச்சியில் பிறந்தவர்; 'இசை அருவி' என்னும் நூல் இயற்றியுள்ளார்; திரைப்படங்களுக்குப் பாடல்களை எழுதி வருகிறார்.

சுத்தானந்த பாரதியார் : இவர் இராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்தவர்; புதுச்சேரி அரவிந்த ஆச்சிரமத்தில் இருந்தவர்; இப்போது சென்னையில் இருந்து தமிழ்ப்பணி ஆற்றி வருகிறார்; பல்லாயிரக் கணக்கான பாடல்களையும், பல மொழிபெயர்ப்பு நூல்களையும் இயற்றியுள்ளார்.

வெ. இராமலிங்கம் பிள்ளை : இவர் நாமக்கல் என்னும் ஊரினர்; 'தமிழன் இதயம்' முதலிய கவிதை நூல்களையும், மலைக்கள்ளன் முதலிய கதை நூல்களையும் இயற்றியுள்ளார்; சென்னை அரசவைக் கவிஞராக இருந்தவர்.

மு. அருணாசலம் பிள்ளை : இவர் சிறந்த தமிழ்ப் புலவர்; அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் தமிழ்ப்பணி ஆற்றி வருகிறார்; 'முத்தமிழ் மணி' என்ற பட்டம் பெற்றவர்.

ம. ப. பெரியசாமித் தூரன்: இவர் கோயம்புத்தூர் மாட்டத்தைச் சேர்ந்தவர்; இப்போது தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் சார்பாக வெளியாகும் தமிழ்க் கலைக் களஞ்சியத்தின் தலைமை ஆசிரியராய்ப் பணியாற்றி வருகிறார்.

எம். எம். தண்டபாணி தேசிகர்: இவர் இசைப் பேரறிஞர்; அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் இசைத் துறைத் தலைவராய்ப் பணியாற்றி வருகிறார்.

அண்ணாமலை ரெட்டியார்: இவர் திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள சென்னி குளம் என்னும் ஊரில் பிறந்தவர், சேற்றூர், ஊற்று மலைச் சமீன்களிலே அரசவைப் புலவராய்த் திகழ்ந்தவர். இவருடைய காவடிச் சிந்து சாலச்சிறந்தது.

தி. இலக்குமணப்பிள்ளை: இவர் இசைத் தமிழ்ப் புலமை உடையவர்; தமிழில் பல சிறந்த இன்னிசைப் பாடல்களையும், இரவிவர்மன் என்னும் நாடக நூலையும் இயற்றியுள்ளார்; திருவாங்கூர் இராச்சியத்தில் உத்தியோகம் பார்த்தவர்.

## நாடகத் தமிழ் மாலை [பக்கம் 278 - 292]

புத்தனேரி ரா. சுப்பிரமணியன்: இவர் திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்தவர்; இராசராச சோழன் நாடகத்துக்கு இசைப் பாடல் பல புனைந்தவர்.

## குழந்தைக் கவிதை [பக்கம் 293 - 297]

அழ. வள்ளியப்பா: இவர் புதுக்கோட்டையைச் சேர்ந்த இராயவரம் என்னும் ஊரில் பிறந்தவர்; 'மலரும் உள்ளம்' என்னும் கவிதை நூலை இயற்றியுள்ளார்.

## தற்காலக் கவிதை [பக்கம் 298 - 318]

மீ. ப. சோமசுந்தரம்: 'சோமு' என்ற சுருக்கப் பெயரால் அழைக்கப்படும் இவர் சென்னை வானொலி நிலையத்தில் பணியாற்றி வருகிறார். 'இளவேனில்' என்பது இவரது கவிதை நூல்.

பாரதிதாசன்: கனக சுப்புரத்தினம் என்பது இவரது இயற்பெயர். இவர் புதுச்சேரியிற் பிறந்த புரட்சிக் கவிஞர். பாண்டியன் பரிசு, குடும்ப விளக்கு என்பன இவரியற்றிய நூல்கள்.

வாணிதாசன்: இவரது இயற்பெயர் எதிராசு என்னும் அரங்கசாமி. இவர் வில்லியனூரிற் பிறந்தவர். இவர் பாரதி

தாசன் மாணவர்; பிரெஞ்சு மொழிப் புலமை உடையவர். எழிலோவியம், கொடிமுல்லை, இன்ப இலக்கியம் என்பன இவர் இயற்றிய நூல்கள்.

ச. து. சு. யோகி : இவர் சேலம் மாவட்டத்தைச் சேர்ந்தவர்; திரைப் பாடலாசிரியர்; திரைப்பட இயக்குநர்; 'தமிழ்க் குமரி பாடல்கள்' என்பது இவர் இயற்றிய கவிதை நூல்.

திருலோக சீதாராம் : இவர் திருச்சியில் வாழ்பவர்; இனிய தமிழ்ப் பாட்டிசைப்பவர்; 'சிவாஜி' என்னும் பத்திரிகையின் ஆசிரியர்.

கொத்தமங்கலம் சுப்பு : இவர் இராமநாதபுர மாவட்டத்தைச் சேர்ந்த கன்ணூரியேந்தலில் பிறந்தவர்; பழகு தமிழில் இனிய பாட்டியற்றும் கவிஞர்; காந்தி மகான் கதை, நாடக உலகம் என்னும் நூல்களின் ஆசிரியர்.

முடியரசன் : கே. எஸ். துரைராசு என்பது இவரது இயற்பெயர் ஆகும். இவர் இப்போது காரைக்குடியில் உள்ள மி. சு. உயர்நிலைப் பள்ளியில் தமிழாசிரியராய்ப் பணியாற்றி வருகிறார்.

கண்ணதாசன் : இவர் இராமநாதபுர மாவட்டத்தைச் சேர்ந்த சிறுகூடற்பட்டி என்னும் ஊரில் பிறந்தவர். இவரது இயற்பெயர் முத்தையா என்பதாகும். இவர் திரைப் படங்களுக்கு வசனமும் பாட்டும் எழுதிவருகிறார்.

கவி கா. மு. ஷெரீப்பு : இவர் தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்த வேளுக்குடி என்னும் ஊரினர். 'ஒளி' என்னும் பெயரில் ஒரு நூல் எழுதியுள்ளார்; திரைப்படங்களுக்குப் பாடல்களை எழுதி வருகிறார்.

தண்டபாணி சுவாமிகள் : இவர் திருநெல்வேலி மாவட்டத்தில் வாழ்ந்தவர்; முருகதாச சுவாமிகள், திருப்புகழ்ச் சுவாமிகள், வண்ணச் சரபம் என்ற பெயர்களை உடையவர்; முருகனிடம் பேரன்பு பூண்டவர்; திருவாமாத்தூர், பழனி ஆகிய இடங்களில் மடங்கள் கட்டியவர்; புலவர் புராணம், திருச்செந்தூர்த் திருப்புகழ் முதலியன இவர் இயற்றிய நூல்கள். மதுரை மாரியப்ப சுவாமிகள் இவர் தம் மைந்தராவார்.

தமிழலங்காரம் : தமிழின் அணி நலங்களையும், அற்புதங்களையும் விளக்குவது இந் நூல். இதனைப் பாடியவர் தண்டபாணி சுவாமிகள்.

நவாலியூர் க. சோமசுந்தரப் புலவர் : இவர் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர்; நவாலியூர் என்னும் ஊரினர்; சித்தாந்தம், சோதிடம், மருத்துவம் ஆகிய துறைகளில் தேர்ந்தவர்; தமிழும் ஆங்கிலமும் நன்கு கற்றவர். சைவமும் தமிழும் இவர் பாடல்களிற் கலந்து மணங்கமழும். உயிரிளங்குமரன், கதிரை உலா, கந்தவனக் கடவுள், நான்மணி மாலை என்பன இவரால் இயற்றப்பெற்ற நூல்கள்.

முற்றும்